குயிலோசை
ந. இறைவன்

காவிரிக்கரை குயிலோசை

ந. இறைவன், எம்.ஏ.

சமுதாயச் சிந்தனைக் கவிஞர்
திருச்சி தியாகராஜன் வாழ்க்கை வரலாற்று நூல்

இது ஒரு
மலர்கள் பதிப்பக வெளியீடு

காவிரிக்கரை
குயிலோசை

ந.இறைவன்

முதல் பதிப்பு
டிசம்பர் 1995
திருவள்ளுவராண்டு 2026

வெளியீடு
மலர்கள் பதிப்பகம்
209, அய்யப்பா நகர்
சென்னை - 111.

கிடைக்குமிடம்
இசைக்குடில் வெளியீடு
29, 9வது குறுக்குச்சாலை
மகாகவி பாரதி நகர்
சென்னை - 600 039
தொலைபேசி: 5377578

அச்சமைப்பு
ஜெம்ஸ் பிராசஸ்
73/1, டாக்டர் பெசன்ட் ரோடு
ராயப்பேட்டை
சென்னை - 14
தொலைபேசி: 8525978

விலை ரூ.50

○

நன்றி

கே. குருமூர்த்தி
புலவர் வரத கோவிந்தராசன், எம்.ஏ.,
கோவை இரா. ஆறுமுகம்
கோவை. ரவி
எஸ். கண்ணப்பன்

பண்பட்டதா
புண்பட்டதா

பண் என்பது - ஒழுங்கு படுத்தப்பட்ட ஓசையாகும். இதனடிப்படையில் பிறந்ததுதான் பண்பாடு என்ற சொல். குடும்பப் பண்பாடு; இனப் பண்பாடு; மொழி பண்பாடு; சமுதாயப் பண்பாடு; அரசியல் பண்பாடு யாவும் இவ்வகைப் பிறப்பே.

நிலத்தைப் பண்படுத்துதல் என்பதும் இப்படித்தான்.

சுருதியும் லயமும் (தாளமும்) ஒழுங்காக இணையும் போது சிறந்த இசை பிறக்கிறது. ஈதல் இசைபட வாழ்தல் என்பது இந்த அடிப்படையிலேயே வழங் கப்படுகிறது.

சுருதி மாறி தாளமும் தவறி வெளிப்படும் இசை - இரைச்சலாக மாறுகிறது. சமுதாயச் சந்தையில் - இந்தத் தடம் மாறிய இரைச்சலில் - இன்று நாம் வாழ்ந்து வருகிறோம். சமுதாயம் சீரழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இந்தியா வில் குறிப்பாகத் தமிழகத்தில் சமுதாய ஊற்றுக் கண்ணாகிய ரத்த ஓட்டம் அடைபட்டு; சமூகம் புரையோடிய நிலையில், சீழை வெளியே எடுப்பதா; புரையோடிய பகுதியையே வெட்டி எடுப்பதா என்ற சிக்கலில் நாடு தவிக்கிறது.

இந்த நூல் ஒரு தனிமனித பெருமைக்காக எழுதப்படவில்லை; ஒரு சமுதாயக் கவலையுடைய ஒரு மனிதன் சந்திக்க நேர்கிற அவமானங்களையும் அவலங்க ளையும் உள்ளடக்கியதே இந்தத் தொகுப்பு. எனவே - இதனைச் சமுதாயச் சிந்தனையுடைய அனைவரின் பொது வரலாறாகவேதான் கருதுகிறேன். இதை விடப் பன்மடங்கு துயரங்களைச் சந்தித்தவர்கள் நிறையவுண்டு. எதிர்கால சமுதாய முன்னேற்றத்திற்கு இத்தகைய வரலாறுகள் வழிகாட்டிகளாகும்.

வெறுங் கால்களில் நடந்து - கல்லும் முள்ளும் கடந்து பூக்களையும் கனிகளை யும் பறிப்பதேபோல் —

குடும்பச் சூழல்; அரசு அலுவலகங்களுக்கு உரிய அவலங்கள்; தடைகள்; வழக்கு மன்ற சந்திப்புகள்; இத்தனைக்கும் இடையிலும் இந்த வரலாற்று செய்தி களை என்னிடமிருந்து சேகரித்து இந்த நூலை எழுதியுள்ளார் கவிஞர் இறை வன். அவருக்கும் —

எனக்கும் கவிஞர் இறைவனுக்கும் உற்ற துணையாகித்; தன் உடல் நோய்களை யும் பாராமல் அலைந்து ஒத்துழைத்து - அச்சுப் பிழைகள் திருத்தி நூல் செம்மை யாக வெளிவரத் துணைபுரிந்த ஆழ்ந்த தமிழ்ப்புலவர் கவிஞர் வரத கோவிந்தரா சன் அவர்களுக்கும் —

எனது பயணங்களில் எனது பாதுகாப்பாய் இருந்துவரும் தோழர் பெ.ராஜேந்தி ரனுக்கும்;

இந்த நூல் சிறந்த முறையில் வெளிவர பொருளுதவி புரிந்தோர்க்கும்; என் பவளவிழா குழுவினர்க்கும்,

நூலின் அச்சு பொறுப்புகள் அனைத்தையும் ஏற்று அழகிய வடிவில் அச்சிட்டு உதவிய தோழர் எஸ்.கண்ணப்பன் மற்றும் அச்சகத் தொழிலாளர்களுக்கும்;

அழகிய முகப்போவியம் ஆக்கித் தந்த ஓவியர் அமுதோனுக்கும்—

எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி. தியாகராஜன்

இசைக்குடில்
சென்னை - 39.

இந்த
உண்மைகள்
முன்னுரைக்காக மட்டுமல்ல

என் வீட்டு அம்மிக்கல்,
லஞ்சத் திமிரும் அதனாலாய தினவும் கொண்ட
அதிகாரக் கூமுட்டை ஒன்றால் மோதி உடைக்கப்பட்டிருந்த நேரம்.

எனது நேர்மையின் தூய்மை,
அந்த அற்ப சாக்கடை ஜீவனின் உரசலால்
கரைபடிந்துவிட்ட தற்காலிகக் கவலையில் நான்

பெரியவர் திருச்சி. தியாகராஜன் அவர்களிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தபோதும் இந்த நூலை எழுதவேண்டுமென்ற முதல் வேண்டுகோளை மறுக்க காரணங்களாயின.

சுய பாதிப்புகளால் ஒருவன் முடங்கிவிடுவது கோழைத்தனம்.
அநீதிகளின் முன் அடிபணிந்து விடும் அற்பம் என்ற அதிர்வுகள்
என்னுள் மெல்ல எழுந்தன.
இதனுடன் கீழ்காணும் நிகழ்வுகளும் நிழலாடின.

○ ○ ○

1960, 1961 ஆம் ஆண்டுகள்.

என் கவிதைகளும், இலக்கியக் கட்டுரைகளும் 'திராவிட நாடு' இதழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்த விடலைப்பருவம்.

> 'இந்த மண்ணுக்கான புரட்சிமார்க்கம் திமுக
> அதன் தலைவர்களின் மேடைபேச்சுகள் நித்தியக்கட்டளைகள்.
> அந்தக் கட்டளைகளை நிறைவேற்ற - கண்களைப் பிய்த்து அப்பும்
> புதிய கண்ணப்ப நாயனார்கள் - வட்டங்களும் மாவட்டங்களும்
> இதனை ஐயப்படுபவர்கள் என் எதிரிகள்'

எனது மட்டுமல்ல - என்போன்ற எண்ணற்ற லட்சக்கணக்கான விடலைகளின் அழிக்க முடியாத நம்பிக்கைகள் இவை.

கு.சுப்பிரமணியம் மன்னார்குடியில் என் நெருங்கிய நண்பர். அவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். வாருங்கள் மன்னையைச் சந்திப்போம் என்றார். அப்போதைய உணர்வில் அது எனது பாக்கியம்.

என் எழுத்தின் அடையாளம் சொல்லி மன்னை நாராயணசாமி அவர்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டேன். பேசிக் கொண்டிருந்தோம்.

பேச்சின் இடையில் - இறைவன் நம்ம 'கானா' தானே என்றார் மன்னை.
'ஆமாம்' எனத் தலையசைத்தார் தோழர்.
பெருமிதத்திலும் பிரகாசத்திலும் என்முகம்.

இறைவன் நம்ம 'கானா'தானே என மாவட்டம் கேட்டதும் அப்படி என்ன ஒரு பிரகாசம் உங்கள் முகத்தில் என்றார் தோழர் - வெளியில் வந்ததும்.
ஒரு கட்சிக்காரர் இன்னொரு கட்சிக்காரரிடத்தில் இவ்வளவு பாசம் கொண்டிருப்பது மகிழ்வுக்குரியதுதானே என்றேன்.

'கானா'வான்னு கேட்டது கட்சிக்காரரான்னு கேட்டதா நெனப்போ? அவர் கேட்டது அதில்லீங்க. நம்ம 'கள்ளரான்னாரு' என்றார் சிரித்துக் கொண்டே!
திமுக தொடர்பான என் நம்பிக்கையில் விழுந்த முதல் இடி இது.

○ ○ ○

1990- ஒரு முன்னிரவு நேரம்.
முதல்வர் கலைஞரின் 'பாராளுமன்ற செயலராக' இருந்த எல்.கணேசன் அவர்களின் வீடு. கூடத்தில் ஒரு கூட்டத்தின் முன்னால் தனித்து அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். நானும் என் நண்பர் ராகவன் தம்பியும் அந்தக் கூட்டத்தின் ஒரு மூலையில்.

பேச்சின் ஒரு கட்டத்தில்—

''இந்த முக்குலத்தோர்களைத்தான் முட்டாள்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன் - வன்னியர்களைச் சந்திக்காதவரை'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். என்னில் ஆர்வம் தொற்றிக் கொண்டது.

ஆரம்பத்திலே நம்ம ஆளுங்க தேவர் பின்னாலே நிண்ணு காங்கிரசை ஆதரிச்சாங்க. திமுக வை கடுமையாக எதிர்த்தாங்க...! 1957, 62 தேர்தல்களில் வன்னியர்கள் தான் 'சாலிடா' திமுகவை ஆதரிச்சாங்க. அந்த வளர்ச்சிதான் 1967 இல் திமுக ஆட்சியைப் பிடிக்க உதவியது.

1967 இல் திமுக ஆட்சிக்கு வந்ததும் அதிகப் பலனை அடைந்தது நம்மதான். அப்புறம் 1972 இல் 'எம்ஜிஆர்' பின்னாலே போயிட்டாங்க நம்மாளுங்க. இப்பவும் திமுக வை தூக்கி நிறுத்தியது வன்னியர் 'பெல்ட்'தான். இப்பவும் கலைஞர் நமக்குத்தான் மந்திரி சபையிலே அதிக பிரதிநிதித்துவம் தந்துள்ளார்.

இதற்குப் பிறகும் இந்த இயக்கத்தைத் தூக்கி சுமக்கிற வன்னியர்களைப் பார்த்தப் புறம்தான் - நம்மை விட அவர்கள் முட்டாள்கள்ங்கிற முடிவுக்கு வந்தேன் என்று முடிக்கிறார் எல்.ஜி.

எனது புனித புரட்சி மார்க்கத்தை தகர்த்த இரண்டாவது இடி இது.

இன்னொரு இனத்தவரின் நியாயத்தை நடுநின்று ஆய்ந்த எல்ஜி. அவர்கள் மீது என் மரியாதைக் கூடியது.

O O O

1994 - இல் ஒரு இளங்காலைப் பொழுது —
வை.கோபால்சாமி திமுக வை விட்டு தனிக்கட்சி கண்ட நேரம்.
எனது அலுவலக நண்பர் ஜோதிராமனோடு பேசிக் கொண்டிருக்கிறேன். பேச்சு அப்போதைய அரசியல் பக்கம் தாவுகிறது.

ராஜதந்திரம் என்று எண்ணிக்கொண்டு கலைஞர் செய்கிற ஒவ்வொரு காரியமும் அவரை தோற்கடிக்கிறது.

'எதை வைத்துச் சொல்றீங்க' என்கிறார் நண்பர்.

மிகப் பெரும்பான்மையினரான வன்னியரில் ஒருவரையோ —
அதற்கடுத்த பெரும்பான்மையினரான முக்குலத்தோரில் ஒருவரையோ —
அடுத்த பெரும்பான்மையினரான தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவரையோ—
அடுத்து நிற்கும் கவுண்டர் இனத்தில் ஒருவரையோ —

கோபால்சாமியை ஊட்டி ஊட்டி வளர்த்ததுபோல் வளர்க்க மாட்டார் கலைஞர். பெரும்பான்மை இனங்களான இவற்றில் தகுதியும் திறமையும் கொண்ட ஒருவரை வளர்த்து விட்டால் அது தன் தலைமைக்கு ஆபத்தாகி விடும் என்பது அவர் கடைபிடிக்கும் ராஜதந்திரம்! அதனால் இந்த இனங்களில் தன் நிழலில் நிற்பதே சுகமாக நினைக்கும் நிழற் பூச்சிகளை மட்டுமே படம் காட்ட அனுமதிப்பார் கலைஞர்.

கோபால்சாமி போன்ற சிறுபான்மை சமூகத்தவரில் ஒருவரை வளர்ப்பது தனக்குப் பாதுகாப்பானது என்பது அவர் கைகொண்ட மற்றொரு ராஜதந்திரம். இதனால்தான்— அன்று எம்.ஜி.இராமச்சந்திரனை உச்சி மோந்தார். இன்று கோபால்சாமியைச் சீராட்டினார் என்றேன்!

வந்ததே கோபம் என் நண்பருக்கு — ''நாங்களா சிறுபான்மை. தெலுங்கு பேசும் நாயுடுகள்; செட்டியார்கள்; ரெட்டியார்கள்; அருந்ததியர் அவர் இவர் என நாங்கள் 30 சதவீதம். ஒரு தொகுதியில் தெலுங்கு பேசும் ஒருவரும் தமிழ் பேசும் ஒருவரும் நின்றால் எங்கள் கட்சி சார்புகளை எல்லாம் ஒதுக்கி தெலுங்கு பேசுபவரை அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் ஜெயிக்க வைப்போம். இன்னொன்றும் முக்கியங்க...

''ஒங்க பெரும்பான்மை இனத்திலே ஒருவர் ஒரு கட்சியை ஆரம்பிச்சா அவரைத் தலைவராக நிலை நிறுத்த போதிய பணபலம் இருக்கா? கோபால்சாமியை தலைவரா நிப்பாட்டி காட்டும் பணபலம் எங்களிடம் இருக்கு'' என்றார்.

இது எனக்கு மற்றுமொரு புதிய பார்வையைத் தந்தது.

○ ○ ○

நான் ஒரு கம்யூனிஸ்ட் காரங்க. அந்தப் பார்வையிலே இந்த வன்னியர்களை நான் ஒரு சாதியா பார்க்கலீங்க. ஒரு வர்க்கமாகத்தான் பார்க்கிறேன். காரணம் இந்தச் சாதியிலே - ஏழை என்றும் பணக்காரன் என்றும் பெரிதாகப் பேதமெல்லாம் ஒண்ணுமில்லீங்க. எல்லாம் ஏழைங்க. உழைக்கும் மக்கள்! அதனாலே இது ஒரு வர்க்கங்க என்பார் கவிஞர் திருச்சி தியாகராஜன்.

○ ○ ○

மேற்கண்ட காட்சிகள் என் நெஞ்சில் நிழலாடியது.
இந்த வாழ்க்கை வரலாற்று நூலை நான் எழுத தொடங்குகிறேன்.

– ந. இறைவன்

தாமரை பூத்த தடாகம்

தாமரை பூத்த தடாகமடி — செந்
தமிழ் மணத்தேன் பொங்கிப் பாயுதடி
தாமரை பூத்த தடாகமடி — ஞானத்
தாமரை பூத்த தடாகமடி.

பாமழையால் வற்றாப் பொய்கையடி — தமிழ்ப்
பைங்கிளிகள் சுற்றிப் பாடுதடி — ஞானத்
தாமரைப் பூத்த தடாகமடி — செந்
தமிழ் மணத்தேன் பொங்கிப் பாயுதடி.

காவியச் சோலையதன் கரையழகே — பெரும்
கவிஞர்கள் கற்பனைக்கோர் தனிச்சுவையே
ஆவி மகிழும் தமிழ்த் தென்றலதே — இசை
அமுதினைக் கொட்டுதுபார் இதனருகே — ஞானத்

தாமரை பூத்த தடாகமடி — செந்
தமிழ் மணத்தேன் பொங்கிப் பாயுதடி — ஞானத்
தாமரைப் பூத்த தடாகமடி.

*- இசைப் பேரரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர்
அவர்களால் இசையமைத்துப் பாடப்பட்டு,
கவிஞரின் புகழ் பெற்ற பாடல்.*

1	காவிரிக்கரை குயிலோசை

'இன்பவனம் ஒன்றுளது
எல்லோரும் வாருங்கள்'

காவிரிக் கரையின் இந்தக் குயிலோசை யமுனா நதிக்கரையில் கேட்டது. விடுதலைப் பெற்ற இந்தியாவின் முதல் குடியரசு தினத்தைக் கொண்டாடப் புதுதில்லியில் மத்திய அரசு விழா எடுத்தது.

அந்த விழாவில் —

ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் சிறந்த இசைக் கலைஞர்களை அழைத்து அந்தந்த மாநில மொழிகளில் இசைப்பாடல் பாடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த விழாவில் —

தமிழ்நாடு சார்பாகக் கலந்து கொண்டு தமிழிசை வழங்க இசைய ரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார் கள்.

முதல் குடியரசு தின விழாவில் — தமிழில் ஒலிக்கும் முதல் குரலுக்கு உரியவர் என்ற முதல் மரியாதை இசையரசு தண்டபாணி தேசிகர் பெற்ற பெருமையாகும்.

தன் தேன் சிந்தும் குரல் வளம் சிந்த —

இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் முதல் மரியாதை கொடுத்துத் தேர்ந்தெடுத்த பாடல் வரிகள்தான் —

'இன்பவனம் ஒன்றுளது
எல்லோரும் வாருங்கள்'

இந்த நிகழ்வுக்குப்பின் இரண்டாண்டுகள் கழித்து —

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகம், சிறந்த தமிழ் படைப்பாளிகளுக்கான பரிசும் பாராட்டும் வழங்கி சிறப்பிக்கும் தமிழ்த் திருவிழாவினைத் தில்லியில் கொண்டாட ஏற்பாடு செய்தது.

1953-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 29, 30, 31 — ஆகியத் தேதிகளில் இந்தியத் தலைநகரான புதுதில்லி தமிழ்விழா மூலம் தன்னை அலங்கரித்துக் கொண்டது.

விடுதலை பெற்ற இந்தியாவில் முதல் கவர்னர் ஜெனரல் என்ற சிறப்புக்கு உரியவரும் —

தேசத் தந்தை அண்ணல் காந்தியடிகளின் சம்பந்தி என்ற உறவுத் தகுதி பெற்றவரும் —

அரசியல் சாணக்கியன் என வரலாற்று ஆசிரியர்களால் கணித்துப் போற்றப்பட்டவருமான திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் எழுதிய ''ராமகிருஷ்ண உபநிஷதம்'' என்ற நூலுக்காகப் பரிசுக்குரியவராகத் தேர்ந்தெடுத்து அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது.

கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜெகநாதன் அவர்களை அவரது ''பவளமல்லிகை'' என்ற சிறுகதை தொகுப்பிற்காகப் பரிசுக்குரியவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது.

இவர்களோடு —

ஒரு இளைஞனுக்கும் அந்தத் தமிழ்த் திருவிழா அரங்கில் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. அரங்கில் கூடியிருந்த தில்லிவாழ் தமிழ்ப் பெருமக்களின் முகங்களில் யாரிந்த இளைஞன்? யாரிவன்? என்ற கேள்விக் குறியும் வியப்புக் குறியும்.

இளமையில் ஞானம் அரிது. புகழும் அரிது. இரண்டும் ஒரு சேர அமைவது அரிதினும் அரிது. இந்த அரியவற்றைத் தமிழ் திறத்தால் தனக்கு உரியவையாக்கிக் கொண்டிருக்கிறான் அந்த இளைஞன் என்பதோ தனது இசையருவி என்ற முதல் நூலுக்குத் தமிழக அரசின் பரிசினையும் பாராட்டினையும் பெறுவதற்காகத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக் கழகச் செயலர் திரு. பெரியசாமித் தூரன் அவர்கள் அழைப்பினை ஏற்று —

இந்தத் தமிழ்த் திருவிழா மேடையில் இடம் அளிக்கப்பட்டிருக்கிறான் அந்த இளைஞன் என்பதோ —

இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் தில்லியில் வாழும் தமிழ் மக்களுக்குத் தெரிய வாய்ப்பில்லைதானே.

இத்தனைக்கும் —

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு — முதல் குடியரசு தின விழாவில் 'இன்ப வனம் ஒன்றுளது' என்ற கவிதை வரிகள் மூலம் கண்ட யமுனைக் கரையழகை, தன் கண் காணும் ஆவலோடு இரண்டாண்டு கள் காலதாமதமாகத்தான் அவன் தில்லி வந்திருக்கிறான்.

தில்லி பிர்லா மந்திர் என்கிற பளிங்கு மண்டபம் தமிழ் ஓசையில் மூழ்கித் திளைத்தது. அந்தப் பகுதியின் தெருவெல்லாம் தமிழோசை யில் சிலிர்த்திருந்தது.

முன் இரண்டு நாட்களை விடவும் விழாவின் இறுதி நாளான ஆகஸ்டு 31-ஆம் தேதி அரங்கம் நிரம்பி வழிந்தது. தமிழ்நாட்டுக் கலைஞர்களான டி.கே. சண்முகம், டி.கே. பகவதி, கவிஞர் கொத்தமங் கலம் சுப்பு ஆகியோருடன் — தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாகக் திருக்குறள் முனிசாமி, கக்கன் மற்றும் மு.வ. போன்றோர் ஆர்வமுடன் பங்கு பெற்றிருந்தனர்.

தமிழ்நாடு அரசின் கல்வி அமைச்சர் அவினாசிலிங்கம் அவர்கள் தன் துறையின் விழா காணவும், பரிசு பெறும் படைப்பாளிகளுக்குத் தமிழக அரசு சார்பாக விருந்தளிக்கவும் மூன்றுநாள் நிகழ்விலும் பங்கு கொண்டார்.

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் — தத்துவமேதை — டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு விருது வழங்கி சிறப்பிக்க வந்திருந்தார்.

தமிழ் விழாவின் சிறப்பினைக் காண — அந்த விழாவுக்குரிய மரியாதை அளிக்க — ஜனநாயக சோஷலிச சிற்பி — இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்திருந்தது விழாவின் சிறப்புக்குச் சிறப்பு செய்தது.

விழா சொற்பொழிவுகள் முடிந்து — பரிசளிப்பு நிகழ்வு ஆரம்ப மானது.

அரசியல் புகழாலும் — ஆன்மீக எழுத்துகளாலும் தங்களில் ஒருவராக்கிக் கொண்டிருந்த தில்லிவாழ் தமிழ் மக்கள் —

ராஜாஜி அவர்களின் பெயர் படிக்கப்பட்டவுடன் — கையொலி யால் அரங்கத்தை அதிர வைத்தனர். இத்தனைக்கும் அவர் வர வில்லை. அவர் சார்பாக ஒருவர் பரிசினைப் பெற்றார். இருந்தாலும் அவரது சிறப்புகளுக்கான அங்கீகார அடையாளமாக அமைந்தது அந்த நீண்ட கையொலி.

இதேபோல் கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜ. மற்றும் மற்றவர்களுக் காகவும், கடைசி அறிவிப்பாக —

'தாமரை பூத்த தடாகமடி;
இன்பவனம் ஒன்றுளது

எல்லோரும் வாருங்கள்' போன்ற இனிய இசைப்பாடல்களைப் படைத்துப் புகழ் பெற்றவரும் —

இளைஞரும் கவிஞருமான திருச்சி தியாகராஜன் அவர்கள்... 'இசையருவி' என்ற தனது முதல் கவிதைத் தொகுதிக்கானப் பரிசினை யும் பாராட்டினையும் பெற அழைக்கிறோம்... என்ற அழைப்பைத் தொடர்ந்து அந்த இளைஞன் எழுந்து வர... யாரிவன்... யாரிந்த இளைஞன் என்ற தங்கள் புதிருக்கான விடையவிழ்ந்த மகிழ்ச்சியில்

அரங்கில் எழுந்த கைதட்டலில் இளமை துள்ளியது.

பரிசு பெற்ற புத்தகங்களைப் பார்வையிட்ட நேரு அவர்களிடம் இசையருவி நூலையும் கவிஞரையும் அறிமுகப்படுத்தியபோது கவி ஞரை அன்புடன் முதுகில் தட்டிக்கொடுத்து 'யு ஆர் டூ யங். அட் திஸ் ஏஜ் இட் இஸ் கிரேட்' என நெகிழ்ந்து பாராட்டிய இந்தியப் பிரதமர் நேருவின் மொழிகளில் இளைஞனுக்கு இறக்கைகள் முளைத் தன.

கவிஞனாக இருந்தாலும் —

கவிச் சக்கரவர்த்தி கம்பனாகவே இருந்தாலும் —

தான் வகிக்கும் அரசியல் பதவிகளின் முன் மற்ற எல்லாச் சிறப்புகளும் அற்பமென எண்ணும் அறியாமை இறுமாப்பில் ஆழ்ந்து கிடக்கும் இன்றைய அரசியல்வாதிகள் தோன்றாத காலம் அது.

அன்றைய அரசியல்வாதிகளுக்கு — இன்றுள்ளது போலக் கொம்புகள் முளைத்திருக்கவில்லை.

அதனால் —

அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், இந்தி யன் எக்ஸ்பிரஸ், தினமணி பத்திரிகைகளின் உரிமையாளரும்; மிகப் பெரிய தொழிலதிபருமான கோயங்காவைத் தோற்கடித்தவர் என்ற புகழுக்கு உரியவராய் இருந்தும் — திருக்குறள் முனிசாமி அவர்கள் கவிஞரிடம் வந்து அழைத்துச் சென்று தன் இல்லத்தில் தங்க வைத்து விருந்தளித்துச் சிறப்பித்தார்.

இன்னொன்றையும் இங்கே சொல்ல வேண்டும் —

அரசியல் பதவிகளின் முன் தன் அனைத்துப் பெருமைகளையும் அவர்தம் பாதார விந்தங்களில் சமர்பித்துக் குனிந்து குழைந்து குறுகி நின்று யாசித்துப் பெருமை கொள்ளும் கவிஞனும் அன்று இல்லை.

'மன்னவனும் நீயோ?
வளநாடும் உன்னதோ?

எனப் பாடும் பரம்பரைக் கவிச்செருக்கு கொஞ்சம் அடையாளத் திற்கேனும் அனைத்துக் கவிஞர்களிடமும் மிஞ்சியிருந்த காலம் அது.

இன்று இவற்றுக்கெல்லாம் அர்த்தம் என்ன என்பது கவிஞர்களுக் கும் தெரியாது. அரசியல்வாதிகளுக்கும் புரியாது.

நடிகர்கள் நாடாள வந்தார்கள். தம் பட வெளியீட்டு விழாவிற்குத் தோரணம் கட்டுவதையே தொழிலாகக் கொண்டிருந்த ரசிகமன்ற தலைவர்களும், ரசிகர்களும் — சட்டமன்ற நாடாளுமன்றங்களில் அடைக்கப்பட்டார்கள்.

இவர்களுக்கும் —

தலைவர்கள் வீட்டிற்கு மீன் வாங்கித் தருபவர்களுக்கு மாவட்ட செயலாளர் அந்தஸ்த்தும்;

தலைவர்களின் மனைவிமார்களுக்குக் காஞ்சீபுரம் பட்டுகளை இறக்குபவர்களும் மந்திரிகளாகும் தகுதிகளும் —

நிர்ணயிக்கப்பட்டன.

கவிஞர் என்பதும்

கவிதை என்பதும்

அவர்தம் கால் தூசியாய் அற்பப்பட்டன.

தமிழ்த் திருவிழாவில் கலந்து கொள்ள தில்லி வந்திருந்த தமிழகக் கலைஞர்களான டி.கே.சண்முகம், டி.கே.பகவதி, கொத்தமங்கலம் சுப்பு ஆகியோருடன் கவிஞர் திருச்சி தியாகராஜனும் ஹரித்வார், ரிஷிகேஷ் ஆகிய கங்கைக் கரை அழகினைக் காண பயணம் மேற்கொண்டனர்.

இந்தியாவின் ஒப்பற்ற ஜீவநதியும், மாநதியும், வடகிழக்கு மாநிலங்களில் கோடிக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பை வளம் கொழிக்கும் பூமியாகச் செழிக்கச் செய்கிற கங்கை நதியை —

ஹரித்வாரில் ஒரு சீற்றமிகு வெள்ளப்பெருக்காகவும்;

ரிஷிகேஷில் ஒரு பெரும் பிரவாகமாகவும் காண வியப்பாக இருந்தது.

அகண்ட காவேரியின் அழகினைத் திருவரங்கத்திலிருந்து தின மும் கண்டுகளித்த கண்களல்லவா இந்தக் கவிஞனின் கண்கள்.

ரிஷிகேஷத்தின் கங்கைக் கரையில் — தமிழ்த் துறவி சிவானந்தா அவர்களின் ஆசிரமம் உள்ளது. அங்கே எல்லா மாநிலத்தவர்களும் இருந்தாலும் — தமிழ்தான் கோலோச்சிக் கொண்டிருந்தது.

ஒரு துறவி எல்லாவற்றையும் துறக்கலாம். தாயைத் துறக்க முடியுமா? முடியாது என்பதற்கான சாட்சியாகத்தான் அந்த ஆசிரமத்தில் தமிழர்கள் நிறைந்திருந்ததற்கான காரணம். சிவானந்தா அவர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்ந்த அனுபவம் இன்றும்கூடப் பசுமை நினைவுகளாய்க் கவிஞர் நினைவுகளில் தங்கியுள்ளன.

சித்தர் பாடல்களில் ஆழ்ந்து தோய்ந்தவர் தியாகராஜன் என்பதால் — ஆசிரம அனுபவங்கள் அவரை அவ்வளவாக ஈர்க்க இயலவில்லை.

பரிசும் பாராட்டும் புகழும் சூழ்ந்திருந்த நிலையிலும் கவிஞர் தன் வாழ்க்கைப் படகைச் செலுத்த சென்னையில் உள்ள தென்னக ரயில்வே அலுவலகத்தில் பணியாற்றுவது தவிர்க்க முடியாத நிர்பந்தமாகவே இருந்தது. அவரது குடும்பப் பொருளாதாரச் சூழல் அப்படி.

தான் பணியாற்றிய தென்னக ரயில்வே தமிழ் மன்றத்தின் தலைவர் பொறுப்பிலும் கவிஞர் இருந்தார்.

இசையருவிக்கான பரிசினைப் பெற்றுத் திரும்பியிருந்த கவிஞருக்குத் தங்கள் தமிழ்மன்ற சார்பாகப் பாராட்டு விழாவிற்குத் தலைவரைக் கேட்காமலே மற்ற தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். முதலில் எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். தட்டமுடியாத நிலையில் பின்னர் இசைந்தார்.

அரண்மனைக்காரத் தெருவில் உள்ள கோகலே மண்டபத்தில் விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்களின் இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது. 'தாமரை பூத்த தடாகமடி' பாடல் அரங்கை இசை வெள்ளத்தில் ஆழ்த்தியது. இந்தப் பாடலைப் பாடி முடித்ததும் அரங்கில் எழுந்து அடங்கிய கையொலிக்குப் பின் தண்டபாணி தேசிகர் — பாட்டிடையிட்ட உரையாக இந்தப் பாடல் பற்றிய சிறிய சொற்பொழிவையே நிகழ்த்தி முடித்தார். அந்த உரையில் **"இந்த ஒரு பாடல் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்குப் புகழ் சேர்க்கும் என — இந்தப் பாடலுக்கான இசையமைத்துப் பாடத்தொடங்கிய முதல் நிகழ்ச்சியின் வரவேற்பினைப் பார்த்து இன்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டேன். அதையே இன்று மீண்டும் சொல்கிறேன். இந்தப் பாடல் உங்கள் காலத்திற்கும் அதற்குப் பின்னரும் உங்களுக்கும் தமிழுக்கும் புகழ் சேர்க்கும்"** என்றார்.

மேற்கண்ட கூற்று எவ்வளவு பெரிய சத்திய வாக்கு என்பதை நாற்பது, நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த இந்த நிகழ்ச்சி மூலம் உறுதிபட்டது.

1995-ஆம் ஆண்டு மே திங்களில் கவிஞர் தில்லி செல்கிறார்.

தில்லியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றும் கவிஞரின் நெருங்கிய தோழர் தமிழரசு அவர்கள் கோடை விடுமுறைக்காகச் சென்னை வரவேண்டியிருந்ததால் —

கவிஞர் தில்லியில் தங்குவதற்கு இடவசதிக்காகத் தி.மு.கழக மாநிலங்களவை உறுப்பினர் திரு.ஜே.எஸ்.ராஜு அவர்களின் பகுதி இல்லத்தில் குடியிருப்பவருக்கு ஒரு அறிமுகக் கடிதத்தை அனுப்பியி ருந்தார். தில்லி புறப்படும் முன் சென்னையிலேயே கவிஞர் அதைத் தவற விட்டு விட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கடலூர் கலியபெருமாள் இல்லத்திற்குச் சென்றால் — வாழப்பாடியார் காங்கிரஸ் ஊர்வலக் கூட்டம் நிரம்பி வழிந்தது. எனவே, வேறு வழியில்லாமல் திரு. ஜே.எஸ். ராஜு அவர்களை நாமே சந்தித்துப் பேசுவோம் என்ற எண்ணத்தில் அவரைத் தேடிச் செல்கிறார்.

அந்த நேரத்தில் தேநீர் அருந்துவதற்காக வெளியில் வந்து கொண்டிருந்த ராஜு அவர்களைச் சந்தித்துத் — தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொள்ளும் நோக்கில் — நான் திருச்சி தியாகராஜன் என்று ஆரம்பித்த உடனேயே... கவனப்பட்டவராய் ''அடடே, வாங்க கவிஞரே! வாங்க! வாங்க!! என்று அழைத்துச் சென்று தேநீர் வாங்கி தந்துவிட்டு... சென்ற முறை நீங்கள் தில்லி வந்திருந்தபோது உங்கள் கூட்டம் ஒன்றிற்குத் தலைமை தாங்கினேனே நினைவிருக்கிறதா? என்று கேட்டதோடு... சற்றே தயங்கி... உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்... தாமரை பூத்த தடாகமடி பாடல் கேசட்டில் ஆசிரியர் திருச்சி தியாகராஜன் என்று இருக்கிறதே அது நீங்கள் இயற்றிய பாடலா என்று கேட்கிறார்.

ஆமாம் என்பதற்கு அடையாளமாகக் கவிஞர் தலையசைக்கிறார். அடடா, என்ன அருமையான வரிகள்... என்ன அருமையான இசை'' என்று கவிஞரை தழுவிக் கொள்கிறார். சென்ற முறை நம் சந்திப்பின் போது இது எனக்குத் தெரியாமல் போய்விட்டதே... நீங்களாவது சொல்லியிருக்கக் கூடாதா? நீண்ட இடைவெளிக்குப் பிறகு கவிஞ ருக்கு மீண்டும் இப்படியொரு அனுபவம்... அவர் முகத்தில் புன்னகை யைத் தவழ விடுகிறது.

'... என்ன வாழப்பாடியார் ஊர்வலத்திற்கா? எங்கே தங்குகிறீர் கள்' என்கிறார் ராஜு.

'ஊர்வலத்திற்குத் தான் வந்தேன். நான் எப்போதும் தங்கும் வாழப்பாடியார் வீட்டினை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது.

உள்ளே நுழைந்து வெளியே வருவதே பிரச்சினை. கடலூர் கலியபெருமாள் வீட்டிலும் இதே நிலைதான். இதையெல்லாம் எதிர்பார்த்துதான் தமிழரசு உங்கள் நண்பருக்கு ஓர் அறிமுகக் கடிதத்தை அனுப்பியிருந்தார். அதை எப்படியோ தவறவிட்டு விட்டேன். அதுதான் தயக்கம்...' உங்களுக்கு எதற்கு அறிமுகக் கடிதம். வாங்க என் வீட்டிற்கு. ஒரு சின்ன பிரச்சினை. என் குடும்பமும் தில்லியைப் பார்க்க வந்துள்ளது. அதனால் உங்களுக்கு ஒரு அறையை மட்டுமே ஒதுக்கித் தர வேண்டியுள்ளது... என்று அழைத்துச் சென்று ராஜு அவர்கள் தம் மனைவி, மக்களை அழைத்துக் கவிஞரை அறிமுகப்படுத்தி பேசுகிறார். தன் குடும்பத்தினரைக் கூடத்தில் தங்க வைத்துவிட்டுத் தங்கள் படுக்கை அறையை ஒதுக்கியதை நினைத்துப் பார்க்கிறேன்... எம்.எம். தண்டபாணி தேசிகர் வாக்கு எவ்வளவு பெரிய சத்திய வாக்கு என வியக்கிறேன்.

தாமரை பூத்த தடாகமடி பாடலுக்கு நான் ரசிகன். அந்தப் பாடலை எங்கே எப்போது கேட்டாலும் அப்போது நான் என்ன வேலையில் ஈடுபட்டிருந்தாலும் அதனை நிறுத்திவிட்டு அந்த இசையில் மூழ்கிவிடுவேன். அப்படியொரு ஈடுபாடு என்கிறார் ராஜு. அந்தப் பாடலைப் பாடிய எல்லோருடைய கேசட்டுகளும் என் தொகுப்பில் உள்ளன எனவும், அந்தப் பாடல் சிறப்பு, இசைச்சிறப்பு என்று ஆரம்பித்து அவரது புகழ்ச்சி அளவிட முடியாததாக நீண்டு கொண்டிருந்தது சமயம் கிடைக்கும் போதெல்லாம்.

ராஜு அவர்கள் பெரம்பலூர் உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் எனக்கு இரண்டொரு ஆண்டுகள் முதியவர். எனது பள்ளித்தோழர் ஒருவர் இவ்வளவு இசைப்பற்று மிகுந்திருப்பதைக் கேட்கக் கேட்க பெருமைப்பட்டுக் கொண்டேன்.

தங்க இடமளித்தமைக்கு நன்றி சொல்ல கவிஞர் ஒருநாள் முயன்றபோது — எனக்கு எதுக்குங்க நன்றி! கலைஞர் எனக்கு இதனை ஆறாண்டுகளுக்கு ஒதுக்கியுள்ளார். அதில் ஒரு பகுதியை ஒருசில நாட்களுக்கு நான் உங்களுக்கு ஒதுக்கியுள்ளேன். நீங்கள் இதற்காக நன்றி சொல்ல வேண்டுமானால் கலைஞருக்குத் தான் சொல்ல வேண்டும் என்று ராஜு மிக இயல்பாகப் பேசியபோது — இத்தகைய உள்ளம் இசை உள்ளமாக இருப்பதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது என்று எண்ணிக் கொண்டேன்.

இந்தப் பாடலை மேடைகள் தோறும் தண்டபாணி தேசிகர் பாடிப்பாடி இதன் புகழ் பட்டிதொட்டியெல்லாம் பரவி நின்றதாலும் — யார் இசை நிகழ்ச்சியானாலும் இந்தப் பாடலைப் பாடும்படி மக்கள்

கேட்பது வாடிக்கையாகி விட்டதாலும் — இந்தப் பாடலைப் பாடாத வித்வான்களே இல்லை என்கிற அளவுக்கு எல்லோரும் பாடினர்.

சிதம்பரம் ஜெயராமன் பாடியுள்ளார்.
மதுரை சோமு பாடியுள்ளார்.
நாதசுர சக்ரவர்த்தி ராஜரத்தினம் வாசித்துள்ளார்.
சீர்காழி பாடியுள்ளார்.
டி.எம். சௌந்திரராஜன் பாடியுள்ளார்.
குன்னக்குடி வைத்தியநாதன் வயலினில் வாசித்துள்ளார்.
இந்தப் பட்டியல் முடிவற்றுத் தொடரும் ஒன்று.
இந்த நிலையில் —

'என்ன இப்படிப்பட்ட பாடலை எல்லாம் பாடிக் கொண்டிருக்கிறீர்கள்' என்று தண்டபாணி தேசிகரிடம் ராஜாஜி ஒருமுறை கேட்டிருக்கிறார். இதனைச் சொல்லி கவிஞரிடம் வருத்தப்பட்டிருக்கிறார் தேசிகர் அவர்கள்.

தமிழுக்கு எதிரான கொடிய நஞ்சு — எவ்வளவு பெரிய மனித இதயத்திலிருந்து சுரந்திருக்கிறது என்று எண்ணுகிற யார்க்கும் — தமிழர்கள் இன்னும் எவ்வளவு திண்ணியராக வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறார்கள் என்பது புரியாமல் போகாது.

எவ்வளவு பெரிய ஆன்மீகவாதியாக இருந்தாலும் ஒரு தமிழன் தன் தமிழுக்கான இத்தகைய எதிரிகளை சந்திக்க நேர்கின்றபோது தன்னையும் அறியாமல் பெரியாரின் திசைநோக்கி கையெடுக்க கடமைப்பட்டவனாகி விடுகிறான்.

வாலறுந்த நரிகள் தங்கள் தந்திரம் மிக்கதோர் மந்திரமில்லை என்ற நம்பிக்கையோடு — ஆயிரம் ஆயிரம் தோல்விகளுக்குப் பின்னரும் தமிழ் அழிப்புப் பணிகளில் முனைந்து முயன்று கொண்டுதானிருக்கின்றன.

இவற்றையெல்லாம் புறம்தள்ளி மிதித்து — தமிழ் வளர்ந்து, விரிந்து தழைத்துக் கொண்டுதானிருக்கிறது. தன்னைப் போன்ற புதிய புதிய விழுதுகளை இறக்கியபடி என்ற எண்ணம் வருகிறபோதெல்லாம் —

தன்னையும் தமிழுக்கோர் விழுதாக்கித் தந்த — தான் பிறந்த வீரேஸ்வரம் மண்ணின் நினைவில் ஆழ்ந்து விடுவார் கவிஞர்.

2 பிறந்த மண் ஈர்ப்பு

மண்ணுக்கு இருவித ஈர்ப்புச் சக்திகள் உண்டு. ஒன்று புவி ஈர்ப்புச் சக்தி. இதை அறிவியல் பேசும். இன்னொன்று மனம் ஈர்ப்புச் சக்தி. இதை இலக்கியம் பேசும்.

அமெரிக்க மண்ணில் வேர்பிடித்துக் கொண்ட பிறகும்கூட ஆர்.கே.நாராயணன் மனதை இழுத்து வைத்துக் கொள்கிறது — அவர் பிறந்த மண்ணான மால்குடி. இதுதான் பிறந்த மண்ணின் மனம் ஈர்ப்புச் சக்தி.

அமெரிக்கக் குடிமகனாகிப் பௌதிகத்திற்கான நோபல் பரிசைப் பெற்ற சந்திரசேகர் என்ற விஞ்ஞானி — தனக்குக் கிடைத்த அந்த உலக அங்கீகாரத்தைப் பகிர்ந்து கொள்ள — தான் பிறந்த சென்னைக்கு வரவேண்டும்; தான் படித்த மாநிலக் கல்லூரியைக் காண வேண்டும் என்று விரும்பி இங்கே வந்ததோடு; மாநிலக் கல்லூரி வகுப்பறை ஒன்றில் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி இங்கேதான் நான் உட்காருவேன் என நா தழுதழுத்துக் கண்களில் நீர் மல்கி நின்றாரே; அதற்குப் பெயர்தான் மண்ணின் மனம் ஈர்ப்புச் சக்தி.

பூமியை விட்டு பிரிந்த பொருள் மீண்டும் பூமிக்குத் திரும்பும் போது பூமியை நெருங்க நெருங்க புவிஈர்ப்புச் சக்தியின் வேகம் அதிகமாகும்.

மனம் ஈர்ப்புச் சக்தியில் பிறந்த மண்ணினைப் பிரிந்த தூரமும் காலமும் அதிகம் ஆக ஆக அதன் மீதான தாகம் அதிகம் ஆகும்.

வெற்றிடங்களில் புவி ஈர்ப்புச் சக்தி செயல்படுவதில்லை. ஆனால் மனம் ஈர்ப்புச் சக்தியை எந்த வெற்றிடத்தாலும் செயலிழக்கச் செய்ய முடிவதில்லை.

பூமியின் ஈர்ப்புச் சக்தியைக் கடந்து — வெற்றிடத்தைத் தாண்டி; நிலவின் ஈர்ப்புச் சக்திக்கு ஆட்பட்டிருந்த நிலையிலும் ஆர்ம்ஸ்ட்ராங் பூமியின் நினைவாக இருந்தது இதற்கான சான்றாகும்.

விஞ்ஞானம், எழுத்தாளன், கலைஞன் என எல்லோரது மனத்தையும்விட ஒரு கவிஞனின் மனதைக் கவர்வதில்தான் பூமிக்கு விருப்பம் அதிகம்.

தான் பிறந்த மண்ணைப் பிரிந்து — தொலைதூர ஊர் ஒன்றில் வேலை பார்க்கிறார் கவிஞர் பழமலை. அங்கே தன் வீட்டுத் தாழ்வாரத் தில் ஒரு குருவி வந்து உட்காருகிறது. கவிஞருக்கு அதை எங்கோ பார்த்ததுபோல் இருக்கிறது. உற்று உற்றுப் பார்க்கிறார் பழமலை. மங்கலாய் ஒரு அடையாளம் தோன்றுகிறது. கவிஞர் முகத்தில் அடையாளம் கண்டுவிட்ட மகிழ்ச்சி. 'நீ குழுமூர்தானே' குருவியிடம் கேட்கிறார். தன் ஊரிலிருந்து வந்த விருந்தாளியைத் தாழ்வாரத்தில் உட்கார வைத்துவிட்ட வருத்தம் நேரிடுகிறது. இப்படி யாரைப் பார்த்தாலும் எதைப் பார்த்தாலும் தன் ஊரின் அடையாளமாகவே காணும் கண்கள் கவிஞர்களின் கண்கள்.

கவிஞர் திருச்சி தியாகராஜன் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்து விடுவாரா என்ன?

கவிஞர் திருச்சி தியாகராஜன் 1952-ஆம் ஆண்டு முதல் நாற்ப துக்கு மேற்பட்ட ஆண்டுகளாகச் சென்னையில் வாழ்பவர். தன் வாழ்வில் பெரும்பகுதியைச் சென்னையில் செலவிட்டவர். அவர் வாழ்வில் பெற்ற இலக்கிய சிறப்புகள்; மக்கட்பேறு; சொந்த வீடு என எல்லாம் சென்னை வாழ்வுக்குப் பிறகே. இருந்தும் — 'அய்யா உங்கள் ஊர் எது என்று கேட்டதும்' கொஞ்சமும் யோசிக்காமல் ஒரு அனிச்சை செயலாக அவர் வாயிலிருந்து வெளிப்படும் பெயர் ''வீரேஸ்வரம்'' என்பதுதான்.

வீரேஸ்வரமா? அது எங்கேய்யா இருக்கு?

என்னாங்க இது! நீங்களும் திருச்சிக்காரருங்கிறீங்க. வீரேஸ்வரம் தெரியாதா? அவருக்கு மனத்தளவில் இந்தியத் துணைக்கண்டமான தில்லி கூட வீரேஸ்வரத்துக்கு அப்புறம்தான். இந்தக் கேள்விக்குப் பிறகு அவர் நம்மை பேசவிட்டால்தானே. வீரேஸ்வரத்தின் வரலாறு; அதன் இயற்கை வனப்பு; அங்கே தன் இளமைக்காலம் என மூச்சுவிடா மல் அடுக்குகிறார்.

அவர் கவிஞராக இருக்கிறார். அதனால்தான் இந்த உணர்வு என்பதில்லை. பாமரன் ஒருவன் அவனது ஊரைப்பற்றிக் கேட்ட மாத்திரத்தில்... ஒரு ஏக்க பெருமூச்சில் இத்தனையையும் சொல்லி விடுவான். எனவே, பிறந்த மண் என்று வருகிறபோது அவரவர் உணர்வுக்குக் கவிஞர் என்றோ பாமரன் என்றோ எந்த வித்தியாசமும் கிடையாது. காவிரி ஆறு முக்கொம்பு பகுதியில் அகண்ட காவிரியாக வும் கொள்ளிடமாகவும் பிரிந்து — ஒரு மலர்மாலையின் வடிவம் பெற்றுக் கல்லணையில் ஒன்றாக இணைகிறது. மலர்மாலையின் குஞ்சம் போல் — திரு அய்யாறு என ஐந்து ஆறுகளாகப் பிரிகின்றன, மணமாலையை அணிந்து புடைத்திருக்கும் மார்பு போல்;

இந்தக் காவிரி மாலையை அணிந்து அழகொளிரும் வாய்ப்பினைப் பெற்ற ஊர் திருவரங்கத்தைச் சேர்ந்த எங்கள் வீரேஸ்வரம் என்கிறபோது — இதைச் சொல்கிறவர் பவளவிழா நாயகர் திருச்சி தியாகராஜனா அல்லது கன்றுபோல் துள்ளிக் குதித்துவரும் பள்ளிப்பருவத்து மருக்கொழுந்தா என்ற சந்தேகம் வந்துவிடும். அப்படியொரு நெகிழ்வு.

'ஆரம்தரும் பொன்னி சூழ் அரங்கம்' என அஷ்டப் பிரபந்தங்களின் ஆசிரியரும் — காவிரியின் கோலத்தை இதேபோல் மாலையாகத் தான் காண்கிறார். அவர் திருவரங்கன் பக்தர் ஆதலால் திரு அரங்கத்தின் கழுத்தில் விழுந்த மாலையாகக் காண்கிறார். நம் கவிஞரோ வீரேஸ்வரத்தின் மைந்தர். ஆதலால் தன் ஊரின் மார்பில் விழுந்த மாலையாகக் காண்கிறார் காவிரியை.

வரலாற்றுக் குறிப்பில் — வீரேஸ்வரம்

சம்புவராயர் ஒரு குறிஞ்சி குறுநில மன்னர். படைகளைப் பயிற்சி அளித்துத் தயார் செய்து வைத்திருப்பதும்; தேவைப்பட்டபோது சோழ பாண்டியர்களான வேந்தர்களுக்கும் அளித்து உதவுவதும் சம்புவராயர் பணி. இவரது வீரத்திற்கு இந்த வரலாறு ஒரு முத்திரை. பல்லவர்களும் இவரைச் சார்ந்தவரே.

வேலூரிலிருந்து போளூர் போகும் வழியில் சந்தவாசல் என்ற ஓர் ஊர் உள்ளது. இவ்வூர் வழியாகச் சென்றால் படவேடு என்ற ஊரை அடையலாம். பெயர்கள் திரிந்து உருவழிந்த ஊர்களில் இதுவும் ஒன்று. படைவீடு என்ற பெயரே — படவேடாகி திரிந்து போனது.

இரு மலைகளை இணைத்து அமைக்கப்பட்ட சம்புவராயரின் கோட்டையாகப் படைவீடாகத் திகழ்ந்த இந்த ஊர், படைவீடான இதன் வரலாற்று முக்கியத்துவம் மறைக்கப்பட்டுப் பரசுராமனின் தாயான ரேணுகாதேவி கோயில் கொண்ட தலம் என்ற புதிய ஆன்மீக சிறப்புக் கொடுக்கப்பட்டு விட்டது. ஊரும் படைவீடு என்றில்லாமல் படவேடு என்றாகி விட்டது.

படையுதவி அளிப்பது தொடர்பாக மூன்றாம் ராஜராஜ சோழனுக்கும் சம்புவராயருக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக இருவருக்கும் இடையே சேந்தமங்கலம் என்ற இடத்தில் போர் மூள்கிறது. இந்தப் போரில் மூன்றாம் ராஜராஜன் தோல்வியைத் தழுவ சம்புவராயர் — ராஜராஜனைக் கைது செய்து படை வீட்டிற்குக் கொண்டு சென்று விடுகிறார்.

வீரேஸ்வரன், சோமேஸ்வரன் என்ற போசள மன்னர்களான இரு குறுநில மன்னர்கள் தற்போது சமயபுரமாக இருக்கின்ற கண்ணபுரம் பகுதியை அப்போது ஆண்டு வந்தனர். இவர்கள் சம்புவராயரின் நண்பர்கள். எனவே, மூன்றாம் ராஜராஜ சோழனின் அரச பிரதிநிதிகள் இந்த மன்னர்களை அணுகி — சம்புவராயரிடம் தூது சென்று ராஜராஜனை விடுவித்துத் தரும்படி வேண்டுகின்றனர். இந்தக் கோரிக் கையை ஏற்று சம்புவராயரிடம் தூது சென்று பேசி ராஜராஜசோழனை வீரேஸ்வரன், சோமேஸ்வரன் ஆகிய இருவரும் விடுவித்து வருகின்ற னர்.

திரு.வி.க.அவர்களின் மாணவரான சக்தி சுப்பிரமணியம் அவர் கள் இந்த வரலாற்றுக் குறிப்புகளை எழுதியிருப்பதோடு இதுபற்றி விரிவாக ஆராயப்பட வேண்டும் எனவும் கவிஞரிடம் கூறியுள்ளார்.

திருவரங்கத்தில் அம்மா மண்டபத்திற்குக் கிழக்கேயும், மாம்பழச் சாலைக்கு மேற்கேயும் — காவேரி ஆற்றுப்பாலத்தை ஒட்டியுள்ள பகுதி வீரேஸ்வரம். காவிரிக் கரையில் அமைந்துள்ள கிராமம்.

வீரேஸ்வரத்தின் காவிரிக் கரைக்கு நேர் எதிர்புறத்தில் உள்ள தென்கரையை ஒட்டி திருச்சி, க்ரூர் சாலையில் இடப்பக்கத்தில் சோமேஸ்வரம்பேட்டை உள்ளது. வீரேஸ்வரன் சோமேஸ்வரன் என்ற இரு குறுநில மன்னர்களின் பெயரால் அழைக்கப்படுகின்றன இந்தக் கிராமங்கள் என தன் ஊரின் வரலாற்றுக் குறிப்பையும் தருகிறார் கவிஞர்.

வீரேஸ்வரத்தின் தெற்கே காவேரி. வடக்கே கொள்ளிடம். இடை யிலே ஒரு சின்ன ஆறு. இந்த ஆறு மலட்டாறு என விவசாயிகளாலும், திருமஞ்னக் காவேரி என ஆன்மீகவாதிகளாலும் அழைக்கப்படுகிறது. முக்கொம்புக்கு அருகே தோன்றியதிலிருந்து — கல்லணைக்கு அருகே காவிரியில் மீண்டும் கலக்கும்வரை பாசனத்திற்குப் பெரும்பகுதி நீர் பயன்படாத ஆறாக இது இருப்பதால் விவசாயிகள் பார்வையில் இது மலட்டாறு. சீரங்கம் கோயிலை ஒட்டி செல்வதால் கோயில் யானைக ளைக் குளிப்பாட்டி வெள்ளிக்குடங்களில் நீர் எடுத்து யானைத்தலை மேல் வைத்துச் சென்று திருவரங்கனைக் குளிப்பாட்ட இந்த நீரைப் பயன்படுத்துவதால் இந்த ஆற்றினைத் திருமஞ்சனக் காவேரி என வைதீகர்கள் அழைக்கின்றனர்.

மலட்டாறு என்ற காரணப்பெயரும், திருமஞ்சனக் காவேரி என்ற காரணப் பெயரும் ஒரே ஆற்றுக்குப் பொருந்துவதற்குக் காரணம் இருவேறு வர்க்கப் பார்வைகளே.

ஊரைச் சுற்றிலும் —

அகண்ட காவேரி, கொள்ளிடம், திருமஞ்சனக் காவேரி என ஆறுகள் சூழ்ந்திருப்பதால் நீர்மலிந்த ஊராகவும், மாசியம் தோட்டம், பாதிரி தோட்டம், நந்தவனத் தோட்டம், மாம்பழத் தோட்டம் எனத் தோப்புகளும் அடர்ந்த தோட்டங்களும் நிறைந்திருப்பதால் நிழல் சூழ்ந்த மண்ணாகவும் —

வீரேஸ்வரம் இயற்கை எழில் கொஞ்சும் பொழில் சூழ்ந்த ஊராகத் திகழ்ந்தது.

3	கடல் காவிரி சூழ் வீரேஸ்வரம்

'பிட்டு' சுட்டு விற்றுப் பிழைப்பு நடத்தும் அனாதைகளும், அபலைகளும், மூதாட்டிகளும்கூடக் வைகைக்கரை கட்டுவதற்கான தங்கள் பங்களிப்பைச் செலுத்தியே தீர வேண்டுமென்ற அரசாணையும்;

பிட்டு வாங்கி தின்றுவிட்டுக் கரைகட்டுவதற்கான பங்களிப்பைச் செய்ய தவறுபவன் சிவனேயானாலும் பிரம்படி பட்டே ஆகவேண்டும் என்ற அரசனின் கண்டிப்பும் —

வெறும் கதையல்ல. மதுரையில் வைகைக்குக் கரைகட்டுவதன் அவசியத்தை உணர்த்தும் கட்டளைகள்.

மைசூரில் கிருஷ்ணராஜசாகர் அணையும், ஹேமாவதி அணையும், தமிழகத்தில் மேட்டூர் அணையும் கட்டப்பட்ட பிறகும்கூடச் சில அதீத மழைக்காலங்களில் திருச்சிக்குள்ளும் சீரங்கத்திற்குள்ளும் நகர்வலம் புகுகிற காவிரி, இந்த அணைக்கட்டுகள் என்கிற மூக்கணாங்கயிறுகள் இல்லாத காலங்களில் எப்படியெல்லாம் கட்டுக்கடங்காமல் குதியாட்டம் போட்டிருக்கும் என்பதை நம்மால் கற்பனைக்கூடச் செய்து பார்க்க முடியாது. ஏனென்றால் சிறுசிறு குட்டைகளையே குளங்களாகப் பாவித்துப் பழக்கப்பட்டுப் போன கண்கள் நமது கண்கள்.

உலகெல்லாம் நீர்சூழும் ஊழிக்காலத்தை
'நெடுவெள்ளம் பெருவிசும்பின் மீதோடி
பெருகும் காலம்' என்றும்;

'திரை ததும்ப பாரெல்லாம்
நெடுங்கடலே ஆன காலம்' - என்றும்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்த ஆழ்வார்கள் பாடுதற்குக் காரண மான இந்தக் காட்சிகளை எங்கே கண்டிருப்பார்கள் என்று திவ்விய பிரபந்தத்தைப் படித்தபோது வியந்தது உண்டு. ஆனால், திருச்சியார் இளமைக் காலங்களில் தாம் கண்ட காவிரிப் பெருக்கைப் பற்றிக்கூறிய போதுதான் — ஆழ்வார்கள் இந்த நீர்பெருக்குக் காட்சியினைக் காவிரிப் பெருக்கைப் பார்த்தே பாடியிருக்க வேண்டும் என்று புரிந்தது.

அணைகள் கட்டப்படுவதற்கு முன்பு மழைக் காலங்கள் என்பது காவிரி கரையோர கிராமங்களைப் பொறுத்தவரை மரணக்காலங்கள். தன்னைக் கட்டுப்படுத்தும் கரைகளைக் காவிரி கட்டுடைத்துக் காட்டும் காலங்கள் மழைக் காலங்கள். காவிரியில் கொள்ளாத நீரையெல்லாம் வாங்கிக் கொள்வதற்காக உருவாக்கிக் கொள்ளிடம் எனப்பெயர் பெற்றக் கொள்ளிடம்கூடக் கொள்ளாமல் நீர் பெருகும். அப்போதெல் லாம் கவிஞரின் வீரேஸ்வரத்தில் ஏழடி எட்டடி நீர் பெருகும். மக்கள் மாடி வீடுகளிலும் மரங்களிலும் தஞ்சம் புகுவார்கள். காவேரி வீரேஸ்வ ரம், சீரங்கம், கொள்ளிடம் என்றெல்லாம் தனித்தனி பெயர்கள் இன்றிக் காவிரிக்கடல் எனக் காட்சி தரும். இதைப் பார்த்துதான்-

இது ஊழிக்காலமோ என்று அஞ்சி — திரை ததும்ப பாரெல்லாம் நெடுங்கடலே ஆனகாலம் என்று கூறி நாராயணனை அபயத் திற்கு அழைத்திருக்க வேண்டும் ஆழ்வார்கள்.

நாராயணன் பத்துப் பதினைந்தடி மதில்களுக்குள் தன்னைப் பத்திரப்படுத்திக் கொண்டான் என்கிற உண்மை பக்தர்கள் கண்களுக் குத் தெரியாது என்பது வேறுகதை.

அந்தக் காலங்களில் —

மழைக்கால காவிரி, வரும் வழிகளில் உள்ள கரையோர கிராமங் களை எல்லாம் சூறையாடி வரும். வீட்டுக் கூரைகளும், வைக்கோல் போர்களும் வெள்ளத்தில் மிதந்துவரும். வெள்ளத்தில் கரடியைப் பற்றியவன் கதையாகக் கூரைகளிலும், வைக்கோல் போர்களிலும் தொத்தியபடி பயந்து உறைந்த முகங்களோடு தவித்து வரும் மனிதர்க ளும் இருப்பார்கள். ஆடுமாடுகளும் இருக்கும் அபூர்வ காட்சிகளும் உண்டு. வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மலைப்பாம்புகளும், ஆடுமா டுகளும் மனிதர்களும் உயிரோடும் உயிரற்றுப் பிணமாகவும் கரை ஒதுங்குவர்.

இதெல்லாம் புராணக் காட்சிகள்போல் பழங்கதையாய்ப் பழங்க னவாய் ஆகிப் போனது இன்று. தேனையும் பாலையும் அளந்து

தருவதுபோல் நீரை அளந்துவிடக் கோரி நீதிமன்றத்தில் மாநில அரசும் மக்களும். காலம் கண்முன்னேயே வெகுவாய்தான் மாறிவிட்டது?

வீரேஸ்வரத்தை ஒட்டி மாசியம் தோட்டம்; மாம்பழத் தோட்டம்; நந்தவனத்தோட்டம்; பாதிரித்தோட்டம் என எண்ணற்ற தோட்டங்கள். ஒவ்வொரு தோட்டமும் ஐந்து முதல் பத்து ஏக்கர்கள் என உரிமையா ளர்களின் தகுதிக்கு ஏற்ப விரிந்த நிலப்பரப்பைக் கொண்டிருக்கும்.

ஒவ்வொரு தோட்டத்திலும் வானளாவி நிற்கும் மூங்கில் புதர்க ளும், நாவல் மரங்களும், புளிய மரங்களும், மா பலா மரங்களும் தோட்டங்களுக்குத் தோப்பின் தோற்றத்தைத் தந்திருக்கும். ஒவ்வொரு தோட்டத்தைச் சுற்றிலும் மூங்கில் முள்ளாலான படல்களை வைத்து வேலி அமைத்திருப்பார்கள். வேலியை ஒட்டி ஈச்சம் குத்துகளும் களாச்செடிகளும், காரைச் செடிகளும் அடர்ந்திருக்கும். மாம்பழம், கொய்யா, நாவல், ஈச்சம் பழங்களுக்காகவும், களா, காரைப் பழங்க ளுக்காகவும் சாரை பாம்புகளும் நல்ல பாம்புகளும் அந்தப் புதர்களி லும், புற்றுகளிலும் வளைந்து நெளியும்.

நாவல் மரங்கள் பழுத்துக் குலுங்கும். பருவக் காலங்களில் குரங்குகள் குடியேறும். நாவல் மரங்களின் பழங்களை அவை உலுக்கி உதிர்த்து விளையாடும் விளையாட்டு, குற்றாலக் குறவஞ்சி வரிகளை நினைவுபடுத்தும்.

'வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
தேனருவி திரையெழுப்பி வானின் வழி ஒழுகும்
செங்கதிரோன் தேர்க்காலும் பரிக்காலும் வழுகும்'

கொடுக்காப்புளி மரங்களும், கோவைக் கொடிகளும் மூங்கில் முள் வேலிகளை மூடி மறைத்துப் பச்சை மதில்களாக்கி வைத்திருக்கும். வேலிகளில் உள்ள மரங்களில் வெடித்துத் தொங்கும் கொடுக்காப்புளிப் பழங்களைப் பச்சைக்கிளிகள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு கொத்தித் தின்பது சிறுவர்களுக்கு ஆனந்த காட்சிகளாகும்.

குயில்கள், செம்போத்து, பச்சை நிறப் புறாக்கள், புதர்களில் காடை கவுதாரிகள் என்று விதவிதமான பறவைகளும், கட்டை விரல் பருமன் அளவுள்ள தேன்சிட்டுகளும், பூஞ்சிட்டுகளும் மின்வெட்டுக ளாக இங்கும் அங்கும் பறந்து பாயும்.

பொன்வண்டுகள், பொறி வண்டுகள் என ரீங்காரம் செய்யும் உயிர் யாழ்கள் உலவி கொண்டிருக்கும்.

நாரைகள் கொக்குகள் கழுகுகள், பருந்துகள், கிருஷ்ணப் பருந்து கள் என அமைதியாக இரைதேடும் பறவையினங்கள் எனக் கணக்கற்ற

உயிரினங்கள் பற்றி எண்ணற்ற குரல்கள் — இந்த இயற்கையோடு இருந்து பழக்கப்பட்டவர்களுக்குதான் அவை பற்றிய அருமைகள் தெரியும்.

குயில்கூவிக் கொண்டிருக்கும், கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும், வாசம் உடைய நற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும், கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுகள் உண்டு, கனிமரங்கள் மிக்க உண்டு
பூக்கள் மணம் கமழும்; பூக்கள் தோறும் சென்றுதேன்
ஈக்கள் இருந்தபடி இன்னிசைப் பாடிக்களிக்கும்.

எனப் புரட்சிக் கவிஞர் கண்ட பர்வதத்தின் சாரல் இந்த வீரேஸ்வரம் காவிரிக் கரையிலும் உண்டு.

***''கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தன் — கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ''***

— என ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் கேட்பாரே அந்தக் குருவிகளின் பேச்சுகள் பொழுதெல்லாம் கேட்டுக் கொண்டேயிருக்கும்.

''போது அலர் காவில் புதுமணம் நாறப்
பொறிவண்டின் காமாரம் கேட்டு உன்
காதலியோடு உடன் வாழ் குயிலே''

''கள்ளவிழ் செண்பகப்பூ மலர் கோதிக்
களித்து இசைபாடும் குயிலே''

''தேம்கனி மாம்பொழில் செந்தளிர் — கோதும்
சிறு குயிலே''

என்றெல்லாம் ஆழ்வார்கள் திருவரங்கன் வாழும் சோலைக் குயில்களை விளித்துப் பேசுவார்களே — அந்தக் குயில்கள் இந்தத் தோட்டங்களின் தோப்புகளிலும் நிறைய உண்டு.

நந்தவனத் தோட்டம் என்பது சீரங்கனுக்கு மாலை தொடுத்துச் சூடுவதற்காகவே உருவாக்கப்பட்ட தோட்டம். வீரேஸ்வரத்தின் மேலத் தெருவை ஒட்டி மேற்குப்புறத்தில் இத்தோட்டம் அமைந்துள்ளது. இந்தத் தோட்டத்தில் பறித்துத் தொடுத்த மலர்மாலையைத்தான் ஒவ்வொரு நாளும் சீரங்கநாதருக்கு முதல்மாலையாக அணிவிப்பார்கள்.

தோட்டத்தின் நடுப்பகுதியில் ஒரு பெரிய குளம். இதில் வெண்தாமரை; செந்தாமரை, அல்லி மலர் கொடிகள் நிறைந்திருக்கும். ஒரு மூங்கில் படலின் நான்கு மூலைகளிலும் மண் பானைகளைக் கவிழ்த்துக் கட்டியிருப்பார்கள். அது குளத்தில் ஏதாவது ஒரு மூலையில்

தெப்பம்போல் எப்போதும் மிதந்து கொண்டிருக்கும். இதில் உட்கார்ந்து கொண்டு இந்தத் தெப்பத்தை நகர்த்திச் சென்று குளத்தில் உள்ள மலர்களைப் பறித்து வருவார்கள் — பூக்காரப்பாகவதர்கள்.

இந்தக்குளம் தவிர நந்தவனத்தோட்டத்தில் துளசி, மனோரஞ்சிதம், வகை வகையான மல்லிகை, முல்லை, இருவாட்சி, செண்பகம், பன்னீர்ப்பூ, ரோஜா என எல்லா வகைப் பூச்செடிகளும் உண்டு.

இந்தத் தோட்டத்தில் புகுந்தால் வெளியே வர மனமிருக்காது. வெளிவந்து விடுபவனுக்கு மனம் என்ற ஒன்று இருப்பதாக நினைக்க முடியாது. இத்தோட்டத்தில் உள்ள தாமரைக்குளம் கவிஞரைக் கவர்ந்த மிக முக்கிய இடமாகும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் இந்தத் தோட்டத்திலும் குளக்கரையிலும் உலாவி மகிழ்வதில் தனி இன்பம் கண்டவர் கவிஞர்.

''தண்டலைமயில்கள் ஆடத் ...
தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவினேங்க
குவளைக்கண் விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்ட
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும் மாதோ''

என்று கம்பன் பாடினானே அவன் இந்தத் தடாகத்தைப் பார்த்துத் தான் பாடியிருப்பானோ? அவனும் ஒரு திருவரங்கன் அடியான் தானே. சீரங்கம் வந்திருப்பான். இந்தத் தாமரைக் குளத்தைப் பார்த்து தான் பாடியிருப்பான் என்று எண்ணிக் கொள்வார் கவிஞர்.

கம்பன் இந்தத் தாமரைக் குளத்தைப் பார்த்துப் பாடின்னானா இல்லையா என்பது விவாதத்துக்குரியது என்றாலும் —

பெரியாழ்வார் திருமொழியில் வரும் பெரியாழ்வார் பாடல் ஒன்று இந்தத் தாமரைக் குளத்தைப் பார்த்துப் பாடியதாகத்தான் இருக்க வேண்டும்.

ஆண் பெண் அன்னங்கள் தாமரைக் குளத்தில் உள்ள வளமான செந்தாமரை மலர் மேல் ஏறுகிறது. இரண்டு அன்னங்களைத் தாங்காமல் தாமரைமலர் ஊஞ்சலாடுவதுபோல் தத்தளிக்கிறது. ஆனால், அன்னங்கள் வேறு நினைவில் இருப்பதால் மலர் வளைவதைப் பற்றிய நினைவில்லாமல் — அதைப் பூம்படுக்கையாக்கி உறவு கொள்கின்றன. பூவிலிருந்த சிவந்த மகரந்த பொடிகள் நீரில் உதிர்ந்து மிதக்கின்றன. அன்னங்களின் மேலும் ஒட்டிக் கொள்கின்றன. கலவி முடிந்ததும்

அன்னங்கள் குளிக்கப் போகின்றன. அவை குளிப்பதற்காக நீரில் மணமிக்க வண்ணப்பொடிகள் தூவப்பட்டிருப்பதுபோல் இருக்கின்றன மகரந்தப் பொடிகள். அதிலே காதல் அன்னங்கள் களித்து மூழ்கி விளையாடுகின்றன. இத்தகைய நீர்வளம் சீரங்கத்தை விட்டால் உல கில் வேறேது என்று வியந்து பாடுகிறார் பெரியாழ்வார்.

சேவலோடு பெடை அன்னம்
செங்கமல மலர் ஏறி — ஊசல் ஆடி
பூவணைமேல் துதைந்து எழு செம்பொடி
ஆடிவிளையாடும் புனல் அரங்கமே.

**— நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
பெரிய திருவாய்மொழி.**

கவிஞர் இந்தக் குளத்தைப் பார்க்கும் போதெல்லாம் இதைத் தன் பாடலில் பதிவு செய்து வைக்க வேண்டும் என்ற ஆர்வம் மிக்கவ ராய்... இது பற்றிய சிந்தனையில் பலநாள் மூழ்கிக் கிடக்கிறார். கர்நாடக சங்கீதத்தில் கவிஞருக்கு இருந்த பயிற்சி கைகொடுக்க இது ஓர் இசைப்பாடலாய் உருவம் கொள்கிறது. கவிஞர் திருவரங்கன் பக்தரில்லை. அதனால் திருவரங்கனை இணைத்துப் பாடமுடியாது. கவிஞர் ஒரு பகுத்தறிவாளர். தமிழ் விரும்பி, அதற்கேற்ப கவிதை உருக்கொள்கிறது.

தாமரை மலர்களைத் தமிழாகவும், குளத்தினைத் தமிழகமாகவும் உருவகப்படுத்திய ‘தாமரை பூத்த தடாகமடி’ என்ற ஞானப்பூப்பூத்தது இந்தக் குளக்கரையில்தான். கவிஞரின் எண்ணற்ற சிறப்புகளுக்குக் காரணமான இந்தப் பாடலெனும் சிந்தனைத் தேன் பொங்கிப் பெருகக் காரணமான இந்தக் குளக்கரையும், அதை உள்ளடக்கிய இந்தப் பூந்தோட்டமும் — வீரேஸ்வரத்தில் மட்டுமல்ல. கவிஞர் மனதிலும் இடம் பெற்று ஐக்கியமாகி ரொம்பக் காலமாகிவிட்டது. சென்னையிலி ருந்து கொண்டு அந்தப் பூந்தோட்ட நினைவு வரும்போதெல்லாம் நந்தவனத் தோட்டம் அவர் கண்ணில் விரியும் காட்சியாகிவிட்டது.

4 வறுமையின் பிடியில் குடும்பம் தவித்தது

அடிமை இந்தியாவில், 1920-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ஆம் நாள், திருச்சி சீரங்கத்தை ஒட்டிய வீரேஸ்வரம் கிராமத்தில்

உள்ள மாசியம் கொல்லைத் தோட்டத்தின் குத்தகை விவசாயியான கோவிந்தசாமி பிள்ளை வரதம்மாள் தம்பதியருக்கு —

பாரதி பாடிய முப்பத்தி முக்கோடி முகங்களில் ஒன்றாக ஒரு பிள்ளை பிறக்கிறான்.

தமிழன்னையின் இசைமாலையில் அவனும் சில முத்துகளைச், சில வைரங்களைப் பதிக்கப் போகிறவன் என்பதெல்லாம் அவர்களுக்கு அப்போது தெரியாது.

இதனால் —

குடும்பத்தில் பத்தோடு பதினொன்றாகத்தான் இவன் வருகை கணக்கிடப்பட்டது.

இதேபோல் —

தியாகராஜன் என்று பெயரிட்டபோதும், தியாகராஜன் என்ற பெயர் கர்நாடக சங்கீத கீர்த்தனைகளுடனும், இசையுடனும், தொடர்பு கொண்டு புகழ்பெற்ற பெயர் என்பதோ, தங்கள் மகனும் பிற்காலத்தில், இசைப்பாடல்கள் இயற்றுவான்; அது தமிழக அரசின் பரிசினையும், பாராட்டினையும் பெறும். சாகித்ய கர்த்தாவுக்குரிய கலைமாமணி விருதையெல்லாம் அப்பாடல்கள் அவனுக்குப் பெற்றுத்தரும் என்பதெல்லாம் அந்தக் குத்தகை விவசாயத் தம்பதிகளின் கற்பனைக்கு எட்டாதவை.

கோவிந்தசாமி பிள்ளைக்கு வரதம்மாள் இரண்டாவது மனைவி. முதல் மனைவி இறந்து போக — அவர் மூலமாக ராஜுபிள்ளை, ரத்தினம்பிள்ளை என்ற இரு மகன்களையும், ஜானகி அம்மாள், கிருஷ்ணம்மாள் என்ற இரு மகள்களையும் வளர்த்து ஆளாக்கும் கடமையை நிறைவேற்றத்தான் இரண்டாவது மனைவியாக வரதம்மாளை மணக்கிறார்.

வரதம்மாள் வயிற்றில் பிறந்து இறந்தவை போகப் பிறந்து நிலைத்தவை விஜயலட்சுமி, ராமசாமி, தனபாக்கியம், கல்யாணசுந்தரம், தியாகராஜன், பாலகிருஷ்ணன் என ஆறு குழந்தைகள்.

குடும்பம் பெரியது. குத்தகை விவசாய வருமானமோ சிறியது. இந்தச் சொற்ப வருமானத்தில் குத்தகையையும் கட்டி, குழந்தைகளுக்காக உணவு உடைகளை அளிப்பதே பெரும்பாடு. இதில் கல்வி என்பது கனவிலும் நினைக்க முடியாத காரியம். இருந்தாலும் கோவிந்தசாமி பிள்ளை ஆண் குழந்தைகள் அனைத்திற்கும், தந்தை மகற்காற்றும் உதவியாகக் கல்விக் கண்ணைத் திறந்து வைப்பதில் மாபெரும் சாதனையே நிகழ்த்தினார் என்றே சொல்ல வேண்டும்.

கம்பி மேல் நடந்து கொண்டு வானத்தை வில்லாய் வளைக்கும் முயற்சியாகவே இதனை நிகழ்த்திக் காட்டினார் கோவிந்தசாமி பிள்ளை. இன்றைக்கும் தன் தந்தை கோவிந்தசாமி பிள்ளை அவர்களைப் பற்றிப் பேசும்போது — அவர் எங்களுக்கு கல்வி அளிக்காதிருந் திருந்தால் நாங்கள் திருச்சி நகர கூலிகளாகவோ, வீரேஸ்வரத்தில் விவசாயக் கூலிகளாகவோதான் இருந்திருப்போம் என்று கூறும்போது கண்களில் நீர் கட்டிவிடும்.

கோவிந்தசாமி பிள்ளை தன் மகன்களுக்குக் கல்விக் கண் தந்த கருணைக்கொடையின் காரணமாக —

கோவிந்தசாமி பிள்ளையின் மூத்த மகனான ராஜுபிள்ளை ரயில்வேயில் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். அவரது இரு மகன்களான மாணிக்கவாசகம் என்பவரும்; கிருஷ்ணன் என்பவரும் காவல்துறையில் டி.எஸ்.பி. பதவி வகித்தார்கள். இதில் கிருஷ்ணன், பெருந்தலைவர் காமராசர் முதல்வரானது முதல் அவரது இறுதிக்காலம் வரை அவருடைய பாதுகாப்பு அதிகாரியாகப் (செக்யூரிட்டி ஆபீசர்) பணியாற்றும் வாய்ப்புப் பெற்றுப் பெருமை பெற்றவர்.

ராஜு பிள்ளையின் தம்பியான ரத்தினம்பிள்ளையும் காவல்துறையில் டி.எஸ்.பி. யாகப் பணியாற்றியவர். குத்துச்சண்டை பிரியர். உடற்கட்டானவர். ரத்தினம்பிள்ளை என்பதைவிடச் சாண்டோ ரத்தினம் என்றே காவல்துறையில் அழைக்கப்பட்டவர். அறியப்பட்டவர்.

வரதம்மாள் வயிற்றில் பிறந்த ராமசாமிபிள்ளை விளையாட்டுத் துறையில் அதிக ஈடுபாடு கொண்டவர். அதன் காரணமாக ''ஒய்.எம்.சி.ஏ.''யில் உடற்பயிற்சி ஆசிரியர் பயிற்சி பெற்றுத் திருச்சி தேசியக் கல்லூரிப் பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணியாற்றினார். இவரது மகன் பிரேம்குமார் திருவரங்கம் ரயில்நிலையக் கண்காணிப்பாளர்.

கல்யாணசுந்தரம் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் போக்குவரத்து ஆய்வாளராகப் பணியாற்றியவர்.

தியாகராஜன் தென்னிந்திய ரயில்வேயில் எழுத்தர். இவரது இளவல் பாலகிருஷ்ணன் பொன்மலை ரயில்வேயில் எழுத்தராகப் பணியாற்றியவர்.

ஒரு குத்தகை விவசாயியாக இருந்தும் கோவிந்தசாமிப்பிள்ளை அவர்களின் கல்வி விழிப்புணர்வு காரணமாக அவரது ஆறு மகன்களும் — அரசு ஊழியர்களாகி நடுத்தர வர்க்க நிலை அடைந்தனர். இதற்காகக் கோவிந்தசாமிப்பிள்ளையும் வரதம்மாளும் சிந்திய வியர்வை ஒரு சின்னஞ்சிறு காவிரியாகும்.

பிள்ளைகள் நல்ல நிலைக்கு வந்த பின்னரும்கூடக் கோவிந்தசாமி பிள்ளையின் குடும்பம் வறுமைநிலையிலிருந்து மீட்கப்படாததும், கடைசிவரை அவர் தன் கடின உழைப்பிலேயே வாழ நேர்ந்ததும் இன்னொரு சோகக்கதை.

கோவிந்தசாமிப்பிள்ளையின் மூத்த தாரத்தின் பிள்ளைகளான ராஜுபிள்ளை, ரத்தினம்பிள்ளை, ஜானகி அம்மாள், கிருஷ்ணம்மாள் ஆகிய நால்வருக்கும் இளைய தாரத்தின் மகனான தியாகராஜன் பிறப்பதற்கு முன்பே திருமணமாகிவிட்டது. ராஜுபிள்ளைக்குக் குழந்தையும் பிறந்துவிட்டது.

ராஜுபிள்ளையின் மகனும் பின்னாட்களில் பெருந்தலைவர் காமராசரின் பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவருமான கிருஷ்ணனுக்குத் தியாகராஜன் சித்தப்பா முறை. சித்தப்பாவான தியாகராஜன் வயதில் இளையவர். மகன் முறையான கிருஷ்ணன் சித்தப்பா தியாகராஜனை விட வயதில் மூத்தவர். இருதார மணங்கள் வரைந்து காட்டும் விசித்திர கோலங்களில் இதுவும் ஒன்று.

ராஜுபிள்ளையும் ரத்தினம்பிள்ளையும் உத்தியோகத்திற்குப் போய்ச் சம்பாதிக்க ஆரம்பிக்கின்றனர். இந்த நிலை ஏற்பட்டதும் குடும்பத்தில் தாங்கள் வேறு, வரதம்மாள் குடும்பக் குழந்தைகள் வேறு என்ற வேற்றுமை உணர்வு மெள்ள மெள்ள தலைதூக்குகிறது. அதற்கு முதல் தாரத்தின் வழியிலான உறவினர்கள் தொடர்ந்து தூபம் போடுகின்றனர். இவர்கள் இருவரும் வெளியூர்களில் வேலை பார்த்ததால் இந்தக் கால்வாய் அகலப்படுகிறது. அவர்கள் குடும்பம் குழந்தைகள் என்ற உறவின்முன், சின்னம்மா, சின்னம்மாவின் குழந்தைகளான தம்பிகள், தங்கைகள் என்ற உறவில் திரைகள் விழுகின்றன. அந்தத் திரை தந்தை கோவிந்தசாமியையும் சேர்த்து மறைத்து ஒதுக்கி விடுகிறது.

இதனால் —

குடும்பத்தில் ஒரு பகுதி வளமான பின்னும் இன்னொரு பகுதி இன்னமும் தொடர்ந்து வறுமையின் பிடியில்.

ஒரே கூட்டிலிருந்தாலும் முதலில் இறக்கை முளைத்த குஞ்சுகள் பறந்துபோய் இரை தேடத் தொடங்குகின்றன. மீதமுள்ள குஞ்சுகளுக்கு இவை இரை தேடித் தந்து காப்பற்றட்டும் என்று தாய்ப்பறவைகள் ஓய்வு கொள்வதில்லை. மற்ற குஞ்சுகளுக்கும் இறக்கை முளைக்கும் வரை இரை தேடித் தருவதைத் தங்கள் கடமையாகக் கொண்டு செயல்படும் தாய்ப்பறவைகளைத் தன் தோட்டத்தில் காலம் காலமாகப் பார்த்து அனுபவித்தவர் கோவிந்தசாமிப்பிள்ளை என்பதால் —

9



9



5

6



7

8

3

4

தன் முதல் தாரத்துப் பிள்ளைகள் சம்பாதிக்கும் வாய்ப்புப் பெற்றவுடன் குடும்பத்திலிருந்து விலகிச் சென்றதை எந்தவித வருத் தமோ விரக்தியோ இல்லாமல் மற்ற குழந்தைகள் முன்னேற உழைப் பதை மகிழ்வுடனேயே மேற்கொண்டார்.

எந்தக் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதற்காக வரதம்மா ளைத் தன் குடும்ப உறுப்பினராக்கினாரோ — அந்த வரதம்மாளின் குழந்தைகளை வளர்த்து ஆளாக்க கோவிந்தசாமிப்பிள்ளையின் உழைப்பு தொடர்கதையானது.

முதல் தாரத்துப் பிள்ளைகளின் மனங்களைப் போல் மாசியம் கொல்லைத் தோட்டத்துக் கிணற்று நீர் ஊற்று வற்றிவிடவில்லை. வழக்கம் போல் வாய்க்காலில் ஏற்றத்தில் மொண்டு சாய்த்த நீர் ஓடிக் கொண்டிருக்கிறது. ஏற்றத்தில் ராஜு பிள்ளைக்குப் பதிலாக; ரத்தினம் பிள்ளைக்குப் பதிலாக - கல்யாண சுந்தரமோ, தியாகராஜனோ பாலகிருஷ்ணனோ ஏறி, இறங்கிக் கொண்டிருந்தனர்.

வழக்கம் போல்-

குழிகளில் தேக்கிய வாய்க்காலில் நீரைத் தோட்டத்தில் உள்ள அவரைக்கும், புடலைக்கும், கத்தரிக்கும், கீரைப் பாத்திகளுக்கும் வரதம்மாள் தலைக்குடம் சுமந்து ஊற்றிக் கொண்டிருந்தது. வேற்று ஊர்களுக்கு ஓடிவிட கால்கள் முளைக்காத அவரையும், புடலையும், கத்தரியும் வரதம்மாள் முகம் பார்த்துப் பூத்தன; காய்த்தன; கனிந்தன.

அவரை, புடலை, கத்தரி, கீரைத் தண்டுகளை வண்டியில் ஏற்றிக் கொண்டு கூடவே நடந்து பொழுது விடியும் முன் திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு எடுத்துச் சென்று விற்று வருவதும்; பகலெல்லாம் தோட்டத்தில் தண்ணீர் மொண்டு ஊற்றுவதும் மாலையில் வேலி முள்பொறுக்கி; முன்னிரவுகளில் சோறாக்கி; குடும்பத்தினருக்கு உண வூட்டி பின் தூங்கி முன்னெழும் அந்தத் தாய்க்கு ஓய்வு என்பது இரவில் உறங்கும் சில மணி நேரங்களே- அந்த உறக்கம் கூடச் சுகத்துக்காக அல்ல. மறுநாளுக்கான உழைப்புச் சக்தி சுரக்கவே.

இராப் பகலாக என்னதான் உழைத்தாலும்-

உடலுழைப்புக் கேவலமானது; மூளை உழைப்பு உன்னதமானது என்ற நோய் இந்த மண்ணில் ஆழப் புரையோடிப் போன ஒன்று.

ஆதலால்-

உடலுழைப்புக்கு ஏற்ற ஊதியம் ஒரு நாளும் கிடைத்ததில்லை. உடலுழைப்புக்கும், மூளை உழைப்புக்குமான ஊதிய வித்தியாசங்கள்

நாளுக்கு நாள் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமாக ஆழப்பட்டுக் கொண்டே வருவது தொடர் வரலாறு.

இதனால்-

உடலுழைப்பை மட்டமே நம்பிய குடும்பங்கள் இருக்கும் நிலையிலிருந்து இளைத்துத் தேய்வது என்பது தலைவிதியாக்கப்பட்டு விட்டது. கோவிந்தசாமி பிளளையின் குடும்பம் மட்டும், இதில் தப்பித்துக் கொள்ள எப்படி முடியும்?

குத்தகை உயர்வினைக் கொடுக்க இயலாத நிலை; குத்தகை நிலம் கைமாறியது. கோவிந்தசாமியின் குடும்பம் கைகளை இழந்த கையறுநிலையில். வீட்டின் பேரில் கடன்கள் வாங்கி காலம் நகர்கிறது. அதனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலையில் வீடும் ஏலத்திற்கு வந்து விடுகிறது.

தன் மக்களே உதவாத விவசாயிக்கு வேறு எந்த ஊரும் உறவும் உதவும்? உருப்படாத அந்தக் குடும்பத்துக்கு உதவிக் கொண்டிருந்தால் நீங்களும் உருப்பட முடியாது என்ற முதல்தர உறவினர்களின் உபதேசமே இந்த இக்கட்டான சூழலில் கூட ராஜுபிள்ளையையும் ரத்தினம் பிள்ளையையும் கல்லாக இறுகிக் கொள்ள வைத்தன. உதவிக் கேட்ட அப்பாவின் குரலுக்கும், சின்னம்மாவின் குரலுக்கும் அந்த இறுக்கத்தை இளக வைக்கும் சக்தி அற்றுப்போனது.

ரத்தினம் பிள்ளை ஒரு வயதாகும் முன்பே அவரது தாய் இறந்து விட்டதால்; வினாத் தெரிந்த நாள் முதல் அவரைத் தூக்கி ஊட்டி வளர்த்தவர் வரதம்மாள் என்ற சின்னம்மாதான் என்பதால்-

அவர் மட்டும் உறவினர்களின் உபதேசங்களை மீறி; உறவினர்களுக்குத் தெரியாமல் மறைந்தும், மறைத்தும் இந்தக் குடும்பத்திற்கு அவ்வப்போது காசு, பணம் கொடுத்து உதவுவார்.

அவரும், இந்த வீட்டை மீட்டாலும் இரண்டாம் தார பிள்ளைகளுக்கும் பங்கு கொடுக்க வேண்டும்; அதற்கு எதற்கு நீங்கள் இதை மீட்க வேண்டும் என்ற உறவினர்களின் உபதேசங்கள் காரணமாக ராஜுபிள்ளையோடு சேர்ந்து ஒதுங்கிக் கொண்டதால் வீடு ஏலத்தில் போவதைத் தடுக்க முடியவில்லை.

குந்த குடிசையின்றிக் கொழுகுத்த நிலமின்றிப் போகும் ஒரு விவசாயியின் மனத்துயரை விவரிக்க யாரால் இயலும்? கலங்காத மனங்கள் முதல் முறையாகக் கலங்கின.

திசை தெரிந்து நீந்த பார்வையில்லாத குருடனும், அபயக் குரலெழுப்பி உதவிக்குக் கூப்பிட முடியாத ஊமையனுமாகிய ஒருவன்

கடலில் கிடந்து தவிப்பதைக் ‘கண்ணிலா ஊமன் கடன் பட்டாங்கு’ என்பார் சங்க காலப் புலவர் பெருஞ்சித்திரனார். கோவிந்சாமிப் பிள்ளையின் குடும்பமும் இந்தத் தவிப்பில் தத்தளித்தது.

கோவிந்தசாமி பிள்ளைக்கு அலமேலு என்ற ஒரு தங்கையும்; வடமலைப் பிள்ளை, வாசுதேவன் பிள்ளை என்ற இரு தம்பிகளும் இருந்தனர். இம் மூவருக்கும் குழந்தைகள் இல்லை.

5	வாழ்த்தி வணங்குபவன் பக்தனாகிறான் சிந்திப்பவன் பகுத்தறிவாளனாகிறான்

வடக்கிலிருந்து சீரங்கம் கோவிலின் நாராயண மந்திரம்;
கிழக்கிலிருந்து திருவானைக்கா கோவிலின் நமச்சிவாய மந்திரம்;
தென் கிழக்கிலிருந்து உச்சிப்பிள்ளையார் போற்றித் துதிகள்;
தென் வடக்கிலிருந்து சமயபுரத்து அம்மாளின் உடுக்கை ஒலிகள்;
ஊரின் அருகாமையில் உள்ள காமாட்சி அம்மன், ஆஞ்சிநேயர், காளி கோயில்களின் மணி ஓசைகள்

இவை எல்லாம் வீரேஸ்வரத்தைப் பக்தி வெள்ளத்தில் மூழ்கடித் துக் கொண்டிருக்கும் சுற்றுச் சூழல்கள்.

கண்டதே காட்சி என நம்புபவன் வணங்கி வாழ்த்தி பக்தனாகி றான். ஏன் எப்படி என்று கேள்விகள் கேட்டுச் சிந்திப்பவன் பகுத்தறிவு வாதியாகிறான். மாம்பழச் சாலையிலிருந்து கீழிறங்கி வந்தால் தோட் டத்திற்குத் தெற்கு மூலையில் ஒரு காளிகோயில் உண்டு. கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய கிணறும், கிணற்றைச் சுற்றிலும் கோயில் பூசைக்கு வேண்டிய நந்தியாவட்டை, அரளி, செவ்வரளி, அந்திமந்தாரை போன்ற பூச்செடிகள் கொண்ட ஒரு சிறிய நந்தவனமும் இருந்தது. காளிகோயில் பூசைக்கெனச் சோழிய வெள்ளாள இனத்தைச் சேர்ந்த ஒரு பூசாரி இருந்தார்.

இதே காளி கோயிலின் பக்கத்தில் ஒரு சிறிய கொட்டகைப் போட்டு அதில் தங்கி பல நேரங்களில் குறி சொல்வார் ஆரிய பூசாரி என்பவர். இவர் காவல்கார இனத்தைச் சேர்ந்தவர். பெயர்தான் ஆரிய பூசாரி. உடுக்கடித்து சிறுசிறு வெள்ளிமணிகளை உருட்டி குறி சொல் வார். இதனைக் கேட்க சாதி, மத வித்தியாசம் பாராமல் இந்துக்களும், முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் வருவார்கள். ஆண்களும், பெண்க ளும் வருவார்கள்.

ஆண்டுக்கு ஒருமுறை இவர் காளிகோயிலுக்குக் கரகம் எடுத்துத் தானும் இக்கோயில் பூசாரி என்பதை நிலை நிறுத்திக் கொள்வார். ஒரே கோயில் இரு பூசாரிகள். ஒருவர் இல்லாத பொழுது ஒருவர் மற்றவரை குறை சொல்வதும் குறைத்துப் பேசுவதும் அடிக்கடி அரங்கேறும் நிகழ்ச்சிகள். காளியம்மாவால் தன் பூசாரிகளை ஒற்று மைப்படுத்த முடியாமல் போனது ஏன் என்பது விளங்காத பருவம்.

ஆரிய பூசாரிக்கு மாரியப்பன் என்றொரு மகன் உண்டு. இவர் பெரியார் கட்சியான திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர். ஆரிய பூசாரி இறந்த பின்னர் வருமானம் கருதி மாரியப்பன் பூசாரியானார். தந்தை யான ஆரிய பூசாரியைப் போலவே இவரும் குறி சொல்வார். தந்தைக்கு போலவே இவருக்கும் கூட்டம் கூடும். குறி சொல்வது காளியின் மகிமையால் அல்ல, வாய்ச்சாலத்தால் என்பது பற்றியெல் லாம் யாருக்கும் சிந்தனை இல்லை. அந்த நேரத்துக்கு ஆறுதலான வார்த்தை வேண்டும். அதுதான் முக்கியம்.

கும்பகோணம் பக்கத்தில் உள்ள திருவிடைமருதூர் பார்ப்பனரான வரதன் கவிதை எழுத ஆரம்பித்த பின்னர் கவி காளமேகமாகப் பிரபலமடைந்தான். இவன் திருவரங்க மடப் பள்ளியில் சமையற்கார னாக வேலைப் பார்த்தான். இவன் ஓர் ஆசு கவி. சிலேடைக்கவி பாடுவதில் வல்லவன். கவிதைபாடி வைணவம் தழைக்கப் பாடுபட்டு வந்தான்.

சீரங்கத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் திருவானைக்கா கோவில், இது சிவதலம். இங்கே ஒரு கணிகை இருந்தாள். அவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவள். காளமேகத்திற்கு அந்தக் கணிகை மீது மோகம் பிறந்தது. மோகத்திற்குச் சைவ வைண ருசி எல்லாம் கிடையாது. அவளை வைப்பாக்கிக் கொண்டு திருவானைக்காவுக்கு வந்து தங்கிப் போக ஆரம்பித்தார். ஒரு வைணவன் எப்படி ஒரு சைவ சமய சார்புடைய கணிகையோடு தொடர்பு வைக்கலாம் என்ற போர்க்குரல்- சீரங்க மடத்தில் வைணவர் மத்தியில் எதிர்ப்பு வலுத்தது. காளமேகத்திற்குக் கோபம் வந்து விட்டது. போங்கடா நீங்களும் உங்கள் மடமும் என்று சீரங்கத்தைவிட்டு வெளியேறி திருவானைக்கா வந்து சேர்ந்தார். வைணவ மதத்தை விட்டு வெளியேறும் போது 'இந்த மடம் இல்லை யென்றால் சந்தமடம்' என்பதுதான் அவர் சொன்ன சந்தக்கவி. ஒரு கணிகைக்காக வைணவத்தையே ஒரு கந்தலைத் தூக்கி எறிவது போல் தூக்கி எறிந்துவிட்டு வந்த கவி காளமேகத்தைப் புரட்சிக் கவி என்பதா? பக்தி என்பதெல்லாம் ஒரு வசதிக்காகத்தான் என்பதா?

சீரங்கம் ரங்கநாதருக்கு உறையூரில் நாச்சியார் என்றொரு மனைவி உண்டு. இவரைத் துலுக்க நாச்சியார் என்பார்கள். மற்ற

மதத்துப் பெண்கள் கூட, தங்கள் ரங்கநாதன் மேல் மையல் கொள்வார் என்று பெருமை பேச, இந்தக் கதை அளப்பு; ரங்கநாதர் கோடை காலத்தில் உறையூர் செல்வார். மழைக்காலத்தில் காவிரி பெருக்கு தடையாகும் என்பதால் இந்தக் கோடை கால தேர்வு போலும்.

இதே போல் ஆண்டுக்கு ஒருமுறை ஜீயபுரம் போவார் ரங்கநாதர். அங்கு வாங்கிய கடனைத் தீர்க்க என்பது ஐதீகம். ஆண்டு தோறுமா கடன் கொடுப்பார் பாவி கடவுள். இப்படி மனிதனுக்கு என்ன என்ன குணங்கள் உண்டோ அத்தனையும் ரங்கநாதக் கடவுளுக்கு உண்டு என்றால்- மனிதனையே வணங்கி விட்டுப் போகலாமே என எண்ணிக் கொள்வார் கவிஞர்.

சீரங்கம் கோவிலுக்காக விழாக்கள் பெரும்பாலும் வீரேஸ்வரம் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெறும். தங்கக் கருட சேவை, வெள்ளிக்கருட வாகனம், யானை வாகனம், குதிரை வாகனம் என ஒவ்வொன்றில் ஒவ்வொரு நாள் ஊர்வலம் வருவார் உற்சவ மூர்த்தி.

தங்கக் கருடசேவை காவிரிக் கரையில் உள்ள கருட மண்டபத்திலி ருந்து தொடங்கும். மற்ற உற்சவம் ஒவ்வொன்றும் அம்மாமண்டபம்; மொட்டை மண்டபம் என்று வெவ்வேறு இடத்திலிருந்து தொடங்கும். அம்மாமண்டபம் என்பது ராணி மங்கம்மா மண்டபம் என்பதன் சுருக்கம்.

தங்கக் கருடனில் ரங்கநாதர் உலா வரும் போது வயதான கோயில் பெண்கள் கும்பலாகச் சாமிக்குப் பின் செல்வார்கள். இளம் வயது கோயில் பெண்டிர்கள் மதிலை ஒட்டிய முடுகுத் தெருவில் நின்றுதான் பார்க்க வேண்டும். வயதான பெண்டீரை அணிவகுக்க சொல்வதும் கொடுமை. இளம் பெண்களை இடம் ஒதுக்கி, ஒதுக்கி வைப்பதும் கொடுமை.

இந்தத் திருவிழா காலங்களில் பைராகிகள் என்று அழைக்கப்படும் வடநாட்டவர்கள் நாற்பது ஐம்பது பேர் வருடம் தோறும் வருவார்கள். கட்டை விரல் தடிமனில் கயிறு ஒன்று இடுப்பில் கட்டியிருப்பார்கள். அதில் ஒரு கோவணம் மட்டுமே உடை. அந்தக் கோவணத்தைத் தாங்கவா இத்தனை தடிப்பில் கயிறு? பாதம் முதல் கழுத்து வரை சாம்பல் பூசியிருப்பார்கள்.

தெருவில் கிடக்கும் கல்லை உருட்டி அடுப்புக் கோலி ரொட்டி சுட்டுச் சாப்பிடுவார்கள். இந்த ரொட்டி சுட்ட நேரம் போக மீதி நேரங்களில் வட்டமாக உட்கார்ந்து ஒருத்தர் மாற்றி ஒருத்தர் உக்காவை

வாயில் வைத்து இழுப்பார்கள். உக்காவில் ஊதுவது கஞ்சாவாக இருக்கும்.

தினமும் இழுக்க கஞ்சாவை எங்கிருந்து கொண்டு வருகிறார்கள்? யாருக்கும் தெரியாது? ரொட்டியைத் தவிர வேறு உணவே சாப்பிடுவ தில்லையா? தெரியாது. அந்த ரொட்டிக்கான காசு எங்கிருந்து வருகிறது? தெரியாது. திருவரங்கம் வைணவ ஆலயம். நீறு பூசிய பைராகிகள் அதற்கு ஏன் வருகிறார்கள். தெரியாது. பளபளப்பான இரும்பாலான பட்டையின் நுனியில் வளையம் தொங்கும். அதை ஆளுக்கு ஒன்று வைத்திருப்பார்கள். அதனால் பொதுமக்கள் யாரும் அவர்களிடம் பேச பயப்படுவார்கள்.

மண்டபங்களில் விழாக்காலம் தவிர்த்த மற்ற நேரங்களில் சன்னி யாசிகளும் ஏழைகளும் தங்குவார்கள். அங்கும் கூட இந்த பைராகிகள் தங்குவதில்லை. இரவில் இவர்களைப் பார்த்ததாக யாரும் சொன்ன தில்லை. ஆனால் இன்று வரை இவர்கள் பற்றிய மர்ம முடிச்சு அவிழ்ந்ததே இல்லை.

டிசம்பர் மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழா நடைபெறும். முன்பத்து (பகல் பத்து) பின்பத்து (இராப் பத்து) என்பார்கள். இதில் கலந்து கொள்பவர்கள் பெரும்பாலும் நாட்டுக்கோட்டை செட்டியார்க ளும், சௌராஷ்டிரா சனங்களும்தான். அதனால் இதனை மேன்மக்கள் விழா என்பார்கள்.

சித்திரை மாதத்தில் நடைபெறும் சித்திரைத் திருவிழா இதற்கு நேர்மாறானது. இதில் பெரும்பாலும் கிராமப்புற உழைக்கும் மக்கள் தான் கலந்து கொள்வார்கள். தேர் இழுப்பார்கள். வேகாத வெயிலில் நேர்த்திக்கடனாக ஆடு, மாடு, கன்றுகளை எல்லாம் கொண்டு வந்து கோயிலில் காணிக்கையாக விடுவார்கள். மொட்டை அடித்துக் கொள் வார்கள். கிராமத்து விவசாயிகள் என்றால் சவரத் தொழிலாளிகளுக் குக் கூட இளக்காரம்தான். அதனால் சாணை பிடிக்காத மொட்டைக் கத்தியால் வறட்டு, வறட்டு என்று இழுப்பார்கள். மொட்டைத் தலைகளில் ரத்தம் மொட்டு விட்டிருக்கும். ஊருக்குத் திரும்பும் போது இந்த மொட்டைத் தலைகளில் பலாப்பழங்களை வேறு தூக்கி வைத்துக் கொள்வார்கள். வெயிலால் எரிச்சல், பலாப்பழ முள்ளால் வலி இவற்றை மறக்க கோவிந்தா! கோவிந்தா! என்று கூவிக் கொண்டே போவார்கள்.

எந்தவொரு பார்ப்பனனோ பார்ப்பனத்தியோ இப்படி மெய் வருந்த பக்தி செலுத்துவதில்லை. என்றாலும் அவர்களுக்குத்தான்

சுகமான வாழ்க்கை. ரங்கநாதர் ஓரவஞ்சனை சாமியோ? என்பார் கவிஞர். இதனைத்தான் பெரியார் தன் கூட்டங்களில் நகைச்சுவையா கச் சொல்வார்.

''பார்ப்பனன் பக்தி சுக பக்தி; சூத்திரன் பக்தி வலி பக்தி''

கவிஞரின் தாயார் வரதம்மாள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சமயபுரம் கோயிலுக்குப் போவார்கள். காலை நாலு, நாலரை மணிக்கெல்லாம் புறப்பட்டு விடுவார்கள். திருவானைக்கா ரெட்டியார் சத்திரம் பக்கத்தில் குதிரை வண்டிகள் நின்று கொண்டிருக்கும். அதுதான் ஒரே வாகனம். வேறு வாகன வசதிகள் எதுவும் அந்தக் காலத்தில் கிடையாது.

அந்தக் காலத்தில் பிராணிகள் வதைச் சட்டம் கடுமையாக இருக்கும். அதனால் நொண்டிக் குதிரைகள், நொண்டி மாடுகள், கழுத்துப் புண் மாடுகள் ஆகியவற்றை வண்டியில் கட்டினால் அபரா தம் தீட்டி விடுவார்கள். ஆனால் இரவிலும் விடிவதற்கு முன்னும் புறப்படும் பயணங்களுக்கு நொண்டி குதிரைகளையே பயன்படுத்து வார்கள். குதிரை மெதுவாக ஓடுவதை பயணிகள் கவனிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக அழகாகப் பாடிக் கொண்டே வண்டி ஓட்டுவார்கள் குதிரை வண்டிக்காரர்கள்.

கோயிலுக்குப் பக்கத்தில் சப்பாத்தியைப் பரப்பி அந்த முள்ளில் உடம்பெல்லாம் திருநீறு பூசிய சன்னியாசிகள் படுத்திருப்பார்கள். நாக்கில் அலகு குத்தி காளி கோலத்தில் பக்தர்கள் வருவார்கள். சிலர் ஒரு தாடையில் குத்திய அலகு மறுதாடை வழியாக வெளியே வர வருவார்கள். உடலில் கொக்கி மாட்டி தேர் இழுத்து வருவார்கள். பார்ப்பதற்கு அச்சமூட்டுவதாய் இருக்கும். பக்தர்கள் தான் இப்படிப் பயமுறுத்துகிறார்கள் என்றால்-

உடுக்கடிக்கும் பூசாரிகள் தங்கள் பாட்டால் அதைவிடப் பயமுறுத் துவார்கள்.

கையெடுத்துக் கும்பிட்டா
கருணை புரிந்திடுவாள்
காணாமல் போவோரின்
கண்ணைப் பிடுங்கிடுவாள்
சேவிக்காமல் போவோரைச்
செவிடாக்கிப் போட்டிடுவாள்
பரிகாசம் செய்வோரின்
பல்லைப் பிடிங்கிடுவாள்

வசவு புரிவோர் மேல்
வைசூரி போட்டிடுவாள்

என்பன போன்ற வரிகள் ஓங்கார குரலில் ஒலிக்கும்.

அந்தக் காலத்தில் மயில் எண்ணெய் என்று ஒரு எண்ணெய் விற்கும். அதை உள்ளங்கையிலும் புறங்கையிலும் தடவி விட்டு ஊசிகொண்டு உள்ளங்கையில் குத்தினால் வலியின்றி ரத்தமின்றி ரப்பரில் குத்தி வெளிவருவது போல் ஒரு பக்கமிருந்து மறுபக்கம் ஊசி எளிதாக வந்து நிற்கும். அலகு குத்துதல், கொக்கி மாட்டி தேரிழுத்தல் என்பதெல்லாம் அந்த மயில் எண்ணெய் மகிமை என்பதை அறியாமல் மாரியம்மன் மகிமை என்று எண்ணிக் கொள் வார்கள் மக்கள்.

'பயபக்தி' என்ற சொற் பிரயோகம் இந்த அடிப்படையில் வந்ததாகத்தானிருக்கும்.

திருவானைக்காவிலிருந்து இரண்டு கல் தொலைவில் கிழக்கு நோக்கி மலட்டாற்றங்கரையில் பனையடி கருப்புக் கோயிலும் ஒன்று இருக்கிறது. அதன் அருகிலேயே மார்க்கமுடையார் கோயிலும் இருக் கிறது.

பனையடி கருப்புக்கு அவசியம் கிடா வெட்டி படையலிட வேண்டும். தீவிர அசைவம், பக்கத்தில் சாராயப் பாட்டிலும் வைத்து வழிபடுதல் இன்னும் விசேஷம். எதிர் பக்கத்தில் உள்ள மார்க்கமுடை யாரோ சுத்த வீரசைவம்.

பனையடி கருப்புக்குப் படையல் போடும் போது அசைவவாடை அடித்து மார்க்கமுடையார் கோபித்துக் கொள்ளக் கூடாது என்பதற்காக இரு கோயிலுக்கும் இடையில் துணியைக் கட்டி திரை போட்டு விடுவார்கள்.

பனையடி கருப்புதான் கவிஞர் குடும்பத்தின் குலதெய்வம். கவிஞர் குடும்பத்திற்கு மட்டுமல்ல அந்தப் பகுதியில் உள்ள எல்லா வன்னியர் குடும்பங்களுக்கும் மற்றவர்களுக்கும் அவர்தான் குலதெய் வம். பனையடி கருப்பு முழுக்க முழுக்க வன்னியர்களுக்கு மட்டுமே யான குலதெய்வம். என்றாலும் கூடத் தங்கள் இனத்தவரில் ஒருவரை பூசாரியாக வைத்துக் கொள்ளாமல் சோழிய வெள்ளாளரில் ஒருவ ரையே பூசாரியாக வைத்திருக்கிறார்கள்.

தமிழன் தன் இனத்தவன் ஒருவனை உயர்வாக மதிக்காத தனிப் பெரும் குணம் கொண்டவன் என்பது, வன்னியர்களாகிய தமிழர் பிரிவிலும் வேரூன்றி இருப்பதற்கு இது ஒரு உதாரணம்.

கோயிலில் கிடா வெட்டும் முன்பு அதன் தலையில் தண்ணியைக் கொட்டுவார்கள். கிடா சிலிர்த்துத் தண்ணியை உதறும். அப்படி உதறினால் வெட்டுவதற்குப் பனையடியார் உத்தரவு கொடுத்ததாகச் சொல்வார் பூசாரி. கிடா உடனடியாக வெட்டப்படும்.

சில கிடாக்கள் தண்ணி கொட்டியும் அசராமல் நிற்கும். தலையை ஆட்டினால் உடனே வெட்டி விடுவார்கள் என்று தெரியுமோ என்னவோ, கிடா வெட்டுபவர்கள் ஏதோ சாமி குத்தம் செய்திருக்கிறார்கள். அதனால் பனையடியார் இந்தப் பலியை ஏற்க உத்தரவு தரவில்லை என்று கூறி, இதற்குப் பரிகாரமாக அஞ்சோ, பத்தோ பணத்தைக் கோயிலுக்கு மஞ்சள் துணியில் முடிந்து கிடாவின் கொம்பில் கட்டச் சொல்வார். 'தெரியாத சனங்க அறியாது செஞ்ச குத்தத்த மன்னிச்சு பலியை ஏத்துக்கய்யா' எனப் பூசாரி பனையடியாரிடம் உருக்கமாக வேண்டுவார். பின்னர் தட்டில் வைத்திருந்த விபூதியைக் கைப்பிடியளவு அள்ளி கிடாவின் முகத்தில் ஓங்கி அடிப்பார். சாம்பல் கண்களில் பட்டவுடன் கிடா தன் தலையை உதறும். உத்தரவு கொடுத்து விட்டார் பனையடியார் என்று கூறி கிடாவை வெட்டி விடுவார்கள்.

தண்ணீர் கொட்டியும் உதறாத கிடாக்களுக்கு அடுத்த முயற்சியாகச் சாம்பல் வீச்சுக்குத்தலை தப்ப முடியாது என்று எப்படித் தெரியும். மனிதனுக்கே தெரியாத இந்த வித்தை ஐந்தறிவு பிராணியான கிடாவுக்கு எங்கே தெரியப் போகிறது?

கவிஞரின் தாயாரான வரதம்மாள் தன் குழந்தைகளுக்கு ஏதாவது ஒரு நல்ல காரியம் நடக்கவேண்டுமென வேண்டிக் கொள்வார். உத்தரவு கேட்பதன் மூலம் பனையடி கருப்பின் சம்மதத்தையும் உடனே பெற்று விடுவதில் தனி ஆர்வம் கொண்டவர் கவிஞரின் தாயார். ஒரு பொட்டலத்தில் திருநீற்றையும்; இன்னொன்றில் குங்குமத்தையும் கட்டி சாமியின் முன் போட்டுவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டு ஒரு பொட்டலத்தை எடுக்கும்படி பிள்ளைகளிடம் கேட்டுக் கொள்வார்.

திருநீறு வந்தால் சாதகம். குங்குமம் வந்தால் பாதகம். இது அசைக்க முடியாத நம்பிக்கை. முடிந்த முடிவு.

பொட்டலம் எடுக்கப் போகும் கை தப்பித் தவறிக் குங்கும பொட்டலத்தின் பக்கத்தில் போனால் ஏன்டா தம்பி இன்னொரு தரம் குலதெய்வத்தை நல்லா வேண்டிக் கொண்டு பாத்து எடு சாமி என்று பதறியபடி தடுத்து விடுவார்.

திருநீற்றுப் பொட்டலத்தைக் கை நெருங்கும் வரை இந்தப் பதறலும், மறு வேண்டுதலுக்கான தாயாரின் கோரிக்கையும் தொடர்ந்து

கொண்டே இருக்கும். திருநீற்றுப் பக்கம் கை போகும் போது மட்டும் நறுக்குன்னு எடுசாமி என்பாராம்.

இந்தச் சூழல்களைச் சந்தித்த போதெல்லாம் ஏன்? எப்படி? எதற்கு? என்று கேள்விகள் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த காரணத்தால் கவிஞர் திருச்சியார் ஒரு மார்க்சியவாதியாக, ஒரு நாத்திகனாக உருபெற்றார். கண்டதே காட்சி என நம்பி ஏற்று வணங்கி வழிபடுபவ ராக இருந்திருந்தால் இன்னொரு மாணிக்கவாசகர் கிடைத்திருப்பார் திருச்சியார் உருவில்.

கோயில்களில் நடந்த தேரும், திருவிழாவும் அது தொடர்பான ஐதீகங்களும் கவிஞருக்குப் பகுத்தறிவு பார்வையைத் தந்தது என்றால்-

அங்கே நடந்த நாடகம்; லாவணிக் கச்சேரிகள்; பாட்டும், கூத்தும் என்பன போன்ற கலை நிகழ்ச்சிகள் திருச்சி தியாகராஜன் என்ற இளைஞரின் உள்ளத்தில் கலையுணர்வுகளை விதைத்து, அவரைக் கலைஞனாய்க் கவிஞராய் மாற்றியது என்பது இன்னொரு நன்மை.

6 கலையார்வத்தை விதைத்த கலை நிகழ்ச்சிகள்

கோயில்கள் கலைகளை வளர்த்தன. கோயில்கள் சிறப்புடன் விளங்கிய இடங்களில் கலைகளும் செழித்து வளர்ந்தன. கலைகளின் புரவலனாகக் கோயில்கள் செயல்பட்டன. மக்களைக் கவர்ந்திழுத்து வரும் விளம்பர சக்திகளாகக் கலைகள் கோயில்களுக்குக் கைமாறு செய்தன.

ஒன்றை ஒன்று சார்ந்து வளர்ந்தன. புகழ் பெற்றன. கரகாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், மயிலாட்டம், கூத்து பின்னாளில் வந்த நாட்டியம் என எல்லாமே கோயிலைச் சார்ந்து வளர்ந்தவையே. நாதஸ்வர இசையின் உயிர் வாழ்வே கோயில்தான்.

இதனால் கோயிலும் கோயிலைச் சார்ந்த இடங்களிலும் கலைகள் வளர்ந்தன. கலைஞர்கள் தோன்றினார்கள்.

வீரேஸ்வரம் கோயிலைச் சார்ந்த இடம். அதனால் கவிஞருக்கு இளம் வயது முதல் கலையோடு அறிமுகத்திற்கான வாய்ப்புகளும் கிடைத்தன.

அம்மாமண்டபம் போகும் சாலையிலிருந்து வீரேஸ்வரம் மேலத் தெருவுக்கு இறங்கும் இடத்தில் ஒரு ஆஞ்சநேயர் கோயில் உண்டு. அதன் முன்புறம் 20 அடிக்கு 20 அடி சதுரத்தில் மூன்றடி உயரத்தில் ஒரு கருங்கல் மேடையுண்டு. இந்த மேடை சில நாட்களில் களை கட்டி விடும். கூத்து, நாட்டியம், நாடகம், கரகாட்டம், ஒயிலாட்டம் என அமர்க்களப்படும்.

ஊர்க்காரர்களே வேஷங்கட்டிக் கொண்டு கூத்துப் போடுவார்கள். தனக்குத் தெரிந்தவர்கள் உறவினர்கள் எல்லாம் வேஷங் கட்டி ஆடுவதைப் பார்க்கப் பார்க்க நாமும் இத்தகைய கலைகளில் பங்கு கொள்ள வேண்டும் என்ற ஆசைகள் முளை விடும்.

கரூர் பக்கத்திலிருந்து உடுக்கடித்துக் கதை சொல்லும் கலைக் குழுவினர் வருவார்கள். அவர்கள் பொன்னர் சங்கர் கதையை மாதக் கணக்கில் பாடுவார்கள்.

ஆந்திரா பக்கத்திலிருந்து பொம்மலாட்டக் குழு வரும். தோலா லான பொம்மைகளைக் கொண்டு இந்த நிகழ்ச்சியை நடத்துவார்கள். இதற்கு மிகுந்த வரவேற்பிருக்கும். இனக் கவர்ச்சி பேச்சுக்கள் சேட்டை கள் அதிகமாக இருக்கும். சின்னஞ்சிறியவர்கள் விழுந்து விழுந்து சிரிப்பார்கள்.

சிலம்பாட்டம், மல்யுத்தம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் இங்கே நடக்கும்.

ஊருக்குக் கீழ்புறத்தில் காளியம்மன் கோயில் இருக்கிறது. இங் கும் ஆண்டுக்கு ஒருமுறை கரகாட்டம் நடக்கும். காமாட்சி அம்மன் கோயிலில் கழுவேற்றம் (காத்தவராயன் கதை) நடக்கும். கோடை காலங்களில் காமன் பண்டிகை நடக்கும். ரதி மன்மதன் வேஷம் போட்டு ஊரைச் சுற்றிஊர்வலமாக வருவார்கள்.

மன்மதன் எரிந்தானா இல்லையா என்பது தொடர்பாக எரிந்த கட்சி, எரியாத கட்சி என இரு கட்சிகளாகப் பிரிந்து நின்று லாவணி பாடுவார்கள். இதனைப் புரியும்படி சொல்வதானால் பாடல்கள் மூலம் நடைபெற்ற அன்றைய பட்டிமன்றம் இது.

இன்றைக்குப் பட்டிமன்றக் குழுக்கள் சாலமன் பாப்பையா குழு, சிற்சபைக்குழு, சத்திய சீலன் குழு சேவற் கொடியோன் குழு எனப் புகழ் பெற்றிருப்பது போல் அன்றைக்குப் புகழ் பெற்ற லாவணிக் குழுக்கள் இருந்தன.

உறையூர் பக்கத்தில் ரத்தின வேல் லாவணிக் கச்சேரி என்றால் ஏக கிராக்கி. தேதி கிடைப்பது கடினம். அதனால் அவரை முன்பதிவு செய்து கொள்ள துடிப்பார்கள்.

தேதி இல்லை என்றாலும் விட மாட்டார்கள். எப்படியாவது வரவேண்டும் என்று வற்புறுத்துவார்கள். தட்ட முடியாத நிலையில் ஒரே தேதிக்குக் கேட்டவர்களிடமெல்லாம் முன்பணம் வாங்கி விடு வார் ரத்தினவேல். லாவணிக் கச்சேரியில் மன்மதன் இறந்தான் என்றும் இறக்கவில்லை என்றும் இரு குழுவாக நின்று பாடுவது போலவே கூட்டமும் இரண்டு பட்டு நிற்கும். எரிஞ்ச கட்சி, எரியாத கட்சியென.

தங்கள் கட்சிக்காரர் மேடையில் மற்ற கட்சியை இழித்தும் பழித்தும் காரசாரமாகப் பேசுவதைப் பார்த்துக் கூட்டத்தில் உள்ள அந்தக் கட்சிக்காரர்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் எதிர்க்கட்சிக்காரர் களைக் கேலியும் கிண்டலும் செய்வார்கள். இது தகராறு வரையிலும் போகும்.

ரத்தினவேலு இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள் வார். முன்பணம் வாங்கும் போதே ஒரு நிபந்தனை போட்டு விடுவார். கூட்டத்தில் தகராறு கிகராறு நடந்தால் நான் கச்சேரியை முடித்து விடுவேன். பிறகு என்னைக் குறை சொல்லக் கூடாது என்பதுதான் அந்த நிபந்தனை. முன்பணம் வாங்கிய எல்லா ஊர்களுக்கும் இதுதான் நிபந்தனை. ஒப்புக் கொண்டுதான் முன்பணம் கொடுத்திருப்பார்கள்.

எனவே-

லாவணிக் கச்சேரியைத் துவக்கும் போதே மிகச் சூடாகத் துவக்குவார். கூட்டத்திற்குப் பயங்கர சந்தோஷம். ஆரம்பமே சூடு. ஒரு மணி நேரம் பாடிய நிலையில் கூட்டம் ஒருவரைப் பார்த்துச் சென்ம பகைக்காரர் போலவே பொறுமிக் கொண்டிருப்பார்கள். இதுதான் ரத்தினவேல் எதிர்பார்ப்பது. ரத்தினவேல் வரும் போதே தன் ஜிப்பா பையில் நாலைந்து கூழாங்கற்களோடு வந்திருப்பார். அதில் ஒன்றை எடுத்து யாரும் பார்க்காதவாறு சுண்டுவார். எதிரில் உள்ள ஒருவர் மீது கல் விழுந்தவுடன் ...டேய்... கல்லடிக்கிறானு வோடா டேய்... என்று குரல் கொடுப்பார். அவ்வளவுதான். அங்கே கூச்சலும், குழப்பமும்... மண்ணள்ளி ஒருவர் மேல் ஒருவர் போடுவார் கள். சண்டை மூளும். இதைப் பயன்படுத்திக் கொண்டு, இப்படிக் கலாட்டா பண்ணினால் நான் கச்சேரி செய்ய மாட்டேன் என்ற நிபந்தனையோடுதான் வந்தேன். என்னால் இங்கே கச்சேரி செய்ய முடியாது என்று சொல்லிக் கொண்டே டேப்புகளைக் கூட்டிக் கொண்டு அடுத்த ஊருக்குப் புறப்பட்டு விடுவார்.

அங்கேயும் இதே கதைதான். ஏனெனில் அதற்கு அடுத்த ஊருக் கும் போக வேண்டுமே. இப்படிச் சாமர்த்தியமாக எல்லோரையும்

முட்டாளாக்கி முன்பணம் வாங்கிய எல்லா ஊர்களிலும் இன்றைய அரசியல்வாதிகள் போல் கச்சேரி நடத்தி விடுவார் ரத்தினவேல். இப்போது பட்டிமன்ற பித்து போல் அப்போது லாவணிக் கச்சேரி பித்து. இதை அருமையாகப் பயன்படுத்திக் கொண்டவர் ரத்தினவேல். அவர்தான் அன்றைய சூப்பர் ஸ்டார்.

வீரேஸ்வரம் மேலத் தெருவிலிருந்த நாயுடு குடும்பம் ஒன்றுக்கு நெருங்கிய உறவு நடிகை யு.ஆர். ஜீவரத்தினம். இவர் அடிக்கடி வீரேஸ்வரம் வருவார். ஊர் சனங்க அவருக்குத் தருகிற மரியாதை, முண்டியடித்தும் ஒதுங்கி நின்றும் அவரைப் பார்க்கத் துடிக்கிற ஆசைகள் இவற்றைப் பார்க்கிற யாருக்கும் தாமும் அப்படியொரு பிரபலமாக வேண்டும் என்ற எண்ணம் வரும்.

ஏறத்தாழ இதே கால கட்டத்தில் தமிழகத்தில் நாடகக் குழுக்கள் ஆங்காங்கே துவக்கப்பட்டு நாடகங்கள் நடத்தப்பட்டு வந்தன. திருச்சி யிலும் மேலப்புலிவார் சாலையில் 'சிட்டி அமெச்சூர்ஸ்' என்ற புதிய நாடகக் குழு ஒன்று துவக்கப்பட்டது. காஞ்சிபுரம் நயினார் பிள்ளையி டம் மிருதங்கம் வாசிக்க அழகநம்பியா பிள்ளையின் மகனான ராதாகிருஷ்ணன் பிள்ளை சிட்டி அமெச்சூர் குழுவில் கர்நாடக சங்கீத வகுப்பு நடத்தினார். கவிஞர் இவரிடம் கர்நாடக சங்கீதத்தைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்.

இதே கால கட்டத்தில் கர்நாடக சங்கீத பயிற்சிப் பள்ளி ஒன்றி னைக் கலா நிலையம் என்ற பெயரில் ஆரம்பிக்கிறார்கள். டி.கே. லட்சுமணன் இசை ஆசிரியர். அவரிடம் கர்நாடகச் சங்கீதத்தை முறையாகப் பயின்றார் கவிஞர்.

புலிவார் ரோடில் தொடங்கப்பட்ட சிட்டி அமெச்சூர்ஸ் என்ற நாடக குழு இழந்த காதல் போன்ற நாடகங்களை நகராட்சி கூடமாக இருந்து பின்னாளில் தேவர் கூடமெனப் பெயர் மாற்றம் பெற்ற அரங்கில் மாதக் கணக்கில் நடத்திப் புகழ் பெற்றது. இந்த நாடகத்தைச் சிட்டி அமெச்சூர் குழுவிடமிருந்து வாங்கி சினிமாவில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நடித்துப் புகழ் பெற்றார்.

'சக்தி நாடக சபா'வினைச் சக்தி கிருஷ்ணசாமி என்பவர் நடத்தி வந்தார். எஸ்.டி.சுந்தரம் எழுதிய கவியின் கனவு என்ற நாடகம் நாகைப்பட்டினத்தில் சக்தி நாடக சபாவினரால் வருட கணக்காக நடத்தப்பட்டது. இந்த நாடகத்தைப் பார்க்க திருச்சி தஞ்சையிலிருந் தெல்லாம் நாகப்பட்டினத்திற்குக் கூட்டம் செல்லும். இதற்காகக் கவி யின் கனவு ஸ்பெஷல் என்று போட்ட ரெயில்கள் திருச்சி, தஞ்சையிலி

ருந்தெல்லாம் விடுவார்கள். நண்பர்களோடு நாகப்பட்டினம் சென்று நாடகம் பார்த்து வருவார் கவிஞர்.

திருச்சி நகராட்சி கலையரங்கத்தில் (தற்போது தேவர் மன்றம்) ஒருமுறை எஸ்.ஜி.கிட்டப்பாவின் பகவத்கீதை நாடகம் மிகவும் பிரபல மாக நடந்து கொண்டிருந்தது. கவிஞருக்கும் தம்பி பாலாவுக்கும் நாடகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல். அப்போது காமாட்சி அம்மன் கோயில் கழுவேற்ற விழாவுக்குத் தூரத்து உறவினர் ஒருவர் வந்திருந்தார். பசங்கள் தங்கள் கோரிக்கைகளை உறவினரிடம் நீட்டி னர். உறவினர் சம்மதம் தெரிவித்துவிட்டார். ஒரே நிபந்தனை தான் அழைத்துப் போவதாக வீட்டில் யாருக்கும் சொல்லக் கூடாது என்பது. நாடகம் பார்க்க துடிக்கும் ஆசையின் முன் இது ஒரு நிபந்தனையா என்ன? சொல்லாமல் கொள்ளாமல் கவிஞர், அவரது தம்பி, உறவினர் ஆகிய மூவரும் ஒரு நாள் மாலை திருச்சி நோக்கி பயணப்பட்டு வந்துவிட்டனர். வீட்டில் பிள்ளைகளையும் உறவு பையனையும் காணாததும் குடும்பத்தினர் பதற ஆரம்பித்துவிட்டனர். காரணம் அந்த உறவினர் செயல்பாடுகள் பற்றி குடுபத்தினர் ஏற்கனவே அறிந்திருந்த துதான். ராமசாமி பிள்ளை கல்யாண சுந்தரம்பிள்ளை இருவரும் சைக்கிளை எடுத்துக் கொண்டு இரண்டு தம்பிகளையும் தேடி திருச்சி வந்து விட்டனர்.

கவிஞரையும் பாலாவையும் தெப்பக் குளம் பக்கம் நிறுத்தி விட்டு எங்கோ சென்று திரும்பி வந்த உறவினர் ஆளுக்கொரு உருண்டை லேகியத்தைக் கொடுத்து அல்வா சாப்பிடுங்கள் என்று கூறியதும் கவிஞரும் பாலாவும் ஆனந்தமாக வாயில் போட்டு விழுங்கப் போகும் சமயத்தில் கவிஞர் அதை வேண்டாமெனத் தடுத்து விட்டார். அப் போது தூரத்தில் ராமசாமி பிள்ளை வருவதைப் பார்த்து நழுவி விட்டார் அந்த உறவினர்.

நாங்கள் திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தோம். அதைப் பார்த்துக் கடிந்து கொண்ட அண்ணன் சைக்களில் வைத்து வீட்டுக்கு அழைத்து சென்றார். உறவுக்கார ஆள் திருட்டு ஆள் என்றும், இருவர் காதிலுமிருந்த கடுக்கன்களைக் களவாடத்தான் அவன் நாடக ஆசை காட்டி அழைத்திருக்கிறான் என்பதும் பின்னர்தான் தெரிந்தது.

இப்படி வீரேஸ்வரத்திலும், திருச்சியிலும் அதன் சுற்றுப்புறங்களி லும் நடந்த நாடகங்கள் அதன் கலைஞர்களின் பிரபலங்களும் கவிஞ ரின் நெஞ்சில் கலையார்வத்தை ஏற்படுத்தின.

7 இளமைக்கால நினைவுகளும் நிகழ்வுகளும்

ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் பிறந்த ஊரின் இளமைக்கால நினைவுகளும் நிகழ்வுகளும் பொன்னானவை. மறக்க முடியாதவை. அரிய கருவூலமாக ஒவ்வொரு இதயத்திலும் பாதுகாக்கப்படுபவை. அந்த நினைவுப் பேழையைத் திறந்து பார்க்கிற போதெல்லாம் எந்த வயதானவனும் தன் இளம் வயது திரும்பி விடுகிற அதிசயம் காண்பான் மனிதன். இது உலக இயற்கை.

பவள விழா நேரத்தில் கவிஞர் திருச்சியாரின் இளம் வயதுக் கோலத்தைக் காண வேண்டுமென எனக்கொரு ஆசை. வீரேஸ்வரம் பற்றிய உங்கள் இளமைக்கால நினைவுகளையும் நிகழ்வுகளையும் சொல்லுங்கள் என்று கேட்டதும் அவர் மடை திறந்தார். அவரைப் போலவே நானும் ஒரு குக்கிராம விவசாயின் மகன் என்பதால் அவர் வாழ்வின் நினைவுகளும் நிகழ்வுகளும் என் வாழ்வின் நினைவுகளோ டும் நிகழ்வுகளோடும் இனங்கண்டு அதிசயப்பட்டேன். இதில் அதிச யப்பட என்ன இருக்கிறது? எல்லாக் கிராமத்து இளைஞர்களின் நினைவுகளும் நிகழ்வுகளும் ஒரே முகங் கொண்டவைதான்.

எங்கள் வீரேஸ்வரம் கிராமத்தில் மேலத்தெரு, கீழத்தெரு, மொட் டைக்கோபுரத் தெரு என நான்கே நான்கு தெருக்கள் என்று சொல்லி தொடர்ந்தார் கவிஞர்.

மேலத் தெருவில் முழுக்க முழுக்க வன்னியர் குடும்பங்கள். ஒன்றோ, இரண்டோ நாயுடு குடும்பங்கள். கீழத் தெருவில் வன்னியர்க ளும், சோழிய வெள்ளாளர்களும், காவடிக்காரத் தெருவில் ஆந்திராவி லிருந்து வந்து சீரங்கம் கோயில் வாசலில் துளசிமாலை, பவழமணி மாலை, உத்திராட்ச மாலை என மாலைகள் விற்றுப் பிழைக்கும் வியாபார குடும்பங்கள். தெலுங்கு பேசும் ஆந்திராவிலிருந்து வந்த இந்த மாலைவிற்கும் வியாபாரிகளைக் காவடிக்காரர்கள் என்று அழைப்போம். எங்கள் குடும்பம் மேற்குத் தெருவில்.

நீங்கள் பிள்ளை மார் குடும்பமாயிற்றே. மேற்குத் தெருவில் முழுக்க முழுக்க வன்னியர் குடும்பம் என்றீர்களே, நாங்களும் வன்னியர் இனம்தான். இந்த இளைத்த ஜாதிகளுக்குப் பிள்ளை

பட்டத்தின் மீது ஒரு மோகம் இருந்திருக்கிறது. அதனால்தான் சென்னை நகரில் மேயராக இருந்தவரும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருமான சிவசண்முகம் என்பவர் சிவசண்முகம் பிள்ளை என்று அறியப்பட்டார். மேயர் ராதாகிருஷ்ணன் பிள்ளை கோனார் இனத் தைச் சேர்ந்தவர் என்று சொல்லி விட்டு எங்கள் தாத்தாவோ, தாத்தாவுக்கு தாத்தாவோ யாரோ ஒருவர் இந்தப் பிள்ளை பட்டத்தில் மோகம் கொண்டிருக்கலாம் அல்லது இந்தப் பட்டம் சூட்டல் அந்தக் கால புரட்சியாகவும் இருக்கலாம். தாழ்த்தப்பட்டவர் என்றால் உங்க ளுக்கு இழிவாக இருக்கிறதா? கோனார் என்றால் உங்களுக்கு அலட்சியமா? வன்னியன் என்றால் உங்களுக்கு இளப்பமா? அப்படி யானால் நாங்கள் இனி பிள்ளைகள்தான். என்ன சொல்வாய் நீ என்ற அறைகூவலின் அடையாளமாகவும் இருக்கலாம் என்று சொல்லி விட்டுக் கவிஞருக்கு உரிய நகைச்சுவையோடு மேலும் சொன்னார். இந்தப் பிள்ளை என்கிற ஜாதிப் பெயர் ஒரு பொதுவுடைமைப் பெயர். விருப்பப்பட்டவர்கள் எல்லாம் எடுத்துச் சூடிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் புரட்சியை இன்னும் கொஞ்சம் மேலெடுத்துச் சென்று விருப்பப் பட்டவர்கள் எல்லாம் தங்கள் பெயரோடு ஐயர், ஐயங்கார் என்று சேர்த்துக் கொண்டிருந்தால் இந்த ஜாதிகளாவது ஒழிந்திருக்கும். ஆனால் அங்கே மட்டும் இந்த இளைத்த ஜாதிக்காரர்கள் நுழையாத தற்கு ஒன்று தாழ்வு மனப்பான்மைக் காரணமாக இருக்க வேண்டும். அல்லது அவர்கள் அமைத்த வேலி தாண்ட முடியாத பலம் பொருந்தி யவர்களாக இருந்திருக்க வேண்டும். அப்படி ஆகியிருந்தால் மட்டும் ஒழிந்தா இருக்கிப் போகிறது ஜாதி. கோவிந்தசாமிப் பிள்ளைன்னு அப்பா சொன்னவுடன் என்ன பிள்ளைங்க என்ற கேள்வியும், படை யாச்சி பிள்ளைங்க என்ற பதிலும் ஓ பள்ளி பிள்ளையா என்ற கேலியும் ஒழிந்தா போனது என்று தனக்குத் தானே கேள்வியும் கேட்டு விடையும் சொன்னார்.

எனக்கு இளம் வயதில் மிகவும் விருப்பமானது பொன் வண்டு பிடித்தல். தோட்டத்தில் உள்ள இலந்தை மரங்களில் அதன் கொழுந்து இலைகளைத் தின்பதற்காக வகைவகையான பொன் வண்டுகள் வட்டமிடும். கட்டை விரல் அளவில் இருக்கும். அடிவயிற்றில் பொன்னிறமாகவும் இறக்கைகள் செவப்பு நிறமாகவும் இருக்கும். இவற்றைப் பிடித்துக் காலித் தீப்பெட்டிகளுக்குள் அடைத்து இலந்தங் கொழுந்துகளைக் கிள்ளி அதற்குத் தீனி போட்டு வைப்பேன். அப்பா வுக்கோ அம்மாவுக்கோ தெரிந்தால் எனக்குத் திட்டும் பொன்வண் டுக்கு விடுதலையும் கிடைக்கும். இதனால் இந்தத் தீப்பெட்டி பெரும்பா லும் கால்சட்டைப் பைகளிலேயே இருக்கும். பள்ளிக்குப் போகிற

போது யார் கண்ணிலும் படாத இடங்களில் ஒளித்து வைத்து விட்டு போவேன். இந்தப் பொன்வண்டு தீப்பெட்டிக்குள் இடும் மஞ்சள் நிற முட்டைகளைக் கண்டுவிட்டால் புதையல் கிடைத்த மகிழ்ச்சி பொங் கும். உடனே ஓடி கொழுந்து இலைகளைப் பறித்து வந்து பொன்வண் டுக்குப் புதிய உணவு படைப்பேன். சிறப்பு விருந்துபோல.

பொன்வண்டு பிடிக்கிறது, வண்ணத்துப் பூச்சிகளையும், தட்டான் களையும் பிடிக்கிறதுக்காகத் தோட்டத்தில் அடிக்கடி சுத்தறது ஆகிய வற்றைப் பார்த்துப் படிப்பில் கவனம் இல்லாதிருக்கிறேனோ என்று நினைத்துக் கொள்ளும் போதெல்லாம் அப்பா சொல்வார், 'ஏன்டா படிச்சா படி! படிக்காட்டி போ. இப்போ படிச்சா பின்னாலே உத்தியோ கம் கித்தியோகம் பாத்து நீதான் சொகமா இருக்கப் போறே. இல் லேண்ணா என்னாட்டமா காலத்துக்கும் ஏத்தம் எறச்சுதான் கஞ்சி குடிக்கோனும்' இது அவருக்குத் தெரிந்த மந்திரம். எனக்கு மட்டுமல்ல. என் அண்ணன்களுக்கு, தம்பிக்கு எனக்கு என எல்லோருக்கும் இந்த ஒரே மந்திரத்தைத்தான் சமயம் கிடைக்கும் போதெல்லாம் ஓதுவார். நாங்கள் எல்லாம் ஓரளவு படிப்பு வாசனைப் பெற்றதற்கு அப்பாவின் இந்த மந்திரம்தான் காரணம்.

அந்தக் காலத்திலே வீரேஸ்வரத்துல பள்ளிகூடமெல்லாம் கிடை யாது. திருவரங்கம் செல்லும் வழியில் புளிய மண்டபத்திலே ஒரு நகராட்சி பள்ளி. அதில் ஆரம்பக் கல்வி. உயர்நிலைப் பள்ளி கல்விக்கு காவிரியைத் தாண்டி தேசியக் கல்லூரி பள்ளிக்குத்தான் செல்ல வேண்டும். காவிரியைக் கடக்கும் பாலம் இடிக்கப்பட்டுப் புதுப்பிக்கப் பட்டுக் கொண்டிருந்ததால் ஊர் புள்ளங்க பரிசிலுலே போவோம். தோலால் ஆன பரிசில். ஒருமுறை பரிசிலுலே திரும்பி வந்துக்கிட்டு இருக்கிறப்போ நடு ஆத்துலே பரிசிலே என்னமோ குத்தி ஓட்டை விழுந்திடுச்சு. பரிசில் காரர் எங்கள் சட்டைகளைக் கழட்டச் சொல்லிப் பந்துபோலச் சுருட்டி அந்தப் பொத்தலுக்குள் திணிச்சு கெட்டிமா அழுத்தி புடுச்சுக்குங்கன்னு சொல்லி விட்டு, வேகம் வேகமா பரிசிலே தள்ளினாரு. நாங்க என்னதான் அழுத்திப் புடிச்சாலும் தண்ணி பரிசிலுக்குள் கொஞ்சம் கொஞ்சமா ஊறிகிட்டுதான் இருந்தது. கரையை நெருங்கி ஒவ்வொரு பையனா கரையிலே தூக்கிவிட்டு முடிக்கவும் பரிசில் ஆத்துல முழுகவும் சரியா இருந்தது. மயிரிழையில் தப்பி பிழைத்த அனுபவம்.

திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்ற பழமொழி போல நாங்கள் காவிரி நதி தாண்டியும் கல்விக் கற்றுக் கொண்டிருந்தோம். பெருமைதானே.

எங்க ஊரிலேயே எங்கள் மேலத் தெருவைச் சேர்ந்த ரங்கசாமி பிள்ளைதான் கொஞ்சம் வசதியானவரு. தாசில்தாராக உத்தியோகம்.கு திரை வண்டியெல்லாம் வைத்திருந்தார். அதில் அவர் பிள்ளைகளைப் படிக்க அழைத்துச் செல்வார். எங்களையும் அப்பப்ப அந்த வண்டியில் ஏற்றிச் செல்லச் சொல்வார். சீரங்கம் பள்ளியில் படிக்கும் போது இதனால் ஊர் குழந்தைகளுக்கு ரங்கசாமி பிள்ளை மேல் பிரியம்.

இவர் தினமும் அதிகாலை நேரங்களில் காவிரிக்குச் சென்று குளித்து விட்டு வருவார். அப்படி வரும் போது தங்கள் திண்ணைக ளில் உட்கார்ந்திருக்கும் பெண்கள் எல்லாம் எழுந்து நின்று மரியாதை செய்வார்கள்.

வசதி காரணமாக ரங்கசாமி குடும்பத்திற்கு ஏற்பட்டிருந்த மதிப் புக்கு நிகராக எங்கள் குடும்பத்தின் மீதும் மரியாதை ஏற்பட்டிருந்ததற் குக் காரணம் எங்கள் குடும்பத்தில் எல்லோரும் கஷ்டத்திற்கிடையிலும் படித்துக் கரையேறியிருந்ததுதான்.

பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை விட்டு விட்டால் போதும் ஊர் பசங்கல்லாம் ஒண்ணாக் கூடிக் காவிரியைக் கலக்குவோம். வீரேஸ்வ ரத்திலே நீச்சல் தெரியாத பசங்களே கிடையாது. நீச்சல் தெரியுங்கறது மூச்சு விடுற மாதிரி இயல்பான ஒன்று. வீரேஸ்வரம் படித்துறை பக்கத்திலே ஒரு மா மரம். காவிரியை நோக்கி சாய்ந்திருக்கும். அதன் கிளைகளில் ஏறி காவேரியில் குதிப்பது எங்களுக்குத் தீராத விளை யாட்டு. எல்லோரும் அதன் கிளைகளில் ஏறி நிற்கும் போது தாழ்ந்தும் நீரில் குதிச்சதும் உயர்ந்து மா மரம் தலையாட்டும். நீருக்குள் மூழ்கி மண்ணள்ளி வருவதிலும் அதிகத் தூரம் நீருள்ளேயே மூழ்கி செல்வதி லும் போட்டி. இடுப்பிலே ஒரு கருப்பு அண்ணாக்கயிறு. கையகலத்தில் அதில் ஒரு கோவணம். இது தவிர உடம்பில் ஒண்ணுமே இருக்காது. குதிக்கிற குதியிலே ஒவ்வொருத்தனுக்குக் கோவணம் ஆற்றோடு போய் விடும். அவ்வளவுதான் அவனைக் கேலி செய்து எழுகிற கூச்சலும், கோவணத்தை இழந்த முண்டக்கட்டையானவன் கேலி செய்தவனைத் துரத்தி அவன் கோவணத்தை உருவி எறிஞ்சு அவனை யும் முண்டக் கட்டையாக்குவதில் ஏற்படும் கூச்சலும் ஊரைக் கலக்கும்.

அந்த மரமும் இல்லை. காவிரியிலே முன்னமாதிரி வெள்ளமு மில்லை. அதெல்லாம் ஒரு காலங்க. ஆசைப்பட்டா இப்ப முடியுமா...! என்ற ஏக்கத்தில் இருந்த கவிஞரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். அதிலே புறநானூற்றுக் கிழவரான தொடித்தலை விழுத்தண்டினார் முகம் தெரிந்தது.

அவருக்கும் இப்படித்தான் தளர்ந்து நடுக்கம் கொண்ட உடம்பு. தொடர்ந்து வரும் இருமல்களுக்கிடையேச் சிக்கிச் சிதைந்து வரும் வார்த்தைகளையுடைய கூன் விழுந்து முதுமையடைந்த வயது. பூ வேலைபாடு செய்த பூண்போட்ட கைத்தடி ஊன்றியபடி ஊருக்கு அருகாமையில் உள்ள நீர் நிலை ஒன்றிற்குச் செல்கிறார்.

அவரது இளம் வயது நினைவுப் பேழை திறந்து கொள்கிறது.

இதோ இந்த மணல் மேடுதாங்க. இங்கேதான் மண்ணால் பாவை செய்வேன் நான். அவள் கரைகளில் ஓடி பூப்பறித்து வந்து கொடுப் பாள். அந்த மணல் பாவைக்குப் பூச்சூடி அழகு பார்த்து மகிழ்வோம். அவளோடு கைகோத்து அவள் நடந்த போது நடந்து, அவள் நின்ற போது நின்று, அவள் சிரித்த போது சிரித்து, அவள் கண்டதைக் கண்டு களித்திருப்போம்.

கரையில் நின்று நீர் நிலை நோக்கி சாய்ந்து நீருக்கு நெருக்கமாய்த் தாழ்ந்து நிற்கிறதே இந்த மருத மரம். இதற்கு என்னவாயிற்றே இன்று. வயதானவனின் வழுக்கைத் தலையில் அங்கொன்றும் இங்கொன்று மாய் இருக்கும். முடியைப் போலக் கொம்புக்கு ஒன்றிரண்டு இலை யோடு பரிதாபமாகக் காட்சியளிக்கிறது. மனிதனைப் போல மரமும் கூட வயதானால் இப்படி மொட்டையாகி விடுமோ?

அன்று எப்படி இருந்தது தெரியுமா! இருளடர்ந்த குகை போல இருக்கும் மரத்தின் கிளைகளில் ஏறினால் பந்து பந்தாய் இலைகள் இதன் வாலிபக் கிளைகளில் ஏறி ஆழமான மடுவின் நீரலைகள் திடுமென ஒலி எழும்பி தெறிக்க தொப்பெனக் குதிப்பேன். மடுவில் மூழ்கி அடி ஆழம் தொட்டு மண் அள்ளி கொண்டு வந்து கரையில் நிற்பவர் வியக்கக் காட்டுவேன். அந்தப் பயமறியாத இளமைக்காலம் இன்று எங்கே போய் ஒளிந்து கொண்டது. உடம்பு பிடியாய் என்னைப் பிடித்துக் கொண்டிருக்கும் இந்த முதுமை கொடுமையானது என்கிறார்.

இனி நினைந்து இரக்கமாகின்றது தினி மணற்
செய்உரு பாவைக்குப் பொய்பூ தைஇத்
தண்கயம் ஆடு மகளிரொடு கைப்பிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்கு வழிஇத் தூங்கி
மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு
உயர்சினை மருதத்துறை உறத் தாழ்ந்து
நீர் நணிப்படி கோடேறி சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிற
நெடுநீர் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து

குளித்து மணற்கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே யாண்டு உண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சில சொல்
பெருமூதாளரேம் ஆகிய எமக்கே

-243-வது பாடல்: புறநானூறு

சங்க காலக் கிழவர் தொடித்தலை விழுத்தண்டினார் முகத்தில் கவிஞர் திருச்சியார் முகமும். திருச்சியார் முகத்தில் விழுத்தண்டினார் முகமும் தெரிகிறதா? தெரியும். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கழித்து வர இருக்கும் நவீனக் காலக் கிழவர்கள் முகத்திலும் இவர்கள் முகம் தெரியும். இவர்கள் முகத்திலும் அவர் தெரிவார்.

காரணம்-

இளமைக்கால நினைவைப் பொறுத்தவரை எல்லோருக்கும் ஒரே முகம்தானே.

8	சாமியார்கள் சித்தர்கள் அல்ல ஆசிரமங்கள் தீர்வுகள் அல்ல

ஒய்.எம்.சி.ஏ.யில் உடற்பயிற்சி ஆசிரியருக்கான பயிற்சி முடிந்தவுடன் ராமசாமிக்கு லால்குடி ஜில்லா போர்டு பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக வேலை கிடைக்கிறது.

குத்தகை நிலத்தையும் குடியிருந்த வீட்டையும் இழந்து தவித்த குடும்பத்திற்கு ராமசாமிக்கு வேலை கிடைத்ததும் நிழல் கிடைத்த நிம்மதி. கவிஞரின் பள்ளிப் படிப்பும் லால்குடிக்கு மாறுகிறது. எட்டாம் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்பான எஸ்.எஸ்.எல்.சி. வரை லால்குடியிலேயே படிக்கிறார். அப்போதுதான் அன்பில் தர்மலிங்கம் பள்ளி தோழராகக் கவிஞருக்கு அறிமுகமாகிறார்.

கோவிந்தசாமிப்பிள்ளையின் குடும்பத்தில் சம்பாதிக்கும் ஒரே நபராக ராமசாமிப்பிள்ளை ஆனதும் குடும்பமும் லால்குடிக்குச் சென்று ராமசாமியுடன் ஒன்றாகிறது.

லால்குடி பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புத் தேர்ச்சி பெற்ற பின்னர் திருச்சி தேசியகல்லூரியில் இண்டர்மீடியட் வகுப்பில் கவிஞர் சேர்ந்து படிக்கிறார்.

இரண்டு அண்ணன்களுக்குத் திருமணமாகிவிட்டதால் அவர்கள் மனைவிமார்கள் தாய்தந்தையர் கவிஞர், அவரது தம்பி பாலகிருஷ்ணன் எனக் குடும்பம் பெரிதாகிவிட்டது. மீண்டும் பொருளாதார பற்றாக்குறை. நெருக்கடிகள் கஷ்டங்கள், சிக்கல்கள் என ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுக்கின்றன. லால்குடியில் படிக்கும் போது இவரது தமிழாசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் தந்தையாரான பெருஞ்சொல் விளக்கனார்; பெரிய புராண விரிவுரையாளர் அ.மு. சரவண முதலியார், அந்தக் காலத்தில் திரு.வி.க.வும் இவரும் சேர்ந்தே கூட்டங்களுக்குச் செல்வார்கள். தேசிய கல்லூரியில் இடைநிலை (இண்டர்மீடியட்) வகுப்புப் படிக்கையில் இவருக்குத் தமிழாசிரியராக இருந்தவர் பெரும்புலவர் கந்தையாபிள்ளை. ஜெயின் ஜோசப் கல்லூரியில் தமிழாசிரியர் ஐயன்பெருமாள்கோனார். பிஷப் ஹீபர் பிராட்டஸ்டன்டு கல்லூரியில் நா.மு. வேங்கடசாமி நாட்டார் தமிழாசிரியர். இப்படி ஒரே நேரத்தில் பெயர் பெற்ற பெரும்புலவர்கள் எல்லோரும் திருச்சியில் தமிழாசிரியர்களாக இருந்ததால் இலக்கியக் கூட்டங்கள் விவாதங்கள் எல்லாம் திருச்சியை மையமாகக் கொண்டு இயங்கிய காலம் அது.

திருச்சிமலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் இந்தக் கூட்டங்கள் நடைபெறும். திருச்சி பெரும்புலவர்களான கந்தய்யாப் பிள்ளை. ஐயன்பெருமாள் கோனார். நா.மு. வேங்கடசாமி நாட்டார் ஆகியோர் மட்டுமின்றி, வெளியூர்களிலிருந்தும் பண்டிதமணி கதிரேசன் செட்டியார், உமா மகேஸ்வரன் பிள்ளை, திரு.வி.க., ஜெகவீரப் பாண்டியனார், கி.ஆ.பெ. விஸ்வநாதம் போன்ற தமிழ் அறிஞர்களும் இக்கூட்டங்களில் பங்கேற்க அடிக்கடி வருவார்கள். இக்கூட்டங்களுக்கு அடிக்கடி சென்று வந்ததால் கவிஞருக்கு இளமையிலேயே இலக்கிய ஆர்வம் வளர்ந்தது.

பெரியம்மா வயிற்று பிள்ளைகள் வேலை வாய்ப்பு பெற்றுப் பொருளாதார வசதி வாய்ப்புகள் பெற்றவுடன், தம்பி தங்கைகளையும் அப்பாவையும் கூட விட்டுவிட்டு தனியே ஒதுங்கிக் கொண்டதும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள் பொருளாதார வசதி பெற்றதும் பண வசதியுடைய அவர்கள் கஷ்டப்பட்ட இவர்களைப் பார்த்து இதுங்க எங்கே தேறப்போவுது என்று அலட்சியப்படுத்தியதோடு வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அவமரியாதைப் படுத்தியதாலும்,

குடும்பத்தின் ஏழ்மை நிலையாலும் மிகவும் மனம் நொந்து போயிருந் தார். ஒரு விரக்தி நிலை.

ஒரு பக்கம் குடும்பச் சூழ்நிலையால் விரக்திநிலை. மறுபக்கம் தமிழாசிரியர்கள் ஊட்டிய இலக்கியதாகம் — இரண்டுக்கும் தகுந்தாற் போல் சித்தர்கள் பாடல்கள் அருட்பா; தாயுமானவர் பாடல்களும் கவிஞரின் கைக்குக் கிடைத்தன.

சித்தர் பாடல்களில் அளவு கடந்த ஈடுபாடு ஏற்பட ஆரம்பித்து விட்டது. இளம் வயது. தமிழார்வம். விரக்திநிலை. சித்தர் பாடல்கள். விளைவு கவிஞர் ஏறக்குறைய துறவு நிலைக்கு வந்துவிட்டார். பெற்றோர்கள் வற்புறுத்தியும் திருமணம் வேண்டாம் என்று மறுத்து விட்டார்.

இந்த நிலையில் பாலகிருஷ்ணன் எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவிட் டுக் கல்லூரி படிப்புக்கெல்லாம் போகாமல் வேலை தேட ஆரம்பித்தார்.

பொன்மலை ரயில்வேயில் எழுத்தர் வேலை கிடைத்துவிட்டது. அண்ணன் தியாகராஜனைத் திருமணம் செய்து கொள்ள பெற்றோர்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கின்றனர். அவரோ திருமணமே வேண்டாம் என்று மறுத்துக் கொண்டிருக்கிறார். வழி எப்போது கிடைப்பது, வாழ்க்கையை எப்போது துவக்குவது என்ற கவலை.

இதற்கிடையில் ஒரு பார்ப்பன பெண்ணோடு பழக்கம் ஏற்படுகி றது. அவரையே திருமணம் செய்துகொண்டு தனிக்குடித்தனம் போய் விடுகிறார். மூத்த தாரத்துப் பிள்ளைகளைப் போல இவரும் குடும்பத்த லிருந்து விலகி தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று ஒதுங்கிக் கொள்கிறார்.

கோழி வளர்ப்புப் பற்றி நாகர்கோவில் மார்த்தாண்டத்தில் படித்து விட்டு வந்ததால் கோழி, மாடு இவற்றை வளர்த்து நிறைய பணம் சம்பாதிக்கிறார்.

இந்தச் சூழ்நிலைகளால் கவிஞர் மனம் ஆசிரமங்கள், சாமியார் கள் என்று அமைதியைத் தேட ஆரம்பிக்கிறது.

வீரேஸ்வரம் அம்மாமண்டபம் அருகில் முத்துகிருஷ்ண பரமஹம் சர் என்ற பெயருடைய ஒரு சாமியார் ஆசிரமம் அமைத்துத் தங்கியிருந்தார்.

சித்தர்கள் பாடல் ஈடுபாடு காரணமாகச் சித்தர்கள் மீது மரியாதை கொண்டிருந்த கவிஞர், — சந்தித்த துறவிகளைச் சித்தர்களென எண்ணி மரியாதை செலுத்தவும் அடிக்கடி சந்தித்துப் பழகவும் தலைபட்டுவிட்டார்.

அந்த முறையில் தன் ஊரிலேயே இருந்த இந்தத் துறவியாரையும் அடிக்கடி சந்திப்பதை வழக்கமாக்கிக் கொண்டார். பழகப் பழகத் துறவிகள் சித்தர்கள் அல்ல என்ற தெளிவு பிறக்க ஆரம்பித்தது. முத்துகிருஷ்ண பரமஹம்சரிடமும் இதே அனுபவம் ஏற்பட்டது.

இந்தத் துறவியார் பலமொழிகள் தெரிந்தவர். பல நாடுகள் சுற்றிய அனுபவம் கொண்டவர். இவர் எழுதிய நூலில் இரண்டு அனுபவங்கள் கவிஞரைக் கவர்ந்தவையாக இன்றும் அவரது ஞாபகத்தில் நிலைத்தி ருக்கிறது. ஓரிடத்தில் துறவி எழுதுகிறார். ''யோகாசனங்கள், ரசவாதம் ஆகியவற்றில் வெற்றியடைந்தது போன்ற ஒரு உணர்வு எனக்கு உண்டு. ஆனால் மனிதர்களைப் படிப்பதில் மட்டும் இதுவரை நான் தோல்வியடைந்துள்ளேன். காரணம், நீண்ட நெடுங்காலமாக ஒருவனி டம் பழகி அவனைப் பற்றி நல்லெண்ணம் கொள்கிறோம். ஒரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொருவரும் திடீரென மாறிவிடுகின்றனர். அப்படி யானால் இதுவரை அவரைப்பற்றி நாம் கொண்டிருந்த கருத்து பொய்யாகிவிடுகிறது அல்லவா? மனிதனைப் படிப்பதில் வெற்றி பெற முடியவில்லை அல்லவா''. இதே போல் இன்னொரு இடத்தில் அவர் எழுதுகிறார். ''பலர் என்னிடம் நீயார் நீயார் என்று கேட்கிறார்கள். அவர்களிடம் நீ எப்படியோ நான் அப்படி என்று கூறுகிறேன். இதற்கு என்ன காரணம்? நாம் எவ்வளவுதான் நம்மைப் பற்றித் தாழ்த்திச் சொன்னாலும், உயர்த்திச் சொன்னாலும், கேட்பவர் தகுதி, திறம், தரம் ஆகியவற்றின் அடிப்படையில்தான் நம்மை உள்வாங்கிக் கொள்கிறார் கள். நாம் சொல்வதை ஏற்று அல்ல. இந்தத் துறவியின் கூற்றை நோக்கும் போது வள்ளுவரின்

வெள்ளத்தனைய மலர்நீட்டம் - மாந்தர் தம்
உள்ளத் தனைய உயர்வு

—குறள் நினைவுக்க வருகிறது. இந்தத் துறவியார் சித்தர் அல்ல என்ற முடிவுக்கு வந்த பின்னரும் கவிஞர் இந்த இரு கருத்துகளுக்காக அவருக்கு உரிய மரியாதையை தந்து வந்தார்.

கரூர் செல்லும் வழியில் திருப்பராய்த் துறையில் ராமகிருஷ்ண தபோவனம் என்று ஒரு ஆசிரமம் இருக்கிறது. இது சாமி சித்பானந்தா வின் ஆசிரமம். இவரையும் கவிஞர் அடிக்கடி சந்திப்பது உண்டு. ஒருமுறை பேச்சின் ஊடே சாமியார்களிடம் சில பழக்க வழக்கங்கள் போலியாக இருப்பது குறித்துப் பேச்சு வந்தது. அப்போது அவர் ''தம்பி பத்தரை மாற்றுத் தங்கத்தில் நகை செய்ய முடியாது. அதன் மாற்றைக் குறைக்க கொஞ்சம் செம்பைக் கலக்க வேண்டும். அதுபோல் தான் வாழ்க்கையும். துறவிகளும் இதற்கு விதிவிலக்கல்ல'' என்றார்.

வெளிப்படையாகத் தவறுகளை ஒப்புக்கொண்டு பேசியதில் சாமி சித்பவானந்தா மேல் மரியாதை ஏற்பட்டாலும் — கூடவே சாமியார்

கள் சித்தர்கள் அல்ல என்ற தனது தெளிவு அதன் மூலமும் அவருக்கு உறுதிபடுத்தப்பட்டது?

இதன்பின்னரும் ரமணாசரமம், அரவிந்தர் ஆசரமம் ஆகியவற் றிற்கெல்லாம் சென்று வந்து கொண்டுதானிருந்தார்.

ஆசரமங்கள் எல்லாம் அவரவர் மன அமைதிக்கு ஏற்படுத்தப்பட் டவையே அல்லாமல் பிறர் மன அமைதிக்கும் வசதிக்கும் அது உதவுவதில்லை என்பது பட்டறிவாகப் புலப்பட ஆரம்பித்தது.

மேலும் பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு பெற்றவர்கள் (செட்டிலானவர்கள்) அங்கு வருவதால் பயனடைகிறார்களே அல்லா மல், பொருளாதார நெருக்கடியிலிருப்பவர்கள் அங்கு வருவதுமில்லை — வந்தாலும் அங்கு வந்ததன் மூலம் அவர்களுக்கு எந்தவித தீர்வும் கிடைப்பதில்லை என்ற அனுபவமும் ஏற்பட்டது.

இதனால் ஆசரமங்கள் மீது கொண்ட ஈடுபாடு குறைந்து குறைந்து மறைந்தது. வேலைக்குப் போக வேண்டும் பொருளீட்ட வேண்டும் என்ற முடிவு பிறந்தது.

9 விடுதலை இயக்க ஈடுபாடும் தலைமறைவு வாழ்க்கையும்

கல்லூரி இடைநிலை வகுப்புவரை படித்த மூத்த தாரத்தின் மகன் ரத்தினம் பிள்ளையை அடுத்துக் கவிஞர்தாம் குடும்பத்தில் அதிகம் படித்தவர். மற்றவர்கள் எல்லாம் பள்ளி இறுதிவகுப்போடு சரி. அவர்கள் எல்லாம் படிப்பு முடிந்தவுடன் ஏதாவது ஒரு வேலையில் அமர்ந்துவிட்ட நிலையில் அதிகம் படித்திருந்தும், இவர் மட்டும் வேலையெதுவும் இல்லாமல் இருந்தபோதும் வேலைக்குச் சென்ற பிறகும். சாமியார்கள் ஆசிரமங்கள் என்று இந்த இளம் வயதில் அலைந்து கொண்டிருப்பது பெற்றோர்களைக் கவலையில் ஆழ்த்தியது.

மற்றவர்களைவிட இவர்மீது ரத்தினம்பிள்ளைக்கு அன்பு அதிகம். இவரை எப்படியாவது ஒரு நல்ல வேலையில் சேர்த்துவிட்டுவிட வேண்டுமென அவரும் பெரும் முயற்சியில் ஈடுபட்டு வந்தார். அவரது முயற்சியால் பம்பாயில் கப்பற்படைபிரிவில் வைசிராய் கமிஷன்டு ஆபீசர் பயிற்சி வேலை கிடைத்தது.

வேலை கிடைத்தது என்பதற்குக் குடும்பம் மகிழ்ச்சி அடைந்தா லும் பம்பாய் போன்ற தொலைதூரத்திற்கு அனுப்புவதில் பெற்றோ

ருக்கு மிகுந்த தயக்கம் ஏற்பட்டது. இந்தப் பதவியில் பிற்காலத்தில் நல்ல நிலைக்கு வர வாய்ப்பு உள்ளது என்பதையும், அண்ணன் இராமசாமி மனைவியின் உறவு முறையில் சொந்தக்காரர் பம்பாயில் மாநில கணக்காயர் அலுவலகத்தில் வேலையில் இருப்பதையும் எடுத்துச் சொல்லி தெரியப்படுத்தினார் ரத்தினம்பிள்ளை. பெற்றோர் கள் அரைமனதுடனேயே அனுப்பினர்.

கவிஞரும் குடும்பநிலை காரணமாக ஏதாவது ஒரு வேலையில் சேர வேண்டும் என்ற முடிவிலிருந்ததால் வேலையை ஏற்று பம்பாய் சென்றார். கடற்படை பயிற்சி முகாமில் வழங்கப்பட்ட மாட்டுக்கறி புலால் உணவுவகைகள் கவிஞருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஓரிரு மாதங்கள் தாக்குப் பிடித்துப் பார்த்தார். முடியவில்லை. எனவே, பதவி விலகல் கடிதம் அளித்துவிட்டுச் சென்னை திரும்பி விடுகிறார். ஏற்கனவே பம்பாய்க்கு வேலைக்கு அனுப்புவதில் தயக்கம் கொண்டி ருந்ததால் பெற்றோர்கள் கவிஞர் பணிவிலகி வந்துவிட்டதற்காகப் பெரிதாக வருத்தப்படவில்லை. சொல்லப்போனால் உள்ளூர மகிழ்ச் சியே.

1941-42-களில் விடுதலை இயக்கம் தீவிரமடைந்திருந்தது. கவி ஞரின் சின்ன வயதில் — நான்காவதோ ஐந்தாவதோ படிக்கும்போது — காந்தியார் ஒருமுறை திருச்சி வந்தார். தேசியக்கல்லூரி திடலில் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காந்தியா ரைத் திறந்த காரில் ஊர்வலமாக அழைத்து வந்தனர். ஊர்வலத்திற்கு அவ்வளவாக கூட்டமில்லை. ராஜாஜியுடன் சேர்ந்து 50 பேர்களுக்கு மேல் இல்லை. பிரார்த்தனைக் கூட்டத்தில் மாணவராய் இருந்த கவிஞரும் கலந்துகொண்டார். அந்த சின்ன வயதில் விடுதலைப் போராட்டம் பற்றியோ காந்தியார் பற்றியோ அதிகம் ஒன்றும் தெரி யாது, என்றாலும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சி, வளர்ந்து வந்த பின்னாளில் விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொள்ளும் ஆர்வத்தை வளர்க்கும் விதையாக அவரது உள்ளத்தில் அவர் அறியாமலே ஊன்றப்பட்ட நிகழ்ச்சியாகும்.

கல்லூரி நாட்களிலும் அதன்பின்னரும் விடுதலைப் போராட்டங்க ளைப் பற்றியும் தலைவர்கள் பற்றியும் விரிவாக அறிந்துகொண்ட போது, காந்தியாரை விடவும் நேத்தாஜி சுபாஷ்சந்திரபோஸ் பகத் சிங் போன்ற தீவிரவாத தலைவர்கள் மீதுதான் அதிக ஈடுபாடு ஏற்பட்டது.

படிப்பு முடிந்து வேலையும் இல்லாதவர்களின் வாழ்க்கை தீவிர எண்ணங்கள் கொண்டதாக இருப்பது இயல்புதானே. 1942 ஆகஸ்ட்டு

போராட்டங்கள் கவிஞரை ஈர்க்கிறது. நல்ல குரல்வளமும் கர்நாடக சங்கீத பயிற்சியும் இருந்த காரணத்தால் போராட்ட மேடைகளில் விடுதலைக் கீதங்களை இசைக்க ஆரம்பிக்கிறார். அருமையாகப் பாடக்கூடிய காத்தபெருமாள் இளம்பாடகரான கவிஞரை ஊக்குவிக்கி றார். திருச்சி நகரில் போராட்ட இயக்கத் தலைவர்களான டி.எஸ். அருணாச்சலம், தாடிராமசாமி, ரத்தினவேல் தேவர் போன்றோரின் ஆதரவும் ஊக்கமும் கவிஞரின் இந்த ஈடுபாட்டை தீவிரமாக்குகிறது. 1942 ஆகஸ்ட்டு, போராட்ட கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டபோது, திருச்சி தெப்பக்குளத்திலிருந்து கோட்டை ரயில்நிலையம் வரை போலிசாரால் துரத்தியடிக்கப்பட்டுக் காயமடைகிறார். பலமுறை காவல் நிலையங்களில் அடைபட்டுமிருக்கிறார். போராட்டம் தீவிரம டைந்து மேற்கண்ட தலைவர்கள் எல்லாம், தலைமறைவானவுடன் கவிஞரும் அவர்களுடன் சேர்ந்து தலைமறைவு வாழ்க்கையை மேற் கொள்கிறார். இந்தத் தலைமறைவு வாழ்க்கை 1942 ஆகஸ்ட்டு முதல் 1943 இறுதிவரை தொடர்கிறது. அதன்பிறகு இரண்டாம் உலகப்போ ரின் காரணமாகக் காந்தியார் மற்றும் வெள்ளைக்கார ஆட்சியாளர் ஆகியோருக்கிடையில் சுமூக உறவு ஏற்பட்டதன் காரணமாகத் தலை மறைவு வாழ்க்கை முடிவுக்கு வருகிறது. இந்தப் போராட்டத்தில் ரத்தினவேலு தேவர் கவிஞர் போன்ற இளைஞர்களுக்கு வீரத்தலை வராய் விளங்குகிறார்.

குடும்பப் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வந்த சூழலாலும், பெற்றோர்கள் ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வற்புறுத்தி வந்ததாலும் மீண்டும் வேலைத்தேடும் படலம் ஆரம்பமாகிறது.

1944-ஆம் ஆண்டு தொடக்கத்தில் திருச்சியைத் தலைமையகமா கக் கொண்டு இயங்கிய தென்இந்திய ரயில்வே தலைமையகத்தில் எழுத்தர் வேலைகிடைக்கிறது. அந்தக் காலத்தில் ரயில்வே அல்லது அஞ்சல்துறையில் வேலை பார்ப்பது கௌரவத்திற்கு உரிய செயலாகக் கருதப்பட்டது. சம்பளம் என்னமோ ரூ.30-க்குள்தான். இதற்கே பெரிய கௌரவம்.

அந்த நாட்களில் விலைவாசியும் அப்படித்தான்; ஒரு மூட்டை நெல் இரண்டு ரூபாய். நான்குபேர் ஓட்டலுக்குப்போய் இனிப்பு, காரம், காபி என்று சாப்பிட்டாலும் செலவு ஒரு ரூபாய்தான் வரும். அப்போது கலப்படம் என்பதற்கெல்லாம் யாருக்கும் அர்த்தம் தெரியாது. இனிப் பெல்லாம் நெய்யென்றால் அசல் நெய்தான்.

தேனீர் மக்கள் பழக்கத்திற்கு வராத காலம். டீ போர்டு விளம்பரத் திற்காகத் தெருவுக்குத் தெரு அடுப்பு மூட்டி டீ தயாரித்து எல்லோருக்

கும் இலவசமாக வழங்குகிறார்கள். தக்காளி, பப்பாளி பழங்களை யாரும் தொடுவதில்லை. நாற்பது ஐம்பது ஆண்டுகளில் தற்போது என்ன ஒருதலைகீழ் மாற்றம்.

ரத்தினவேல் தேவர் மீதிருந்த அபிமானத்தால் 1944-இன் பிற்பகுதியில் திருச்சி கூட்ஷெட்டிற்கு அருகே உள்ள என்ஜ லைனில் அவருடன் சேர்ந்து தமிழ் வளர்ச்சி கழகம் என்ற அமைப்பை உருவாக்குகிறார் கவிஞர். தேவர் தலைவர், கவிஞர் செயலாளர், அமைப்பு தீவிரமாகச் செயல்படுகிறது. போதிய பொருளாதார வசதி இல்லாததால் இந்த அமைப்பை வளர்த்தெடுக்க முடியாமல் போகிறது.

இந்த அமைப்பில் தொய்வுக்குப் பின்னர் கவிஞர் கவிதைத் துறையில் தீவிர கவனம் செலுத்த ஆரம்பிக்கிறார்.

வேலைக்குப் போன சில மாதங்களில் தந்தை கோவிந்தசாமி பிள்ளை இறந்துவிடுகிறார். நிரந்தர வருவாய்க்கு வழி ஏற்பட்டவுடன் அண்ணன் ராமசாமி பிள்ளையின் குடும்ப பாரத்தைக் குறைக்கும் வகையில் திருச்சி ஆண்டார் தெருவில் ஒரு வீட்டினை வாடகைக்குப் பார்த்துத் தாயார், விதவை தமக்கை தனபாக்கியம் அவரது இரு பெண்குழந்தைகள் ஆகியோரை லால்குடியிலிருந்து தன்னோடு அழைத்து வந்துவிடுகிறார்.

கல்யாணசுந்தரம் ஒருவர்தான் அவ்வளவாகப் படிக்காதவர். அவரும் திருச்சி ராஜா டாக்கீசில் மேலாளராக வேலை பார்க்க ஆரம்பிக்கிறார். ஓரிரு வருடங்களில் அண்ணன்கள் ராமசாமிக்கும் கல்யாணசுந்தரத்திற்கும் திருமணமாகிவிடுகிறது.

குடும்பத்தைத் தம்பி பொறுப்புடன் கவனித்துக் கொள்வதில் ஏற்பட்ட மகிழ்ச்சியாலும்; ஏற்கனவே வீடு ஏலம் போனபோது அதற்கு உதவிசெய்து மீட்காததை ஈடுசெய்யும் வகையிலும், மீண்டும் வீரேஸ்வரத்தில் விற்பனைக்கு வந்த வீடு ஒன்றினை 800 ரூபாய் விலைகொடுத்துக் கவிஞர் பெயரில் எழுதுகிறார் முதல்தார அண்ணன் ரத்தினம் பிள்ளை.

ரயில்வே கூட்டுறவு சங்கத்தில் கடன் போட்டும், சிறிய தமக்கையிடம் ரூ.1000/- கடன்பட்டும் வீட்டினை விரிவுபடுத்திக் கட்டிக் குடும்பத்தை மீண்டும் வீரேஸ்வரத்திற்கே கொண்டு வந்ததில் கவிஞருக்கு அளவிடமுடியாத மகிழ்ச்சி. இந்த வீட்டிற்கு இசைக்குடில் என்ற பெயர் வைக்கிறார் கவிஞர்.

10 இசைப்பாடல்கள் முயற்சியும் வெற்றியும்

கர்நாடக இசை பயிற்சி காரணமாகத் 'தியாகராஜன் இசைக்குழு' என்ற பெயரில் இசைக்குழு ஒன்றை அமைத்து இசைநிகழ்ச்சிகள் நடத்துகிறார். தன்னுடன் ரயில்வே அலுவலகத்தில் பணியாற்றிய டி.எஸ். தங்கராஜன் திருமண நிகழ்ச்சிக்கான வரவேற்பிற்கு இந்த இசைக்குழுதான் இசை. மிகுந்த பாராட்டைப் பெறுகிறது.

கர்நாடக இசை பயிற்சி இசைபாடல் எழுதும் முயற்சியையும் தூண்டுகிறது. 1948 முதல் கவிஞரின் கருத்தாழம் மிக்க கவிதைகளும் இசைப்பாடல்களும் இதழ்களிலும் வானொலியிலும் வரத் துவங்குகின் றன.

டி.கே. கோவிந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு திரைஉல கம் என்ற பத்திரிகை திருச்சி ஜாபர் சாகிப் தெருவிலிருந்து வெளிவருகி றது. ஏ.வி.கே. பேங்கில் தங்கிக் கொண்டிருந்த முத்தையா என்ற இளைஞர் டி.கே. கோவிந்தனைப் பார்க்க அடிக்கடி அவர் வீட்டிற்கு வருவார். அவரைக் கோவிந்தன் கவிஞருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்தான் பின்னாளில் கவிஞர் கண்ணதாசன் என்ற பெயரில் அறிமுகமானவர்.

'திரை உலகம்' பத்திரிகையின் முகப்பு அட்டையில் கவிஞரின் படத்தை வெளியிட்டு அவரது இசைப்பாடல் ஒன்றையும் வெளியிட்டி ருந்தார் கோவிந்தன். மந்திரிகுமாரி என்ற படத்தில் "போகுமிடம் வெகு தூரமிலை நீ வாராய் நீ வாராய்' என்ற பாடலைப்பாடி திரையுலகில் புகழ் பெற்றிருந்தார் திருச்சி லோகநாதன். அவர் இந்தப் பாடலைப் படித்துவிட்டுத் திரைபடத்திற்குப் பாட்டெழுத வருமாறு அழைத்தார். திரைப்படததிற்குப் பாடல்கள் எழுதுவதெல்லாம் தனக்கு ஒத்துவராது என அந்த அழைப்பை மறுத்துவிடுகிறார் கவிஞர். கவி.கா மு. ஷெரிப், மருதகாசி போன்ற கவிஞர்கள் கும்பகோணத்தில் தங்கி நாடகத்திற்குப் பாட்டெழுதி கொண்டிருக்கின்றனர். திருச்சி லோகநா தன் வழியான இந்த வாய்ப்பு இந்த இரு கவிஞர்களுக்கும் கிடைத்துப் பிரபலமடைந்தார்கள்.

எல்லீஸ் ஆர்.டங்கன் இயக்கி மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த புரட்சிக் கவிஞரின் எதிர்பாராத முத்தம் பொன்முடி என்ற பெயரில் வெளிவருகிறது. அதில் கவி.கா.மு. ஷெரீப், மருதகாசி இருவரும் பாடல் எழுத. ஸ்ரீ ராமனாதன் இசையமைத்துப் பாடுகிறார்.

சிதம்பரம் ஜெயராமன் அவர்களின் உறவினர் சிதம்பரம் ராஜாராமன் என்பவர். இவர் கவிஞரின் பாடல்களுக்கு இசையமைத்து மேடைகளில் பாடிக்கொண்டிருந்தார். இவர் பிற்காலத்தில் திருவையாறு கர்நாடக இசைக்கல்லூரி முதல்வரானவர்.

நந்தனார், பட்டினத்தார், தாயுமானவர் ஆகிய பல வெற்றிப் படங்களில் நடித்தவரும் இசைப்பேரரசு என்ற சிறப்புக்குரியவருமான எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்களைச் சந்தித்த ராஜாராமன் கவிஞர் பற்றியும் அவரது கருத்தாழமிக்க இசைப்பாடல்களைப் பற்றியும் கூறியிருக்கிறார். இசைப் பேரரசு தண்டபாணி தேசிகர் கவிஞரைப் பாடல்களை அனுப்பி வைக்கும்படியும் கடிதம் எழுதும்படியும் தெரிவித்திருந்தார். ராஜாராமன் மூலம் செய்தியறிந்த கவிஞர் இசைப்பேரரசு தண்டபாணி தேசிகருக்குப் பாடல்களை அனுப்பி வைத்தார்.

பாடல்கள் யாவும் மிகவும் சுவையுள்ளதாகவும், தனித்தமிழில் போற்றதக்கதாகவும் உள்ளது எனவும் விரைவில் அவற்றுக்கு இசையமைத்துப் பாடுகிறேன் எனவும் 18.10.'49 நாளிட்ட கடிதத்தின் மூலம் கவிஞருக்குப் பதில் அளித்தார் தேசிகர்.

'தாமரை பூத்த தடாகமடி' பாடலுக்கு இசையமைத்துக் கொண்டிருந்தபோது சென்னை வரும்படி கவிஞருக்குக் கடிதம் எழுதினார். கவிஞர் இசையரசு அவர்களைத் தியாகராய நகர் தீனதயாலு தெருவில் உள்ள 'கலையகம்' என்ற அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்தார். தாமரை பூத்த தடாகமடி பாடலை எந்த ராகத்தில் பாடி எழுதினீர்கள் என்று கேட்டதோடு பாடியும் காட்டச் சொன்னார். சிந்துபைரவி ராகத்தில் எழுதியுள்ளதாகக் கூறி பாடியும் காட்டினார் கவிஞர். சிந்து பைரவியில் உள்ள மத்திய சுரத்தையே ஆதார சுருதியாகக் கொண்டு இந்துஸ்தான் காந்தாரி என்ற புதிய ராகத்தில் மெட்டமைத்துவிட்டார். தேசிகர் திருச்சிக்குத் திரும்பிவிட்ட சில நாட்களில் மீண்டும் தேசிகர் அவர்களிடமிருந்து கவிஞருக்கு ஒரு கடிதம் வருகிறது.

திருச்சி முருகன் டாக்கீசில் ஒரு இசை நிகழ்ச்சி தனக்கு இருப்பதாகவும், அதில் கவிஞரின் தாமரை பூத்த தடாகமடி பாடலைப் பாடப் போவதாகவும், இயலுமாயின் அவசியம் அந்த நிகழ்ச்சிக்கு வரவேண்டுமெனவும் அந்தக் கடிதத்தில் தேசிகர் கேட்டுக் கொண்டிருந்தார்.

மிகப் பிரபலமான வயலின் வித்வான் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையும், பழநி சுப்பிரமணியம் பிள்ளை அவர்களும் பக்க வாத்தியம். கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை தேசிகர் அவர்களுக்குக் குரு போன்றவர். தேசிகர் இவர் மூலம் கர்நாடக இசையை வளர்த்துக் கொண்டவர். மதுரை மணி அய்யருக்குத் தொடர்ந்து மிருதங்கம் வாசித்து வருபவர் பழநி சுப்பிரமணியபிள்ளை. ஜெமினியின் நந்தனார் படம் மூலம் புகழின் உச்சியில் இருந்தவர் தண்டபாணி தேசிகர். அதனால் கூட்டம் அரங்கம் கொள்ளாமல் வழிந்தது. தண்டபாணி தேசிகர் தாமரை பூத்த தடாகமடி பாடலை முதன் முறையாகப் பாடுகிறார். பாடி முடித்ததும் அரங்கம் அதிர கையொலி எழுகிறது. கையொலி அடங்க நெடுநேரம் ஆகிறது. இந்தப் பாடலுக்கான வரவேற்பைப் பார்த்துத் தேசிகருக்கே மிகுந்த ஆச்சர்யம்.

கவிஞருக்கோ 'தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்' மனநிலை. வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சியாக இது அமைந்துவிடுகிறது. இதன்பிறகு கவிஞரின் வேறுபல பாடல்களுக்கும் தேசிகர் அவர்கள் இசையமைத்துப் பாடுகிறார்கள். ''எல்லோரும் வாருங்கள் இன்பவனம் ஒன்றுள்ளது'' என்ற பாடல்கூடத் தாமரை பூத்த தடாகமடி பாடலுக்குப் பின் இசையமைத்துப் பாடப்பட்டதே.

இந்தப் பாடலுக்குப் பிறகு வானொலி, இதழ்கள் என்று கவிஞரின் இசைப்பாடல்கள் பிரபல வரவேற்பைப் பெறுகிறது. திரை உலகம், கி.ஆ.பெ. விஸ்வநாதனின் 'தமிழ்நாடு', அரு.ராமநாதனின் பத்திரிகை, லோகோபகாரி, ஆனந்த போதினி, பிரசண்டவிகடன், அமுதசுரபி, தினமணி என எந்த இதழைத் திருப்பினாலும் அதில் கவிஞரின் பாடல் இடம் பெற்றிருக்கும். வானொலி தினமும் ஒலித்தது என்று சொல்லத்தக்க அளவுக்கு அடிக்கடி ஒலிபரப்பியது.

இதேபோல் —

இசைக் கலைஞர்களான சித்தூர் சுப்பிரமணி பிள்ளை தியாகராஜ பாகவதர், சிதம்பரம் ஜெயராமன், மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன், டி.எம்.சௌந்தரராசன், திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, காருகுறிச்சி அருணாசலம், ஏ.கே.சி.நடராஜன் என எல்லா இசைவாணர்கள் மத்தியிலும் இப்பாடல் பற்றிப் பேசப்பட்டது. அவர்கள் நிகழ்ச்சிகளிலும் இப்பாடல் பாடப்பட்டது.

இந்த நிலையில் கவிஞரின் இசைப்பாடல்கள் அடங்கிய 'இசையருவி' என்ற நூல் அவரது 76 பாடல்களின் தொகுப்பாக 1950-இல் வெளிவருகிறது.

இந்த நூலைப்பற்றி —

''தமிழில் நல்ல பாடல்கள் இல்லை என்ற குறையைப் போக்க திரு.தியாகராஜன் போன்ற கவிஞர்கள் முன்வந்திருப்பது தமிழர்களின் பாக்கியம்'' என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும்;

'பாடல்கள் மிக நன்றாக இருக்கின்றன. தங்கள் கவித்துவத்தை மனமார வாழ்த்துகிறேன்; எனக் கவிஞர் நாமக்கல் ராமலிங்கம் பிள்ளையும்;

'தியாகராஜன் அவர்களின் பாடல்கள் தெள்ளிய தீஞ்சுவை தருகின்றன' எனக் கவியோகி சுத்தானந்த பாரதியாரும்;

''திருச்சி தியாகராஜன் அவர்களைப் பைந்தமிழ்ச் சோலையில் உள்ள ''தாமரை பூத்த தடாகத்தில் கண்டெடுத்தேன். பைந்தமிழ்ச் சோலையின் நிழலில் 'அழியா இன்பம்' எய்தினேன். தாமரை பூத்த தடாகத்தில் குளித்தேன். குளித்த இன்பத்தால் இவர் பாடல்களை எல்லோரும் இசைத்து இன்பமெய்துவதற்காக' அகிலமெல்லாம் கூவி அழைக்கிறேன்' ஏன்? பாரெல்லாம் தமிழ்த்தாயின் பதம் பாட'' என இசைப் பேரரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்களும்;

'தங்களுடைய இசை பாடல்களின் தத்துவமே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தவை. தங்கள் பாடல்களே இசை இல்லாமல் படித்தாலும் இன்பமூட்டுகிறது. அத்துடன் இசையும் சேர்ந்துவிட்டால் தங்கள் பாடல்களின் இனிமையைச் சொல்லவா வேண்டும். இசைப் பாடல்க ளைத் தொடுக்கும் உங்கள் இன்ப உள்ளம்; இமயத்தின் அருவிபோல் பொங்கட்டும்' என ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களும் மிகவும் பாராட்டியுள்ளனர். மேற்கண்ட இசையருவி நூலை இசைவாணர்கள் போற்றிப் பாராட்டியதைப் போன்றே பத்திரி கைகளும் புகழுரைகளை வாரி வழங்கியுள்ளன.

''இளங்கவிஞர் தியாராஜன் இசையருவியை நம் முன்னே படைத் திருக்கிறார். ஆரம்ப முதல் இறுதிவரை அருவியைப் போலவே இசைபொழிந்து ஓடுகிறது. கருத்தில்லையேல் கலையில்லை என்பார் பெர்னாட்ஷா. அதை மெய்ப்பிப்பது போல் ராகம், தாளம், எதுகை, மோனை போன்ற இசை இலக்கணத்துடன் முற்போக்குக் கருத்துகளை யும் செறிவாக வாரி இரைத்திருக்கிறார். பாடிப் பரவசப்படுத்த கலைஞர் உண்டா என்பதே நம் கவலை''

— எனத் தினத் தந்தியும்;

''சொல்லழகும் பொருட்சுவையும் இசை ஞானமும் மிக்க அரு மையான தமிழ்ப்பாடல்கள் 76 இந்நூலில் காணப்படுகின்றன. இசைய

ரங்குகளில் பாடப்படுவதற்கு இவை ஏற்றமுடையன'' — எனத் தினமணியும்;

இளைஞர் தியாகரஜன் இசைப் புலமையுடன் இயல் அறிவும் கொண்டு பாடல்கள் இயற்றி இருக்கிறார். இச்சிறப்பினால் இவருடைய பாடல்கள் இனிமையாகவும் நன்றாகவும் அமைந்திருக்கின்றன. 'இசை யருவி' போன்ற நல்ல இசைப்பாடல்கள் வெளியாகி இருப்பது வரவேற்கத்தக்கது. — எனப் பிரசண்ட விகடனும்;

''தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் செழிக்கச் செய்யும் பணியில் இந்த இசையருவியின் பணியும் உதவி செய்கிறது'' — என அமுதசுரபியும்.

மிகவும் பாராட்டி எழுதியுள்ளன.

இந்தப் புகழுரைகள் எல்லாம் மிகச் சரியானவையே மிகைப் படுத்தப்பட்டவை அல்ல என்பதற்கு,

கவிஞருக்கு 1953-இல் தமிழக அரசின் பரிசைப் பெற்றுத் தந்ததும்,

கவிஞருக்குக் கலைமாமணி விருதினைப் பெற்றுத் தந்ததற்கும் இந்த நூலே அடிப்படை என்பதும்,

போதுமான சான்றுகளாகும்.

பாவேந்தர் பாரதிதாசனுக்கு அடுத்த நிலையில் நினைவுகூற வேண்டிய இன்னொரு புதுச்சேரி கவிஞர் வாணிதாசன் அவர்கள் ஆவார்கள். வாணிதாசனுக்கு இசைப்பாடல் எழுத வேண்டுமென்ற ஆசை. யாரிடம் இதுபற்றி பயிலலாம் என நாரண துரைக் கண்ணன் அவர்களிடம் கேட்க, திருச்சி தியாகராஜன்தான் இசைப்பாடல் பற்றிப் பயிலத் தகுதியான கவிஞர் என அவர் கூற, வாணிதாசன் அவர்கள் வீரேஸ்வரம் இசைக்குடிலுக்கு வருகிறார். ஒருவாரம் தங்கியிருந்து இசைப்பாடல்கள் எழுதுவது தொடர்பான நுணுக்கங்களை எல்லாம் அறிந்து செல்கிறார். அதன்பிறகு அவர் என்ன செய்தார் என்பது அந்தப் பெயர் பெற்ற கவிஞருக்குப் பெருமை சேர்ப்பதல்ல என்பது வேறு விசயமாகும். கவிஞரின் இசைப்பாடல்கள் கவிஞருக்கு எத்த கைய தகுதியைப் பெற்றுத் தந்துள்ளது என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் உதாரணம்.

இசையரசு தண்டபாணி தேசிகர் கவிஞரின் 'தாமரை பூத்த தடாகமடி' பாடலையும் இன்னும் சில பாடல்களையும் (1952, 53-இல் என்று நினைவு) இசைத்தட்டில் பதிவு செய்கிறார். இதன் காரணமாக இந்தப் பாடல்கள் புகழ்பெற வாய்ப்பு ஏற்படுகிறது.

11



12



14

15

16

17

18

19

20

21

22


23


24

25

26

27

28

'எச் எம் வி' கிராமபோன் ரிக்கார்டு கம்பெனி அந்தக் காலத்தில் புகழ்பெற்ற நிறுவனம். இதில் தங்கள் பாடல்கள் பதிவு செய்யப்படாதா எனக் கவிஞர்கள் தவம் கிடப்பார்கள். இந்த நிறுவனத்தின் மேலாள ரான சுப்பிரமணிய அய்யர் — தாமரைப் பூத்த தடாகமடி பாடலிசை யைக் கேட்டு மகிழ்ந்ததன் காரணமாகக் கவிஞரின் பாடல்களைத் தங்கள் கம்பெனி சார்பாக வெளியிட விரும்பி கவிஞருக்கு அழைப்பு அனுப்புகிறார். கவிஞரும் மேலாளரின் அழைப்பை ஏற்றுச் சென்று சந்திக்கிறார்.

சீர்காழி கோவிந்தராஜன் பாட, திருப்பதி வெங்கடாசலபதி பற்றிப் பத்துப் பாடல்கள் எழுதி தரும்படியும், அதற்குத் தகுந்த சன்மானம் வழங்குவதாகவும் கூறுகிறார். கவிஞர் பகுத்தறிவுவாதி என்பதோ நாத்திகர் என்பதோ மேலாளருக்குத் தெரியாது. கவிஞருக்கும் இப்ப டிப் பக்தி பாடல்கள் எழுதி தரத் தன்னை அழைத்திருப்பார் என்பது தெரியாது. ஒரு மணித் துளிநேர மௌனம்.

''ஐயா, எனக்குப் பழக்கப்பட்டவர்களைப் பற்றிப் பாடல் எழுதி தான் பழக்கம். திருப்பதி வெங்கடாசலபதி பற்றி எனக்கு முன்னே பின்னே அறிமுக மில்லிங்களே' என்று சிரிக்காமல் கொள்ளாமல் சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

இதேபோல்தான் இவருடைய 'தாமரை பூத்த தடாகமடி' பாடலின் இனிமையைக் கேட்டறிந்த ஒரு ஆதீனம் இவரைத் தன் ஆதீனத்தில் பேசுவதற்காக அழைத்திருந்தார். இவரும் அழைப்பை ஏற்றுச் சென்று சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவின் இறுதியில் 'ஆதீனம்' சொல்லாராய்ச்சியில் இறங்கி ஆதிமுதல் ஈனமாக இருப்பதால்தான் ஆதீனம் என்ற சொல் வந்தது என்ற ஆராய்ச்சி முடிவைச் சொல்லப் போய் — போக்குவரத்து செலவுக்கான தொகையைக் கொடுக்காமலே அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டனர். எப்போது கேட்டாலும் இந்த நிகழ்ச்சியை சொல்லி முடித்ததும் அடக்க முடியாமல் சிரிப்பார் கவிஞர்.

கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ளாதவர் என்பதற்கும், திறமைகளிருந்தும் கொள்கை சமரசம் செய்து கொள்ள தயாரில்லாத தால்தான் வறுமை இவரது வாழ்நாள் உறவானது என்பதற்கும் இந்த இரு நிகழ்ச்சிகளில் இழையோடிய குறும்புகள் சின்ன உதாரணங்கள்.

11 கவிஞரின் திருமணமும் சென்னை குடியேற்றமும்

சித்தர் பாடல் ஈடுபாடு, ஆசரம வாழ்க்கை நாட்டம் ஆகியவற்றின் காரணமாகத் திருமணத்தை மறுத்து வந்தார் கவிஞர். தம்பி பாலகிருஷ்ணன் திருமணத்திற்குப் பின்பும்கூட உறுதியாக மறுத்து வந்தார்.

இழந்த வீடு — புதிய வீடு வாங்கிய நிலையில் மீட்கப்பட்டு நிரந்தர வேலை காரணமாகப் பொருளாதார நெருக்கடிகளும் வெகுவாகக் குறைந்துவிட்ட, குடும்பத்தில் எல்லோரும் குடியும் குடித்தனமுமாகிவிட்ட நிலையில் இந்த ஒரு மகன் மட்டும் திருமணமே வேண்டாமென்றிருப்பதைத் தாயார் வரதம்மாள் அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. புலம்பலும் நச்சரிப்பும் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. அதோடு அண்ணன்கள் தமக்கைகளின் தொணதொணப்பும் கூடிக்கொண்டே வந்தது. எழுத்தின் வழிவந்த புகழும் உறவின் நெருக்கத்தை ஏற்படுத்தின.

இறுதியாக 1951-ஆம் ஆண்டில் கவிஞர் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார். தாயார் வரதம்மாள் பட்ட சந்தோசத்தை வார்த்தைகளில் சொல்ல முடியாது. நீண்டநாள் தவம் நிறைவேறும் நாள் வந்தது.

அண்ணன் மகன் கிருஷ்ணனின் உறவில் சென்னை மாநகராட்சி பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றும் நவநீதம்மாள் மகள் சாந்தியை நிச்சயித்து மற்ற ஏற்பாடுகள் தொடர்ந்தன.

சென்னை நகர உதவி மேயராக இருந்த தெய்வசிகாமணி என்ற வழக்கறிஞரின் தங்கை நவநீதம்மாள். இந்தத் தெய்வசிகாமணி பிரஜா சோசலிஸ்ட் கட்சியின் சார்பில் நின்று அண்ணா அவர்களுக்கு முன்பு காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அண்ணா அவர்களுக்கும் நன்கு அறிமுகமானவர். ஆனந்தபோதினி, பிரண்டவிகடன் ஆகிய இரு பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்தவர், நாரண துரைக்கண்ணன் அவர்கள். கவிஞரின் இசைப் பாடல்களை இரு பத்திரிகைகளிலும் வெளியிட்டு ஆதரவு தந்து வந்தார் நாரண துரைக்கண்ணன். அதனால் கவிஞருக்கு இவரோடு நெருக்கமான பழக்கம் ஏற்பட்டிருந்தது.

நாரண துரைக்கண்ணன் மேற்கண்ட இரு பத்திரிகைகளை நடத்தி வருகையில் இந்த இருபத்திரிகைகளின் விற்பனையாளராக இருந்தவர் ஜெமினி வாசன். பின்னாளில் பத்திரிகை ஆரம்பிக்கும் வசதி வந்த போது தன் பத்திரிகைக்கு 'ஆனந்தவிகடன்' என்ற பெயரைத் தேர்வு செய்தது மேற்கண்ட இரு பத்திரிகைகளின் தலைப்பிலிருந்துதான். ஆனந்த போதினி பத்திரிகையின் முதல் சொல்லையும், பிரசண்ட விகடன் என்ற பத்திரிகையின் இரண்டாவது சொல்லான விகடனையும் இணைத்துத்தான் ஆனந்த விகடன் என்ற பெயரை உருவாக்கினார்.

கவிஞர் தனக்கான திருமணம் நாரண துரைக்கண்ணன் அவர்க ளின் தலைமையில் நடைபெற வேண்டுமென விரும்பினார். அதன் படியே நாரண துரைக்கண்ணன் தலைமையேற்க 1951-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 6-ஆம் தேதி தியாகராஜன் அவர்களுக்கும் சாந்தி அவர்களுக்கும் திருமணம் நடந்தது.

திருச்சி லோகநாதன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

வீரேஸ்வரம் இசைக்குடிலில் திருச்சி நண்பர்களுக்காக ஒரு வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் டி.கே. லட்சுமணன், சிதம்பரம் ராஜாராமன் ஆகியோரின் இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன.

திருச்சி வீரேஸ்வரத்தில் குடும்ப வாழ்க்கை ஏறத்தாழ ஓராண்டுக் காலம் நடந்தது. 1952-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் கிருஸ்த்துமஸ் தினத்தன்று —ராயபுரம் ரெய்னி மருத்துவமனையில் பெண் குழந்தை பிறக்கிறது. வான்மதி என்று பெயர் சூட்டுகிறார். மகள் வான்மதிக்காகக் கீழ்கண்ட தாலாட்டு பாடலையும் எழுதுகிறார் கவிஞர். இந்தப் பாடல் பின்னர் அவரது நூலிலும் இடம் பெற்றது.

தாலாட்டுப் பாடல்

எடுப்பு

வஞ்சகமில்லா மானிட பிஞ்சே
வான்மதியே இன்பத் தேன்துளியே

தொடுப்பு

மஞ்சம் உனக்கு என் நெஞ்சமடீ
மான்விழி மூடியே நீ உறங்காய்

அமைதி

ஆசையென்னும் கடலில் அள்ளிய வெண்முத்தே
அரும்பு மல்லிகையே! செங்கரும்பின் தீஞ்சுவையே!

பாசமென்னும் வலையால் என்னைப்பற்றி இழுத்துவிட்டாய்
பாவலர் கற்பனையின் ஓவியமே உறங்காய் நீ.

இதற்கிடையில்—

தாமரைப் பூத்த தடாகமடி பாடல் பிரபலமடைந்தது முதல் சிதம்பரம் ராஜாராமன் மூலம் அறிமுகமாகிக் கவிஞரின் பாடல்கள் பலவற்றை இசையமைத்து மேடைகளில் பாடிவந்ததன் மூலம் நெருங்கிய நண்பராகி இருந்த சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் திரைப்பட பாடல் முயற்சிக்காகச் சென்னை வரும்படி கடிதம் எழுதி 1952 இறுதியில் அழைப்பு விடுக்கிறார்.

திருச்சி லோகநாதன் அழைத்தபோது திரைப்படத்துறை தனக்கு ஒத்துவராது எனக்கூறி ஒதுக்கியபின் கவிஞரின் கருத்தில் மாற்றம் ஏற்படுகிறது. திரைப்படம் மூலம் வெகுமக்கள் தொடர்பு ஏற்படும் அதன் மூலம் நிறைய சமுதாயத் தொண்டு செய்யலாம் என்ற தெளிவே இந்தக் கருத்து மாற்றத்திற்கான காரணம்.

சுதந்திரத்திற்கு முன்பு திருச்சியைத் தலைமையகமாகக் கொண்டு தென் இந்திய ரயில்வேயும், சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு தென் மராட்டா ரயில்வேயும் இயங்கி வந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்த இரண்டு ரயில்வே நிறுவனங்களையும் இணைத்து தென்னக ரயில்வே (சதர்ன் ரயில்வே) என்ற பெயரிடப்பட்டது. சென்னை தலைமையகமானது. இதனால் திருச்சிக்கு மாறுதல் கேட்ட ஒருவருக்கும் சென்னைக்கு மாறுதல் கேட்ட கவிஞருக்கும் உடன் நிகழ்வு மாற்றமாக வழங்கப்பட்டது. கவிஞர் 1953-ஆம் ஆண்டு முதல் சென்னைக்கு மாறுதல் பெற்று வந்துவிட்டார்.

வீரேஸ்வரம் வீட்டை இரண்டு பகுதியாக்கி ஒருபகுதியை வாடகைக்கும், இன்னொரு பகுதியில் தன் விதவை தமக்கை அவரது குழந்தைகள் மற்றும் தாயாரின் குடியிருப்புக்கும் விடப்படுகிறது. வாடகையைத் தமக்கை தன் குடும்பச் செலவுக்குப் பயன்படுத்திக் கொள்வது எனவும் ஏற்பாடு.

சென்னை வண்ணாரப்பேட்டையில் ஆதம்சாகிப் தெருவில் வாடகை வீட்டில் குடியேறுகிறார். முதல் குழந்தை பிறந்தது முதல் தாயார் வரதம்மாள் சென்னையில் வந்து தங்கியிருக்கிறார். சில நாட்கள். அதற்குப் பின் ஓரிரு மாதத்தில் தாயாருக்கு உடல்நலமில்லை என்ற செய்தி வரவே கவிஞர் ஓரிரு மாதங்கள் விடுப்பு எடுத்துக் கொண்டு குடும்பத்தோடு வீரேஸ்வரம் வந்து தங்கி கவனிக்கிறார். தாயார் உடல்நலம் தேறாமல் ஓரிரு மாதத்தில் இறந்துவிட்ட பிறகு

குடும்பம் நிரந்தரமாகச் சென்னை வந்து விடுகிறது. அதன் பின்னர் முழுவதும் சென்னை வாழ்க்கையே. வீரேஸ்வரம் வாழ்க்கை முடிவு பெற்றுவிடுகிறது.

12 இசைக் கலைஞர்களின் தொடர்புகள்

இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் அழைப்பின் பேரில் சென்னை வந்து திரைப்பட முயற்சிகள் மேற்கொண்டார் கவிஞர். கவிஞர் முயற்சித்தார் என்பதைவிட இவர் வரவேண்டும் வளர வேண்டும் என்று ஆர்வம் கொண்ட இசைச் சித்தர் முயற்சித்தார் என்பதுதான் உண்மை. பராசக்தி படத்தை மனதில் கொண்டுதான் கவிஞரை அழைத்திருந்தார் இசைச்சித்தர். திரைப்படத்துறையில் ஒரு வர் நுழைவதற்கும், நுழைந்த பின்னர் நிலை நிறுத்திக் கொள்வதற்கும் திறமை மட்டும் இருந்தால் பற்றாது. இங்கே திறமை இரண்டாம் பட்சம்தான். இந்த இரண்டாம் பட்சத்தை மட்டுமே மூலதனமாகக் கொண்டு முயல்பவர்கள் முதலில் தடுக்கப்படுவார்கள். தப்பித்தவறி நுழைந்தாலும் நிலைபெறவிடாமல் விரட்டப்படுவார்கள். இங்கே முதன்மைத் தகுதியாக இருப்பது பொய் நடிப்பு. யாரைப் பார்த்தாலும் 'உங்களைப்போல உண்டா' என்று சொல்லத் தெரிய வேண்டும். முதன்மை நிலையில் இருப்பவரை 'உங்களைப்போல் உண்டா' எனப் பலபேர் முன்னிலையில் பாராட்ட வேண்டும். அடுத்த நிலைகளில் இருப்பவர்களை முதல் நிலையில் இருப்பவர் காதுபடாமல் அவரவர் காதில் மட்டும்படும் வகையில் ஓதவேண்டும். இதுதான் திரைப்படத்து றைக்கான நுழைவுச் சீட்டு. இது தெரியாதவர்கள் பல கற்றும் கல்லாதவரே. கவிஞர்கூட இந்த வகையில் ஒரு கல்லாதவரே.

இசைச் சித்தர் எவ்வளவோ முயன்றும், பலருக்கு நுழைவாயிலாக இருந்த பராசக்தி திரைப்படம் இவருக்கு நுழைவாயிலாக அமையாமல் போனது. இது பற்றிக் கவிஞருக்குப் பெரிதாக வருத்தம் ஏதுமில்லை. இசைச் சித்தர் ஜெயராமன் அவர்களோடு கவிஞரின் நட்பு என்றும் போல் தொடர்ந்தது இறுதிவரை.

இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் ஓர் அற்புதமான இசைக் கலைஞர். ஒரு தமிழ்ப்புலவர் சிறந்த இசைவாணராக இருந்து உணர்ச்

சிப் பூர்வமாகப் பாடினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் இவரது இசை. சொல் சுத்தமும் இசை வளமும் ஒன்றை ஒன்று விஞ்சும் வகையில் இவரது இசை சிறந்தோங்கியது என்பார் கவிஞர்.

இத்தனைக்கும் மற்ற இசைக் கலைஞர்களைப் போல ஒரு பாடலைப் பாடத் தொடங்கும் முன் அதற்கான பயிற்சி எதையும் இவர் மேற்கொண்டதைத் தாம் பார்த்ததில்லை என்பார் கவிஞர்.

'கிருஷ்ண லீலா' படத்தில் பாலகிருஷ்ணனாகச் சிறுவயது பைய னாகத் தோன்றிப்பாடி நடித்திருக்கிறார் இசைச் சித்தர்.

கொஞ்சம் வளர்ந்த நிலையில் பி.யு.சின்னப்பா நடித்த 'கிருஷ்ண பக்தி' படத்தில் ஒரு வழிகாட்டித் துறவியாக நடித்திருக்கிறார். இப்படத்தில் இவர் பாடிய 'எது வேண்டும் சொல் மனமே' என்ற பாடலுக்காகவே இந்தப் படத்தை இரண்டு மூன்று முறை பார்த்த ரசிகர்கள் பட்டியலில் நானும் ஒருவன் என்று மறைக்காமல் பேசுவார் கவிஞர். இந்தப் பாடல் முடிந்தவுடன் சிலர் அரங்கை விட்டு வெளியே றுவதைப் பலரும் அந்தக் காலத்தில் அதிசயமாகப் பேசுவார்கள். அதுவும் பி.யு.சின்னப்பா படத்தில் இசைச் சித்தருக்கெனத் தனி ரசிகர்களை உருவாக்கிய படம் இந்தப் படம்.

சிவாஜி கணேசனுக்கு, கலைஞர் கருணாநிதிக்குப் புகழினை அள்ளித் தந்ததைப் போலவே இசைச் சித்தரையும் புகழின் உச்சியில் ஏற்றிவைத்த படம் பராசக்தி என்பது கவிஞர் கருத்து. பராசக்தி படத்தில் இசைச்சித்தர் பாடிய 'கா கா', நெஞ்சு பொறுக்குதில்லையே 'தேசம் ஞானம் கல்வி' போன்ற பாடல்கள் நாடெங்கும் பட்டி தொட்டியெல்லாம் ஒலித்தன.

இதன்பிறகு, ரத்தக் கண்ணீர், ராமாயணம், பாசவலை, பாவை விளக்கு, தங்கப் பதுமை, புதையல் போன்ற பல படங்கள் இவரது திறமையைப் பறைசாற்றின. திரைப்படத் துறையில் இது இசைச் சித்தரின் பொற்காலம்.

எவ்வளவு புகழ் உச்சியில் இருந்தாலும் எளிமையாக இருப்பது இவரது சிறப்பு. நண்பர்களை அணைத்துக் கொண்டு மகிழ்ந்திருப்பது இவரது தனிச்சிறப்பு. விருந்தோம்பல் இவரது உடன்பிறப்பு.

இவ்வளவு இருந்தும், கலைஞர் கருணாநிதி இவரது மைத்துனராக இருந்தும் — இவரது கடைசிக்கால பொருளாதார வீழ்ச்சியும் வறுமை யின் இறுக்கமும் கொடுமையானது. வில்லிவாக்கத்தில் ஒரு சிறிய வீட்டில் தன் மகளின் பாதுகாப்பில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு இருக்கிறார் என்கிற செய்தியை வார இதழ் ஒன்றின் மூலம் அறிந்து

தன் நண்பர் தோழர் இராசேந்திரனோடு — தேடிச் சென்று சந்திக்கிறார் கவிஞர்.

நோயின் பிடியில் உடல் மெலிந்து கிடந்த நிலையிலும் இசைப்பற்றிப் பேசியும், மெதுவாகப் பாடிக் காட்டியும், தன் நோயின் கொடுமையை வெளிக்காட்டாமல் மறைக்க முயன்ற அவரது மனத்திண்மை கவிஞரை வியப்பில் ஆழ்த்தியது.

யாரிடமும் எதையும் எதிர்பார்க்காத செம்மாந்த வாழ்வு அவரது பெருவாழ்வு.

பராசக்தியின் பாடல் எழுதும் வாய்ப்புக் கைகூடாமல் போனாலும் — நீண்ட இடை வெளிக்குப் பிறகு 'பொன் விளையும் பூமி' படத்தில் பாடல் எழுதுவதற்கான வாய்ப்பினைத் தேடித் தந்தவர் இசைச் சித்தர் ஜெயராமன் அவர்கள்தான், என்பதை நன்றியோடு, நினைவுகூர்வார் கவிஞர்.

சென்னை வந்து திரைப்படத்துறை முயற்சி 1953-இல் தோல்வியடைந்தது என்றாலும் —

சென்னை வந்ததன் காரணமாக ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜபாகவதர் என்ற உன்னத இசைக் கலைஞரோடு, தனக்கிருந்த பழக்கம் மேலும் நெருக்கமாக வளர்ந்ததைச் சென்னை வந்ததால் தனக்குக் கிடைத்த இன்னொரு வாய்ப்பு என்பார் கவிஞர்.

தியாகராஜபாகவதரின் வாழ்வு தமிழகத்தின் புகழ் வாய்ந்த இசை சகாப்தம் என்றே குறிப்பிட வேண்டும். எடுப்பான தோற்றமும், அதற்கு ஏற்ற குரல் வளமும் அவருக்கு ஈடு இணையற்ற மேடை ஆளுமையைத் தந்திருந்தது. அத்தகைய மேடை ஆளுமைக் கொண்ட இசைக் கலைஞர் அவருக்கு முன்னும் பின்னும் தமிழகத்தில் தோன்றவில்லை.

இந்தக் காலத்தைப் போல ரசிக மன்றங்கள் அது இது என்றெல்லாம் எதுவும் கிடையாது. இந்தக் கால ரசிக மன்றங்கள் அரசியல் கட்சிகளைப் போல ஆள்சேர்க்கும் பணிகளைச் செய்கின்றன. இப்படி எந்த ஒரு அமைப்பும் இல்லாமல் தானாகக் கூடிய கூட்டம் அவருக்கு வரும் கூட்டம். எனவே, இது கூட்டப்பட்ட கூட்டமல்ல. கூடிய கூட்டம் என்று சொல்வதற்கான முழு அர்த்தம் அவருக்குக் கூடிய கூட்டத்திற்கே உண்டு.

இவரது இசை நிகழ்ச்சி என்றால் — சுற்று வட்டாரங்களிலிருந்து கட்டுக்கடங்காக் கூட்டம் நிரம்பி வழியும். இவர் பாடத் தொடங்கி

விட்டால் ஒரு சிறு சலசலப்புக்கூட எங்கும் இருக்காது. தேனுண்ணும் வண்டுகள்... போல அவரவரும் இவரது இசை இன்பத்தில் தங்களை மறந்து ரசித்திருப்பார்கள். இரவு எத்தனை மணியானாலும் ஒரு அசைவும் இருக்காது. அப்போது இந்தக் காலம்போல் போக்குவரத்து வசதியோ சொந்த வாகன வசதியோ இல்லாத காலம்.

இசைக் கச்சேரி முடிந்து எந்நேரம் ஆனாலும் நடந்தே செல்வார்கள்.

இவரது திரைப்படங்கள் இவரது இசைக்காகவே திரும்பத் திரும்ப பார்க்கப்பட்டன. ஒரே திரையரங்கில் ஓராண்டுக்குமேல் ஓடி சாதனைப் புரிந்த திரைப்படங்களே அதிகம். அசோக்குமார், சிவகவி, ஹரிதாஸ் போன்ற படங்கள் அப்படிப்பட்ட படங்கள்.

இன்றைய திரைப்படங்கள் ஓடுவதற்கு எத்தனையோ காரணங்கள் உள்ளன. சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த இசை, சிறந்த சண்டைக் காட்சிகள், சிறந்த வசனம், சிறந்த தொழில்நுட்பம், இப்படி எண்ணற்ற காரணங்கள். இவற்றோடு எங்கள் நடிகர் படம். எனவே இத்தனை முறை பார்த்துப் படத்தை நிலைநாட்டியே தீருவோம் எனக் கங்கணம் கட்டிக் களத்தில் இறங்கும் ரசிக மன்றங்கள். இவற்றில் எதுவுமே இல்லாமல் கருப்பு வெள்ளையில் எடுக்கப்பட்ட பல படங்கள் ஓராண்டுக்கு மேல் ஓடின என்றால் அதற்குத் தியாகராஜபாகவதர் என்ற தனிமனித இசைபாடும் திறமே காரணம் என்பது மிகையல்ல. அப்படிப் பார்க்கும்போது — திரைத்துறையில்கூடத் தன்னிகரற்று இன்றும் விளங்குபவர் தியாகராஜபாகவதர் மட்டுமே.

தியாகராஜபாகவதர் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் சிறை சென்று மீண்டபின்தான் கவிஞருக்கு அவருடன் தொடர்பு. சிறையிலிருந்து மீண்டு சென்னை மௌண்ட் சாலையில் உள்ள ஸ்பென்சர் கட்டிட அறையில் தங்கியிருந்தபோது சந்திப்பும் பழக்கமும் ஏற்பட்டது. அதன் பிறகு கவிஞரின் 10-15 பாடல்களைப் பாகவதர் தன் நாடகங்களிலும், வானொலியிலும் பாடி வந்தார்.

பாகவதர் புகழின் உச்சியிலிருந்தபோது சகுந்தலை படத்தில் பாகவதரையும் எம்.எஸ்.சுப்புலட்சுமியையும் இணைத்து நடிக்க வைக்க பலரும் முயற்சிகள் மேற்கொண்டதாகவும், பாகவதரோடு சேர்ந்து நடிக்கும்போது இசை கோகிலத்தின் குரல் எடுபடாமல் போய் அவரது புகழ் மங்கி விடுமோ என அஞ்சி அவரது கணவர் சதாசிவம் இதனைத் தடுத்து விட்டதாகவும் திரைத்துறையில் பலராலும் பேசப்பட்டது.

இதேபோல் —

புகழேந்தி ஒட்டக்கூத்தர் இரு கவிஞர்களின் வாழ்க்கையை இணைத்து ஒரு திரைப்படம் தயாரிக்கவும், அதில் ஏழிசை மன்னர் தியாகராஜபாகவதரையும் இசைப்பேரரசு எம்.எம். தண்டபாணி தேசிக ரையும் நடிக்க வைக்க கவிஞர் தியாகராஜன் பல முயற்சிகள் மேற்கொண்டதாகவும் அது நிறைவேறாமல் போனது இசையுலகம் பெற்ற தோல்வியாகும் என்று கவிஞர் வருந்தினார்.

இந்த இரண்டு படங்களும் வந்திருந்தால் தமிழ் இசைத்துறையில் மேலும் ஒரு உன்னத உச்சம் கிடைத்திருக்கும். வராமல் போனது இசைத்துறைக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய இயலாத இழப்பாகும் என்று வருத்தப்பட்டார் கவிஞர்.

1954 அல்லது 1955-ஆம் ஆண்டு பொங்கல் விழா ஒன்றில் வானொலியில் இசைப்பாடல் நிகழ்ச்சிக்குத் தியாகராஜபாகவதருக்கு அழைப்பு வந்திருக்கிறது. இரண்டொரு நாட்கள் இடைவெளியே இருந்த நிலை. புதிய பாடல் ஒன்றினைப் பாட விரும்பிய பாகவதர் கவிஞரின் புதிய பாடலாக அது இருக்க வேண்டும் எனவும் விருப்பப் படுகிறார்.

நெல்லிக்குப்பம் பி.ஜி. ரத்தினப்பா என்பவர்தான் பாகவதர் இசை நிகழ்ச்சிகளுக்கான இசையமைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தவர். அவரையும் அழைத்துக் கொண்டு கவிஞரின் அலுவலகமான தென்னக ரயில்வேக்கு நேரே வந்து விடுகிறார். பாகவதர் காரில் இருந்து கொண்டு ரத்தினப்பாவை மேலே அனுப்பி கவிஞரை அழைத்து வர சொல்கிறார்; ரத்தினப்பா கவிஞரை அழைத்துக் கொண்டு கீழே வருவதற்குள், பாகவதர் வந்திருக்கும் செய்தியை அறிந்து ஆண் பெண் ஊழியர்கள் அனைவரும் கீழே வந்து பாகவதரைப் பார்க்க அவரது காரைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

அனைத்து ஊழியர்களிடமும் விடைபெற்றுக் கவிஞரை அழைத் துக் கொண்டு தன் வீட்டிற்குச் சென்று வானொலி பொங்கல் விழா இசை நிகழ்ச்சிக்குப் புதிய பாடல் வேண்டுமெனக் கேட்க — அன்று மாலைக்குள்ள கவிஞரும் கீழ்க்கண்ட பாடலை எழுதிக் கொடுக்கிறார்.

பொங்குது பேரின்பமே — எங்குமே
புதுமை வளம் பெருக்கும்
உழவனின் திறமையால்
பொங்குது பேரின்பமே

தங்க சிறுமணிகள்
தரையில் குவிந்ததென
அங்கங்கே செந்நெல்
அழகூட்டும் திருநாளில்

என்ற வரிகள் கொண்ட நீண்டதோர் பாடலை இசையமைத்துப் பொங்கல் திருநாளில் வானொலியில் பாடுகிறார் பாகவதர். இந்தப் பாடல் மிகுந்த பாராட்டைப் பெறுகிறது.

பாகவதர் நேரில் வந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சொல்லியனுப்பி இருக்கலாம். அதிகபட்சம் காரை அனுப்பி அழைத்து வரச் சொல்லியிருக்கலாம். அவரே நேரில் வந்தாரே அது — மற்றவர்களை அவர் எந்தளவு மதித்து மரியாதை செய்யக் கூடியவர் என்பதற்கான உதாரணம் என நெகிழ்ந்து கூறுவார் கவிஞர்.

தியாகராஜபாகவதர் கவிஞரின் பல பாடல்களை இசை நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பாடி சிறப்புச் சேர்த்திருக்கிறார். அதில் எடுப்பு:-

ஆடிவரும் அருவியிலே
அமுத இசை கேட்குதம்மா
அள்ளி பருகிடவே
உள்ளம் துடிக்குதம்மா

தொடுப்பு:

பாடும் குயிலினமும்
பச்சைப் பசுங்கிளியும்
பாய்ந்தோடும் மானினமும்
நீர்வேட்கை கொள்ளுதம்மா

முடிப்பு:

கொடிமுல்லை மாந்தளிரும்
குலுங்கும் சுவை கனியும்
குளித்துக் குளித்து அதில்
கொள்ளையின்பம் காணுதம்மா.

பொடியாம் மகரந்தம்
பூவண்டு தூ விடவும்
பொன்னிறக் கதிரோனும்
புன்லாடி நீந்துகிறான்.

என்ற பாடல் மிகவும் பிரபலமானது. பாகவதரின் குரலை அறிந்தவர்கள். அந்தப் பாடலை இன்னமும் நினைவில் கொண்டு முணுமுணுத்து அசைபோடக் காணலாம்.

இதேபோல்:-

இன்பத் தமிழமுதம்
எங்கள் ராமலிங்கர்
இசையின் கருத்தறிந்தால்
இளகாதோ தங்கம்

என்ற பாடலும்:

வையம் புகழும்
பொய்யா மொழிக்குறளை
வாரிக் கொடுத்தவள் யார்? எங்கள்
ஐயன் இளங்கோவும்
அருள்மொழி அவ்வையும் .
அடிபணிந்த தமிழ்த்தாய்.

கம்பனெனும் உயர்
கற்பனை மலைதனில்
கவிமழை பொழிந்தவள் யார்? - இந்த
அம்புவியில் தமிழே
அமிழ்தென நிலைநாட்டும்
ஆற்றல் மிகும் தமிழ்த்தாய்

என்ற பாடலும் —

பாகவதர் பாடிய பாடல்களில் மிகவும் புகழ் பெற்ற பாடல்களாகும்.

பாகவதர் சொந்தமாக ஒரு படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அந்தப் படத்தில் இசை பொறுப்பினை ஜி.ராமனாதன் ஏற்றிருந்தார். இந்தப் படத்தில் பாகவதரோடு நடிகவேள் எம்.ஆர். ராதா அவர்களும் நடிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பாடல் ஏற்கனவே இசையமைத்துப் பதிவு செய்யப்போகும் நிலையில் இதனைக் கேட்ட எம்.ஆர்.ராதா யாரய்யா பாடலாசிரியர்? ஒரு பார்ப்பனக் கவியின் பெயரும் இடம் பெறாமல் பாட்டெழுதியிருக்கிறாரே என்று — பார்ப்பனரான ஜி. ராமநாதன் அவர்களை வைத்துக் கொண்டு பேசப்போய் ஒரு சிறு குழப்பமே ஏற்பட்டு விட்டது. இந்தப் படம் வெளிவராமல் நின்று போனதற்கான பல காரணங்கள் ஜி.ராமநாதன் இதற்குப் பிறகு ஒத்துழைக்காததும் ஒரு காரணமெனப் பேசப்பட்டது.

பாகவதர் புகழின் உச்சியிலும் செல்வச் செழிப்பின் உச்சியிலும் கொடிகட்டிப் பறந்த காலக் கதைகள் பற்றி நிறைய பேசலாம். அந்தக்

கால கட்டங்களில் பாகவதர் பல பெண்களோடு தொடர்பு கொண்டிருந் தார் என்று பொதுவாகப் பேசுவார்கள். ஆனால் நெருங்கியிருந்தவர்க ளைக் கேட்டால் கதையே வேறாக இருந்தது. அவர் விரும்பினார் என்பதை விட பெண்கள் அவரை விரும்பி வந்த தொல்லைகளுக்கு அவர் இணங்கியதே அதிகம் என்பார்கள். அவர்களுக்கு அவர் தன் செல்வங்களைச் செல்வமென மதியாமல் வாரி வழங்கினார். அவரிட மிருந்து செல்வங்களை அள்ளிக்கொண்டு போனவர்கள் அனைவரும் மேல்தட்டு உயர் குலத்தவரே. இதெல்லாம் தாம் கேட்ட கதைகள். இந்தக் கதைகள் எல்லாம் உண்மையாகத்தான் இருக்கும் என்பதை நம்ப வைத்ததுதான் நேரில் கண்ட ஒரு நிகழ்ச்சி எனக் கூறி கீழ்க்கண்ட நிகழ்ச்சியை விவரித்தார் கவிஞர்.

அவருடைய கடைசி காலம் மிகவும் துயரமான வறுமை கோலம். அவர் தியாகராய நகரில் குடியிருந்தபோது அவருடன் கடைசிகால தொடர்பாக ஒரு உயர்குல பெண்மணி இருந்தார். ஒரு மளிகைக் கடைக்காரர் கடைபாக்கியை உடனே தீர்க்க வேண்டுமெனத் தீவிரமாக நெருக்கடிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது — அந்தப் பெண் மணி தனக்குப் பத்தாயிரம் கொடுத்து அனுப்பி விடும்படி தாட்சண்ய மின்றித் தொல்லைகள் கொடுப்பதாக யோகாம்பாள் தெருவில் பாகவத ரோடு ஒரு நாள் இரவில் தங்கி இருக்கும் போது பாகவதர் கூறியதாக. கூறியதோடு, அவர் தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கும் அந்த நிலை யிலும் அவரது கூலி கேட்டு நெருக்க எப்படித்தான் மனம் வந்ததோ என்பார். இத்தனைக்கும் அந்த வறுமை நிலையிலும் அந்தப் பெண் மணியை ஒரு வசதியானவராகத்தான் வைத்திருந்தார்.

இவர் புகழின் உச்ச நிலையில் இருந்த காலத்தில் கட்டப்பட்ட இவரது திருச்சி பங்களா மிகவும் ஆடம்பரமானது. திருச்சி ஜங்ஷ னுக்கு அருகில் இருந்த அந்தப் பங்களாவைப் 'பாகவதர் அரண்மனை' என்றே அழைப்பார்கள். தோற்றமும் அரண்மனைப் போன்றதே. அந்தப் பங்களா என்னவாயிற்று? வறுமை நிலையிலிருந்த பாகவத ரைக் கேட்டதற்கு — நாமக்கல் பகுதியைச் சேர்ந்த பணக்காரர்கள் பலர் அதன் பேரில் கடன் கொடுத்துள்ளனர். அந்தக் கடன் வளர்ந்து மலையாகிவிட்டது. கோர்ட்டுக்கு போனால் ரூபாய்க்குப் பத்துப் பைசாதான் கிடைக்கும் என்ற நிலை. அதனால் அவர்கள் பெரும் மனது வைத்துப் போனால் போகிறது. நம் பாகவதர் இருந்து விட்டுப் போகட்டும் என்று விட்டு வைத்திருக்கிறார்கள் என்று சொன்ன பதில் கவிஞரை நெக்குருக செய்து விட்டது என்பார்.

இந்த மாளிகையில் பாகவதர் புகழின் உச்சியில் இருந்தபோது தன் தம்பியான கோவிந்தராஜ பாகவதருக்குத் திருமணம் நடந்தபோது

— வந்து குவிந்த வெள்ளி, தங்கத்திலான பரிசு பொருட்கள் கணக்கில் அடங்காதவை. அவை அந்த அரண்மனை பங்களாவின் முன் இரு அறைகளில் காட்சிப் பொருட்களாக வைத்திருந்ததைக் கவிஞரே நேரில் கண்டவர்.

மற்றவர்கள் உதவி தேவையில்லை என்கிற நிலையில் பாகவதர் இருந்தபோது தங்கம் வெள்ளியாகக் கொடுத்துக் குவித்த அந்தப் பணக்காரர்கள் இப்போதும் இருக்கத்தானே செய்வார்கள். மளிகைக் கடைக்காரனும், வாடகை வீட்டுக்காரனும் தங்களது அபிமானக் கலைஞனைக் கேவலப்படுத்தும்போது ஏன் உதவ முன் வரவில்லை. அப்படியானால் அவர்கள் ரசனை என்பதெல்லாம் பொய்யா? ஆம் பொய் தான். பாகவதருக்கு இன்ன பரிசு கொடுத்தேன் என்று சொல்வதே தங்களுக்குப் பெருமையெனக் கருதிய காலத்தில் கொடுத் தார்கள். இப்போது அப்படியா? இல்லையே. அதனால்தான் அந்தப் பறவைகள் பறந்து பறந்து மறைந்துவிட்டன. பாகவதரும் வருங்கால கலைஞர்களுக்கும் பாடமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இதேபோல் இன்னொரு கொடுமையையும் கவிஞர் நினைவு கூர்வார். அதுவும் பாகவதர் தொடர்பானதுதான்.

திருச்சி பாலக்கரை கிழக்கே வலது புறத்தின் கரையில் ஒரு சாமியார் மடம் உள்ளது. அந்த மடத்தில் ஒவ்வொரு ஆண்டும் குருபூஜை நடக்கும். அந்த விழாக் குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் பாகவதரை அழைத்து இசைக் கச்சேரி நடத்துவார்கள். பாகவதரின் இசை நிகழ்ச்சிதான் முதல் நிகழ்ச்சி... அடுத்தடுத்த நாட்களில் திருச்சி லோகநாதன், எம்.எம்.மாரியப்பா போன்றோரின் இசை நிகழ்ச்சிகள் நடக்கும். பாகவதர் எங்கே படப்பிடிப்பு இருந்தாலும் எங்கே இசை நிகழ்ச்சி இருந்தாலும் அவற்றை ரத்து செய்துவிட்டு இந்த நிகழ்ச்சிக்கு வந்து பாடிப் பெருமை சேர்ப்பார்கள்.

பாகவதர் புகழின் உச்சியில் இருந்தபோது அவரது தந்தையார் கிருஷ்ணமூர்த்தி ஆசாரியார் காலமாகி விட்டார். ஊர் கொள்ளாத கூட்டம். சவ அடக்கத்திற்கு அவருக்கு ஒரு பெரிய சமாதியைக் கட்டும் பொறுப்பை முன்னின்று நடத்தியவர்கள் இந்த மடத்தின் குருபூசை விழாக் குழுவினர். அந்தச் சமாதி சங்கிலியாண்டபுரத்திற்கும் கிழக்குப் பக்கத்தில் இன்றும் ஒரு கோயிலைப்போல் தோற்றம் கொண்டிருக்கிறது.

காலம் மாறுகிறது. பாகவதர் நீரிழிவு நோயால் உருவிழந்து பொலிவிழந்து இறந்து விடுகிறார். எல்லோருக்கும் உதவும் எம்.ஏ.வி.

பிக்சர்ஸ் உரிமையாளரான எம்.ஏ. வேணு என்பவர்தான் அவரைச் சென்னையிலிருந்து திருச்சி கொண்டு வந்து சவ அடக்க ஏற்பாடுகளைச் செய்கிறார். இரண்டொரு ஆண்டுகள் கழித்துச் சங்கிலியாண்ட புறத்திற்குச் சென்றபோது கவிஞரின் நண்பர் — பாகவதரின் தந்தையார் சமாதிக்குப் பக்கத்தில் முழங்கால் உயரத்தில் இருந்த ஒரு சமாதியைக் காட்டி இதுதான் பாகவதர் சமாதி என்றார். கவிஞர் கண்கலங்கி நின்று விட்டார். இதுதான் உலக வாழ்க்கை என்று சொல்லி பாகவதரின் தந்தையார் சமாதி அதன் இயல்பான உயரத்தினின்றும் மேலும் வளர்ந்து நின்று சிரிப்பது போன்ற தோற்றம் தந்தது.

என்ன இப்படிப் பிரமித்து நின்றுவிட்டீர்கள் என்றதற்கு அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைகள் நினைவுக்கு வந்தது என்றார். கவிஞரின் நண்பர் ஜெ.ராதாகிருஷ்ணன்.

நாகை நடராசன் என்பவர் பாகவதரின் மீது உயிரையே வைத்திருந்த உண்மைச் சீடர். கொஞ்சம் குரல் வளமும் உடையவர். பாகவதர் குரல் கெட்டுப்போன நாட்களில் பாகவதரின் இசை நிகழ்ச்சிகளில் பாகவதரின் அருகில் உட்கார்ந்து — இவர் பாட, பாகவதர் வாயசைப்பாராம். பாகவதர் மறைந்த பின்பும் அவர் மீதான அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவர். பாகவதர் மறைந்த சில நாட்களில் கவிஞரைத் தேடிவந்து பாகவதர் பற்றிய இரங்கற்பா ஒன்று எழுதித்தரும்படி கேட்டதாகவும் அதைத் தனது இசை நிகழ்ச்சிகளில் பாடவிருப்பதாகவும் தெரிவித்துப் பாடல் கேட்டாராம். கவிஞரும் —

சாரீர அழகும்! சரீர அழகும்
சேருவதும் உண்டோ — இது
சாகாப் புகழ் பெற்ற பாகவதரின்
சரித்திரத்தில் கண்டோம்.

நீரலைபோலே வாரிய கூந்தல்
நெற்றியின் மேலே ஆடும் — அவர்
நிமிர்ந்த நடையில் அமைந்த அழகில்
தமிழ் வீரம் கூறும்.

எனத் தொடங்கும் பாடலை எழுதிக் கொடுத்தாராம்!

பாகவதர் புகழில் மலையின் உச்சி
வீழ்ச்சியில் கடலின் ஆழம்!
கலைஞர்களுக்கு அவர் என்றும் பாடம்.

13 ரயில்வே பணிவிலகலும் வறுமைச் சூழலும்

பராசக்தியின் மூலம் கவிஞர் திரையுலக நுழைவு முயற்சி தடைப்பட்ட பின்னர், கவிஞர் இதற்கான முயற்சியில் ஈடுபட ஆர்வ மின்றி இருந்துவிடுகிறார். அப்படி ஆர்வமில்லாமல் போனதற்குக் காரணம்; இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர்; ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜபாகவதர். இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன், நாதசுர சக்கரவர்த்தி ராஜரத்தினம்பிள்ளை போன்ற இசைமேதைகள் கவிஞரின் பாடல்களை அவர்களது இசை நிகழ்ச்சிகளில் பாடிப் புகழ் பெற்றிருந்ததும் ஒரு காரணமாக இருக்கக்கூடும்.

இருந்தாலும் சிதம்பரம் ஜெயராமன் அவர்கள் கவிஞர்பால் கொண்ட அன்பால் இவரைத் திரைத்துறையில் அறிமுகப் படுத்தி இவரது திறமை ஒளிவீசச் செய்துவிட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டவர்போல் விடாது முயன்று கொண்டேயிருந்திருக்கி றார்.

'பொன்விளையும் பூமி' என்ற படத்திற்குக் கவிஞர்கள் கண்ணதா சன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், மருதகாசி போன்ற கவிஞர்க ளுடன் கவிஞராகப் பாட்டெழுதும் வாய்ப்பைக் கவிஞருக்குப் பெற்றுத் தருவதில் வெற்றி பெற்று விடுகிறார். கவிஞரின் கீழ்வரும் பாடல் மூலம் திரைப்பட நுழைவு முயற்சி அரங்கேறுகிறது.

பொன்விளையும் பூமியிலே
பொழுதெல்லாம் பாடுபட்டும்
புதுவாழ்வு காணாமல்
பொங்குகிறான் தொழிலாளி.
அன்னைபூமி செல்வமெல்லாம்
அள்ளி அள்ளி தந்தாலும்
அரைவயிற்றுக் கஞ்சியில்லை
ஆடையில்லை வீடுமில்லை

தொகையறா

குடும்பவண்டி குடுகுடுன்னு
உருண்டு ஓடுது — பாதை

குறுக்கே வந்து மேடுபள்ளம்
தடுக்கப் பார்க்குது.

கொடுமையான வேங்கைபுலிகள்
காட்டை அழிக்குது — விலங்கு
குணம்படைத்த மனிதமிருகம்
நாட்டை அழிக்குது.

சேற்றைக் கலக்கி நாத்தை நட்டவன்
காத்தா பறக்கிறான் — அதைப்
பாத்து ரசிக்கும் மோசக்காரன்
நோட்டா மடிக்கிறான். - பச்சை
நோட்டா மடிக்கிறான்.

ஆடிஆடி நம்ம ஜோடிமாடுகள்
ஜோரா போகுது — அதில்
ஆணும் பெண்ணும் குடும்பம் நடத்தும்
அழகு தோணுது.

மூடிவச்சு மோசடி செய்யும்
பேடியைப் போலே — ஒருத்தன்
முன்னேவிட்டு பின்னாலே வந்து
கடையாணியைக் கழட்டுறான்.

முன்னே வச்சகால நீயும்
பின்னே வைக்காதே — உன்
முன்னேற்றத்தில் தடையைப் பார்த்து
முகம் சுளிக்காதே.

கண்ணு ரெண்டின் பார்வைபோலே
ஒண்ணா ஓடுங்க — வழியில்
காணும் ஏற்ற தாழ்வைக்
காலால் மிதிச்சு போடுங்க.

கவிஞருக்காக முயற்சிகள் செய்து வாய்ப்பினைப் பெற்றுத்தந்த இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் அவர்களே இந்தப் பாடலை அருமையாகப் பாடுகிறார். கதை சூழ்நிலைக்கு அருமையாகப் பொருந்தி பாடல் அருமையான வரவேற்பைப் பெறுகிறது.

'பொன்விளையும் பூமி' படத்திற்கான விமர்சனம் எழுதிய தினத்தந்தி இந்தப் படத்தின் பாடல் பட்டுக்கோட்டையா திருச்சி தியாகராஜனா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது என ஏற்கனவே திரைத்துறையில் கொடிகட்டிப் பறக்கும் பட்டுக் கோட்டையோடு ஒப்பிட்டு எழுதுகிறது.

இத்தகைய பத்திரிகை விமர்சனங்கள் மற்றும் நண்பர்கள் எல்லாம் சேர்ந்து கவிஞரைச் சினிமாவில் முழுநேர முயற்சி மேற்கொள்ள தூண்டுகின்றனர். கவிஞருக்கும் நண்பர்களின் தூண்டுதல் நியாயம் என்று படவே —

1958-ஆம் ஆண்டு ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் பணி யாற்றி வந்த ரயில்வே பணியிலிருந்து விருப்ப ஓய்வில் செல்ல முடிவெடுத்து — ஓய்வு பெற்று வெளியேறி வந்துவிடுகிறார்.

ஓய்வூதியப் பயனாக ரயில்வேயிலிருந்து ரூபாய் மூவாயிரத்தி சொச்சம் கிடைக்கிறது.

சென்னை ரயில்வே அலுவலகத்தில் பணியாற்றியவர்களில் கவி ஞருக்கு மிகவும் நெருங்கிய நண்பராக விளங்கியவர் டி.வி. புண்ணிய நாதன். நீலகிரி மலைவாழ் படுகர் இன மக்களைச் சேர்ந்தவர். இடதுசாரி மனப்பான்மை உடையவர். கவிஞரின் வளர்ச்சியில் அக் கறை கொண்டவர். கவிஞர் திரைத்துறை முயற்சியில் முழுக்கவனம் செலுத்த குடும்பப் பொருளாதாரத் தொல்லைகள் அவரை நெருங்கக் கூடாது என எண்ணி — குடும்ப செலவுக்கான வருவாய்க்கு வழிசெய்து கொள்ளும் வகையில் ரூ.3000/- உதவி செய்து ரயில்வே ஓய்வூதியப் பயனான மூவாயிரத்தையும் சேர்த்து — ஆறாயிரத்தினை வைத்து ஒரு ஆட்டோ வாங்கி நட்டமடைகிறார்.

எந்தக் கவிஞன் வியாபாரத்தில் வெற்றி பெற்றிருக்கிறான்? கவிஞன் வியாபாரத்தில் வெற்றிபெற முடியாது. வியாபாரத்தில் வெற்றி பெற்றால் அவன் கவிஞனாக இருக்க முடியாது என்பது காலங்காலமாக எழுதிவைக்கப்பட்ட சாசனம். ஆட்டோ ஓடியது. வருமானம்தான் கவிஞர் குடும்பத்திற்கு வரவில்லை. ஏமாற்று வேலை களால் இழப்புக்கு மேல் இழப்பு. இதற்கும்மேல் ஆட்டோவை ஓட்டினால் குடும்பமே ஆட்டங் கண்டுவிடும் என்ற சூழ்நிலை எழவே — ஆட்டோவை விற்றுவிடுகிறார். அதிலும் பாதிக்குப் பக்கம்தான் தேறுகிறது. வந்தவரை போதுமென ஆட்டோவை விற்று அதில் கிடைத்த பணத்தை வங்கியில் போட்டுவிட்டு;

ரங்கநாதன் தெருவில் காமாட்சி லாட்ஜில் அறை எடுத்துக் கொண்டு பாடல் எழுதுதல், சினிமா முயற்சித்தல் போன்ற பணிகளில் ஈடுபடுகிறார். இந்த நேரத்தில் இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் மூலம் பிரபல ஆர்மோனிஸ்ட்டான ஏ.என்.ராஜப்பா அறிமுகமாகிறார். அடிக்கடி கவிஞரின் அறைக்கு வந்து சந்தித்து நெருங்கி பழகி நெருக்கமான நண்பராகி விடுகிறார்.

ஒரு தீபாவளியின்போது கோவையில் வாழும் தனது குடும்பம் வறுமையில் வாடுவதாகவும், இந்தத் தீபாவளி பண்டிகைக்கும்கூட அவர்களுக்கு ஏதும் செய்ய முடியாமல் இருந்து என்ன பிரயோசனம் என்பது போல் பேசி கண்ணீர் வடித்து இரக்கத்தை ஏற்படுத்தி, ஆயிரம் ரூபாய் கடன் தரும்படி வேண்டுகிறார். கோவை சென்று திரும்பியதும் தொகையைத் திருப்பித் தந்துவிடுவதாக உறுதியும் அளிக்கிறார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட உதவாவிட்டால் நட்புக்கு அழகல்ல எனக் கருதியக் கவிஞரும் — வங்கியிலிருந்த பணத்தில் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து உதவுகிறார். இந்தத் தொகையைப் பெற்றதோடல்லாமல் காமாட்சி லாட்ஜின் கீழ்தளத்தில் இருந்த மேத்தா டெக்ஸ்டைல்ஸ் என்ற துணிக்கடையில் கவிஞருக்கே தெரியாமல் கவிஞரின் பெயரைச் சொல்லி ரூ.1000/-க்கு துணிகளையும் எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறார் என்ற உண்மை, போனவர் திரும்பாதது தொடர்பாக விசாரித்த, விபரங்களின் மூலமே தெரியவந்தது. துணிக் கடை கடனுக்கு இருந்த தொகையையும் எடுத்துக் கொடுத்துவிட்டுச் சினிமா முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்.

முதல் படத்திலேயே பட்டுக்கோட்டையா திருச்சி தியாகராஜனா என்ற கேள்வியை எழுப்புகிற அளவுக்குப் பாடல் வெற்றி பெற்றும் — யார் செய்த சதியோ கவிஞருக்குப் பட வாய்ப்புகள் அமைய வில்லை. வருமானமும் இல்லை.

இந்த நேரத்தில் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 1959-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் தேதி கவிஞரின் இரண்டாவது குழந்தையாக மகன் பிறக்கிறான். வான்மதி என மகளுக்குப் பெயர் சூட்டிய கவிஞர், அந்தப் பெயரின் அந்தாதியாக மகனுக்கு மதிவாணன் என்ற பெயர் சூட்டுகிறார்.

குடும்பம் ஏறத்தாழ வறுமையின் பிடிக்குள் வந்துவிட்ட நிலை. நான்கைந்து ஆண்டுகளில் துணைவியாரின் நகைகள் ஒவ்வொன்றாக மார்வாடி கடைக்குப் போய், பின்னர் மூழ்கி அனைத்து நகைகளும் தொலைந்து விடுகிறது.

அளவுகடந்த வறுமை வீட்டில் சாப்பாட்டிற்கே வழியில்லாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. இருந்தும் கவிஞர் ரங்கநாதன் தெரு விடுதி அறையைக் காலி செய்யாமலும், சினிமா முயற்சிகளையும் விட்டுவி டாமல் விடா முயற்சியில் இருக்கிறார்.

ரங்கநாதன் தெரு விடுதியில் இரண்டு மூன்று நாட்கள் சாப்பிடா மல் தண்ணியை மட்டும் குடித்துக்கொண்டு காலங்கடத்தும் வறுமை நிலை.

தாலியும்கூட அடகு வைக்கப்பட்டுவிட்ட நிலையில் ஒருநாள் குழந்தைக்குப் பால் ஊற்றுபவன் பால்பணம் கேட்டுத் தொந்தரவு செய்ததைப் பொறுக்கமாட்டாமல் —

கடைசியோ கடைசி என்றிருந்த குழந்தையின் காதணியை விற்றுப் பால்கணக்கைத் தீர்க்க, நகையைப் பாரீசில் உள்ள மார்வாடி கடையில் விற்றுப் பணத்தோடு பேருந்தில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கையில் — அந்தப் பணமும் பிக்பாக்கெட்டாகிவிடுகிறது. கவிஞரின் மனநிலை எப்படியிருக்கும்?

''கண்ணிலான் பெற்றிழந்தான் என உழந்தான்'' என்பானே கம்பன் அப்படியோர் நிலை கவிஞருக்கு.

டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் தன் இசை நிகழ்ச்சிகளில் கவிஞரின் பாடல்களில் சிலவற்றைப் பாடிக்கொண்டிருந்ததன் காரண மாக அறிமுகமானவர். அவர் ஒருமுறை கவிஞர் எழுதி வைத்திருந்த

'சிந்தித்தால் சிரிப்புவரும்
மனம் நொந்தால் அழுகை வரும்'

எனத் தொடங்கும் பாடலைப் பார்க்கிறார். பாடல் சௌந்தரராஜ னுக்கு ரொம்பவும் பிடித்துவிடுகிறது. அந்தப் பாடலின் நகல் ஒன்றைக் கவிஞரிடம் பெற்றுச் சென்று —

எம்.ஏ.வி. பிக்சர்ஸ் உரிமையாளர் வேணு அவர்களிடம் காண்பிக் கிறார். வேணுவுக்குப் பாடல் மிகவும் பிடித்து விடவே, காரை அனுப்பி கவிஞரை அழைத்துவர சொல்கிறார். கவிஞரும் வேணுவும் சந்தித்துப் பேசிய பின்னர் — வேணு அவர்கள் அப்போது தயாரித்துக் கொண்டி ருந்த செங்கமலத்தீவு படத்தில் இந்தப் பாடலைப் பயன்படுத்திக் கொள்வதாகத் தெரிவித்ததோடு மேலும் ஐந்து பாடல்களையும் எழு தும்படி கேட்டுக்கொள்கிறார். அந்தப் படத்திற்கான ஏழு பாடல்களில் ஏகலைவன் என்ற கவிஞர் எழுதியதைத் தவிர மற்ற அனைத்துப் பாடல்களும் கவிஞருடையதே. இப்படத்திற்கு கே.வி. மகாதேவன் இசையமைக்கிறார்

இது கோடையில் வீசிய குளிர்காற்று.

14 சினிமா வாய்ப்புகள்

'தாமரை பூத்த தடாகமடி' 'இன்பவனம் ஒன்றுள்ளது எல்லோரும் வாருங்கள்' போன்ற பாடல்கள் இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் மூலம் புகழ்பெற்ற பிறகு மேற்கொள்ளப்பட்ட பராசக்தி மூலமான முதல் சினிமா முயற்சி கைகூடாமல் போனதும் —

ஏழாண்டுகள் காத்திருந்து 'பொன்விளையும் பூமியில்' பெற்ற முதல் வாய்ப்பிலேயே — அன்றைய காலகட்டத்தில் புகழ்பெற்ற சினிமா பாடலாசிரியராக விளங்கிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்த ரமா? திருச்சி தியாகராஜனா? என்ற கேள்வியை எழுப்புகிறது இத்திரைப்படம் எனப் பத்திரிகைகளின் பாராட்டைப் பெற்ற பின்னரும்—

நான்காண்டுகள் காத்திருந்து — வாராதது போல் வந்த மாமணி என்பார்களே அத்தகைய வாய்ப்பாக வந்தது 'செங்கமல்தீவு' பட வாய்ப்பு. அதுவும் ஒரே படத்தில் ஆறு பாடல்களுக்கான வாய்ப்பு.

கவிஞரும் அந்தப் படவாய்ப்பை மிகவும் அற்புதமாகப் பயன்ப டுத்திக் கொள்கிறார். டி.எம். சௌந்தரராஜன், பி.சுசீலா, எல்.ஆர். ஈஸ்வரி எனப் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் எல்லாம் பாடுகின்றனர்.

சிந்தித்தா சிரிப்பு வரும்.
மனம் நொந்தால் அழுகை வரும்

என்று தொடங்கும் பாடல்தான் டி.எம். சௌந்திரராஜனைக் கவர்ந்து, படத்தயாரிப்பாளர் எம்.ஏ. வேணு அவர்களைக் கவர்ந்து இந்தப் படவாய்ப்புக்குக் காரணமாக அமைந்தது என்றாலும் —

இந்தப் படத்தில் வரும் மற்ற ஐந்து பாடல்களும் இதற்கு ஈடாக மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன.

மலரைப் பறித்தாய்! தலையில் வைத்தாய்
மனதைப் பறித்தாய்! எங்கே வைத்தாய்?

என்று காதலன் கேட்க,

மனதைப் பறித்தேன் உயிரில் வைத்தேன்

என்று காதலி சொல்வதாக வரும் பாடல் —

ஏறத்தாழ முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும் இன்றைக்கும் கேட்பவர் மனதைச் சுண்டியிழுக்கும் பாடல். கருத்தாழம் மிக்க இந்தப் பாடல் படம் வெளிவந்தபோது அருமையான பரபரப்பான வரவேற்பைப் பெற்றது.

பார்த்த கண்கள் நான்கு
பழகும் நெஞ்சம் இரண்டு

என டி.எம். சௌந்தரராஜன் எடுக்க —

வார்த்தை அங்கு ஒன்று
வாரி கொடுப்பது அன்பு

என எஸ்.ஜானகி தொடுத்துச் சொல்லி வெற்றி பெற்ற பாடலும் இந்தப் படத்தில் அமைந்ததுதான்.

ஏமாத்த தெரிஞ்சவன் சுகவாசி
ஏமாந்து போனவன் பரதேசி
நாவுக்கும் நெஞ்சுக்கும் கொஞ்சதூரம் — இவன்
நடத்தைக்கும் சொல்லுக்கும் ரொம்பதூரம்

கோயிலுக்கும் குளத்துக்கும் கொஞ்சதூரம் — இவன்
குணத்துக்கும் கும்பிடுக்கும் ரொம்பதூரம்.

என்ற வரிகளைக் கொண்ட கருத்தாழம் மிக்க பாடல் மற்றொன்று. கே.வி.மகாதேவன் அவர்கள் இசையில் எல்லாப் பாடல்களுமே கொடிகட்டி பறக்கின்றன.

இந்தப் படத்தின் கதாநாயகன் விஜயபுரி வீரன் 'ஆனந்தன்'. இந்தப் படம் வெளிவந்த அதே காலகட்டத்தில் ஏவி.எம். தயாரிப்பில் விஜயபுரி வீரன் ஆனந்தன் கதாநாயகனாக நடிக்க வீரத் திருமகன் படமும் வெளிவருகிறது.

பெரிய படநிறுவனம். வெற்றிப்பட இயக்குநராகப் புகழ் பெற்றிருந்த திருலோக சந்தர் இயக்கம், தூள்பறக்கும் விளம்பரம் வீரத்திருமகனுக்கு, கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் இன்னொரு கூடுதல் பலம்.

இத்தனைக்கும் ஈடுகொடுத்து 'செங்கமலத்தீவு' படமும் வெற்றி பெற்றது என்றால் — அதற்கான காரணங்களுடன் ஒன்று கவிஞரின் கருத்தாழம் மிக்கப் பாடல்கள்.

இரண்டு படத்திலும் ஒரே கதாநாயகன் நடித்து — ஒரே நேரத்தில் வெளிவரும்போது படம் பார்க்கும் மக்களும் ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்ப்பது இயல்புதானே.

இதே வகையில் பட விமர்சனங்களிலும் ஒப்பீடுகள் தவிர்க்க முடியாததாகிவிடும்.

தமிழ்வாணன் அவர்கள் கல்கண்டு கேள்வி பதிலில் இரண்டு படப் பாடல்களையும் ஒப்பிட்டுப் பதில் சொல்கிறார்.

''செங்கமலத்தீவு'' படத்தில் ஒரு புதிய குயிலோசைக் கேட்கிறது.

இது திருச்சி தியாகராஜன் என்ற குயிலோசை. கவிஞர் கண்ணதாசனுக்குச் சினிமாத்துறையில் அவரது இனத்தவர்களின் பக்கபலம் இருக்கிறது. இத்தகைய பின்னனி எதுவும் இல்லாதது திருச்சி தியாகராஜனின் குயிலோசை கண்ணதாசனா, தியாகராஜனா என்பதைக் காலம் தீர்மானிக்கும்'' என்ற பொருள்பட அமைகிறது இந்தப் பதில்.

முதல் படத்தில் பாடல் பட்டுக்கோட்டையா? தியாகராஜனா என்ற கேள்வியை எழுப்புவதாக விமர்சனம் வந்ததும் — இரண்டாவது படத்தின் பாடல் — கண்ணதாசனா; தியாகராஜனா என்பதைக் காலம் தீர்மானிக்கும் எனக் கண்ணதாசனின் இனத்தைச் சேர்ந்த ஒருவரே பதில் சொல்ல வைத்துவிடுகிறது.

திரைத்துறையில் எத்தனையோ மாயா ஜாலங்கள் நடக்கும். புகழ்பெற்ற பாடலாசிரியர்கள் புதிய பாடலாசிரியர்களுக்கு நல்ல மெட்டு அமைக்கும் இசையமைப்பாளர்களை அவ்வாறு செய்யக்கூடாதென மிரட்டுவதும் — புகழ்பெற்ற பாடலாசிரியர்கள் புதிய இசையமைப்பாளர்களுக்கு நல்ல பாடல்களை எழுதக்கூடாது எனப் புகழ்பெற்ற இசையமைப்பாளர்களை மிரட்டுவதும் —

ஒருவருக்கு ஒருவர் ஒப்பந்தம் செய்து கொண்டு தங்கள் ஆதிக்கங்களை வலுபடுத்திக் கொள்வது திரையுலக மாயாஜாலங்களில் ஒன்று.

முதல் படப் பாடலான 'தாழைமரம் நீர்த் தெளிக்க' என்ற அருமையான பாடலை எழுதி — பரபரப்பாகப் பேசப்பட்ட மாயவநாதனின் திறமை முடக்கப்பட்டதும் இத்தகைய மாயா ஜால ஒப்பந்தங்களால்தான் என்பது சினிமா வட்டாரங்களில் வெளிப்படையாகப் பேசப்படும் ரகசியங்களில் ஒன்று.

எனவே—

புகழ்பெற்ற பாடலாசிரியர்களோடு ஒப்பிட்டு எழுதப்பட்ட கவி ஞர் பாடல்கள் தொடர்பான பத்திரிகை விமர்சனங்கள் கவிஞருக்குத் தீங்கு செய்துவிட்டனவோ என்று எண்ணத் தோன்றுகிறது.

மேற்கண்ட விமர்சனங்களுக்குப் பின்னும் வாய்ப்புகள் கவிஞ ருக்கு அரிதாகவே வந்து கொண்டிருந்ததைப் பார்க்கும்போது,

யார் யாரை தடுத்தாலும் எம்.ஏ.வி. பிக்சர்ஸ் உரிமையாளரான எம்.ஏ.வேணு அவர்கள் கவிஞருக்கு வாய்ப்புத் தருவதை யாராலும் தடுக்க முடியவில்லை. எத்தனையோ பட நிறுவனங்கள் இருந்தும் வேணு அவர்கள்தான் தொடர்ந்து கவிஞருக்கு வாய்ப்புகளைத் தந்து கொண்டிருந்தார். மற்றவர்களின் தடுப்புக் காவலையும் மீறியது கவி ஞர்மீது எம்.ஏ. வேணு அவர்கள் கொண்டிருந்த அன்பு என்றுதான் இதனைச் சொல்ல வேண்டும்.

அதனால்தான் எம்.ஏ.வி. படங்களான —

துளசிமாடம்
உல்லாசப் பயணம்
தங்கவயல்...

என வாய்ப்புகள் தொடர்கின்றன.

பாடல் — 1

போடா போடா பைத்தியமே — உன்
புத்திக்கு வேணும் வைத்தியமே.

விறகை மண்ணில் ஊன்றிவைத்து — அதில்
வெந்நீர் ஊற்றி பாத்திகட்டி
இரவும் பகலும் காத்திருந்தால்
பருவமலர்கள் பூத்திடுமா?

பாடல் — 2

வனத்தில் ஆயிரம் பூமலரும்
வாடி மண்ணில் உதிர்ந்துவிடும்
மனத்தில் ஒரு பூதான் மலரும் — அது
வாடாத காதல் மலராகும் —

பாடல் — 3

பூட்டிய மனதைத் திறந்துவிடு
புதுப்புது அனுபவம் அடைந்துவிடு
ஏட்டில் படித்தது கொஞ்சமடா — இந்த
நாட்டையும் படித்திட வேண்டுமடா

பறவையின் சிறகு வளர்ந்துவிட்டால்
பாடித்திரியுது சோலையிலே
பருவ வயது வந்த பின்னும்
பதுங்கிக் கிடப்பதேன் மூலையிலே

என்கிற கருத்தாழமிக்க பாடல்கள் 'உல்லாசப் பயணம்' படத்தில் இடம்பெற்றுப் படத்தின் வெற்றிக்கு உறுதுணையாகின்றன.

மீட்டிய வீணை நானென்றால் — அதன்
மெல்லிசை இன்பம் அவர்தானே

பாட்டுப்பாடும் நேரமெல்லாம் — அதன்
பல்லவி அவர் பெயர்தானே

என்ற கருத்ததாழம் கொண்ட, பாமரனும் புரிந்து கொண்டு ரசிக்கும் எளிய நடையிலான பாடலும்;

கல்யாண சாப்பாடு போடும் முன்னே — என்
கையாலே சாப்பாடு போடட்டுமா
நெற்றி வேர்வை துடைக்கட்டுமா
நெருங்கி நெருங்கி அமரட்டுமா
பட்டுப்புடவை முந்தாணையால்
பக்கத்திலிருந்து. வீசட்டுமா

என்ற புகழ் பெற்ற பாடலும் 'துளசிமாடம்' படத்தில் இடம் பெறுகின் றன.

ஆயிரம் பொய்கள் சிரிக்குமடா— இங்கு
அநாதையாய் மெய் அழுவுதடா
தாயில்லாப் பிள்ளையைப் போலே
தர்மம் தனியாய்த் தவிக்குதடா
பார்த்ததும் கேட்டதும் உண்மையில்லை — நாம்
படித்ததைப் போல வாழ்க்கையில்லை.

என்ற வரிகளைக் கொண்ட பாடல் 'தங்கவளையல்' படத்தில் வருகிறது.

கவிஞரின் பாடல்களின் தனிச்சிறப்பு கருத்துவளமும் — பாமர ரும் புரிந்துகொள்ளும் எளியநடையும். பட்டுக்கோட்டை இந்தப் பார்முலாவில் தான் தனிச்சிறப்பு பெற்றார் என்பது ஒப்பு நோக்கத் தக்கது.

எம்.ஜி. ராமசந்திரன் நடித்த 'தாழம்பூ' படத்தில் கவிஞர் எழுதி மிகவும் பரவலாகப் பாடப்பட்ட பாடல் —

வட்ட வட்ட பாத்திகட்டி
வண்ண வண்ணச் சேலைகட்டி
கட்டழகி நடப்பது நாட்டியமா — அவள்
கண்ணாலே சுற்றுவது ராட்டினமா.

இது. சுசீலா பாடிய பாடல்.

கடவுள் தந்த செல்வம் என்ற படத்தில் பானுமதி நடித்து பாடிய பாடலான —

'உன்னோடு என்நெஞ்சமே
ஒன்றாய் ஊஞ்சலாடுதடா'

என்று தொடங்கும் பாடல் படம் வந்த காலத்தில் மிகவும் பிரபலமானது.

செல்வியின் செல்வன்
விளக்கேற்றியவன்
மாணவன்
நானும் மனிதன்தான்
மனசாட்சி
வாலிப விருந்து
லாரி டிரைவர்
யார் ஜம்புலிங்கம்
மனைவி

போன்ற படங்களுக்கும் பாடல் எழுதியுள்ளார். 1963-இல் வெளிவந்த 'லாரி டிரைவர்' படத்தில்தான் ஜெயலலிதா சினிமா உலகில் முதன் முதல் காலடி எடுத்து வைக்கிறார். கவிஞரின் பாடல் ஒன்றிற்கான நடன காட்சிதான் இவர் கலந்து கொள்ளும் முதல் படப்பிடிப்பு நிகழ்ச்சி. அதேபோல் விளக்கேற்றியவள் படத்தில் — 'வரிசையா மாப்பிள்ளை வருவாரு - சீர் வரிசையைப் பார்த்தாதான் சிரிப்பாரு' என்ற பாடல் காட்சியில் நடனம் ஆடும் காட்சிதான் கே.ஆர்.விஜயா திரைப்படத்துறையில் பங்கு பெறும் முதல் நிகழ்ச்சியாக அமைகிறது.

மிகச் சிறப்பாக வந்திருக்க வேண்டிய நூற்றுக்கணக்கான திரைப்படங்கள் பல்வேறு காரணங்களால் பாதியில் நின்றுபோன வரலாறு சினிமாவில் உண்டு. கொட்டாரக்கரா கதை வசனம் எழுத, எம்.ஜி.ராமச்சந்திரன் நடித்து, பா.நீலகண்டன் இயக்கிய 'ரிக்ஷா ரங்கன்' என்ற படமும் அத்தகைய படங்களுள் ஒன்று. இப்படிப்பட்ட படங்களோடு சிறப்பாகப் பதிவு செய்யப்பட்ட பாடல்களும் சேர்ந்து புதைந்துபோன வரலாறும் உண்டு.

'ரிக்ஷா ரங்கன்' படத்தில் கே.வி.மகாதேவன் இசையமைத்துப் பதிவு செய்யப்பட்டு அப்படத்தோடேயே புதையுண்டு போன நிலை கவிஞரின் பாடல் ஒன்றுக்கும் ஏற்பட்டது. கீழ்வரும் இந்தப் பாடல் எம்.ஜி. ராமசந்திரனால் மிகவும் ரசித்துப் பாராட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஆண்: சோலையிலே நடந்து போற அம்மாளு — பாம்பைச் சுருட்டி வச்சது போலிருக்குது சும்மாடு.

பெண்: ஆளை நல்லாப் பாத்துப்புட்டுப் பேசய்யா — முகத்தில் தேளிருக்கே அதுக்குப்பேரு மீசையா.

எம்.ஜி.ராமச்சந்திரன் நடித்த 'வேலு தேவன்' படமும் இதேபோல் சிவாஜி நடித்த 'பேசும் கண்கள்' என்ற படமும் சிவாஜி நடித்த வி.வி.என். புரடக்ஷன் ஒன்றின் படமும் பாதியில் நின்று போனதால் கவிஞர் இப்படங்களுக்கு எழுதிய பாடல்களும் வெளிவராமல் போனது.

கலைஞரின் மேகலா பிக்சர்ஸ் தயாரித்த 'வாலிப விருந்து' மறக்க முடியுமா? போன்ற படங்களோடு, கலைஞர் வசனம் எழுதிய 'அவன் பித்தனா?' என்ற படத்திற்கும் கவிஞர் பாடல்கள் எழுதியுள்ளார்.

ஏறத்தாழ ஐம்பது படங்களுக்கு நூற்றுக்கணக்கான பாடல்கள் எழுதியவர் என்ற பெருமை இருந்தாலும் — அவர் திறமைக்கு இவ்வளவுதானா வாய்ப்புகள் என்ற கேள்விக்குச் சினிமா உலகில் பதில் கிடைக்காது. காரணம் முன்பே சொன்னது போலத் திரையுலகில் நின்று நிலைக்க திறமை மட்டும் போதாது என்பதுதான். திறமை என்பது இரண்டாம் பட்சம் என்பதுதான். இந்த முன்னேற்றத் தடைக்கு என்ன காரணம் என்று கவிஞரிடம் கேட்டபோது சிரித்து கொண்டிருந்துவிட்டு கொஞ்சநேர யோசனைக்குப் பிறகு கீழ்கண்டவற்றைக் காரணமாக இருக்கலாம் என்றார்.

1. இசையரசு தண்டபாணி தேசிகர் போன்றவர்களோடு பண்பாடாகப் பழகிய பழக்கங்களும், அவரது இசையில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற 'தாமரை பூத்த தடாகமடி' பாடல் புகழுக்குப் பிறகு முயற்சித்ததும், 'கர்நாடக' இசையில் தோய்ந்துபோன மனநிலையும், இதனால் இசையமைப்பாளர்கள் எதிர்பார்க்கும் பணிவும் குழைவும் இல்லாது போனதுமாக இருக்கலாம்.
2. இசையமைப்பாளர்கள் பெரிய நடிகர்கள் நடிக்கும் படங்களுக்கு ஆர்வமுடன் சிறந்த மெட்டமைப்பதைப் போலப் புதிய நடிகர்களுக்கு இசையமைப்பதில் ஆர்வம் காட்டாமை — புதிய பாடலாசிரியர்கள் மேலெழுந்துவரச் சிரமப்படவேண்டிய நிலை தனக்கும் பொருந்தக்கூடும்.

3. ஜெமினி ஸ்டூடியோவில் இசையமைப்பாளர்கள் பாடலாசிரியர்களுக்கு இடையே நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் —

ஒரு இசையமைப்பாளர் பாடல்கள் இப்படி இருக்க வேண்டுமென இலக்கணம் கூற முயல.

கவிஞர்கள் துணி நெய்பவர்கள். இசையமைப்பாளர்கள் தையல்காரர்கள்.

நெய்த துணியில் தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டி சிறந்த ஆடைகள் தயாரிக்க வேண்டுமே அல்லது கவிஞர்களுக்கு இலக்கணம் கற்றுத்தரக்கூடாதெனச் சொல்லப்போக —

இது ஒரு விவாதப் பொருளாகி இசையமைப்பாளர்கள் தன்னை ஒதுக்கியதாகத் தனக்கு ஒரு எண்ணமுண்டு.

4. வெளிப்படையாகப் பேசவேண்டும் அதுதான் நல்லது என எல்லோரும் உபதேசம் செய்வார்கள். ஆனால் வெளிப்படையாகப் பேசுபவனைக் கண்டால் — இவன் முரண்பாடான 'ஆள்' என்று முத்திரைக் குத்தி ஒதுக்கி வைப்பது நமது தமிழ்ச் சமுதாயத்திற்குக் கை வந்த கலை.

கவிஞரின் தாட்சண்யமற்ற கொள்கை, சமரசமற்ற வெளிப்படையான பேச்சுகள், இந்த முத்திரையை இவர் மீது ஆழமாகப் பதித்துள்ளது. சினிமாத்துறை என்பது மட்டுமல்ல, அரசியல் கட்சிகளும், உற்றார் உறவினரும் என எல்லோரும்தான்.

5. எல்லாவற்றுக்கும் மேலாக — கலைத்துறையும் ஜாதி ஆதிக்கத்தால் பீடிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது. எந்தக் காலத்தில் சினிமாத்துறையில் எந்த இசைக்கவிஞன் மேலோங்கி நின்றான் என்பதை ஆராய்ந்தால் — அந்தக் காலத்தில் அந்தக் கவிஞனின் இனம் சினிமாத்துறையில் ஆதிக்கம் செலுத்திய பின்னணி புரியும். தனக்கு அந்த பின்னணி இல்லாததும் தனது சினிமாத் துறை வாய்ப்புகள் நீடித்து நிலைக்க முடியாமல் போனதற்கு முக்கியமானதாக இருக்கலாம் என்றார்.

6. திரைப்படத் துறைக்குப் போனாலும் கடவுளைப் பற்றிய பாடல்கள் எழுத மறுத்ததும் இவருடைய வாய்ப்பு இழப்புக்குக் காரணமாகும்.

1962 முதல் 1969 வரை ஏழாண்டுக்காலம் சினிமாத்துறையில் இருந்திருந்தும், 50 படங்களுக்கு மேல் பாடல்கள் எழுதியும், ஒரு ஒழுங்கு அமைவான வருவாய் இல்லாததால் குடும்பம்

கவிஞரின் இந்தப் புகழ்மிக்க காலத்தில் கூட வறுமையின் பிடியிலிருந்து மீளவில்லை.

நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்த கவிஞரின் துணைவி யார் திருமதி சாந்தி அம்மையார் அவர்கள் தன் கணவர் தன் துறையில் வெற்றிபெற வேண்டுமானால், குடும்பப் பாரம் முழுவதையும் அவர் தலையில் போட்டு ஒதுங்கி இருப்பது சரியல்ல. குடும்பத் தலைவிக்கும் குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பங்கு உண்டு என்ற முடிவெடுத்து — தன் படிப்பை வைத்து ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்குகிறார்.

15 வாழ்க்கைத் துணை என்பதன் பொருளாய்

கவிஞரின் துணைவியார் சாந்தி அம்மையார் 1948 - 49-இல் பள்ளி இறுதி ஆண்டு தேர்ச்சி பெற்றவர். அப்போதைய 10-ஆம் வகுப்பிலிருந்து ஒவ்வொருவரும் ஒரு விருப்பப் பாடத்தைத் தேர்வு செய்து படிக்க வேண்டும். கவிஞரின் துணைவியார் இசையை விருப்பப் பாடமாக எடுத்துப் படித்து வந்தார். பள்ளி இறுதி தேர்வில் இசை விருப்பப் பாடத்திற்காக அரசின் பதக்கம் பெற்றார்.

1950-ஆம் ஆண்டு கடைசியில் சாந்தியின் தமக்கை, அத்தை மகள் ஆகிய மூவரும் பொழுதுபோக்கிற்காகத் தங்கள் தெருவிலேயே சங்கரநாராயணன் நடத்தி வந்த இந்தி வகுப்பில் சேர்ந்து படிக்கிறார் கள். இந்தியில் முதல் தேர்வான 'பிராத்மிக்' 1951 பிப்ரவரி திங்களில் நடக்கிறது. அதில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

இந்தியில் இரண்டாவது தேர்வான மத்திமா தேர்வுக்குத் தொடர்ந்து படிக்கிறார். ஆறுமாத இடைவெளியில் ஒரு தேர்வு. எனவே 1951 ஆகஸ்டு திங்களில் தேர்வு நடைபெறுகிறது. தேர்வும் நன்றாக எழுதி விடுகிறார்.

இதற்கிடையில் 1951 செப்டம்பர் திங்களில் திருமணம் நடக்கி றது. எனவே திருச்சிக்குச் சென்று விடுகிறார்.

மேற்கண்ட தேர்வில் 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்று வடசென்னையிலேயே சாந்தி முதல் மாணவியாகத் தேர்ச்சி

பெற்றிருப்பதாகவும், அதற்காக விழா ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்ப தாகவும் அதில் அவசியம் கலந்து கொள்ள வேண்டுமெனவும் கேட்டுத் தாயாரிடமிருந்து கடிதம் வருகிறது.

முதல் குழந்தைக்கான மாசமாக இருந்ததாலும், இயல்பாகவே கூச்ச சுபாவம் உடையவர் என்பதாலும் இந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டாமென நினைக்கிறார். ஆனால் கவிஞரோ சாந்தி அவர்கள் இந்த விழாவில் பங்குபெற வேண்டுமென ஆர்வமுடன் இருப்பதால் — மறுத்தும் விடாமல் வற்புறுத்தி அழைத்துச் செல்கிறார். சென்னை பிரைட்டன் டாக்கீசில் விழா சிறப்பாக நடந்தேறியது.

விழாவின் பாராட்டுரைகள் காரணமாக மேலும் மேலும் படிக்க வேண்டுமென உற்சாகம் பிறக்கிறது. இந்தியில் மூன்றாவது தேர்வான 'ராஷ்டிர பாஷா' தேர்வுக்கான புத்தகங்களை வாங்கிக் கொண்டு திருச்சி வருகிறார். ஆசிரியர் துணையின்றிச் சுயமுயற்சியோடு தானே படித்துத் தேர்வும் எழுதி தேர்ச்சியும் பெற்று விடுகிறார்.

அடுத்த தேர்வும் எழுத வேண்டுமென ஆர்வம் இருந்தாலும் அத்தேர்வுக்கு இலக்கணத்தாள் ஒன்று எழுத வேண்டியிருந்ததாலும், வாய்மொழித் தேர்வும் ஒரு பகுதியாக இருந்ததாலும் தனியாகவெல் லாம் படித்து எழுதமுடியாத நிலை. எனவே, இந்த முயற்சியைக் கைவிட்டு விடுகிறார்.

பத்தாண்டுகள் இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது. கவிஞர் வேலையை விட்டு விட்ட நிலையில் நிரந்தர வருவாய் இல்லாததால் அடிப்படைத் தேவைகளுக்குக் கூடத் தட்டுப்பாடான நெருக்கடி நிலைகள் ஏற்பட்டபோது குடும்ப சூழ்நிலையை மாற்றியமைக்க, வீழ்ந்துவிட்ட பொருளாதார நிலையைத் தூக்கி நிறுத்த தானும் தன்னாலான முயற்சியை மேற்கொண்டால் என்ன எனச் சிந்திக்கிறார்.

வேறு தகுதிகள் அடிப்படையில் வேலைகள் தேடுவதைவிடப் பொழுது போக்கிற்காகப் படித்த இந்தியின் தகுதியடிப்படையில் வேலை தேடுவது எளிதாக இருக்குமென உணர்ந்ததால் விட்டுப்போன இந்தி படிப்பைத் தொடர்ந்து மேலும் படிக்கலாம் என்ற விருப்பமும் உறுதியும் பிறக்கிறது.

வாழ்க்கைத் துணை என்பதன் பொருளாய் ஆக மேற்கொண்ட முயற்சி இது.

இந்தியில் நான்காவது தேர்வான 'பிரவேசிகா' தேர்வுக்குப் படிக்க ஆரம்பிக்கிறார். பத்தாண்டுக்கால இடைவெளி சாதாரண சொல்லைக் கூட மறக்கடித்து விட்டது? இருந்தாலும் விடா முயற்சி மறந்த

நினைவுகளைப் புதுப்பித்துக் கொடுக்க பிரவேசிகா தேர்வுக்காக ஒன்றரை வயதுடைய இரண்டாவது குழந்தையையும் கவனித்துக் கொண்டு கடின உழைப்பு மேற்கொள்கிறார். இவரது வீடு ராயபுரத்தில் இந்திக்கான வகுப்பு நடப்பதோ தண்டையார் பேட்டையில். இந்தத் தடைகளை எல்லாம் தாண்டி முதல் வகுப்பில் தேர்ச்சி பெறுகிறார்.

பிறகு விஷாரத் என்ற இந்தியின் ஐந்தாவது தேர்வு. இது இரண்டு பாகங்கள் கொண்டது. ஆறுமாத இடைவெளியில் ஒவ்வொன்றாக எழுத வேண்டியுள்ளது. இதனையும் விடாமுயற்சியோடு முடித்து வெற்றி பெறுகிறார்

இந்த வரிசையில் இந்தியின் ஆறாவது தேர்வு 'பர்வீன்' என்பதாகும். இதனைப் படிக்க வேண்டுமானால் தம்புசெட்டி தெரு சென்றுதான் படிக்க வேண்டும். இத்தேர்வு மூன்று பாகங்கள் கொண்டது. இதையும் ஆறு மாதத்திற்கு ஒன்றென ஒரே மூச்சில் படித்து வெற்றி பெறுகிறார். இது எம்.ஏ.க்கு சமம்.

இதன் பிறகு இந்தி ஆசிரியருக்கான பயிற்சி வகுப்பு. இதனைத் தியாகராயநகரில் உள்ள இந்தி பிரச்சார சபாவில்தான் படிக்க முடியும். அதையும் முடித்தால்தானே வேலை வாய்ப்பு. எனவே, அந்த வகுப்பில் சேர்கிறார்.

ராயபுரத்திலிருந்து கடற்கரை ரயில்நிலையம் வரை தினமும் நடந்து சென்று — மின்சார ரயில் மூலம் மாம்பலம் வந்து அங்கிருந்து இந்திப் பிரச்சார சபா வரை மீண்டும் நடை. ராயபுரத்திலிருந்து பேருந்தில் செல்வதற்கும், மாம்பலத்திலிருந்து இந்திப் பிரச்சார சபா வரை மீண்டும் பேருந்தில் செல்வதற்கும் வாய்ப்பில்லாத பொருளாதார சூழல், ஓராண்டு இந்த அல்லலைத் தாங்கிக் கொண்டு 1965 — 66 இல் இத்தேர்விலும் வெற்றி பெறுகிறார்.

இப்போது சாந்தி அவர்கள் ஒரு தகுதிபெற்ற ஆசிரியர்.

1966-ஆம் ஆண்டு முதல் தங்கள் குடியிருப்பு பகுதியான ராயபுரத்தில் உள்ள முருக தனுஷ்கோடி பள்ளியில் பகுதிநேர இந்தி ஆசிரியராக மாதம் ரூ.30/- சம்பளத்தில் வேலையில் சேர்கிறார். சிறிது காலத்தில் முருக தனுஷ்கோடி பள்ளி விரிவடைந்து — அகஸ்தியா திரையரங்கின் பின்புறம் உள்ள இடத்திற்கு மாற்றம் பெறுகிறது. இந்த நேரத்தில் கவிஞரின் துணைவியார் முழுநேர ஆசிரியராக நியமிக்கப் பட்டுவிடுகிறார்.

வாழ்க்கைப் படகு நம்பிக்கையோடு நகர ஆரம்பிக்கிறது.

இந்த நிலையில் 1967-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கிறது. தமிழ்நாட்டில் இந்திக்கு இடமில்லை. இரு மொழி கொள்கை நடைமுறைக்கு வருகிறது. அதனால் அரும்பாடுபட்டுப் பெற்ற ஆசிரியர் பதவி பறிபோய் விடுகிறது. மீண்டும் குடும்பம் கவலையின் பிடியில்.

நல்லவேளை பள்ளி நிர்வாகம் வேலையில்லையெனக் கதவை இழுத்து மூடிவிடாமல் — இடைநிலை ஆசிரியர் பயிற்சிக்குப் பள்ளியே இவரை அனுப்பி வைக்கிறது. ஓராண்டு பயிற்சி முடித்து அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியேற்கிறார்.

மீண்டும் நிரந்தர வருமானம் நிலைபட்டுவிட்ட நிலையில் நிம்மதி பிறக்கிறது. சாந்தி அம்மையாரின் வருவாயில் குழந்தைகள் கல்வி— குடும்பச் செலவு என வாய்க்கும் கைக்கும் சரியாக இருக்கிறது என்பார்களே அத்தகையதோர் நிலையில் குடும்பம் நடக்கிறது.

பெரிதாகச் சேமிக்கவோ — குடும்ப முன்னேற்றத்திற்கான திட்டமிட இந்த ஒருவர் வருமானம் மட்டும் எம்மாத்திரம்?

ஆனாலும், திக்குத் தெரியாத கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த படகுக்குக் கலங்கரை விளக்கம் தெரிய ஆரம்பித்துவிட்டது. இருண்ட வானில் நம்பிக்கை நட்சத்திரம் உதயமாகி விட்டது.

தலைவன் வருமானம் இல்லாவிட்டால் தரைதட்டிவிடும் கப்பல்களுக்கு — சாந்தி அம்மையார் ஒரு முன்னுதாரணமாகி விட்டார். கவிஞர் குடும்ப கவலைகள் அற்று அரசியல் அரங்கில் சிறகு விரிக்கலானார்.

16 காங்கிரஸ் இயக்க ஈடுபாடும் வெளிச்சம் கவிதை நூல் வெளியீடும்

கவிஞர் ஒரு மார்க்சீய சிந்தனையாளர்
ஒரு பகுத்தறிவு வாதி
ஒரு முழுமையான நாத்திகர்
என்றாலும் அடிப்படையில் ஒரு தேசீயவாதி.

இங்கே தேசீயவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் — நாத்திகம் மார்க்சீயம் தொடர்பாகத் தீண்டாமைக் கொள்கை உடையவர்கள். தேசீயவாதி என்பதற்கு இதுவே இலக்கணம் எனக் கருதிக் கொண்டிருப்பவர்கள். இவர்களிடையில் கவிஞர் ஒரு விதிவிலக்கு.

கவிஞர் 1942 ஆகஸ்டு போராட்டங்களில் தீவிர பங்காற்றி தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர் என்றாலும், தான் ஒரு காந்திய வாதி என்பதைவிடச் சுபாஷ் சந்திர போஸையும் பகத் சிங்கையும் தலைவர்களாக ஏற்றுக் கொண்டவர் என்பதிலேயே நிறைவு காண்பவர். இதில் பகத்சிங் முற்றும் முழுவதுமான நாத்திகவாதி.

1967 வரை கவிதை, இசை என்றிருந்தவர். கட்சி அரசியல் ஈடுபாட்டில் கவனம் செலுத்தாதிருந்தார். 1967-இல் காங்கிரஸ் தோல்வி.காங்கிரஸ் தோல்வி என்பதைவிட பெருந்தலைவர் காமராசர் தோல்வி கவிஞரை மிகவும் பாதித்தது.

பொருளாதாரம் சரியாக இருந்தால்தான் ஒரு இனம் வாழும். பொருளாதாரத்தால், வாழ்ந்துவிட்ட இனத்தை வெறும் மொழியுணர்வைத் தூண்டிவிட்டு வாழவைத்துவிட முடியாது என்ற கருத்துடையவர் கவிஞர்.

இதனால் திராவிட இயக்கங்களின் மொழி ஆரவாரம் — வெற்றுக் கூச்சல். வெறும் வெற்றுக் கூச்சலை வைத்துக் கொண்டே ஒரு பெருந்தலைவரை வீழ்த்திவிட்டது திராவிட இயக்கம் என்ற வருத்தம் கவிஞருக்கு உண்டு. யாரும் தோற்கலாம். ஆனால் அந்தத் தோல்விக்கு ஒரு நியாயம் இருக்க வேண்டும். தோற்கடிக்கப்பட்டதைவிட வெற்றி பெற்றது மேலானதாக இருக்க வேண்டும்.

தமிழகத்தில் இதற்கு நேர்மாறான ஒரு நிலைமை. இருந்ததை வீழ்த்தி — வருவது அதனினும் மோசமானதாக இருப்பதே தமிழக யதார்த்தமாகிவிட்டது. இந்த வெற்றிகளால் தமிழகம் புதைசேற்றில் புதையுண்டு கொண்டு வருகிறதே அன்றி — மீட்சி பெறவில்லை. பெறமுடியாது என்பது கவிஞர் கருத்து.

யாரும் தோற்கலாம். தோற்கவேண்டும். காமராசரும், தோற்கலாம். தோற்கக்கூடாது என்பதில்லை. ஆனால் யாரிடம், எந்தக் கொள்கையிடம் தோற்றார் என்பதிலே கவிஞருக்கு வருத்தம். கருத்து வேறுபாடு.

இந்த நிலைமைகளை மாற்றுவதற்கான முயற்சியில் தன் பங்கும் இருக்க வேண்டும் என நினைத்தார். கட்சி அரசியலில் ஈடுபடுவதும் அதற்கொரு வழி எனக் கண்டார்.

RAJI
WEDS
MATHI


30

32

33



35



36


37




39

மீண்டும் - காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்ற தன் விருப்பத்தைக் காமராசரிடம் தெரிவித்தார். கவிஞரின் முடிவைக் காமராசர் வரவேற்றார். உறுப்பினர் அட்டையில் தன் கைப்பட கையொப்பமிட்டுக் கவிஞரைக் கட்சியில் சேர்த்ததைக் கவிஞர் இன்றும் நினைவு கூர்ந்து பெருமிதம் கொள்வார்.

கவிஞரின் அண்ணன் மகன் கிருஷ்ணன் என்பவர் காமராசரிடம் அவர் முதலமைச்சர் ஆன காலம் முதல் இறுதிவரை, அவரது பாதுகாப்பு, அதிகாரியாக இருந்தவர். அவரைப் பார்க்க கவிஞர் அடிக்கடி காமராசர் இல்லம் செல்லும் வாய்ப்புகளின் காரணமாகக் காமராசரோடு நேரடி அறிமுகமும் பழக்கமும் ஏற்கனவே உண்டு.

காங்கிரஸ் பொதுக்கூட்டங்களிலும், கவியரங்குகளிலும் உணர்ச்சி பிழம்பாய்க் கவிஞர் பணியாற்றிய விபரங்களுக்கு அவரது வெளிச்சம் கவிதை நூல் ஆதாரமாக உள்ளது.

கர்மவீரர் காமராசர் என்ற இவரது கவிதையில், காமராசர் எப்படிப்பட்டவர் என்பதும் அவரைத் தோற்கடித்தவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் ஆழமாகப் பதிவு செய்துள்ளதை அவரது வார்த்தைகளிலேயே காண்பதே பொருத்தம்.

''அரசியலில் எத்தனையோ கீரைத்தண்டு
அவசரமாய் வளர்ந்துவிட்டு; ஆறாம் மாதம்
தரையினிலே சாய்வதுண்டு; விருதை வீரர்
தாமதமாய் வளர்ந்து வந்த ஆலங்கன்று
குறுக்குமதி கொண்டுள்ள மறியின் கூட்டம்
நறுக்கென்று கடித்தாலும் அதையும் மீறிப்
பொறுப்புள்ள செயலாற்றும் திறனால், என்றும்
புகழென்னும் விழுதூ ன்றித் தலைவரானார்.

மழைக்காலக் காளான்கள் குடையைப் போல
வடிவங்கள் எடுத்தாலும் மழையா தாங்கும்
உழைக்காமல் பிழை செய்து மேடையேறி
ஊரேய்க்கும் கட்டத்தின் ஆட்டம் ஓயும்''

காமராசரைப் புகழ்ந்தால் மட்டும் போதாது. அவரது எதிரிகளையும் மிதித்து துவைக்கவேண்டும் என்ற யானைக் கோபம் கொண்டவர் கவிஞர். 'காரித்துப்பு' என்ற கவிதையில் இந்த ஆவேசம் வெளிப்படையாகவே வந்து நிற்பதையும் பார்க்கலாம். அரசியல் என்று வந்துவிடும் போது யார்தான் எல்லையில் நிற்கமுடியும். எல்லை மீறல்களே அரசியல் மேடைகளின் இலக்கணமாகிவிடுகிறது. இலக்கணம் மீறிவிட்

டால் எடுபடாமல் போவதால் — இதுவே இயல்பாகவும் அமைந்து விடுகிறது.

நாகர்கோவிலில் நேசமணி சிலை திறப்பு விழாவின்போது காமராசர் முன்னிலையில் கவியரங்கம் நடக்கிறது. கவிஞருடன், கவிஞர் தஞ்சைவாணன், கவிஞர் பொன்னடியான் போன்றோரும் கவிதை படிக்கின்றனர். காமராசருடன் நெருங்கி பழகும் வாய்ப்புகள் ஏற்பட்ட பின்னர் அவரது நினைவாற்றல் கண்டு கவிஞர் அதிசயித்துள் ளார். எந்த மாவட்டத்திலிருந்து வந்த அடிமட்ட தொண்டனையும்கூ டப் பெயர் சொல்லிக் கூப்பிட்டுப் பேசுவார். தலைவர்களுக்குரிய தகுதிகளில் நினைவாற்றலும் ஒன்று. தன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டார் தலைவர் என்று பெருமிதங்கொள்ளாத தொண்டன் இல்லை அல்லவா?

யாரும் யாரைப் பற்றியும் அவர்கள் இல்லாதபோது குறை கூறுவதைக் காமராசர் அனுமதிப்பதில்லை. அதெல்லாம் நாம் பாத்துக் கிறேன். இதைச் சொல்லத்தானா வந்தே. நீ போய் உன் வேலையை ஒழுங்கா பார் என்று யாராக இருந்தாலும் நறுக்கென்று சொல்லிவிடு வார். புறங்கூறல் அவருக்குப் பிடிக்காதவை என்பதையும் கவிஞர் நேரிடை அனுபவத்தால் அறிந்தவர்.

கவிஞர் காங்கிரஸ் கூட்டங்களில் பேசும்போதும் — அவரது மார்க்சீய சிந்தனைகள் பல நேரங்களில் வெளிப்பட்டு விடும். காங்கி ரஸ்காரர்கள் பல பேருக்கு இது பிடிப்பதில்லை. அப்படிப்பட்ட ஒரு சிலர் காமராசரைப் பார்த்து 'திருச்சி தியாகராஜன் ஒரு கம்யூனிஸ்டுகா ரர். அவர் காங்கிரஸிலிருந்து கலாட்டா செய்து கொண்டிருக்கிறார்'' என்று புகார் சொல்லியிருக்கிறார்கள். ''அதெல்லாம் எனக்குத் தெரி யும். நீங்க ஒங்க வேலையைப் பாருங்க'' என்று சொல்லித் திருப்பியி ருக்கிறார்

ராஜாஜியோடு கருத்து வேறுபாடு இருந்தாலும் அவருக்கு உரிய மரியாதையைத்தர காமராசர் தவறியதே இல்லை என்பதற்கு ஒரு உதாரணம். காமராசர் முதல்வராக இருந்தபோது வள்ளுவர் கோட்டம் பக்கத்தில் காமராசர் கார் போய்க் கொண்டிருந்திருக்கிறது. அவருக்கு முன்னே ராஜாஜி கார் போய்க் கொண்டிருக்கிறது. அதை முந்தி செல்ல முயன்ற ஓட்டுநரின் தோளில்தட்டி... பெரியவர் கார் போய்க்கிட்டிருக் கில்லே. அதை ஏன் முந்தப் போறே. பொறுமையா போ' என்று சொல்லியிருக்கிறார்.

நேற்றுவரை ஒரே இயக்கத்தில் இருந்தவர்கள்... ரத்தத்தின் ரத்தம், உடன்பிறப்பு என்றெல்லாம் பாசமழை பொழிந்து கொண்டிருப்பவர் கள். பிரிந்த மறுகணமே காது கொடுத்துக் கேட்க முடியாத வசவு

மழையைப் பொழிபவர்களைக் கண்கூடாகக் காண்கிற நமக்குக் காமரா சரின் இந்தப் பண்பாடு நெகிழ்வாகப்படுகிறது.

1974 இந்தியாவின் இருண்டகாலம். இந்திராவின் அவசரகால கொடுமைகளில் நாடு — ஹிட்லரின் கொடுமையை நேரடியாக அனுபவித்துக் கொண்டிருந்த நேரம். 'போனது தேசம் போனது' எனக் காமராசரே கையறுநிலையில் பரிதவித்த நேரம்.

கவிஞர் தனது 'வெளிச்சம்' கவிதைத் தொகுப்பைக் காமராசர் வேளியிட வேண்டுமென விருப்பப்படுகிறார். மற்ற தலைவர்கள் எல்லோரும் காமராசரை அணுக இது நேரமல்ல என ஆலோசனைக் கூறுகின்றனர். கவிஞருக்கு மற்றவர்கள் கருத்தில் உடன்பாடில்லை. காமராசரை அணுகிக் கேட்கிறார். காமராசர் மகிழ்ச்சியுடன் இசைவு தந்ததோடு தேதியும் கொடுக்கிறார். அந்தத் தேதி மாநிலக் காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடக்கும் தேதி. மற்ற காங்கிரஸ் தலைவர்களும் இந்தப் புத்தக வெளியீட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே அந்தத் தேதியைக் காமராசர் தேர்ந்தெடுத்தார் என்ற செய்தியைப் பின்னர் அறிய நேர்ந்தபோது — தன்பால் தலைவர் கொண்டிருந்த அன்பை எண்ணி கவிஞர் நெகிழ்ந்து போனார்.

தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பெருந்தலைவர் காம ராசரால் 6.1.1974 அன்று மாலை 6 மணிக்குக் கவிஞரின் 'வெளிச்சம்' கவிதைத் தொகுப்பு வெளியிடப்படுகிறது.

நடிகர் திலகம் சிவாஜிகணேசன் காமராசரிடம் வெளிச்சம் நூலின் முதல் பிரதியைப் பெறுகிறார்.

காமராசர் காலத்தில் காங்கிரஸ் இயக்க இலக்கியவாதிகளுக்கு முக்கியத்துவம் தருவதற்காகத், தேசிய சிந்தனையாளர் மன்றம் என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்படுகிறது. அந்த அமைப்பின் தலைவராகக் கவிஞர் திருச்சி தியாகராஜனும், செயலாளராக தீபம் பார்த்தசாரதியும் செயல்பட்டு வருகின்றனர். இந்த அமைப்பின் சார்பாகத்தான் கவிஞ ரின் நூல் வெளியிடப்படுகிறது.

விழாவிற்குத் தீபம் பார்த்தசாரதி தலைமை ஏற்கிறார். கவிஞரின் நெருங்கிய நண்பரான அரு. சங்கர் வரவேற்புரை ஆற்றுகிறார்.

காமராசர் விரும்பியதைப் போலவே, கருத்திருமன், எஸ்.எம். நாராயணன், மணிவர்மா, ஜெபமணி, குமரி அனந்தன், தஞ்சைவா ணன் போன்ற காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் பங்கு கொள்கின்ற னர்.

விழாவிற்குத் தலைமை ஏற்ற தீபம் பார்த்தசாரதி அவர்கள் கவிஞரின் கவிதைத் தொகுப்பில் உள்ள பல்வேறு கவிதைகளின் நயங்களையும் உவமை அழகுகளையும் பலபடப் பாராட்டிப் பேசினார். 'வெளிச்சம்' தொகுப்பில் உள்ள வெளிச்சம் என்ற கவிதையை உச்சிமேல் வைத்துக் கொண்டாடினார் என்றே சொல்ல வேண்டும்.

'தேன் துளிபோல் தேள் கொடுக்கும் தோன்றும்; காயும்
செந்நெருப்பும் மாணிக்க வண்ணம் காட்டும்
மீன் செதிலும் மினுமினுக்கும் வெள்ளிக் காசாய்
வெளுத்தமுடி பளபளக்கும் பட்டு நூலாய்
பூண்டுபல் புலிப்பல்லாய்க் காண்ப துண்டு
பொரிச்சோளம் பூவாகத் தெரிவ துண்டு
தூண்டில்முள் காதணிபோல் தோன்றினாலும்
தோற்றத்தால் பொய் மெய்யாய் நிலைத்திடாது'

என்ற கவிதையில் உள்ள உவமைகள் எல்லாமே சிறப்புடையன. இன்னொரு கவிதையில்—

ஆற்றோடு பிணமே போனால்
அதுவல்ல நீச்சல்; வீசும்
காற்றோடு கந்தல் போனால்
கண்டிப்பாய் பறவை அல்ல

என்கிற வரிகளில் வரும் உவமைகளும் என் நெஞ்சைவிட்டு நீங்காதவை. இப்படிக் கவிதைகளில் அவர் கையாளும் உவமைகள் ஒன்றையொன்று விஞ்சி நிற்பவை. கவிதைக்கு அழகு சேர்ப்பவை... கவிஞருக்குப் புகழ் சேர்ப்பவை. ஆனாலும் என் நெஞ்சில்... இப்படி ஒரு உவமை நயத்தை நான் இதுவரை படித்ததில்லை என்று சொல்லும் அளவுக்கு ஆழப் பதிந்திருக்கும் வரி

''தேன்துளிபோல் தேள்கொடுக்கும் தோன்றும்...''

என்று எழுதியக் கவிஞனின் கூர்மையானப் பார்வைக்கு என்ன பரிசு தந்தாலும் அதற்கு ஈடாகாது. வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம் —

'அட்சரம் லட்சம் பொறும்'

என்று சொல்லி முடித்தார். அரங்கம் கையொலி அடங்க நெடுநேரம் ஆனது.

காமராசர் நிறைவுரை நிகழ்த்த எழுந்தார். சுருக்கமாக... ஆனால் அன்றைய காலநிலைக்கும் நூலின் தலைப்புக்கும் பொருந்தும் வகையில் முத்தாய்ப்பாய்ச் சொன்னார்.

"நாடு இருண்டு கிடக்கிறது. கவிஞர் திருச்சி தியாகராஜன் போன்றோர்தான் நாட்டிற்கு வழிகாட்ட வேண்டும்"

கூட்டம் நெகிழ்ந்து நின்றது. கவிஞர் அதில் கரைந்து போனார்.

சிவாஜி கணேசன் முதல் பிரதியைப் பெற்றார் என்ற பெருமையை மட்டும் தந்து செல்ல —

தொழிற்சங்கத் தலைவர் எஸ்.எம். நாராயணன் ரூபாய் ஆயிரம் கொடுத்து இரண்டாம் பிரதியைப் பெருந்தலைவரிடம் பெற்றார். அன்றைய அந்த ஆயிரம் இன்றைய மதிப்பில் ரூபாய் பத்தாயிரத்திற்கு மேல்.

1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் — தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் காந்தி பிறந்தநாள் விழாவுக்கான கவியரங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கிறது.

கவியரங்கத் தலைவர் கி.வா.ஜ. கவிஞரும் வேறுபல கவிஞர்களும் கவியரங்கில் பங்கேற்க வந்துள்ளனர். மேடை அமைப்புப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

கவியரங்கம் தொடங்க ஓரிரு நிமிடங்கள் இருக்கும் நிலையில் —

"நாடு இருண்டு கிடக்கிறது. உன் போன்றோர்தான் வழிகாட்ட வேண்டு'மெனத் தொண்டனைத் தலைமைபீடம் ஏற்றி வைத்து அழகு பார்க்கும் ஒப்பற்ற மாமனிதர் பெருந்தலைவர் காமராசர் — மறைந்தார் என்ற 'செய்தியிருள்' அந்தக் கவியரங்கத் திரையாய் விழுந்தது.

17 இசைக்குடில் மீட்கப்பட்டது

கவிஞர் காங்கிரஸ் கட்சியில் தீவிர ஈடுபாடு கொண்டு பெருந்தலைவர் காமராசரோடு பழகவும், அவரது ஆதரவெனும் அன்பில் மூழ்கித் திளைத்த அதே காலகட்டத்தில் —

திருச்சியில் கவிஞர் கட்டியிருந்த இசைக்குடில் வீடு கடனில் மூழ்கிக் கொண்டிருந்தது.

அந்த வீட்டைக் கட்டுவதற்காகத் தனது தம்பி பாலகிருஷ்ணன் கொடுத்திருந்த ஆயிரம் ரூபாய் கடனுக்காக — வட்டியும் முதலுமாகச் சேர்த்து மூவாயிரம் கேட்டு வழக்கறிஞர் மூலம் நோட்டீசே அனுப்பி விட்டார். அதேபோல் தமக்கை விஜயலட்சுமியிடம் வீடுகட்டும் பணிக்காக வாங்கிய ரூ1000/- உடனே திருப்பித்தர வேண்டுமென ஈட்டிமுனை நிர்பந்தம்.

வேறுவழியில்லாமல்—

கவிஞர் வாணிதாசன், பேரன்பினர் நாரணதுரைக்கண்ணனார், பாரதியாரின் திருமகள்களான தங்கம்மா பாரதி, சகுந்தலா பாரதி போன்றவர்கள் எல்லாம் வந்து தங்கி சென்றதன் நினைவுப் பேழை யாய், தன் பெயரில் இருந்த ஒரே ஒரு அசையா சொத்தாய்த் திகழ்ந்த அந்த வீட்டை விற்றுக் கடன்களைத் தீர்த்துவிட்டு, மீதி பணத்தைக் கொண்டு வந்துதான் வெளிச்சம் நூலை வெளியிட்டார் கவிஞர் என்ற உண்மையும், அந்த வீட்டை விற்க கவிஞர் எவ்வளவு மன வருத்தப் பட்டார் என்ற நிலையையும் உணர்ந்தவர்கள் கவிஞரின் நண்பர்களான எஸ்.எம்.நாராயணன், ஏ.பி.சாமி போன்றோராவார்.

வெளிச்சம் நூலின் 500 பிரதிகளை மாவட்ட நூல் நிலையம் பெற்றுக் கொண்டதையும்;

அரு. சங்கரின் பேருதவியால் இந்த நூலில் மேலும் பல பிரதிகள் விற்றிருப்பதையும்;

கூர்ந்து கவனித்துவந்த இந்த நண்பர்கள் சென்னையில் கவிஞருக்கு ஒரு வீட்டுமனை வாங்கித் தந்துவிட வேண்டுமென முனைப் பாய் இருந்திருக்கின்றனர்.

இந்த நேரத்தில் — சென்னை வியாசர்பாடியில் வீட்டுவசதி வாரியத்தால் மேம்பாடு செய்யப்பட்ட வீட்டுமனைகள் விற்கப்படு வதை அறிந்து கவிஞரை வெளிச்சம் நூல் விற்ற தொகையில் ரூ.3000/- செலுத்தி வீட்டுமனை ஒன்றை வாங்க தூண்டுகின்றனர். ரூ.3000/- போக மீதித் தொகையைத் தவணை முறையில் செலுத்தவும் ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

எந்தக் கவிஞனால் தவணையை ஒழுங்காக கட்டமுடியும். எனவே தட்டுத்தடுமாறி கட்டும் தவணைத் தொகைகளை — அபராத வட்டி விழுங்கிக் கொண்டிருந்தது. தவணைத் தொகைகள் என்றும் பதினாறாய் இளமை முறுக்கோடு திமிறி நின்றது நிலுவையாய்.

மனைக்கானத் தவணைத் தொகையைச் செலுத்தவே தட்டுப்பாடு. அதில் வீடு எப்போது கட்டப்போகிறார் கவிஞர் என்று சிந்தித்த நண்பர்கள் அதற்கும் ஒரு வழியைத் தேடுகின்றனர்.

தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியம் அப்போது வெறும் மனைகளை மட்டும் மேம்படுத்திக் கொண்டிருக்கவில்லை. வீட்டையும் கட்டிக் கொடுத்துத் தவணைமுறையில் தொகையை வசூலித்துக் கொண்டிருந்தது.

இதையறிந்த எஸ்.எம். நாராயணன் கவிஞரை அப்போது வீட்டு வசதி வாரியத் தலைவராய் இருந்த சி.வி.எஸ்.மணி, ஐ.சி.எஸ். அவர்களிடம் அழைத்துச் சென்று கவிஞருக்கு ஒதுக்கித் தந்த மனை யில் வீடு கட்டித் தரும்படி வேண்டுகிறார்.

ஏற்கனவே கட்டிக்கொண்டிருக்கும் வீடுகளுக்கான சாமான்களே களவு போய்க் கொண்டிருக்கிறது. கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே புதிதாக வாரியம் இப்பகுதியில் வீடு கட்டும் பொறுப்பை ஏற்பதில்லை என முடிவு செய்துவிட்டது. வேண்டுமானால் ஏற்கனவே கட்டிக் கொண்டிருக்கும் வீடு ஒன்றினை ஒதுக்கித் தருகிறோம். மனைக்கு இதுவரை செலுத்தியிருக்கும் தொகையை அதற்கு மாற்றிக் கொள்ளலாம். வீட்டுக் கட்டுமானச் செலவுக்காகும் உத்தேசத் தொகை யின் கால்பகுதியான ரூ.3000/- கட்டுங்கள் என்கிறார். முட்டி மோதி அத்தொகையும் செலுத்தப்படுகிறது.

மகாகவி பாரதி நகரில் 9-ஆவது குறுக்குத் தெருவில், மனை எண் 29-இல் கட்டப்பட்டுள்ள வீடு ஒதுக்கப்படுகிறது.

திருச்சியில் இழந்த இசைக்குடில் — மகாகவி நகரில் — புதிய பொலிவுடன் அதே பெயரில் மீட்கப்படுகிறது.

18 கலைமாமணி விருது

'தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம்' என்ற தமிழக அரசு சார் அமைப்பு ஆண்டுதோறும் தமிழுக்குச் சிறந்த கலைத்தொண்டு ஆற்றுப வர்களைத் தேர்ந்தெடுத்து 'கலைமாமணி விருதும்' 'தங்கப் பதக்கமும்' பாராட்டிதழும் வழங்கி மரியாதைப் படுத்திவருகிறது.

சக்தி நாடக சபாவால் நடத்தப்பட்டுப் பெரும்புகழ் பெற்ற கவியின் கனவு என்ற நாடகத்தை எழுதியவர் என்ற பெருமைக்கு உரியவரும் கவிஞருமான எஸ்.டி.சுந்தரம் என்பவர் மேற்கண்ட அமைப்பின் செயலாளராகவும், உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த மாண்புமிகு கோகுலகிருஷ்ணன் தலைவராகவும் பதவி பொறுப்பிலி ருந்த 1972-ஆம் ஆண்டு கலைமாமணி விருது வழங்க 27 கலைஞர்க ளைத் தேர்வு செய்திருந்தது.

அதில் —

'சாகித்ய கர்த்தா' தலைப்பில் விருதுக்குரியவராகக் கவிஞர் அவர்களைத் தேர்வு செய்து அறிவித்தது. அந்த 27 கலைஞர்களில் முதலிடம் வகித்தவர் கவிஞராவார். அதன் விவரம்

சங்கத்தின் விருது பெறும் கலைஞர்கள்

(1971—72)

1 திருச்சி.திரு. தியாகராஜன்	சாகித்யகர்த்தா
2 திரு. சிதம்பரம், எஸ்.ஜெயராமன்	சங்கீதக் கலைஞர்
3 திரு. பாலு பிள்ளை, மாயூரம்	வயலின் கலைஞர்
4 திருமதி ரங்கநாயகி, திருகோகர்ணம்	மிருதங்கக் கலைஞர்
5 திரு.ஆர்.பிச்சுமணி,சென்னை	வீணைக் கலைஞர்
6 வேதாரண்யம் திருமதி கனகாம்புஜம்	புல்லாங்குழல் கலைஞர்
7 நாமகிரிப்பேட்டை திரு.கே.கிருஷ்ணன்	நாதஸ்வரக் கலைஞர்
8 திருநகரி திரு.நடேசப்பிள்ளை	தவில் கலைஞர்
9 திரு. கிருஷ்ண பாகவதர், தஞ்சை	ஹரிகதா காலட்சேபக் கலைஞர்
10 முத்துசாமி பிள்ளை,சென்னை	பரதநாட்டிய ஆசிரியர்
11 திருமதி ஈ.வி.சரோஜா	பரதநாட்டியக் கலைஞர்
12 மெலட்டூர் திரு.சுப்பையா	பாகவத மேளா கலைஞர்

13	மதுரை திரு.ராகவ வாத்தியார்	நாடகப் பாடலாசிரியர்
14	ஓ.என்.கிட்டு	நாடக நடிகர்
15	செல்வி.கே.சந்திரகாந்தா	நாடக நடிகை
16	திரு.கே.வி.சீனிவாசன்	நாடகத் தயாரிப்பாளர்
17	திரு.பட்டு	தொழில்முறையல்லாத நாடக நடிகர்
18	திரு.எம.ஏ.வேணு	திரைப்படத் தயாரிப்பாளர்
19	திரு.ஆர்.ராமண்ணா	திரைப்பட இயக்குநர்
20	திரு.ஏ.எல்.நாராயணன்	திரைப்பட வசனகர்த்தா
21	திரு.ஏ.வி.எம்.ராஜன்	திரைப்பட நடிகர்
22	செல்வி.ஜெயலலிதா	திரைப்பட நடிகை
23	கவிஞர். திரு.வாலி	திரைப்படப் பாடலாசிரியர்
24	திரு.சி.என்.பாண்டுரங்கன்	திரைப்பட இசை அமைப் பாளர்
25	மதுரை திரு.ஓம்.பெரியசாமி	கரக ஆட்டக் கலைஞர்
26	திரு.முத்துக்கூத்தன்	வில்லுப்பாட்டுக் கலைஞர்
27	திரு.கண்ணன் தம்பிரான், புரிசை	தெருக்கூத்துக் கலைஞர்

சாகித்திய கர்த்தாவுக்கான விருதினைக் கவிஞருக்குமுன் பெற்ற இருவர் —

1. பாபநாசம் சிவன்.
2. சரவணபவானந்தர்

மேற்கண்ட விருதினை வழங்குவதற்கான விழா 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25-ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை, அண்ணா சாலை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழக ஆளுநர் கே.கே.ஷா தலைமை ஏற்றுப் பரிசு வழங்கினார்.

தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி, விருது வழங்கி பாராட்டினார்.

கலைஞர்களின் பெயர் பொறித்த 2½ பவுன் தங்கப் பதக்கமும் காஷ்மீர் சால்வையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கி மரியாதை செய்யப்பட்டன.

கவிஞர் இந்தக் கால கட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் தீவிரப் பேச்சாளராக விளங்கினார். பேச்சிலும் கவிதையிலும் தீக்கனல் வீசும். அப்போதைய ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தையும் அதன் தலைவர்களையும் எப்படி எல்லாம் விமர்சித்தார் என்பதற்கு — மாதிரிக்கு ஒரு உதாரணம்.

தேருக்கு முன்னால் பாயும்
சிங்காரக் குதிரை பொம்மை
தேரையா இழுக்கும்; மக்கள்
சேர்ந்தால்தான் தேரே ஓடும்.

பேருக்குள் முன்னேற்றத்தைப்
பிணைத்துள்ள பொம்மைக் கட்சி
ஊருக்கா நன்மை செய்யும்?
பிணம்வைத்த மேடை ஒன்றின்
பெயர்காக்க வேண்டு மென்று
பணம்மிறைத்த கணக்கைப் பார்த்தால்
பலலட்சம் நாசம்! நாசம்!''

இந்தச் சூழ்நிலையில் — தேர்வாளர்களுக்கிடையே இவர் பெயரைத் தேர்வு செய்வதற்குச் சில முணகல்கள் எழுந்ததாகவும், எல்லா வகையிலும் 'சாகித்தியகர்த்தா' தலைப்பில் தேர்வு செய்ய தகுதிபடைத்த இவருக்கு விருது வழங்க அரசியல் காரணம் தடையாக இருக்குமானால் — நான் இந்தக் குழுவிலிருந்து விலகி விடுகிறேன் என இசைப்பேரரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் சொல்லவே — பிறகு முணகல்கள் அடங்கி விட்டதாகத் தேசிகர் அவர்கள் பின்னொரு சந்தர்ப்பத்தில் கவிஞரிடம் தெரிவித்தாராம்.

எது எப்படி இருந்தாலும் —

இன்றைப்போல முழுமையான வெட்கங்கெட்ட நிலை அன்றைக்கு இல்லை என்பது தனக்கு விருது வழங்கப்பட்டது என்ற உண்மை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது எனக் கவிஞர் சொல்வார்.

கவிஞர் கலைமாமணி விருது பெற்றதைப் பாராட்டுவதற்காகத் தற்போது முருக தனுஷ்கோடி பெண்கள் மேல்நிலைப் பள்ளி தலைவராக இருக்கும் அரு.சங்கர் அவர்களின் பெரு முயற்சியால் —

ராயபுரம் பம்பிங் ஸ்டேஷன் தெருவில் மிகப் பெரிய பாராட்டு விழா கூட்டம் ஒன்றைப் பொதுக்கூட்டமாக நடத்தினார்.

இசைப் பேரரசு எம்.எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்தான் இதிலும் இசைநிகழ்ச்சி.

திருக்குறள் முனிசாமி

வ.உ.சி. சுப்பிரமணியம் (வ.உ.சிதம்பரனாரின் மகன்) ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். கவிஞர் தஞ்சைவாணன் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பொன்னாடை போர்த்தினார்.

விருதுக்கான பாராட்டிதழ் பத்திரமாய் இருக்கிறது.

தங்கப்பதக்கம் மட்டும் — வந்த சுவடு தெரியாமல் — மார்வாடிக் கடைக்குச் சென்று மாயமாய் மறைந்தே போனது?

19 பொதுவுடைமை இயக்கத்தில் கவிஞர்

தலைவர் காமராசர் மறைவிற்குப் பிறகு — அவர் தலைமையில் இயங்கி வந்த தமிழக காங்கிரஸ் திக்காலுக்கொன்றாய்ச் சிதறு தேங்கா யாய் சுக்கு நூறாகி விடுகிறது.

மூப்பனார் தன் ஆதரவாளர்களோடு, இந்திரா அணிக்குக் குடி போகிறார்.

நெடுமாறன் தன் தலைமையில் கொஞ்சத்தை உடைத்துச் செல்கி றார். குமரி அனந்தன் தன் பங்காளிகளோடு கா.கா.தே.க. ஆகிவிடுகி றார். பா.ராமச்சந்திரன் சத்திய மூர்த்திபவன் சாவியோடு...

இந்தக் குட்டி கலகங்களைக் கவிஞர் கொஞ்சம் எட்ட நின்றே வேடிக்கைப் பார்க்கிறார்.

தான் வளர முடியாவிட்டாலும் தன்னைவிட வளர்பவனை அழித்துவிட்டால் தான் தலைவனாகிவிடலாம் என்கிற தத்துவ மேதை களிடம் தொண்டனாய் இருந்து என்ன பயன் —

காமராசரிடமே — இவன் கம்யூனிஸ்ட், காங்கிரசிலிருந்து கொண்டு கலாட்டா செய்கிறான் எனக் கோள் மூட்டிய ஞானதீபங்கள் இதில் பாதிப்பேர்—

இதில் எவர் பின்னால் போகமுடியும்?

மார்க்சீய சிந்தனைக் காரணமாகக் கதர் சட்டையிலேயே சிகப்புச் சாயம் பூசப்பட்ட நிலை. எனவே பேசாமல் பொதுவுடைமை இயக்கத் திற்குப் போய்விடலாம் என்ற முடிவுக்கு வருகிறார் கவிஞர்!

பொதுவுடைமை இயக்கம் என்றால் — அங்கேயும் இரண்டா யிற்றே அதில் எது என்ற பிரச்சனை?

தா. பாண்டியன் இலக்கியத் தொடர்புகள் காரணமாகவும், ராயப்பு ரம் பகுதியில் இருந்தவர் என்பதாலும் ஏற்கனவே நெருங்கிய நண்பர். அவர் அழைத்துவர — தமிழக இந்திய பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளரான கல்யாணசுந்தரம் முன்னிலையில் — இந்திய பொதுவுடமைக் கட்சியில் உறுப்பினராகிறார்.

'காங்கிரஸ் கவிஞர் நமது இயக்கத்தில் சேர்ந்தார்' என முக்கியத்து வம் கொடுத்து ஜனசக்தி செய்தி வெளியிடுகிறது. அப்போது ஜனசக்தி யின் ஆசிரியர் தா.பாண்டியன்.

சினிமாத்துறை மூலம் கலைத்தொடர்புடையவர் என்பதால் கட்சி யின் கலைப்பிரிவுப் பணிகள் கவிஞரிடம் ஒப்படைக்கப்படுகிறது. அப்போது ஜனசக்தியின் ஆசிரியர். தா. பாண்டியன்.

சினிமாத்துறை மூலம் கலைத்தொடர்புடையவர் என்பதால் — கட்சியின் கலைப்பிரிவுப் பணிகள் கவிஞரிடம் ஒப்படைக்கப்படுகிறது.

மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகிய மூன்று பெயர்களை உள்ளடக்கி 'மும்மணிகள் கலைக்குழு' என்ற அமைப்புத் தொடங்கப்ப டுகிறது. அந்தக் கலைக்குழுவின் கலைநிகழ்ச்சிக்கான உரையாடல்கள் பாடல்கள் அனைத்தும் கவிஞரின் பங்களிப்பு. நல்ல குரல் வளம் மிக்கவரான நாடி முத்து அந்தக் கலைக்குழுவில் பாடியவர். திரையுலக சம்மந்தப்பட்ட சில நடிகர்களும் பங்கேற்கின்றனர். புரசைவாக்கம் மீனாட்சி கல்யாணமண்டபத்தில் முதல் நிகழ்ச்சி நடக்கிறது. கல்யாண சுந்தரம், தா. பாண்டியன் போன்ற அனைத்துத் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர். நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருப்பது கண்டு அனைவ ரும் பாராட்டுகின்றனர். இந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைந்திருப்பதால் இதனை எல்லா மாவட்டங்கிலும், நகரங்கள் சிற்றூர்கள் என அனைத்து ஊர்களிலும் நடைபெற வேண்டுமெனத் திட்டமிடப்படுகிறது.

குழுவினரின் போக்குவத்துச் செலவு; உணவு வசதி போன்ற அடிப்படை தேவைக்கான குறைந்தபட்ச செலவு ஒரு நிகழ்ச்சிக்கு ரூ.1000/- ஆனது. அதனைக் கட்சியாலும் செலவழிக்க முடியவில்லை. கிளை அமைப்புகளாலும் முடியவில்லை. எனவே திட்டமிட்டபடி இந்த நிகழ்ச்சியைப் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் விரிவாக எடுத்துச் செல்ல இயலாமல் போனது. குறிப்பிட்ட சில பெருநகரங்களில் மட்டுமே நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏற்கனவே இருந்த திரையுலகத் தொடர்புகளைப் பயன்படுத்தி— ராயபுரத்தில் உள்ள ராஜரத்தின நாயக்கர் கல்யாண மண்டபத்தில் — திரை தோழர்களை ஈடுபடுத்தி பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங் கம் எனத் தொடர்நிகழ்ச்சிகளை மிகுந்த பொருள் செல்வில் கட்சி பிரச்சாரத்திற்காக கவிஞர் நடத்துகிறார்.

இந்த நிகழ்ச்சியின் காரணமாக —

ஜீவா அவர்களால் தொடங்கப்பட்டு — தொய்வு நிலையில் இருந்த மக்கள் கலை இலக்கிய பெருமன்ற அமைப்பு மீண்டும் புத்துயிர் பெற்றுச் சிலிர்த்தெழுகிறது. கவிஞர் சென்னை மாவட்ட தலைவராகி றார். மாநிலத்தலைவர் நா. வானமாமலை.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள, தொழிலாளர் அரங்கம், மகளிர் அரங்கம், விவசாயிகள் அரங்கம், விவசாயத் தொழிலாளர் அரங்கம், மாணவர் பெருமன்றம், இளைஞர் பெருமன் றம் போன்ற அமைப்புகளுக்கெல்லாம் கவியரங்கம், கருத்தரங்கம் எனப் பல்வேறு நிகழ்ச்சிகளில் இடைவிடாது பங்கு கொள்கிறார். இவை தவிர்த்துக் கட்சியின் பொதுக் கூட்டங்களிலும் தொடர்ந்து பங்கு பெறுகிறார்.

திருச்சி, தஞ்சை, தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், புதுவை, கன்யாகுமரி, போன்ற மாவட்டங்களில் கவிஞர் பங்குபெற்ற நிகழ்ச்சி கள் பல்லாயிரக் கணக்கானவை. அதிலும் குறிப்பாகத் தென்னாற்காடு வடாற்காடு போன்ற மாவட்டங்களில்தான் மற்ற மாவட்டங்களைவிட மிகமிக அதிகம்.

திட்டக்குடி எஸ்.எம்.ஜெயராமனும், தென்னாற்காடு மாவட்ட செயலாளர் ஆர். முருகேசனும் கவிஞரின் நிகழ்ச்சிகளுக்குப் பெரிதும் ஊக்கம் தந்தவர்களாவார்கள்.

வானமாமலையை அடுத்து கலை இலக்கிய பெருமன்றத்தின் தலைமை பொறுப்பினை தோ.மு.சி.ரகுநாதன் ஏற்கிறார். கே.சி.எஸ். அருணாசலம் செயலாளராகிறார். கவிஞர் மாநிலத் துணைத்தலைவரா

கிறார். ஜெயகாந்தன், குன்றக்குடி அடிகளார் ஆகிய இருவரும் மற்ற மாநிலத் துணைத்தலைவர்களாவார்கள்.

கோவை, திருப்பூர், தஞ்சை, புதுவை ஆகிய இடங்களில் கலை இலக்கிய பெருமன்ற மாநில மாநாடுகள் நடைபெறுகின்றன.

புதுவையில் நடந்த மாநில மாநாட்டிற்குக் கவிஞர் தலைமை தாங்குகிறார். புதுவைத் தோழர் எம்.கே.ராமன் அவர்களின் கடும் உழைப்பால் மாநாடு மிக சிறப்பாக நடக்கிறது. அந்த மாநாட்டிற்கும் பிறகு கலை இலக்கியப் பெருமன்ற தலைமைக்குழு உறுப்பினர்களில் ஒருவராகவும் கலைஞர் நியமிக்கப்படுகிறார்.

சரியான மார்க்சீயத்தின் ஒரு பகுதி நாத்திகம். இதில் மிகவும் உறுதிபாடாக இருப்பவர், இயங்குபவர் கவிஞர். எனவே, பொதுக்கூட் டங்களானாலும், கருத்தரங்குகள், கவியரங்கங்கள் என எதுவானாலும் இந்தக் கருத்தை வலியுறுத்த தயங்குவதுமில்லை. தவறுவதுமில்லை.

என்ன இருந்தாலும் கம்யூனிஸ்ட்டு கட்சியும் ஒரு ஓட்டு வாங்கும் நிலையில் உள்ள கட்சிதானே. அதைக் கருத்தில் கொண்டுதானே செயல்பட வேண்டியுள்ளது.

எனவே கவிஞரின் நாத்திகப் பேச்சுகள் கட்சிக்குள் சில முணுமு ணுப்புகளை ஏற்படுத்துகிறது. காங்கிரசிலிருந்தபோது செகப்புச் சட் டைக்காரன் என்றார்கள். கம்யூனிஸ்ட்டானபோது கருப்புச் சட்டைக்கா ரன் என்கிறார்கள். எல்லாக் காலங்களிலும் கவிஞர் அணிந்திருந்தது ஒரே சட்டைதான். அது கதர்சட்டைதான்.

கவிஞருக்குத் தலைவர்களால் இது ஜாடைமாடையாக உணர்த்தப் படுகிறது.

இதனை உணர்ந்த கவிஞர் மெதுமெதுவாகக் கட்சியின் தீவிர ஈடுபாட்டிலிருந்து ஒதுங்க தொடங்குகிறார். திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில் கவிஞரை மாநிலக்குழு உறுப்பினராக்குவதற்கு இளைஞர் கள் விருப்பங்கொண்டு முன்மொழிகின்றனர். இதனை நடைமுறைக்கு கொண்டு வரத் தலைவர்கள் விருப்பமில்லாதிருக்கின்றனர். இதனாலும் மனமுறிவு ஏற்படுகிறது.

தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்ற பெருமைக்குரியவ ரான சிங்கார வேலரையே அவர் பொருள் முதல்வாத நாத்திகர் என்பதால் இயக்கம் கண்டுகொள்ளாமல் அவர் நினைவை மறந்து வருகிறது என்பதை எண்ணி பார்த்துத் தன்னை ஒதுக்க நினைக்கும் நிலையோடு ஒப்பிட்டுத் தனக்கு இழைக்கப்படும் இந்த ஒதுக்கல் பெரிதல்ல என ஆறுதலடைகிறார்.

தேர்தலில் நிற்கும் கட்சிகள் எதுவும் நாத்திகக் கருத்துகளை வெளிப்படையாகப் பேச முடியாது. அதற்குப் பொதுவுடைமைக் கட்சியும் விதிவிலக்கல்ல என்பதற்கான அடையாளமே இவை.

இத்தனைக்குப் பிறகும் —

வேறு ஒரு மாநாட்டில் பேசுகிறபோது, ''கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ளவர்கள் எல்லாம் கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லிவிட முடியாது. கம்யூனிஸ்ட் கேரக்டர் உடையவர்கள்தான் கம்யூனிஸ்ட்டுகள். ஸ்ரீராமநவமி கொண்டாடுகிறவன் எல்லாம் — சிகப்புக் கொடியை ஏந்திவிடுவதாலேயே கம்யூனிஸ்ட் ஆகிவிட முடியாது'' என்று பேசிவிடுகிறார். இந்தப் பேச்சு கடுமையான விவாதத்திற்கு உள்ளாகிவிடுகிறது.

'ஒரு நாத்திகவாதி பொதுவுடமைவாதியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் ஒரு பொதுவுடைமைவாதி கண்டிப்பாக நாத்திகவாதியாகத்தான் இருக்க வேண்டும்'. இந்த நடைமுறை பெரும்பாலும் பொதுவுடைமை கட்சிகளுக்குள் காணப்படவில்லை.

இந்த நிகழ்விற்கும் அதற்கான எதிர்வினைக்கும் பிறகு — ஒதுக்கலா அல்லது ஒதுங்கலா எது எதனால் என்பதைத் தீர்மானிக்க முடியாத அளவுக்கு ஒரே நேரத்தில் இருபக்க மௌன நாடகமாக அரங்கேறிவிட்டது. கவிஞர் பொதுவுடைமை இயக்கத்திலிருந்து விலகியதாக அறிவிக்கவுமில்லை. விலக்கியதாக அவர்கள் அறிவிக்கவுமில்லை.

பொதுவுடைமை இயக்க வளர்ச்சிக்காக ''செங்கீதம்'' என்ற இசைபாடல் தொகுப்பொன்றினை வெளியிட்டதையும், மிகத் தீவிரமான கருத்துகளைக் கொண்ட அத்தொகுப்பில் உள்ள பாடல்கள் நாடெங்கும் பாடப்பட்டதையும் மறக்க முடியாதவையாகக் கவிஞர் இன்றைக்கும் நினைவு கூர்கிறார்.

பொதுவுடைமை இயக்கத்திற்கு வந்த பிறகு தீவிர கட்சி ஈடுபாடு காரணமாக இருமுறை கொலை முயற்சிக்கு இலக்கானார் கவிஞர். அந்த நினைவுகளும் கவிஞர் நெஞ்சில் நிலைபெற்ற மறக்க முடியாத நிகழ்வுகள் வரிசையில் இடம் பெற்றவை.

நிகழ்வு — I

உளுந்தூர்பேட்டையிலிருந்து திருக்கோயிலூர் செல்லும் சாலையில் தெற்கு நோக்கிப் போகிற பாதையில் பூண்டி என்றொரு கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமம் தென்னாற்காடு எல்லைக்கு உட்பட்டதாக

இருந்தாலும், வடஆற்காடு வேட்டவலம் ஜமீனுக்குச் சொந்தமான கிராமம் இது. அந்த ஊரில் கூட்டம் கீட்டம் எதுவும் ஜமீனின் அனுமதி இன்றி நடத்த முடியாது. கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்திற்கு நிரந்தர தடைதான்.

13 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த ஊரில் ஒரு விவசாய சங்கக் கூட்டத்திற்கு ஏற்பாடாகி இருந்தது. அதில் பேச கவிஞர் அழைக்கப்பட்டிருக்கிறார்.

ஊரில் இரண்டே இரண்டு வீடுகள் தளம் போட்டவை. மற்றெல்லா வீடுகளும் காவட்டம் புல்வேய்ந்த கூரை வீடுகளே. வேட்டவலம் ஜமீன் மேனேஜர் மற்றும் ஊர்நாட்டாமை ஆகிய இருவரது வீடுகள்தான் அந்த இரண்டு மாடி வீடுகளும்.

ஊரில் மற்ற எல்லோரும் குத்தகை விவசாயக்குடிகள். பெரும்பாலும் வன்னியர்களும் தாழ்த்தப்பட்டவர்களும். இதில் கொஞ்ச நிலத்தைக் கோயில் நிலம் என்பார்கள். அந்தக் கோயில் நிலத்தைக் குத்தகை வாங்காமல் இனாமாக உழுது பயிரிட்டுத் தந்துவிட வேண்டும் குத்தகை விவசாயிகள்.

மாடுகளைப் பராமரிப்பது மட்டுமே விவசாயிகள் வேலை. மாடுகள் சொந்தம் ஜமீனுக்கு.

இந்த நிலையில் —

வண்டியில் ஒலிபெருக்கி கட்டி கூட்ட அறிவிப்புகளைத் தெருத் தெருவாகச் சென்று செய்துகொண்டிருக்கும்போது — ஜமீன் ஆட்கள் வண்டியை நிறுத்தி மாட்டை ஓட்டி சென்றுவிடுகின்றனர். பிறகு பக்கத்தூருக்குப் போய் மாடு ஓசி வாங்கி வந்து வண்டியில் கட்டி அறிவிப்புகள் தொடர்கிறது. இதனால் 7 மணிக்கு ஆரம்பிக்க வேண்டிய கூட்டம் 9 மணிக்குத் துவங்குகிறது.

''எல்லா நெலங்களும் ஊர்ல ரெண்டு பேருக்குதான் சொந்தம். அந்த ரெண்டு பேரும் உழைக்கிறதில்ல. அவர்களுக்கும் உழைத்துச் சோறு போடுவது நீங்கள். ஆனால் அவர்கள் நெனப்பு என்னன்னா ஒங்க எல்லோருக்கும் அந்த ரெண்டுபேரும் சோறு போடறாப்புல. நீங்களும் அதை நம்பிக்கிட்டிருக்கீங்க.

உண்மை என்னாங்கிறத நீங்க தெளிவா நெனச்சா போதும். நெலமை தலைகீழாகி சரியாயிடும். சாயங்காலம் நடந்த மாதிரி வண்டிமாட்ட அவுத்துட்டுச் சீப்பை ஒளிச்சு வச்சு கல்யாணத்த நிறுத்த நினைக்கும் முட்டாள்தனமெல்லாம் நடக்காது''


40


41

42



43

44

45



46

47



48

49
திருச்சி தியாகராசன்
நூல்கள் வெளியீட்டு விழா
Y.M.C.A சென்னை

50
கலைமாமணி
Y.M.C.A

51

52

53

54

'தங்களோடைய நிலத்தயே கோயில் நிலமுன்னு சொல்லி, எனாமா ஒழைக்க வச்சு சுரண்டி கொழுப்பதும் நடக்காது. அதுக்கெல் லாம் நாம கொஞ்சம் முழிக்க வேண்டும்' என்று கூட்டத்தில் பேசுகிறார் கவிஞர்.

இரவு 12 மணிக்குக் கூட்டம் முடிந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது மோர் இருக்கான்னு கவிஞர் கேட்க — நாங்க பால் மாடெல் லாம் வளக்க முடியாதுங்கய்யா. வளத்தா பால் மாடெல்லாம் வளக்கிற அளவுக்கு வசதியாயிட்டா நிலத்துல ஒடம்பு வணங்காது என்று சொல்லி நெலத்துவுட்டு வெளியேத்திடுவாங்கன்னு சனங்க சொன்ன தைக் கேட்டு இப்படியும் ஒரு ஆதிக்கமா எனக் கவிஞர் அதிர்ச்சியடை கிறார்.

இரவு ஒருமணி இருக்கும். தெருவுல கயித்துக் கட்டலப் போட்டுப் படுத்துக் கொண்டு தோழர்களோடு பேசிக் கொண்டிருக்கையில் —

நாற்பது ஐம்பது பேர், எதிர்கட்சி ஆட்கள் கத்தி கடப்பாறையோடு 'டேய்... யாருடா அவன் கூட்டம் பேச வந்தவன்' என்று காட்டுக்கூச் சல் போட்டுக்கொண்டு வருகிறார்கள்.

இதைப் பார்த்த ஊர் சனங்க — கையில கெடச்ச வண்டி மொளை, மம்புட்டி, கழி, கத்தி, கடப்பாறை, பெண்கள் அரிவாள்மணை என்று தூக்கிக் கொண்டு இருநூறுக்கு மேற்பட்டவர்கள் திரண்டு வந்து —

அந்த அடியாட்களை ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை விரட்டியடித் துவிட்டுத் திரும்புகின்றனர்.

இதற்குப் பேர்தான் சோசலிஸ யதார்த்தவாதப் புரட்சி. இந்த யதார்த்தவாத புரட்சி நாடு தழுவி எழுந்துட்டா — இந்தியா ஒரு புரட்சி பூமியாகிவிடும் என்று எண்ணிக் கொண்டார் கவிஞர்.

நிகழ்வு — II

நாகை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.ஜி. முருகையன் கொலை செய்யப்பட்ட பிறகு நடந்த பொது தேர்தலில், நிலப்பிரபுக்களால் விஷம் வைத்துக் கொல்லப்பட்ட களப்பால் குப்பு என்ற கம்யூனிஸ்ட் தோழரின் மகன் கே. முருகையனை ஆதரித்துக் கவிஞர் மற்றும் தா.பாண்டியன் ஆகியோர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். கவிஞரும் வேறு சிலரும் திருவையாறு விடுதி ஒன்றில் தங்கியுள்ளனர். கம்யூனிஸ்ட்டு தி.மு.க. தேர்தல் கூட்டு.

அதே விடுதியில் அதிமுக தோழர்கள் சிலரும் தங்கியுள்ளனர். ஒருநாள் இரு அணியினருக்கும் வாக்குவாதம் முற்றி கைகலப்பில்

முடிந்து விடுகிறது. அங்கு நடந்த சண்டை காரணமாக உள்ளூர் கம்யூனிஸ்ட் தோழர்கள் அனைவரையும் வெளியேற்றி விடுகிறார் விடுதியின் உரிமையாளர். கவிஞர் மட்டும் அங்கேயே தங்கியுள்ளார்.

இதனைத் தெரிந்து கொண்ட அதிமுகவினர் கவிஞரைக் கொன்று பழிதீர்த்துக் கொள்ளும் நோக்கில் ஜன்னல் வழியாகப் பிச்சுவாக்களை வீசுகின்றனர். கவிஞர் மேஜையைக் கொண்டு தடுத்துக் தற்காத்துக் கொண்டிருக்கிறார் —

இதனைக் கேள்விப்பட்டு — கம்யூனிஸ்ட்டு தோழர்கள் திரண்டு வந்து கவிஞரைக் காப்பாற்றுகின்றனர்.

மேற்கண்ட இரு கொலை முயற்சிகளிலுமிருந்தும் தன்னைக் காத்த கம்யூனிஸ்ட் தோழர்களை இப்போது நினைவு கூறும்போதும் தழுதழுத்து விடுவார் கவிஞர். இந்தச் செய்தி ஜனசக்தியில் மிகப் பெரிதாக வெளியிடப்பட்டது.

அது தவிர—

திண்டிவனம் பகுதியில் செஞ்சியை ஒட்டிய கிராமம் ஒன்றில் பொதுக்கூட்டம் பேசிவிட்டு இருட்டில் வயல் வரப்பு ஒன்றில் ஊர் திரும்பிக் கொண்டிருக்கையில் — வரப்பை ஒட்டியிருந்த கிணற்றினைக் கவனிக்காமல் விழுந்துவிட — அதிலிருந்து தோழர்கள் காப்பாற்றியது;

உறவினர் ஒருவர் காது கடுக்கன்களைக் களவாட மயக்கமருந்து கொடுத்துக் கொல்ல முயன்றதிலிருந்து காப்பாற்றப்பட்டது —

காவிரி பெருக்கினால் அடித்து வரப்பட்ட இரண்டு மலைப்பாம்புகள் மாசியம் தோட்டத்தில் ஒதுங்கி கிடக்க, அதில் ஒன்று ஒரு ஆட்டு குட்டியைச் சுற்றிக்கொண்டிருப்பதைப் பார்த்து ஆட்டுக்குட்டியை மீட்கும் யோசனையில் இருக்கும் போது — இன்னொரு மலைபாம்பு கவிஞரின் காலைச் சுற்றப்போகக் காலை உதறி தப்பி ஓடியது என நாலைந்து முறை மரணவாயிலுக்குச் சென்று தப்பி வந்தது — இன்னும்தான் ஆற்றவேண்டிய சமுதாயத் தொண்டு பாக்கியிருக்கின்றது என்பதால்தானோ என எண்ணிக் கொள்வார் கவிஞர்.

பொவுடைமைக் கட்சியிலிருந்து ஒதுங்கிவிட்டாலும் — பல்லாயிரக் கணக்கான குக்கிராமக் கூட்டங்களிலே பங்கு கொண்டது - அங்கேயுள்ள கம்யூனிஸ்ட் தோழர்கள் காட்டிய அளவிட முடியாத அன்பு — கவிஞரின் நெஞ்சத்து நினைவிலிருந்து அழியாத கோலங்கள். யாராலும் அழக்க முடியாத கோலங்கள்.

தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, ''ஊதியம் வாங் காமலா வேலை செய்கிறர்கள்'' என்று அலட்சியமாகப் பலரும் பேசுவதுண்டு. பணம் படைத்தோரின் இந்தக் கருத்து கவிஞரின் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. மே தின விழா ஒன்றில் தொலைக்காட்சியில் கவிதைப் பாட அழைக்கப்பட்ட போது - இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் கீழ்கண்ட வரிகைளப் பாடியதைக் கவிஞர் எப்போதும் நினைவுக் கொள்வார்.

ஒரு பறவை முட்டையிட்டு அடையைக் காக்க
மறு பறவைக் கூடு கட்டி தருவ துண்டா?
ஒரு மிருகம் இரையுண்டு பசியை யாற்ற
மறுமிருகம் உணவினையே குவிப்ப துண்டா?
ஒரு பக்கம் ஊதியத்தைப் பெற்ற போதும்
உழைக்கின்ற தொழிலாளி நிலையைக் கண்டால்
திரியொன்று எண்ணெயினை குடித்த போதும்
எரிந்தெரிந்து ஒளிவீசும் தியாகம் தானே?

20	'தியாகிகள் ஓய்வூதியமும் வாழப்பாடியார் உதவியும்'

தியாகிகள் ஓய்வூதியம்' பெறுவதில் மிகுந்த தயக்கம் கொண்டிருந் தார் கவிஞர். சுதந்திர போராட்டத்திற்கான தனது பங்களிப்பு என்பது ஒரு இரண்டாண்டுகாலத் தலைமறைவு வாழ்க்கை மட்டுமே. இதற்குப் போய் ஊதியம் கேட்பதா என்பதே அந்தத் தயக்கத்திற்கான காரணம். இதனால் அத்திட்டம் அரசால் அறிவிக்கப்பட்ட பின்னரும் சில ஆண்டுகள் அதற்கான விண்ணப்பம் எதுவும் அனுப்பவில்லை. மேற்கண்ட காலகட்டத்தில் கவிஞரின் குடும்பம் மிகவும் வறுமை நிலையில் இருந்தது. இருந்தாலும் இது தொடர்பான முயற்சியில் ஈடுபடவில்லை.

கவிஞரின் சுதந்திர போராட்ட பங்களிப்பையும், அவரது குடும்பத் தின் பொருளாதார சூழலையும் அறிந்த நண்பர்களான ஏ.சி.சாமி போன்றோர் கவிஞரைத் தொடர்ந்து வற்புறுத்தியதன் காரணமாக — அரை மனதோடேயே இந்த முயற்சியில் இறங்கினார். ஒருவர் தியாகிகள் ஓய்வூதியம் பெறும் விண்ணப்பத்துடன் — சிறையில்

இருந்ததற்கான சான்றையோ; தலைமறைவு வாழ்க்கையில் இருந்ததற்கான சான்றையோ அரசு ஆவணத்துறையிடமிருந்து பெற்று அனுப்ப வேண்டும். இவை பெரும்பாலான சிறைகளில் அழிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் சில தியாகிகளின் பெயரை வெளியிட்டு அவர்களிடமிருந்து சான்று பெற்று அனுப்பினால் போதுமென்றும் அறிவித்தது. திருச்சியில் கவிஞரின் சுதந்திர போராட்ட தலைமறைவு வாழ்க்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தவர்களான திருச்சி டி.எஸ். அருணாசலம், திரு.தாடி ராமசாமி, திருச்சி. ரத்தினவேலு தேவர் போன்றவர்கள் மறைந்துவிட்ட நிலையில் யாரிடம் சான்று பெறுவது என்ற சிக்கல். இவர்கள் இருந்தாலும்கூட இவர்கள் சான்றளிக்க தக்கவர்களென அரசு அங்கீகாரப் பட்டியலில் இடம் பெற்றிருக்க வேண்டுமே?

கடைசியாக சுபாஷ்சந்திரபோஸ் அவர்களுடன் சென்னைச் சிறையில் இருந்த சுதந்திர போராட்ட தியாகி T.M. மாணிக்கம் அவர்களும், Dr. கண்ணன் அவர்களும் கவிஞரின் தலைமறைவு வாழ்க்கை விபரங்களை அறிந்தவர்கள். ஆதலால் அவர்கள் சான்றளித்தனர்.

விண்ணப்பம் தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்டு — தில்லி அரசுக்கு மேலனுப்பப்பட வேண்டும். அரசாங்க அலுவலகங்கள்தான் தெரியுமே? அதுவும் இன்றிருப்பவர்களுக்குத் தியாகிகளின் மரியாதைப் பற்றி என்ன தெரியும்? ஏதோ தகுதி இல்லாமல் சலுகைக்கு அலைகிறார்கள் என்ற அலட்சியம். இதையெல்லாம் மீறி தில்லிக்குச் சென்றுவிட்டது விண்ணப்பம்.

உள்ளூர் அரசாங்கம் பரிந்துரைத்து அனுப்பிய பின்னர் மத்திய அரசாங்கம் இதில் பரிசீலிக்க என்ன இருக்கிறது என்று தோன்றும்? ஆனால் பரிசீலனை என்ற பேரில் பல வருடங்கள் உருளும்! சில தியாகிகள் காலமாகியும் விடுவார்கள்.

அரசே இவர் பரிந்துரைக்க தகுதி பெற்றவர் என்று நிர்ணயித்து விட்ட பின்னர் — ஒவ்வொருவரும் இவ்வளவு பேருக்குத்தான் சான்றுரைக்க வேண்டுமென அளவீடு செய்வது எவ்வளவு முட்டாள் தனம். அதெல்லாம் வெட்கமில்லாமல் செய்யும் அரசாங்கங்கள். பொய் சான்று ஒருவர் கொடுக்கிறார் என்று நிரூபிக்கப்பட்டால் அவரைப் பட்டியலிலிருந்து நீக்க வேண்டுமே தவிர —

இவர் அதிகமாகக் கொடுத்துவிட்டார் இன்னொருவரிடம் சான்று பெற்றுவாருங்கள் எனக் கடிதம் அனுப்பி ஓய்வூதிய விண்ணப்பத்தை முடக்குவது எவ்வளவு கொடுமை. அதையும் செய்தது அரசு.

இதையெல்லாம் மீறி — இந்த ஓய்வூதியத்தைப் பெறுவதற்குச் சுதந்திர போராட்டத்தில் செய்த தியாகத்தைவிடத் தற்போது இரண்டு

மூன்று மடங்கு கூடுதலான தியாகங்களைச் செய்ய வேண்டியுள்ளது. தனது ஓய்வூதிய விண்ணப்பம் தில்லியில் காலதாமதமாகிறது எனவும், அதை விரைவுபடுத்தி உதவவேண்டுமெனவும், பாராளுமன்ற உறுப்பி னர் திரு.வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களிடம் கேட்டுக் கொண்டார் கவிஞர்.

'தில்லிக்கு வாருங்கள்' என்கிறார். கவிஞரின் நிலமை அவருக்குத் தெரியுமா என்ன? இருந்தாலும் அவர் சொன்னபடி தில்லி செல்கிறார் கவிஞர். எங்கே தங்க முடியும்! நேரே — வாழப்பாடியாரின், பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பான — 93 வடக்கு வளாகத்திற்குதான் செல்கிறார்.

குடியிருப்பு கொள்ளாமல் கூட்டம். பல தலைவர்கள் வந்து விவாதித்துச் செல்கின்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த பல ஊர்களிலி ருந்து உதவி நாடி வந்தவர்கள் சூழ்ந்து உதவி கேட்டுக் கொண்டிருக்கி றார்கள். வாழப்பாடியார் சொல்லச் சொல்ல இரண்டு தட்டச்சர்கள் பரிந்துரை கடிதங்களைத் தட்டச்சு செய்து கையெழுத்து வாங்குகின்ற னர். தொலைபேசி செய்தியைக் கேட்கவும், பதில் சொல்லவும் வாழப்பாடியாரிடம் கொண்டு வந்து தரவும் ஒருத்தர். ஓய்வின்றிச் சிணுங்கிக் கொண்டிருக்கிறது தொலைபேசி.

இந்தக் கூட்டத்தில் தன்னை எங்கே நினைவு வைத்திருக்கப் போகிறார் — சொன்னாலும் பிரச்சனையை உள்வாங்கும் சூழல் இல்லையே என்கிற தயக்கத்தில் நிற்கிறார் கவிஞர். தலை நிமிர்ந்து பார்த்த வாழப்பாடியார் —

''வாங்க கவிஞரே...! எப்ப வந்தீங்க... எங்கே தங்கியிருக்கிறீங்க' என்கிறார். என்ன சொல்வது என்று தயங்கும்போதே புரிந்து கொண்டு —'' இந்தக் கூட்டத்தில் ஒண்டி பழக்கப்பட்டுக்க முடியுமானால் இங்கேயே தங்கிக் கொள்ளுங்க. இன்றைக்கே ஒங்க விஷயமா அமைச்சரைப் பார்த்துவிடுவோம்'' என ஜெட் வேகத்தில் முடிவுகள் தெரிவிப்பதைப் பார்த்துக் கவிஞர் அசந்து விடுகிறார். வாழப்பாடியார் ஒரு வித்தியாசமான மனிதராக இருக்கிறாரே என்று எண்ணிக் கொள்கிறார் கவிஞர்.

அன்றே அமைச்சரிடமும் அழைத்துச் சென்று பரிந்துரை செய்கி றார். பாராளுமன்ற உறுப்பினர் பரிந்துரைத்தும்கூடக் காரியம் உடனடி யாக நிறைவேறிடவில்லை. இதுதான் இந்தியா.

இது தொடர்பாக மேலும் பல முறை கவிஞர் டெல்லி செல்ல வேண்டிய நிலை. கவிஞர்தான் வாழப்பாடியாரைத் தொந்தரவு செய்கி

றோமோ என்ற தயக்கத்தில். அவர் அதை அப்படிக் கருதியதோ முகமாறுபட்டதோ ஒரு நாளுமில்லை.

இப்படி ஒருமுறை சென்ற போது சிந்தாமணி பாணிக்கிரகி என்ற அமைச்சரிடம் அழைத்துச் செல்கிறார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலி ருந்து காங்கிரசுக்கு வந்த தியாகத்திற்காக அமைச்சராகி இருப்பவர். ஒரிசாக்காரர். நம்ம ஊர் மோகன் குமாரமங்கலமும் இப்படிப்பட்ட தியாகம் செய்து அமைச்சரானவர்தான்.

சிந்தாமணி பாணிக்கிரகியிடம் கவிஞரைக்காட்டி ‘இவரும் ஒங்க கட்சிகாரர்தாங்க. இதற்காக இந்த வயதில் பல முறை டெல்லி வந்துவிட்டார். இவர் அடுத்த முறை இதற்காகத் தில்லி வந்து அலையாமலிருக்க உதவுங்கள்’ எனக் கேட்டுக் கொண்டார் வாழப்பா டியார்.

விண்ணப்பத் தேதியிலிருந்து — முன் தேதியிட்டு ஓய்வூதியத்தை வழங்குவதற்கான மத்திய அரசு ஆணை ஓரிரு வாரத்தில் வந்துவிடுகி றது. இதற்கிடையில் அமைச்சர் மாறிவிடுகிறார். புதிதாகப் பொறுப் பேற்ற சந்தோஷ் மோகன் தேவ் ஆணையிடுகிறார். வாழப்பாடியார் இந்தமுறை கடைபிடித்த அணுகுமுறை நல்ல பயன்தந்துவிட்டது. இந்த முதுமை காலத்தில் யார் கையையும் எதிர்பார்க்காமல் — ஓரளவு பொருளாதார நிம்மதியோடு வாழ முடிகிறது என்றால் — அது வாழப்பாடியார் செய்த உதவியால் வந்த நிலை என நன்றியுடன் நினைவுகூர்வார் கவிஞர்.

இந்த ஒரு மனுசன் தாங்க தன் வீட்டை அலுவலகம் போலச் செயல்பட வைத்துக் கொண்டு கும்பலுக்கு மத்தியில் கும்பலில் ஒன்றாய் வாழ்கிறார். அவனவன் எம்.பி. பதவி கிடைத்தால் போது மென ராஜாவாகிவிடுகிறான். தனது குடியிருப்பையும் ஏழைப்பா ழைங்க ஏறிவரப் பயப்படும் அரண்மனையா மாத்திக்கிறாங்க என்று தன் இயல்பான போக்கில் பேசுவார் கவிஞர்.

வருகிறவர்களைச் சளைக்காமல் வரவேற்கும் பண்பும், விபரம் கேட்டறியும் பாங்கும், உரிய அமைச்சரகத்திற்குக் கோரிக்கைகளைத் தன் பரிந்துரை கடிதத்தோடு அனுப்பி வைக்கும் பொறுப்பும், பதில் வரும்வரை தொடர் நடவடிக்கை எடுத்து — இறுதி பதில் உந்தவுடன் உரியவருக்கு அனுப்பி வைக்கும் கடமையுணர்வும், தொண்டர்களை என்னய்யா என்று உரிமையோடு பெயர் சொல்லி அழைத்துப் பேசும் நினைவாற்றலும் —

தமிழ்க் காங்கிரஸ் சகாப்தத்தில் இவர் புதிய காமராசரா வளர்ந்து கிட்டு வாராருன்னு தோணுதுங்க என்பார் கவிஞர்.

காவிரி பிரச்சினைக்காக மத்திய அமைச்சர் பதவியை — அது வந்து கருக்கழியும் முன்பே தூக்கி வீசியெறிந்து தமிழக நலனுக்காக உரிமை குரல் எழுப்பினாரே அது — ஒரு வரலாற்று நிகழ்ச்சிங்க. லஞ்சக் குற்றச்சாட்டுக் கூறி குண்டுகட்டா கட்டி தூக்கி எறிஞ்சாலும் ஓடிவந்து ஒட்டிக்கிறவனுங்களும், மந்திரி பதவிக்காக மண்டியிட்டுத் தவங்கிடக்கிறவங்க மத்தியிலே —

மாநில நலனுக்காக மத்திய மந்திரி பதவியைத் தூக்கி எறிந்த அந்த மனத்துணிவையும் — தியாகத்தையும் எதற்கு ஈடுசொல்ல முடியும்?

ஒருநாள் இந்த மாநிலத்தின் தலையெழுத்தை மாற்றியமைக்கப் போகிறவர்... இன்றைய இளைய காமராசர் என்று வேண்டுமானால் சொல்லலாங்க என்பார் கவிஞர். வாழப்பாடியார் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர் கவிஞர். தனுக்கு உதவினார் என்பதற்காக அல்ல. யாருக்கும் உதவும் மனம் கொண்டிருக்கிறாரே அதற்காக.

இந்த ஆண்டு மே திங்களில் — தில்லியில் வாழப்பாடியார் சார்ந்திருக்கும் அர்ஜுன்சிங் காங்கிரஸ் பேரணி, இதைப்பார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தில் கவிஞர் புறப்படுகிறார்.

திடலுக்கு முன் நின்று ஊர்வலம் வருவதைப் பார்க்கிறார். தலைவர் வாழப்பாடியார் வாழ்க என்ற முழக்கங்களுடன் ஊர்வலம் திடலை அடைகிறது. ஊர்வலத்தில் பெரும்பகுதி தமிழக முகங்கள். திடலை அடைந்தவுடன் மைக்கின் முன் நின்று எழுப்பப்பட்ட வாழ்த்து முழக்கம் 'வாழ்க வாழப்பாடியார்' என்பதுதான். அதைப் பார்த்த போது இது என்ன சென்னையா — தில்லியா என்ற மயக்கம் கவிஞருக்கு.

சென்னையில் கூடக் காங்கிரசுக்கு வராத கூட்டம், தில்லிக்கு வந்திருக்கிறது என்றால் — வாழப்பாடியாரின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் தொண்டர்கள் என்றே அர்த்தம். தங்கள் தலைவனுக்கு ஒன்று உற்றக்கால் — அது தங்களுக்கே நேர்ந்ததாக உணரும் கூட்டம் அந்தக் கூட்டம்.

இதேபோல் —

வாழப்பாடியார் பிறந்த நாளுக்காகச் சென்னையில் நடத்தப்பட்ட பேரணியைப் பார்த்தபோது — சாலை ஓரம் நின்ற மக்கள் 'என்னய்யா இது திராவிட கட்சிங்க ஊர்வலம் மாதிரி இருக்கு. இத்தனை நாளும் இந்தக் காங்கிரஸ்காரங்க எங்கய்யா இருந்தாங்க என வியந்து பேசிக் கொண்டனர்.

இதையெல்லயாம் பார்த்த கவிஞர் சொன்னார் —

''கால் வண்ணம் அங்குக் கண்டேன் —உன்
கை வண்ணம் இங்குக் கண்டேன்''

கம்பன் — ராமனுக்கு அன்று பாடியது வாழப்பாடியாருக்கு இன்று பொருந்தும் என்றார் கவிஞர்.

21 வெளிமாநிலத் தொடர்புகள்

'தியாகிகள் ஓய்வூதியம்' தொடர்பாகத் தில்லிக்குப் பலமுறை செல்ல நேர்ந்தது — வேறு ஒரு வகையில் நன்மையாய் அமைந்தது. தில்லிவாழ் தமிழ் ஆர்வலர்கள், இலக்கியவாதிகள் சந்திப்பும் நட்பும் கிடைத்ததுதான் அது.

கவிஞருக்குச் சான்றளித்து தியாகிகள் ஓய்வூதியம் பெற வழிவகுத்த — தியாகி டி.எம். மாணிக்கம் அவர்கள் தில்லி செல்லும் போதெல்லாம் பென்ஷன் தொடர்பான முயற்சிக்காக — அவரது பயண அனுமதிச் சீட்டிலேயே கவிஞரையும் அழைத்துச் சென்று விடுவார். எனவே —

பயணச் செலவுக்குக் காசு தேவையில்லை. தங்குவதற்கு வாழப்பாடியார் குடியிருப்பு இருக்கிறது. சாப்பாடு மற்றும் இதர செலவிற்கு என்ன செய்வது?

தில்லி செல்லும் போதெல்லாம் தனது கவிதை நூலான 'வெளிச்சத்தையும்' இசைபாடல் தொகுப்பான ''செங்கீதத்தையும்'' எடுத்துச் சென்று வாழப்பாடியாரைத் தேடிவரும் இலக்கியவாதிகளிடம் விற்றுச் செலவினை மேற்கொள்வார். இப்படிப் புத்தகம் வாங்கி — அதன் காரணமாகப் பழகி நண்பர்களானவர்கள்தான் தில்லி நண்பர்கள்.

'தில்லி தமிழ்க் கல்வி சங்கம்' (Delhi Tamil Education Association) தில்லியில் ஒரு தமிழ்ப் பள்ளியை நடத்துகிறது. தமிழரசு என்பவர் அப்பள்ளியில் தமிழாசிரியர்.

வாழப்பாடியார் வீட்டிற்கு வந்தபோது கவிஞரின் நூல்களை வாங்கிப் படித்துப் பழகி நண்பராகிறார். அவர் நட்புதான் தில்லி நட்பு வட்டத்தை விரிவாக்க உதவியது.

திராவிடக் கழகத்தின் மற்றொரு பிரிவான — பெரியார் சம உரிமைக் கழகத்தின் தலைவர் ஆனைமுத்து, திருச்சிக்காரர். இந்த அமைப்பின் தில்லி பிரிவு தலைவராக இருப்பவர் — தமிழரசு. தில்லியில் உள்ள தனது பள்ளியில் பேச வைக்கிறார் கவிஞரை. கவிஞருக்குத் தில்லியில் ஒரு பெரிய நட்பு வட்டத்தை உருவாக்க உதவியது இந்தப் பேச்சுதான்.

இதன் காரணமாக —

பின்னர் —

தில்லியில் உள்ள முற்போக்குச் சிந்தனையாளர் மன்றம்;

காமராசர் பௌண்டேசன்;

அம்பேத்கார் பௌண்டேசன்;

தில்லி தமிழ்ச் சங்கம்;

தில்லி பப்ளிக் சர்வீஸ் கமிஷன் அலுவலர் சங்கம்

ஆகிய அமைப்புகளில் எல்லாம் கவிஞர் பேசுகிறார். இதற்கான தொடர்புகளையும், ஏற்பாடுகளையும் செய்தவர் தமிழரசு அவர்களே.

நாடாளுமன்ற வளாகத்தில் இந்திரா காந்தி நினைவுநாள் சொற் பொழிவு ஒன்றையும், நாடாளுமன்ற வடக்கு வளாக சிற்றுண்டி கூடத்தில் கன்சிராம், ஆனைமுத்து போன்றோருடனும் சொற்பொழி வாற்றும் வாய்ப்புகள் ஏற்பட்டது.

பல கூட்டங்களுக்கும் வந்திருந்த கவிஞரின் பேச்சினைக் கேட்ட அம்பேத்கார் பௌண்டேசன் தலைவரான மனோகர் பிரசாத் என்ற தமிழர் — அம்பேத்கார் பௌண்டேசனிலும் பேச வைக்கிறார்.

இதனால் தில்லியில் நண்பர்கள் வட்டம் பெருகி —

தில்லியும் சென்னையாகி விட்டது கவிஞரின் பேச்சைப் பொறுத்த வரை.

தியாகிகள் பென்ஷன்; பயண அனுமதிச்சீட்டு முதலியவை கிடைத்த பின்னர் பல மாநிலங்களில் பயணம் செய்யும் வாய்ப்பும், அந்த மாநில மக்களோடு பழகும் வாய்ப்பும், குறிப்பாகப் பிற மாநிலங்களில் வாழ் தமிழர்கள் தொடர்பு, அவர்களது தமிழ்ச் சங்கங்களில் பேசும் வாய்ப்பும் பெருகின.

பயணங்கள் மனித தொடர்புகளைப் பெருக்கித் தருகிறது. மன வளங்களைப் பண்படுத்தி செழிக்கச் செய்கிறது. தமிழ்நாட்டில் நாலாயி

ரம் கூட்டங்கள் வாயிலாகப் பல்லாயிரக் கணக்கான கிராமங்களையும் பல லட்சம் மக்களையும் சந்திக்கும் வாய்ப்பினைக் — காங்கிரஸ் கட்சி வாயிலாகவும், பெருமளவில் கம்யூனிஸ்ட் கட்சி வாயிலாகவும் பெற்றவர் கவிஞர்.

தியாகிகள் ஓய்வூதிய பாஸ் வசதி காரணமாக —

காஷ்மீர், சிம்லா, ராஜஸ்தான் (ஜெய்ப்பூர், தார் பாலைவனம் வரை) அரியானாவில் சண்டிகார், அமிர்தசரஸ், உத்திரப் பிரதேசத்தில் லக்னோ காசி, மேற்கு வங்கத்தில் கல்கத்தா போன்ற இடங்களுக்கெல் லாம் விரிவான பயணம் மேற்கொள்ளவும் அங்குள்ள தமிழ்ச் சங்கங்க ளோடு தொடர்பு கொள்ளவும் வாய்ப்புகள் பெருகியது. ஓய்வூதியப் பாஸ் இல்லையென்றால் இந்தப் பயணங்களை நினைத்தும்கூடப் பார்த்திருக்க முடியாது கவிஞரால்.

சண்டிகரில் உள்ள ராக் கார்டன், லேக் போன்றவற்றைப் பார்த்து மகிழவேண்டியவை. ஒரு சிங் கடையில் — தில்லியில் எலக்ட்ரானிக் சாமான்களை வாங்கிக் கொண்டிருக்கிறார். அப்போது பக்கத்துக் கடையில் 'குர்பானி' இசை கேட்கிறது. அந்த இசைத்தட்டு எங்கே கிடைக்கும் என்று கவிஞர் கடைக்காரரிடம் கேட்கிறார்.

'வாங்கப் போகிறீர்களா' கடைக்காரர்.

'ஆமாம்' கவிஞர்.

அந்தக் கடைக்கார முதலாளியே எழுந்துபோய் வேறு கடையிலி ருந்து அந்த கேசட்டை வாங்கி வந்து கொடுக்கிறார்.

'எவ்வளவு' என்று கவிஞர் கேட்டதற்கு 'அன்பளிப்பு' என்று கூறி புன்னகைக்கிறார் கடைக்காரர்.

தம் மத பாடல்களை இன்னொருவர் விரும்பி கேட்கிறாரே என்பதனால் ஏற்பட்ட மரியாதையும், அதைப் பரிசாக அளித்து அவர் கொண்ட 'பெருமிதமும்' தமிழர்களாகிய நாம் பஞ்சாபிகாரர்களிடமி ருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் என்றார் கவிஞர்.

சீக்கிய மத கோட்பாடுகள் அனைத்தும் கிரந்தங்களால் (கவிதை) ஆனவை. எனவே சீக்கிய மதத்தைக் கவிதை மதம் என்பார்கள்.

பொற்கோவிலுக்குச் செல்லும்போது கவிஞரின் நண்பரும், சீக் கிய மதத்திற்கு மாறியவருமான கந்தசாமி சிங் என்பவர் கவிஞருடன் சென்றிருக்கிறார். கவிஞர் இரண்டு மூன்று நாட்கள் பொற்கோயிலில் தங்கியிருந்த அனுபவமும் உண்டு. பொற்கோயிலில் தங்குபவர்க ளுக்கு அங்கேயே உணவு படைக்கப்படுகிறது.

கவிஞர் — பகத்சிங்கிடம் இளமை முதல் ஈடுபாடு மிக்கவர். எனவே அமிர்த சரசிலிருந்து சென்று பகத்சிங் ஊரைக் காண விரும்புகிறார். கட்கட்கலன் என்ற கிராமம்தான் பகத்சிங் பிறந்த கிராமம். பகத்சிங் பிறந்த இல்லம் நினைவுச் சின்னமாக்கி பாதுகாக்கப் பட்டு வருகிறது. அதனைப் பார்த்துத் திரும்பின நினைவு — நினைக்கும் போதெல்லாம் பெருமை கொள்ள வைப்பது என்கிறார் கவிஞர்.

கர்நாடகாவில் — தங்கவயல், பெங்களூர் போன்ற ஊர்களிலும்

ஆந்திராவில் — சித்தூர் போன்ற இடங்களிலும் சொற்பொழிவாற் றியுள்ளார்.

பம்பாயில் உள்ள பிச்சையா என்பவர் சனசக்தி விற்பனையாளர். பின்னர் அவர் வசதியாகி — தன் மகன் திருமணத்திற்குக் கவிஞரை அழைத்துத் தலைமை தாங்க செய்ததும், செம்பூர், குர்லா போன்ற இடங்களில் உள்ள கலை இலக்கிய பெருமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவும் ஏற்பாடு செய்தார்.

இந்த வெளிமாநில தொடர்புகள் அனைத்திற்கும் தியாகிகள் ஓய்வூதியப் பென்சனுடன் வழங்கப்படும் 'பாஸ்' வசதிதான் முக்கியக் காரணம்.

22 கவிஞர் வாழ்வில் மணம் வீசும் நட்புமலர்கள்

'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்' கவிஞரைத் தாங்கிப் பிடித்ததில் உறவினர்களைவிட நண்பர்களே அதிகம் என்பார் கவிஞர். கவிஞரின் வாழ்வில் மணம் வீசும் அந்த நட்பு மலர்களை நினைந்து போற்றுவது சுகத்திலும் சுகம் என்பார் கவிஞர்.

1. கே. குருமூர்த்தி

இவர் ஒரு பர்மா தோழர். இவரது தந்தையார் INA சுதந்திர போராட்ட தியாகி. ஆன்மீகவாதி. சமயவாதி. ஆரம்பத்தில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றிப் — பின்னர் தனியாகத் தொழில் தொடங்கி கடின உழைப்பால் முன்னேறி வந்துள்ளார்.

மனித நேயமும் இலக்கிய ஆர்வமும் கொண்டவர். கவிஞரின் சமுதாய சாட்சி நூலைப்படித்துவிட்டு — அவரே கவிஞரைத் தேடி வந்து நட்பு ஏற்படுத்திக் கொண்டவர். கவிஞரின் ஆறறிவின் அலங் கோலம், வெளிச்சம் (இரண்டாம் பதிப்பு) வெளியிடப் பொருளுதவி யும், வெளியீட்டு விழாவும் நடத்தி சிறப்பித்தவர். கவிஞரின் பவள விழா ஏற்பாடுகளை முன்னின்று செய்து வருபவரும் இவரே.

2. டி.வி. புண்ணியநாதன்

சென்னை ரயில்வே அலுவலகத்தில் கைரேகை ஆய்வாளராகப் பணியாற்றியவர். கவிஞருக்கு நெருங்கிய நண்பர். நீலகிரி மாவட்டம் படுகர் இனத்தைச் சேர்ந்தவர். கவிஞரின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். கவிஞர் ரயில்வே பணியிலிருந்து விருப்ப ஓய்வில் சென்றபோது — அவர் பெற்ற ரூ.3000/-த்தோடு இன்னொரு மூவாயிரம் தந்து ஆட்டோ வாங்கிக் கொள்ள உதவியர். அந்தத் தொகை அன்றைய நிலையில் மிகப் பெரியதொகை. ஒரு கையெழுத் துக்கூட வாங்காமல் நம்பி அந்தத் தொகையைக் கொடுத்து உதவிய அவரது நல்லெண்ணம் தன் வாழ்நாளில் மறக்க முடியாது என்கிறார் கவிஞர்.

3. அரு சங்கர், பி.எஸ்ஸி:

காங்கிரஸ் நண்பர், இரும்பு, பருப்பு வகைகள் வியாபாரம். தமிழ், இலக்கியத்தில் காதல் கொண்டவர். தற்போது முருகத் தனுஷ்கோடி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தாளாளாராக இருக்கிறார். அன்னை கலை இலக்கிய மன்றத்தின் புரவலர்.

கவிஞருக்குக் கலைமாமணி விருது கிடைத்தபோது — ராயபுரத் தில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடத்தி பாராட்டினார். திருக்குறள் முனிசாமி, வ.உ.சி. சுப்பிரமணியம், சிவாஜி கணேசன் போன்றோரை யெல்லாம் அழைத்து அமர்க்களப்படுத்தினார்.

இதேபோல் —

கவிஞரின் வெளிச்சம் நூலை பெருமளவில் விற்பனை செய்து கொடுத்தவர். அவரது உதவிகளை வாழ்நாள் நினைவாகப் போற்றுகி றார் கவிஞர்.

4. புலவர் தி.ராசகோபாலன்:

குறள் நெறிச் சான்றோர், இந்திரன் சாட்சிக் கதைகள், புத்தரின் அடியொற்றி முதலிய பல நூல்களின் ஆசிரியர், கவிஞர் வாழும் மகாகவி பாரதி நகருக்குப் பக்கத்தில் வியாசர் பாடியில் வாழ்ந்து

வருபவர். காஞ்சிபுரத்தில் பிறந்து வளர்ந்தவர். இவரது வரலாறு துயரமானது.

ஓரளவு நிலபுலன்கள் உடையவர் இவரது தந்தை. எல்லாச் சொத்துகளையும் குதிரைப் பந்தயத்தில் தொலைத்துவிட்டார். மிஞ்சியி ருந்தது ஒரே ஒரு ஏக்கர். தந்தைக்கு ஒரே பிள்ளை ராசகோபாலன். ஒருநாள் ராசகோபாலன் ஒரு விபத்தில் சிக்கிவிட்டார். இவரை மருத்துவமனையில் சேர்த்த தந்தை — தன் மகன் இறந்துவிட்டதாகப் பொய்யாவணம் தயாரித்து அந்த ஒரு ஏக்கர் நிலத்தையும் விற்றுச் சூதாட்டத்தில் தொலைத்துவிட்டார். — இவரது தந்தையைப் பற்றி என்ன சொல்ல.

பிழைத்து வந்த ராசகோபாலன் — காஞ்சிபுரத்தை விட்டு சென்னை வந்து, கஷ்டப்பட்டுத் தன் மனைவியையும் படிக்க வைத்து ஆசிரியராக்கிய மனோ தைரியம் மிக்கவர். இருவரும் தமிழாசிரியர்க ளாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டனர்.

சமுதாயப் பணியாற்றுபவர்களுக்கு எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் பொருள் உதவி புரிவதில் மனம் மகிழ்வு காண்பவர் கள். கவிஞரின் நூல்கள் வெளிவர முன்பண உதவிகள் புரிந்து வருபவர்.

5. கடலூர் கிள்ளிவளவன், பி.ஏ. பி.எல்.;

இவர் ஒரு வழக்கறிஞர். அரங்கேற்றம் பத்திரிகை நிறுவனர். தமிழோசை அச்சகத்தின் உரிமையாளர். பெங்களூர் ஸ்ரீராமபுரத்தில் டெக்கான் ஆங்கிலப் பள்ளியை நடத்தி வருகிறார். இவரது முன்னேற் றம் அனைத்தும் சுய உழைப்பால் வந்தவை.

இவரது மனைவி ஆண்டாள் அவர்களும் ஒரு வழக்கறிஞரே. பள்ளி இறுதிவரை மட்டுமே படித்திருந்த துணைவியாரைத் — தன்னைப் போலவே படிக்க வைத்து வழக்கறிஞராக்கியிருப்பவர். இவர்தான் அரங்கேற்றம் ஆசிரியர். குழந்தை இலக்கியப் படைப்பாளர்.

ராமசாமி படையாச்சியாரின் அண்ணன் மகன். நேர்மையானவர், தன்னிடம் பணியாற்றுபவர்களும், நேர்மையாக இருக்க வேண்டு மென்ற கொள்கையானவர். நேர்மையாக இல்லாதபோது கடுமையாக மாறிவிடுபவர்.

கவிஞரின் சமுதாய சாட்சி நூல் இவரது அச்சகத்தில் அச்சிடப் பட்ட 1987-ஆம் ஆண்டு முதல் நட்பானவர்.

ஆறறிவின் அலங்கோலம், வெளிச்சம் (இரண்டாம் பதிப்பு) ஆகியவற்றை அச்சிட்டபோது பணம் சம்பந்தப்பட்ட வகையில் எவ்வளவோ விட்டுக் கொடுத்து உதவியவர்.

சாதாரண ரயில்வே தொழிலாளியின் மகனாகப் பிறந்து — சுயமுயற்சியால் பெருமுன்னேற்றம் அடைந்திருப்பவர். அவரது அயராத உழைப்பும், நேர்மையும், அன்பும் — கவிஞரின் நெஞ்சில் என்றும் நிறைந்திருப்பவை.

6. தோழர் எஸ்.எம்.ஜெயராமன்:

தென்னாற்காடு மாவட்டம் திட்டக்குடி பகுதியில் சிறுமுளைக் கிராமத்தைச் சேர்ந்தவர். மாவட்ட விவசாயச் சங்கத் தலைவர். நாட்டுப் பாடல்கள் மற்றும் கலை இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர். விவசாயப் பேரணிகளை வெற்றிகரமாக நடத்தும் வல்லவர். காங்கிரசிலிருந்து பொதுவுடைமை இயக்கத்திற்குக் கவிஞர் வந்த காலம் தொட்டுப் பழக்கமுடையவர். தென்னாற்காட்டில் உள்ள பல கிராமங்களுக்கு அழைத்துச் சென்று கூட்டங்கள் நடத்தியவர். தென்னாற்காட்டில் பல தோழர்களும் அறிமுகமானதற்கு இவரே காரணம். இவரது விவசாய சங்கப் பணிகளுக்காக — இவரது மகன் ஜெர்மனி சென்று படித்து வரும் வாய்ப்புப் பெற்றார். இவர் தோழர்களை அரவணைத்து ஆதரவு காட்டி அன்பு செலுத்தும் பாங்கு கவிஞரைக் கவர்ந்தவை.

7. தோழர் ஆர்.முருகேசன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தென்னாற்காடு மாவட்ட செயலாளர். ரயில்வே எஞ்சின் டிரைவர். போர்க்காலத்தில் பஞ்சாப் சென்று ரயில் ஓட்டியவர்.

தற்போது திண்டிவனத்தில் குடியிருப்பு. நெய்வேலி தொழிற் சங்கத்தில் தொடர்பு கொண்டு பணியாற்றி வருகிறார். திரு.எஸ்.எம். ஜெயராமைப் போலவே கவிஞர் மீது பற்றும் பாசமும் கொண்டவர். தென்னாற்காடு கூட்டங்கள் பலவற்றிற்குக் கவிஞரை வரவழைத்துக் கூட்டங்கள் நடத்தியவர்.

8. எம்.ஏ.வேணு

திரைப்படத் தயாரிப்பாளர். எம்.ஏ.வி. பிக்சர்ஸ் நிறுவன உரிமையாளர். சேலம் மாடர்ன் தியேட்டர் ஸ்டூடியோவில் சாதாரணப் பணியாளராகச் சேர்ந்து, படிப்படியாக முன்னேறி புரடக்ஷன் மேனேஜராக வளர்ந்தவர். தனது முதலாளியான டைரக்டர் டி.ஆர். சுந்தரத்திடம் கருத்து வேற்றுமை வந்த போது பதவியை உதறி வெளியேறினார்.

வெளியேறிய போது இவரது பணிக்காக மாடர்ன் தியேட்டர் ஸ்டு டியோ அளித்த தொகையைக் கொண்டு கூட்டுச் சேர்ந்து பட நிறுவனம் ஒன்றைத் துவக்கினார். பின்னர் தனியாகி தன் பெயரிலேயே எம்.ஏ.வி. பிக்சர்ஸ் எனும் பட நிறுவனத்தைத் துவக்கிப் பல வெற்றிப் படங்க ளைத் தயாரித்தவர். இராமாயணம், முதலாளி, பணம் பந்தியிலே, செங்கமலத்தீவு, உல்லாசப் பயணம் எனச் சுமார் 28 படங்களைத் தயாரித்தவர்.

கவிஞரின் திரையுலக இரண்டாம் பிரவேசத்திற்குக் காரணமான வர். செங்கமலத்தீவு, உல்லாசப்பயணம், துளசிமாடம், தங்க வளையல் போன்ற படங்களில் நிறைய சந்தர்ப்பங்கள் அளித்து கைதூக்கி விட்டவர்.

இசையமைப்பாளர் கே.வி.மகாதேவன், நடிகர் எஸ்.எஸ்.ஆர்., ஏவி.எம். ராஜன், கவிஞர் போன்ற பலரின் வளர்ச்சிக்கு வித்திட்டவர். பாகவதர் போன்றோர் நொடித்த போது பலரும் ஒதுங்கி ஓடினார்கள். இவர் ஒருவர்தான் அவரை கைதூக்கி விடும் நோக்கில் பட வாய்ப்பு அளித்த பெருமைக்குரியவர். கார் வைத்திருந்த போதும், கார், பங்களாக்களை இழந்து சைக்களில் செல்ல நேர்ந்த போதும் ஒரே மனநிலையில் இருந்தவர். இது இவரது தலையாய பெருமை.

தற்போது தமது மகன்களோடு தில்லியில் தங்கியுள்ளார். கவிஞர் தில்லி சென்ற போது அவரைச் சந்தித்து மகிழ்ந்தார்.

''உச்சியிலிருந்த போதும் துள்ளிக் குதித்தவரல்ல;
பள்ளத்தில் வீழ்ந்த போதும் புலம்பி கிடந்தவரல்ல''

இவரது அஞ்சா நெஞ்சை யாரிடமும் காண்பது அரிது.

9. சேலம் வாழப்பாடி சந்திரன்

சேலத்தில் ஆத்தூர் செல்லும் வழியில் உள்ளது வாழப்பாடி. வாழப்பாடியார் ஊரும் இதுவே. இவரும் அவரும் உறவினரே.

வாழப்பாடிச் சந்திரன் பொதுவுடமை இயக்கத்தைச் சேர்ந்தவர். ஜீவா அவர்கள் தொடங்கிய கலை இலக்கிய பெருமன்றத்தில் பொறுப் பாளராகவும் இருக்கிறார். ஜீவாவுடன் நெருங்கி பழகியவர்.

கிராமியப் பாடல்கள்; நாடகங்கள் எல்லாம் எழுதியுள்ளார்.

கவிஞர் வாழப்பாடி சென்றால் இவர் வீட்டில்தான் தங்குவார். இவரது மனைவி, மகன், மகள் எல்லோரும் உறவு முறை சொல்லியே பழகுவார்கள். இனிய குடும்பம்.

ஒரு முறை தில்லிக்குக் கவிஞரோடு சென்றுள்ளார். ஜெய்ப்பூர், ஆக்ரா போன்ற இடங்களை எல்லாம் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தார். கவிஞரால் மறக்க முடியாத இனிய தோழர்களில் ஒருவர்.

10. பெ.ராஜேந்திரன்

அண்மைக் காலமாகப் பொதுவுடமை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இளம் வயது தோழர். திறந்தவெளி பல்கலைக்கழகம் மூலம் பி.ஏ. தேர்ச்சி பெற்றிருப்பவர். கவிஞரோடு நெருங்கி பழகுபவர். குடும்ப அங்கத்தினர் போலக் கவிஞருக்குப் பெரும் துணையாய் இருப்பவர். பெரும்பாலான பயணங்களில் உதவியாளரைப் போல உடன் சென்று உதவி புரிபவர்.

நெல்லை மாவட்டம் தளபதி சமுத்திரம் கிராமத்தில் பிறந்து வளர்ந்து சென்னை வந்து தற்போது வீட்டு வசதி வாரிய பம்ப் ஆப்பரேட்டராகப் பணியாற்றி வருகிறார்.

11. திருச்சி எம்.எஸ். நாடார்

தமிழகத்தில் ஆங்கிலப் புலமையில் ஆற்றல் மிகுந்த இவருக்கு இணையானவர் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே. தெப்பக் குளம் அருகில் குமரி தனி பயிற்சிக் கல்லூரி நடத்தி வருபவர். தமிழ் இலக்கியத்திலும் சிறந்தவர். கவிதைப் பிரியர்.

கவிஞர் நூல்களில் ஈடுபாடுடையவர்.

கவிஞர்பால் பல்லாண்டுகளாக அன்பு கொண்டிருப்பவர்.

12. சேலம் கே.பி. விசுவநாதன்

பொதுவுடமை இயக்க கலை இலக்கியப் பெருமன்றத்திலும் தொழிற் சங்க அமைப்புகளிலும் ஈடுபாடுடையவர். மாநிலக் குழு உறுப்பினர் பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடக்க காரணமானவர். கவிஞரோடு நெருங்கிப் பழகி அன்பு பாராட்டுபவர்.

13. ஆர்.கோதண்டம்

வடாற்காடு மாவட்டம் கவிஞரின் தாய் வீடு. கவிஞர் எப்போது வேலூர் சென்றாலும் வடாற்காடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கக் கட்டடமான பர்வானா இல்லத்தில்தான் தங்குவார். இச்சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆர்.கே. என்றழைக்கப்படும் ஆர்.கோதண்டம். கவிஞர் சோர்வடையாமல் இருக்க சங்கத்தின் மூலம் பல பேருதவிக ளைப் புரிந்திருக்கிறார். இவர் கவிஞர்களின் நூல்களைப் பரவலாகத் தோழர்களுக்கு அளித்துப் பல ஆயிரம் ரூபாய்களைத் தந்துள்ளார். கோதண்டம் அவர்கள் கலை, இலக்கியப் பிரியர். நாடகங்கள் சிலவற்றி லும் நடித்துள்ளார்.

மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வங்கியின் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்தும் திறமையாளர். ஓய்வு பெற்றவர்களுக்கும், மரண மடைந்த தோழர்களின் குடும்பத்திற்கும் சங்கத்தின் மூலம் பொருளுத விகள் செய்வதற்கான திட்டங்களைத் தீட்டி வெற்றிகரமாக நடத்தி வருபவர். இவருக்கு உறுதுணையாகத் தோழர்கள் ஆறுமுகம், நடரா ஜன், ரங்கநாதன் போன்றோர் உள்ளனர்.

இது தவிர பல்வேறு கூட்டுறவு அமைப்புகளுக்கான சங்கப் பணிகளிலும் பொறுப்புகள் ஏற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். தமிழ்நாடு அகில இந்திய வங்கி சம்மேளனத்திலும் இவரதுச் சிறந்த பங்களிப்பு உண்டு.

வேலூர் பர்வானா இல்லத்தில் நுழையும் போதே வாங்க வாங்க என இன்முகம் காட்டுபவர் அவ்வில்லத்தின் நிர்வாகியான தோழர் ஆர்.சங்கர், இவர் கோதண்டம் அவர்களின் தம்பி. வரவு, செலவுகளில் கண்டிப்பானவர். கணக்கு வழக்கில் கண்ணாய் இருப்பவர். இவர் தோழர் ஏ.எஸ்.கே. அவர்களிடம் பணி புரிந்து தத்துவார்த்தப் பயிற்சி பெற்றபவர். இதே போல் நிலவள வங்கிப் பணியாளர் ஆர்.டி.சம்பந் தம், கூட்டுறவு விற்பனை ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் காசிநாதன், ஜி. சுப்பிரமணி, பர்வானா இல்லத்தில் உள்ள கடன் வழங்கும் சங்கத்தின் பணியாளர்களான சம்பத், ஆர்.டி. சம்பந்தம் ஆகிய அனைவரும் கவிஞரின் நினைவில் நிற்பவர்கள்.

14. ஆம்பூர் வழக்கறிஞர் சண்முக சுந்தரம்

ஆம்பூர் வாணியம்பாடி வேலூர் பகுதிகளில் புகழ் பெற்ற வழக்கறிஞர். கட்சித் தோழர்களுக்காகக் கடினமாக உழைத்துத் திறமை யாக வாதாடக் கூடியவர். பணம் வாங்குவதில் குறியாக இருக்க மாட்டார். பர்வானா இல்லத்திற்கு வந்தால் கோறைப்பாயை விரித்துப் படுத்திருப்பார் சாதாரணமாக. ஆம்பூரில் வீடு. ஆம்பூரில் இவரைத் தெரியாத வணிகர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

வங்கி யூனியன் மாநாடுகளில் எல்லாம் பங்கு பெறுபவர். இலக்கிய ஆர்வமும் உடையவர். கவிஞரை அழைத்து ஆம்பூரில் பல இலக்கியக் கூட்டங்கள் நடத்தியுள்ளார். உறவினர் போலவே தனது வீட்டில் தங்க வைத்துப் பழகுபவர். அந்த இனிமை நினைவுகள் மறக்க முடியாதவை என்பார் கவிஞர்.

15. திரு.சோலைநாதன்

தொழில் முனைவர். சோலை ஓட்டல், வேறு ஒரு மூன்று நட்சத்திர ஓட்டல், உலோகத் தொழிற் கூடம் எனப் பலத் துறைகளில் ஈடுபடும்

ஆற்றல் கொண்ட வணிகர். இலக்கியவாதி; இலக்கியம், கவிதை போன்ற படைப்பாளிகளிடம் பற்றும் பாசமும் கொண்டவர். ரோட்டரி சங்கப் பொறுப்பாளர். மாலைமுரசு ஆசிரியர் பிச்சையா, ஜூ.வி. நிருபர் ஜே.வி.நாதன், வழக்கறிஞர் சமரசம் ஆகியோரின் நெருங்கிய நண்பர். வேலூர் செல்லும் போதெல்லாம் நண்பர் குழாமுடன் பர்வானா இல்லம் வந்து கவிஞரைச் சந்தித்து அளவளாவி செல்வார். பல இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பார். தானும் பங்கேற்பார்.

கவிஞரின் பவள விழாக் குழுவினரில் ஒருவர். கவிஞரது நூல்கள் வெளியிடப்படும் போதெல்லாம் பொருளுதவி செய்பவர். நெஞ்சம் மறவாத இனிய நண்பர்.

16. வேலூர் மாலைமுரசு ஆசிரியர் பிச்சையா

நெல்லை மாவட்ட வள்ளியூர் பகுதிக்காரர். பத்திரிகை ஆசிரியர். பழக இனியவர். அதிகம் பேசாதவர். அதிகம் கேட்பவர். எதையும் சிந்தித்து விரைவாக முடிவெடுக்கும் ஆற்றலாளர். பத்திரிகையாளர் மட்டுமல்ல. எழுத்தாளரும் கூட. கவிஞரிடம் தனிப்பற்றும், பாசமும் கொண்டிருப்பவர். வேலூர் சென்றால் கவிஞரின் முதல் தொலைபேசி அவருக்குத்தான். கவிஞரின் சம்பந்தமாக எல்லோரையும் ஒரு சங்கிலித் தொடர் போல் இணைத்துச் செயல்பட வைத்துக் கொண்டிருப்பவர். பல பணி நெருக்கடிக்கிடையிலும் கவிஞரைச் சந்திக்க நேரம் ஒதுக்கி நேரில் வந்து உரையாடி மகிழ்பவர்.

கவிஞரின் அழுத்தமான கொள்கைகள் பலவற்றோடு உடன்பாடு கொண்டவர். யாரிடமும் அளவறிந்து பழகும் பண்பாளர். எளிமையான உடை, இனிமையான பழக்கம். மாலைமுரசு அலுவலகப் பணியாளர்களின் ஒருமித்த நன்மதிப்பைப் பெற்றவர்.

கவிஞரின் முன்னேற்றம், பொருளாதார சிக்கலிலிருந்து விடுவித்தல், ஆகியவற்றில் அரும் பங்காற்றியிருப்பவர். அரும்பங்கு ஆற்ற இருப்பவர்.

17. வழக்கறிஞர் சமரசம்

வேலூரில் பிரபல வழக்கறிஞர். இவரது துணைவியார் பத்மா மருத்துவ மனையை நிறுவியுள்ளார். வேலூரில் மகப் பேறு மருத்துவத்தில் மிகவும் பேர் பெற்றது இம்மருத்துவமனை. பகுத்தறிவு கொள்கையில் ஈடுபாடுடையவர்.பெரியார் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர். ரோட்டரி சங்க பொறுப்பும் வகிக்கிறார். கவிஞரின் எழுத்திலும் பேச்சிலும், ஈடுபாடுடையவர். கவிஞர் நூல்களுக்குப்

பொருளுதவி செய்து வருபவர். கவிஞரின் பொருளாதார தீர்வுக ளுக்கு இவரது பங்களிப்பும் நிறைய உண்டு. பிச்சையா சோலைநா தன் போன்றோரின் நெருங்கிய நண்பர். மனத்தில் சரியென்று பட்ட தைப் பட்டென்று பேசிடும் இயல்பாளர். விருந்தோம்பலில் சிறந்தவர்.

18. ஏ.எஸ்.ஏ.பரமசிவம்

வடாற்காடு போளுரை அடுத்த மண்ட குளத்தூர் இவரது சொந்த ஊர். இவரது தந்தை அருணாசலம் தேசிய இயக்கத்தில் அதிக ஈடுபாடுடையவர். பரமசிவம் வேலூர் பகுதியில் அனைவரும் அறிந்த பிரபல வணிகர். மிகவும் பிரபலமான ஏ.எஸ்.ஏ. பேக்ரி உரிமையாளர். இங்குத் தயாரிக்கப்படும் ரொட்டி, பிஸ்கட்டு அன்றாடம் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிக்கும் செல்கின்றன. இவர் ஒரு பழுத்த ஆன்மீகவாதி. இருப்பினும் கவிஞரிடம் இன்முகம் காட்டிப் பழகுபவர்.

யாருக்கும் அவரவரது தகுதியும், தேவையுமறிந்து பொருளுதவி செய்து வருபவர். கவிஞரின் நூல்களை வாங்கி மற்றவர்களுக்கு இலவசமாக அளித்துப் படிக்கச் சொல்லும் பரந்த மனமுடையவர்.

ரஷ்யா போன்ற வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று வந்தவர். தன் மகனையும், எம்.பி.ஏ. படிக்க வைத்து வெளிநாடுகளுக்கு எல்லாம் அனுப்பி பொது வாழ்விலும் வணிகத்திலும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்.

காட்பாடியில் உள்ள பெரிய மருத்துவமனையான குமரன் மருத்து வமனை இவரது தங்கையின் கணவருக்குச் சொந்தமானது. பரமசிவத் தைப் போலவே அவரது மைத்துனரும் இலக்கியவாதிகளிடம் பற்றும் பாசமும் கொண்டவர்.

கவிஞரின் பவள விழாக் குழுவில் பரமசிவம் அவர்களும் பங்கு கொண்டுள்ளார். விழாக்குழு உறுப்பினர்.

19. செங்கம் இரா. பரசுராமன்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள செங்கத் தைச் சேர்ந்தவர் பரசுராமன். அன்புடன் பழகும் பண்பாளர். தி.மு.க.கா ரராக இருப்பவர். பொதுவுடமை சிந்தனையாளர். செங்கம் நகராட்சித் தலைவராக இருந்து சிறப்பாகப் பொதுப் பணியாற்றியவர்.

செங்கத்தில் குளிர்பதனக் கடை நடத்தி வருபவர். பனிக்கட்டித் தயாரிக்கும் தொழிற்சாலையும் நடத்தி வருகிறார்.

கவிஞரிடம் மிகுந்த அன்பு கொண்டவர். கவிஞரின் நூல்களை விரும்பி படிப்பவர். கவிஞரைப் பலமுறை செங்கத்திற்கு வரைவழைத்

துக் கூட்டத்தில் பேச ஏற்பாடுகளைச் செய்தவர். இவர் தன் மகன் திருமணத்தைக் கவிஞர் தலைமையில் மிகச் சிறப்பாக நடத்தினார்.

கவிஞர் வேலூர் நாராயணன், புலவர் இளங்கோவன், அறிவுச்சுடர் செந்தமிழ்ச் செல்வன், வங்கி ஊழியர் நாராயணசாமி போன்றோர்களின் நெருங்கிய நண்பர்.

செங்கம் வி.சுப்பிரமணியமும் இவரும் இரட்டையர் போல.

20. செங்கம் வி.சுப்பிரமணியம்

பொதுவுடமைச் சிந்தனையாளர். வடாற்காடு கூட்டுறவு வங்கிகளில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். தனது புதுமனை புகுவிழா, மகன் திருமணம் போன்றவற்றைக் கவிஞர் தலைமையில் நடத்தியவர். கவிஞர் எப்போது செங்கம் சென்றாலும் தங்கும் இடம் ஏற்பாடு முதற்கொண்டு ஏற்பாடு செய்வதுடன் உடனிருந்து பல உதவிகளைச் செய்வார்.

21. வேலூர் சந்திர சேகரன்

இவர் பட்டதாரி. மனைவியும் எம்.ஏ. பட்டதாரி. இவரது அண்ணன் மேல்விசாரம் இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர். இப்படிக் குடும்பமே பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவே இருந்தும் இவர் மட்டும் அரசு உத்தியோகத்திற்குச் செல்லாமல் வணிகத்தில் ஈடுபட வேண்டுமென முடிவு எடுத்தது இவர் ஒரு மாறுபட்ட சிந்தனையாளராக விளங்குபவர் என்பதற்கான சான்றாகும்.

வேலூரில் ''கடைவீதிக் கவியரங்கம், கருத்தரங்கம், கூட்டம்'' என நடத்தி புகழ் பெற்றவர். கவிஞரின் சமுதாய சாட்சிகள் என்ற நூலை கடைவீதிக் கூட்டத்தில் கவிஞர் சுரதா மற்றும் அறிஞர்களை வரவழைத்து வெளியிட்டு வித்தியாசமான வெளியீட்டு விழா நடத்திய புகழுக்குரியவர். கவிஞர்கள் இலக்கியவாதிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

இலக்கிய சேவைகள் மட்டுமின்றிக் கண்தானம், இரத்ததானம் போன்ற பொதுநல சேவையிலும் ஈடுபட்டு வருபவர்.

தற்போது உதவும் உள்ளங்கள் என்ற தன்னார்வ அமைப்பை ஏற்படுத்தி அனாதைச் சிறுவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருகிறார்.

வேலூர் லாங் பஜார் மார்க்கெட்டில் மாட்டு தீவனக் கடை ஒன்றின் பங்குதாரராக இருந்து சிறந்த வணிகம் செய்து வருகிறார்.

22. கவிஞர் வேலூர் நாராயணன்

வேலூர் வங்கி ஒன்றில் பணியாற்றுபவர். கவிஞர். இலக்கிய ஆர்வலர். கவிஞரை அழைத்துப் பல இலக்கியக் கூட்டங்கள் நடத்திய வர். கவிஞருக்குப் பொருளுதவி செய்து வருபவர்.

23. தியாகி எம்.கே.ராமசாமி

கவிஞரிடம் மிகுந்த பற்றுதலுடையவர். இலக்கிய ஆர்வலர். எப்போது வேலூர் சென்றாலும் கவிஞருடன் வந்து தங்குபவர். தன் வயதான காலத்திலும் கவிஞருக்குத் துணை அவசியமெனக் கூறிக் காட்பாடியிலிருந்து சென்னை வரை வந்து பாதுகாப்பாக விட்டுச் சென்றதைக் கவிஞர் நினைவு கூர்ந்து நெகிழ்வார்.

24. டாக்டர். விமுனா மூர்த்தி, எம்.பி.பி.எஸ்.

இவரது சொந்த ஊர் விழுப்புரம் காஞ்சிபுரத்தில் நெடுங்காலமா கப் மருத்துவராகப் பணியாற்றியவர். இவரது துணைவியார் ராணி மேரி கல்லூரியில் பேராசிரியர். இடதுசாரி சிந்தனையுள்ளவர். கலை இலக்கியத்தில் ஈடுபாடுடையவர். கவிஞரிடம் மிகுந்த பற்றுடையவர். கவிஞரை பலமுறை அழைத்துக் கூட்டம் நடத்தியிருப்பவர். செங்கை மாவட்டத்தில் தன் அறிமுகத்தை ஆழப் பதித்திருப்பவர்.

23	சில முக்கிய சந்திப்புகளும் நிகழ்வுகளும்

புரட்சிக் கவிஞருடன் கவிஞர்:

கி.ஆ.பெ. விஸ்வநாதன் மற்றும் யதார்த்தம் பொன்னுசாமிபிள் ளையும் புரட்சிக் கவிஞருக்கு நிதியளிப்பதற்கான நிகழ்ச்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்து திருச்சிக்கு அழைத்து வந்திருந்தனர் 1947—48 வாக்கில். நிகழ்ச்சி ஏதோ காரணத்தால் தள்ளி போனது. இதனால் புரட்சிக் கவிஞரைத் திருவானைக்கா ரெட்டியார் சத்திரத்தில் தங்க வைத்திருந்தனர். இந்தச் சமயத்தில் கவிஞர் ஒருநாள் புரட்சிக் கவி ஞரை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. அதுமுதல் அங்கே தங்கியி ருந்த நாட்களில் தினமும் கவிஞர் புரட்சிக் கவிஞரைச் சந்திப்பது வழக்கமானது.

நிதியளிப்பதாகக் கூட்டி வந்து இப்படி அலைக்கழிக்கிறார்களே எனவும்; ஊருக்குப் போக அனுமதிக்கவும் மாட்டேன் என்கிறார்களே எனவும் புரட்சிக் கவிஞர் வருத்தப்பட்டார்.

புரட்சிக் கவிஞர் சுவையான உணவுப் பிரியர். சுவையான உணவினை ரசித்து உண்பார். விரிவாகப் பாராட்டும் பழக்கமும் உடையவர். திருவானைக்காவில் தங்கியிருந்தபோது அங்கிருந்த மாது அய்யர் ஓட்டலில் சைவ உணவும், எதிர்புறமிருந்த மற்றொரு அசைவ ஓட்டலிலும் சாப்பிட்டு வந்தார்.

உணவு நன்றாக இருக்கிறது என மாது அய்யரிடம் ஒருநாள் பாவேந்தர் பாராட்டிச் சொல்ல; அதை எழுதி கையெழுத்திட்டுத் தரும்படி ஓட்டல் உரிமையாளர் வேண்ட; பாவேந்தர் எழுதிக் கொடுத்த பாராட்டு மடலைக் கண்ணாடி சட்டமிட்டு உணவு விடுதியில் மாட்டி வைத்துவிட்டார் உரிமையாளர்.

இதைக் கேள்விபட்டு அசைவ உணவு விடுதி உரிமையாளரும் ஒரு சான்றிதழ் கேட்டுப் பெற்றுச் சட்டமிட்டு மாட்டி வைத்திருந்தார்.

ரஷ்யக் கவிஞர்களின் எழுத்துகள்தான் இப்படி அம்மக்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இங்கே பாவேந்தர் எழுத்துக்கு அத்தகைய மரியாதை இருந்ததை எண்ணி பெருமிதம் கொள்வார் திருச்சியார்.

திருச்சியார் சென்னைக்கு வந்து குடியேறிய பின்னர் பாவேந்தரைச் சந்திக்கும் வாய்ப்புகள் மீண்டும் கிடைத்தன.

ராயபுரம் மாதாக் கோவில் தெருவில் தங்கி நடிகவேள் எம்.ஆர். ராதா நடித்த ரத்தக்கண்ணீர் படத்திற்குப் பாட்டெழுதிக் கொண்டிருந்தார். ‘சேர் தாண்டவம்’ என்ற நூலையும் அப்போது எழுதிக் கொண்டிருந்தார். அப்பகுதியிலேயே குடியிருந்த திருச்சியார் பாவேந்தரை அடிக்கடி சந்தித்துப் பழகும் வாய்ப்பு பெற்றார். பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரம் புரட்சிக் கவிஞருடன் இருந்தபோது இந்தப் பையன் நன்றாகப் பாட்டு எழுதுகிறான் என்று அவரைக் கவிஞருக்கு அறிமுகப் படுத்தினார்.

அகத்தியன் தமிழுக்கு இலக்கணம் எழுதியதாகப் பாரதியார் எழுதியிருப்பது தவறு என்று வாதிட்ட நிகழ்வு ஒருமுறை நடந்தது. பாரதியாரைப் பாவேந்தர் பெயர் சொல்லி மறுத்த நிகழ்வு அநேகமாக இது ஒன்றாகத்தான் இருக்கும் என்பார் திருச்சியார்.

ஒருமுறை பேசிக் கொண்டிருக்கும் போது—

உயிரினங்களிலேயே மனிதன்தான் மிகவும் கோழை. ஒரு பெரிய மரம் குறுக்கே கிடந்தால் மனிதன் அதை விலகிச் சென்று கடப்பதையும், எறும்புகள் அந்த மரத்தில் ஏறிச்சென்று கடப்பதையும் ஒப்பிட்டுக் கூறினார் பாவேந்தர்.

'பாண்டியன் பரிசு' படம் எடுப்பதற்காகத் தியாகராய நகரில் புரட்சிக் கவிஞர் தங்கியிருந்த காலங்களிலும் திருச்சியார் பாவேந்தருடன் சந்திக்கும் வாய்ப்புகள் தொடர்ந்தன. தஞ்சைவாணன் தன் வீட்டில் புரட்சிக் கவிஞருக்கு விருந்தொன்று கொடுத்தார். பாரதிக்குப்பின் கண்ணதாசன் என்று சிலர் பேசுவது குறித்துக் கவிஞர் திருச்சியார் மறுத்துப் பேசினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்தார் புரட்சிக் கவிஞர்.

தந்தை பெரியார் சந்திப்பு:

1937-ஆம் ஆண்டு கவிஞர் லால்குடியில் படித்துக் கொண்டிருந்த நேரம். லால்குடியை அடுத்த பூவாளூரில் பெரியார் பேசுவதை அறிந்து கவிஞர் அக்கூட்டத்திற்குச் செல்கிறார்.

பெரியார் கடவுள் மறுப்பு; பார்ப்பன எதிர்ப்பு பற்றி விரிவாகப் பேசிக் கொண்டிருக்கிறார். மேடைக்கு எதிரே பத்து இருபதுபேர் மட்டுமே. தூரத்தில் சிறு கும்பல் கும்பலாக நின்று கொண்டும் மக்கள் பெரியார் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

திடீரென அழுகிய முட்டைகள், சாணம், சகதி எல்லாம் பெரியாரை நோக்கி வீசப்படுகின்றன. இவற்றைத் துடைத்து எறிந்தபடி பெரியார் பேச்சை தொடர்ந்து கொண்டிருக்கிறார். இந்தச் சின்னக் கூட்டம் ஆயிரம் லட்சமெனப் பெருகும் — அதனால் இந்த சலசலப்புக் கெல்லாம் நான் அஞ்சமாட்டேன் என்கிறார் பெரியார். சொன்னபடியே வளர்ந்தார். பெரியாரை முதலில் பார்த்த இந்த நிகழ்ச்சி கவிஞர் நெஞ்சில் மறக்கொண்ணா நிகழ்ச்சியாய்ப் படிந்துவிட்டது.

ரயில்வேயில் பணியாற்றிய நண்பர்களின் அமைப்பு ஒன்றின் மூலம் பெரியாருக்கு ஹோலிகிராஸ் கல்லூரிக்கு அருகில் உள்ள நகராட்சி சத்திரத்தில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அந்த அமைப்பின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் கவிஞரும் அந்த விருந்தில் கலந்து கொண்டார். ரயில்வே பணியிலிருந்த ஜனார்தனம் போன்றோர் முக்கிய பங்காற்றினார். இரண்டு மணி நேரம் அளவுக்குக் கலந்துரையாடலும் நடந்தது.

பின்னர் —

பெரியார் திருச்சியில் தங்கியிருந்த நாட்களிலும், சிந்தாதிரிப் பேட்டை,பெரியார் திடலில் தங்கியிருந்த காலங்களிலும் பெரியாரைச் சந்தித்துப் பல்வேறு கருத்துகளில் உரையாடிய நிகழ்வுகளையும் அடிக்கடி நினைவு கூர்வார் கவிஞர். சிறியவர் பெரியவர் என்ற பேதமின்றி எல்லோரையும் மரியாதையாக 'வாங்க போங்க' எனப் பேசும் பண்பாடு கவிஞரை மிகவும் கவர்ந்தவை.

அறிஞர் அண்ணா சந்திப்பு

சென்னை நகர துணை மேயராகவும், காஞ்சிபுரம் சட்ட மன்ற உறுப்பினராகவும் இருந்த கவிஞரின் உறவினரான தெய்வசிகாமணி அறிஞர் அண்ணாவுடன் நெருங்கி பழகியவர். திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்கிறோம் எனச் சொன்னவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் தந்த ஆதரவைப் பெற்றுக் காஞ்சிபுரம் தேர்தலில் வெற்றிபெற்ற தெய்வசிகாமணி அறிஞர் அண்ணாவை சந்திக்க சென்றபோது — கவிஞரையும் உடனழைத்துச் சென்று அண்ணாவிடம் அறிமுகப்படுத்துகிறார். கவிஞர் இசைப்பாடல்கள் இயற்றும் ஆற்றல் பெற்றவர்; நன்கு பாடும் குரல்வளம் கொண்டவர் என அறிமுகப்படுத்தப்பட்டார். அண்ணா அவர்களின் விருப்பப்படி;

''சுற்றுது சுற்றுது பார் — உலகம்
பற்பல திக்கினிலே
பணமெனும் அச்சினிலே — சுற்றுது
கற்றவரும் இதிலே கதிகலங்கி தயங்க
கடையரைப் போல மதியை அடகு வைத்தே மயங்க

எனத் தொடங்கும் பாடலையும்,

காலமெல்லாம் பணமே கதியெனவே அலைந்தால்
கருத்தினிலே புதுமை உதித்திடுமோ மனமே

எனத் தொடங்கும் பாடலையும், கவிஞர் அண்ணா முன்னிலையில் பாடிக் காட்டுகிறார். அண்ணா அவர்கள் பாடல் கருத்தினையும் கவிஞரின் குரல் வளத்தையும் ரசித்துக் கேட்டதோடு —

''இது போன்ற பாடல்களை எல்லாம் தமிழ் இசைச் சங்கத்தில் கொடுத்துப் பாட வைக்கலாமே'' எனக் கூற;

தமிழிசைச் சங்கத்தில், பக்தி பாடல்களையும், தமிழ் பற்றிய பாடல்களையும் பாடுகிறார்களே தவிர — சமூக சிந்தனைப் பாடல்களை ஏற்பதில்லையே என்ற கருத்தினைக் கவிஞர் தெரிவிக்க —

'உண்மைதான். மாற்றம் கொண்டுவர வேண்டுமென' அண்ணா சொன்னதே நினைவில் காத்து போற்றுகிறார் கவிஞர்.

ரவீந்திர நாத தாகூர்

இன்றுவரை இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற ஒரே இந்தியப் படைப்பாளி என்ற பெருமைக்குரியவரான கவிஞர் ரவீந்திர நாததாகூர் சூசையப்பர் கல்லூரி நிகழ்ச்சி ஒன்றிற்காகத் திருச்சி வந்திருந்தார். அப்போது திருச்சி தேசியக் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் படித்துக் கொண்டிருந்த திருச்சியார் தங்கள் கல்லூரி மாணவ நண்பர்களுடன் சென்று மேற்கண்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டதை

யும், தாகூரின் கவிதை நடை உரையைக் கேட்டதையும் மகிழ்வான நினைவாகப் போற்றி வருகிறார்.

சுபாஷ் சந்திரபோஸ்

இந்திய இளைஞர்களின் வீரத் தளபதியாக அன்றும் இன்றும் என்றும் திகழும் — நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் திருச்சி வழியாக மதுரை செல்வதை அறிந்து — திருச்சி ரயில்வே ஜங்ஷனுக்கு ஓடிப்போய் அவரை நேரில் பார்த்ததைத் தன் இளம் வயது பெருமை மிகு நிகழ்வாகப் போற்றுகிறார் கவிஞர்.

இதேபோல் கவிக்குயில் சரோஜினி நாயுடுவை சந்தித்த நினைவையும் போற்றுகிறார்.

மறக்க முடியாத நிகழ்வுகள்:

நிகழ்வு —1

ராஜகோபாலாச்சாரி வங்காளக் கவர்னராகப் பதவி வகித்த காலகட்டம். பின்னர் இப்பதவி 'கவர்னர் ஜெனரல்' என உயர்த்தப்படுகிறது. மகாகவி பாரதியாருக்கு எட்டயபுரத்தில் மணிமண்டபம் கட்ட 'கல்கி' போன்றவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான அடிகல் நாட்டும் விழாவிற்கு ராஜகோபாலாச்சாரி அழைக்கப்பட்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சியைக் காண எட்டயபுரத்திற்குச் செல்வதற்காகக் கவிஞர் திருச்சி ஜங்ஷனில் ரயில் ஏறி அமர்கிறார். அதே இருக்கையில் கல்கி, ம.பொ.சி, கி.வா.ஜ. ஆகியோரும் அமர்ந்திருக்கின்றனர். பயணத்தில் எட்டயபுரம் நிகழ்ச்சி தொடர்பான பல தகவல்களைப் பேசி விவாதிக்கின்றனர். ம.பொ.சியைக் கல்கி அடிக்கடி கிண்டல் செய்து சிரிப்பலையை உருவாக்குகிறார். பெரிய பந்தல்... அனைவருக்கும் உணவு ஏற்பாடுகள் சிறப்பாகச் செய்யப்பட்டிருந்தன.

காங்கிரஸ் தியாகி சோமயாஜுலுவிடம் இந்த விழா ஏற்பாட்டு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

விழாவிற்கு வாழ்த்துக் கூறி — தமிழில் எழுதிய தமிழில் கையொப்பமிட்ட ஓரிரு வரிகொண்ட காந்தியின் கடிதம் விழா மேடையில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

ராஜகோபாலாச்சாரி, கவிஞர் ராமலிங்கம்பிள்ளை, ப.ஜீவானந்தம், கல்கி, ம.பொ.சி, சோமசுந்தர பாரதி போன்றோர் விழாவில் கலந்து கொண்டனர்.

எம்.எஸ். சுப்புலட்சுமி, டி.கே. பட்டம்மாள், மதுரை மணிஅய்யர் போன்றோரின் இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

சோமசுந்தர பாரதி எழுதிய பாரதியாரின் வாழ்க்கை வரலாற்று நூலில் பாரதியார் உயிருடன் இருந்த காலத்தில் அவரை ஒரு கவிஞரென அங்கீகரிக்காத ராஜாஜி, கல்கி கூட்டத்தைச் சாடியிருந்தவர் என்பதற்காக —

சோமசுந்தர பாரதி பேசும்போது கூட்டத்தினர் கூச்சலிட்டுத் தடங்கல்கள் செய்தனர். எதையும் பொருட்படுத்தாமல் பேசி முடித்தார் சோமசுந்தர பாரதி.செல்லம்மாள் பாரதி கேட்டுக் கொண்டதற்கிணங்க சோமசுந்தர பாரதி இந்த வாழ்க்கை வரலாற்றை எழுதினார்.

பாரதியின்மீது பக்தி கொண்டு தன் பெயரையே பாரதிதாசன் என மாற்றிக் கொண்டு பாரதிக்குப் புகழ் சேர்த்த பாரதிதாசனையே விழாவுக்கு அழைக்காத கூட்டம் அந்தக் கூட்டம்.

இதில் இன்னொரு கொடுமையும் நடந்தது. அதுதான் கொடுமையின் உச்சம். இந்த விழாவிற்கு வந்திருந்த பாரதியின் மனைவி — செல்லம்மாள் பாரதியை மேடைக்கே அழைக்காததும், அறிமுகப்படுத் தாததும், மூன்றாம் பந்திக்கு வந்த செல்லம்மாள் பாரதியை இடமில்லை எனக் கூறிப் பந்தியிலிருந்து வெளியேற்றியதுமாகும்.

இந்த அக்கிரமத்தைக் கண்டித்து,''சொந்த மனைவிக்கே சோறில்லை'' என்று தலைப்பிட்டு நாரணதுரைக் கண்ணன் தன் 'பிரசண்ட விகடன்' இதழில் தலையங்கமே எழுதினார். இந்த நிகழ்ச்சியை இப்போது நினைவுகூறும்போதும் உணர்ச்சி வசப்பட்டு விடுவார் கவிஞர்.

நிகழ்வு — 2

பதவியெனும் அடைக்கும் தாழில்லாப் பண்பு:

கவிஞரும், மார்க்சீயப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியின் தலைவர் ஆனைமுத்து அவர்களும் — தில்லியிலிருந்து சென்னை திரும்புவதற்காகப் புதுதில்லி ரயில்நிலையம் நோக்கி தங்கள் பெட்டி சுமைகளுடன் வந்து கொண்டிருக்கின்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நாகை நாடாளுமன்ற உறுப்பினரான திரு.செல்வ ராஜ் (இவர் நாகை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது கொலைசெய்யப்பட்ட எஸ்.ஜி.முருகையன் அவர்களின் மருமகன்) கவிஞரைப் பார்த்ததும், ''என்னங்க அய்யா ஊருக்கு புறப்பட்டு விட்டீர்களா'' என்று கேட்டுக் கொண்டே கவிஞரின் கையிலிருந்த பெட்டியையும் பையையும் வலுக்கட்டாயமாக வாங்கித் தனது தோளில் சுமந்து பிளாட்பாரத்தின் கடைசியிலிருந்த கவிஞரின் பெட்டி வரை வந்து இவரது இருக்கையில் வைத்துச் சிறிது நேரம் உரையாடி விட்டுச் செல்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவுடனேயே — ராஜாக்களாக; மகாராஜாக்களாக உருமாறிவிடும் இந்தக் காலத்திலும் செல்வராஜ் போன்ற ஆபூர்வ மனிதர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பது தான் — இந்தப் பூமியின் பெருமை.

இந்த நிகழ்வை, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜின் பண்பாட்டுப் பெருமையாகப் போற்றுகிறார் கவிஞர்.

புலவர் மோசிக் கீரனுக்கு வெண்சாமரம் வீசிய புறநானூற்று மன்னர் பாரம்பரியம் இன்னமும் தொடர்கிறது என்பதற்கான நிகழ்கால சான்று இது.

நிகழ்வு — 3

திரு. பக்த்தவத்சலம் கல்வி அமைச்சராக இருந்த போது, பொங் கல் விழா கவியரங்கம் ஒன்று பாலர் அரங்கத்தில் (இன்றைய கலைவாணர் அரங்கம்) அரசு விழாவாக நடைபெற்றது. கவியரங்கத் தலைப்பு 'புதியக்கதிர்'. இவ்விழாவில் கவிஞருடன், குழந்தைக் கவி ஞர் அழ.வள்ளியப்பாவும், பாரதியார் மகள் தங்கம்மா பாரதியும் பங்கேற்றனர். கவியரங்கத் தலைமை அமைச்சர் திரு. பக்தவத்சலம்.

தங்கத்தை உருக்கிப்பின் அச்சில் வார்த்துத்
தனித்தனியாய் அணிமணிகள் படைத்தல் போலே
செங்கதிரோன் பொன்னொளியைத் தரையில் பாய்ச்சிச்
செந்நெல்லாய் விளைத்தானோ! உழவரெல்லாம்
பொங்கிவரும் வியர்வைநீர் முத்தைத் தூவிப்
பொழுதெல்லாம் பாடுபட்ட பயனைக்காணும்

சிங்காரத் திருநாளோ தைப்பொங்கல் நாள்
செந்தமிழர் கொண்டாடும் இந்த நந்நாள்.

வயல்நடுவே சலசலக்கும் சிறிய வாய்க்கால்
வளைந்தோடும் நாகமென மின்னிப்பாய
உயர்ந்துள்ள நெற்பயிரின் பசுமைத் தோற்றம்
உள்ளத்தை எழிலாக்கும் மயிலின் தோகை
செயலற்று அரவத்தை மடியச் செய்யும்
சித்திரமாய் வயல்பாயும் ஓடைமாய
பயமற்ற வண்ணமயில் கொண்டை தூக்கும்
படப்பிடிப்பாய்ப் புதியக் கதிர் நடனம் பாரீர்.

என்று தொடங்கும் நீண்ட பாடலைப் பாடுகிறார் கவிஞர். இந்த விழாவிற்குக் கவிஞர் ஒருவரைத் தலைமை தாங்க வைத்திருந்தால்

அதுதான் பொருத்தம் எனக் கவிஞர் மறைமுகமாகச், சுட்டி காட்ட கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

கவியரங்கம் முடிந்த பின்னர் கவிஞரின் கவிதை நயத்தை பெரிதும் பாராட்டுகின்றனர், தங்கம்மா பாரதியும், கவிஞர் அழ. வள்ளியப்பாவும்.

நிகழ்வு — 4

கவிஞர் ராயபுரம் வெங்கடேச நாயக்கன் தெருவில் குடியிருந்த போது — தமிழகத்தின் முதல் புதினம் எழுதியவர் என்ற பெருமைக்கு ரியவரும், சுகுன சுந்தரி, பெண்மதிமாலை போன்ற நூல்களை எழுதி பெண் உரிமைக்கு முதல் குரல் கொடுத்தவருமான வேதநாயகம் பிள்ளையின் மகள் வயிற்றுப் பேரன் ஆரோக்கியசாமிபிள்ளை, (தமி ழக அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்) கவிஞரை அவரது வீட்டிற்கு வந்து அடிக்கடி சந்திப்பார். குடும்ப உறுப்பினர்போல் பழகியவர். அவருடன்கூடச் சின்ன வயது பையன் ஒருவரும் வருவார். தமிழ் இலக்கியப் பற்றுடையவர். அவர்தான் ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்ற செயலாளராக கடந்த 25 ஆண்டுக் காலமாக இருந்து வருகிற பக்தவத்சலம் ஆவார். இவர் குடிநீர் வடிகால் வாரியத்தில் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார். இவரோடு — அன்புபழம்நீ, ஊ.ஜெயராமன், மாசு.சம்மந்தம் போன்ற தமிழ் பற்றாளர்களையும் கவிஞர் மறக்க முடியாத நண்பர்களாக நினைவில் போற்றி வருகிறார்.

24 தொடரும் சமுதாயப் பணியில் முதிரும் சிந்தனை முத்துக்கள்

சிந்தனைதான் மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனை மேம்ப டுத்தி வேறுபடுத்துகிறது. மனிதனுக்கு மட்டுமின்றி மற்ற உயிரினங்க ளின் மேம்பாட்டிற்கும் மனிதனின் சிந்தனைதான் காரணமாகிறது.

மனிதனில்கூட எல்லா மனிதனுமா சிந்திக்கிறான். நூற்றில் ஒரு வன் என்பதே அதிகம். இவர்களுள்ளும் சுயநலச் சிந்தனையாளர்களே அதிகம். சமுதாய மேம்பாட்டிற்கான பொதுநலச் சிந்தனையாளர்கள் அபூர்வத்திலும் அபூர்வம். எனவேதான் சமுதாயச் சிந்தனையாளர்கள் போற்றப்படுகிறார்கள். பாராட்டப்படுகிறார்கள்.

மூட நம்பிக்கைகள், மதக்கட்டுப்பாடுகள், சாதிவலைகள் என்கிற தளைகளில் பிணைக்கப்பட்டு விலங்கிட்டுச் சிறைபடுத்தப்பட்டுக்கிடக்கிற மனித வர்க்கத்தை அந்த வலைகளை அறுத்து, விலங்குகளை உடைத்து, சிறைகளைத் தகர்த்து மனித விடுதலைக்கு உதவுவதுதான் பகுத்தறிவு சிந்தனையும் நாத்திக சிந்தனையும், நெடுங்காலமாகச் சிறைகளில் கிடந்தவர்களுக்கு, விடுதலைக்குப்பின் வழிகாட்ட வந்த கலங்கரை விளக்கம்தான் மார்க்சீய சிந்தனை.

சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கும்
ஆற்றல் பெற்றவர் கவிஞர் — ஆனால்
சமுதாய நோய்களைப் பற்றிப் பேசும்போது
கோபக்கனல் கொழுந்துவிட்டு எரியும்

நமது கவிஞர் நாத்திக சிந்தனை, மார்க்சீய சிந்தனை என்ற சமுதாயச் சிந்தனைகளின் தொகுப்பாக வாழ்ந்து வருபவர் என்பது தான் அவருக்கான தனிச்சிறப்பாகும். அதற்குக் கீழ்கண்ட அவரது சிந்தனைகள் சான்றாகும்.

- கடல் நெருக்கடியால் லெமூரியாக் கண்டத்திலிருந்து புறப்பட்டுத் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் பயணமாகிறான் மனிதன். இந்த மனிதன் முழுக்க முழுக்க இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையை மேற்கொள்கின்றவனாக இருக்கிறான். இதே நேரத்தில் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவிற்குள் நுழைகிறார்கள் ஆரியர்கள். அவர்கள் முழுக்க முழுக்க கற்பனாவாத வாழ்க்கை முறையை உடையவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் ஆன்மீக தத்துவங்களை வேதங்கள் என்ற பெயரில் பரப்புகின்றனர்.

- தெற்கின் மைந்தர்களுக்குக் கடவுள் பஞ்சபூதங்கள். அதன் அடையாளமே பஞ்சலிங்கம் என்ற சிவனாக உருக்கொள்கிறது. வடக்கிலிருந்து வருபவர்கள் திருமாலை வணங்குகின்றனர். பின்னர் ஆன்மீகத்தில் ஆரியர்கள் ஆதிக்கம் வலுபெற்றபோது ஒரு சமரச ஏற்பாடாகத் தெற்கின் மைந்தர்களின் கடவுளான சிவனை ருத்திரன் என்ற பெயரில் நாராயணனுக்கு உதவியாளாக ஆக்கித் தங்கள் மேலாண்மையை நிறுவிக் கொள்கின்றனர்.

- சிவவழிபாடுதான் மூலமாக இருந்திருக்கிறது என்பதற்கு — உணவு வகையில் சைவமா, அசைவமா என்று சைவத்தை முதன்மைப்படுத்தி பேசப்படுவதும் ஒரு சான்றாகும்.

- திருவள்ளுவ நாயனார் (திருவள்ளுவர் அல்ல) ஜாதி கிடையாது, மதம் கிடையாது என்பதோடு, எங்கள் குலம் சுக்கில குலம்

அதாவது விந்து குலம் என்பதிலிருந்து — சாதி வழக்கங்கள் தமிழனுடையது அல்ல என உணரலாம்.

- மனித இனத்தில் தொழில் பிரிவுகளை மன்னர்களும் நிலப்பிரபுக்களும் ஏற்படுத்தினார்கள். இது பொருளாதார அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவாக மாற தடைகள் ஏதுமில்லை. இன்றைய வர்க்கப் பிரிவைப் போன்றது. ஆன்மீகக் கருத்துகளால் மன்னர்களைத் தம் வசப்படுத்திக் கொண்ட ஆரியர்கள் — தொழில் பிரிவுகளை ஜாதி பிரிவுகளாக்கினால்தான் தங்கள் இனத்தவரே என்றென்றும் மேலானவர்களாக நிலைநாட்ட முடியும் என்பதால் வர்ணாசிரம அடிப்படையில் அதை ஜாதியாக்கினார்கள்.

ஜாதிகள் மாற்ற முடியாதது என்பதை நிலைநாட்ட மறுபிறப்புத் தத்துவத்தை உருவாக்கினார்கள். மறுபிறப்புத் தத்துவத்தை நிலை நிறுத்தியபின் — பிறப்புகள் செய்யும் தொழிலுக்கு ஏற்ப அமையும் எனப் பிரச்சாரம் செய்தனர்.

- வானவியல் பற்றிப் பேசுவது அஸ்ட்ரானமி. வானவியலை மனித பிறப்போடு இணைத்து மனித வாழ்க்கையை எண்ணிப் பார்க்க வைத்தது — அஸ்ட்ராலஜி.

உளவியலாக மனிதனை அடக்க, வீழ்த்த ஆரியர் மேற் கொண்ட முயற்சிதான் இது. உடலால் வீழ்த்த முயன்று தோற்றவர்களான ஆரியர்கள் மன்னர்களை வீழ்த்த கண்ட மாற்றுவழி இது.

மனித வாழ்க்கையைக் கோள்களோடு இணைத்துப் பயமுறுத்தும் இந்தச் சதி முயற்சி எளிதாக வெற்றி பெற்றது.

இதை வைத்து மன்னர்களுக்கு ஆலோசகர்களாகி ஆரிய புரோகிதர்கள் அரசாட்சியில் பங்கு கொண்டனர். எதிர்கால ஆருடம் என்பது வரும்பொருள் உரைப்பதானது. ''மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைப்பது'' என்று சொல்லி சொல்லி ஆலோசகர்களாக இருந்தவர்கள் முக்கிய மந்திரி பதவிக்குத் தங்களை உயர்த்திக் கொண்டனர்.

அடுத்த கட்ட முயற்சியாக —

மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி எனப் பிரச்சாரம் செய்து மன்னனை எதிர்க்காத ஒரு அடிமைச் சமுதாயத்திற்கு வித்திட்டனர். பின்னர் மன்னர்களை மந்திரிகள் வழியாக்கிக் கொண்டனர். மொத்தத்தில் கத்தியின்றி — ரத்தமின்றி அரசாட்சி அவர்கள் கைக்கு மாற்றப்பட்டது.

○ அண்ட சராசரங்கள் அழிந்தாலும்—ஆன்மா ஒன்றே அழியாதது என்கிறது இந்து மதம். இந்த ஆன்மா தன்னை விரிவுபடுத்திக் கொள்ள நினைத்த போது அதற்கு உறுதுணையாக உருவானதே கோள்கள் அனைத்தும் என்கிறது சனாதன தர்மம் என்கிற இந்து மதம்.

இதற்கு நேர் எதிரான கருத்து நிலைகளை உருவாக்கியது புத்த மதம். இதன்படி ஆன்மா அழியக்கூடியது.

புத்த மதத்தில் தன் சாயத்தைப் பூசி அதைத் தன் கிளையாக்கிக் கொண்டது இந்து மதம். தன் அரச செல்வாக்கால் பிற்காலத்தில்.

○ அஸ்த்தி என்பதற்கு உண்டு என்று அர்த்தம்.
நாஅஸ்த்தி என்பதற்கு இல்லை என்று அர்த்தம்.

அஸ்த்தியிலிருந்து ஆத்திகமும், நாஅஸ்த்தியிலிருந்து நாத்திகமும் உருவானது.

இதில் வேடிக்கை என்னவென்றால் — இருக்கிற பொருள்களான மரம், செடி, கொடி, வான், நீர், நிலம் அனைத்தும் அழியக் கூடியது — இல்லாமல் போகப் போவது — அதனால் இல்லாதது மாயை என்று சொல்கிறவன் ஆத்திகன் என்று சொல்கிறார்கள். மரம், செடி, கொடி, வான், நீர், நிலம் ஆகிய அனைத்தும் ஒருநாளும் அழியாதது (ஒன்றிலிருந்து ஒன்றாக மாறுமே ஒழிய அழியாது) அவைதான் உண்டு, அவை மட்டுமே உண்டு என்று சொல்கிறவனை நாத்திகன் என்று சொல்கிறார்கள். இது இந்த வார்த்தைகளுக்கு உரிய பொருளுக்கு முரணானது. பொருள் முதல்வாதி — கண்ணில்படுவது கருத்தில் படுவது ஆகியவற்றை உண்டு என்று சொல்கிறான். (உதாரணம்: மண்ணில் புதைக்கப்பட்ட விதை செடியாக மாறுகிறது. அழிவதில்லை. எனவே அழிவின்றி இருப்பது பொருள்களே.) கருத்து முதல்வாதி — 'கண்ணாலும் கருத்தாலும் பார்க்கப்படும் சகலமும் (Matter கள் அனைத்தும்) அழியக்கூடியது. ஆகவே இவை இல்லாதது. அழியாமல் இருப்பது. ஆன்மா மட்டுமே (இதுவரை நிரூபிக்கப்படாதது) அதுமட்டுமே உண்டு என்று சொல்கிறான்.

இருப்பதை எல்லாம் இல்லை என்கிற ஆத்திகன்தான் உண்மையில் நாத்திகன்.

இருப்பதை எல்லாம் இருக்கிறது என்கிற நாத்திகன்தான் உண்மையில் ஆத்திகன்.

- ஒரு மனிதன் சாகும்போது உயிர் பிரிகிறது என்று சொல்கிறோம். உடலை அதனால் சடலம் என்கிறோம். உண்மையில் உயிர் பிரிவதில்லை. மூச்சுதான் (செயல்பாடு) பிரிகிறது.

  மூச்சு பிரிந்த உடலை எரிக்காமல் வைத்திருந்தால் — அதில் உள்ள உயிர்ச்சத்து புழுக்களாக மறுவடிவம் பெறுகிறது என்பதன் மூலம் இந்த உண்மையை உணரலாம்.

- பொருளை மேற்கோள் காட்டாமல் ஆன்மீகத்தை நிலை நாட்டிய தற்கு இதுவரை வரலாறு இல்லை.

  ஆழ்வார்கள் நாயன்மார்கள் என அனைவரும் பொருளைச் சொல்லிதான் கடவுளை நிலைநாட்டுகிறார்கள்.

  பச்சைமா மலைபோல் மேனி
  திருவே என்செல்வமே தேனே வானோர்
  செழுஞ்சுடரே...
  என் உறவே... ஊனே...
  கண்ணே... கண்ணின் கருமணியே...

  இப்படி எந்த பாடலை எடுத்துக் கொண்டாலும் அழியக்கூடிய தெனச் சொல்லுகின்ற பொருள்களைக் கொண்டே அழியாததெனச் சொல்லுகிற கடவுளைக் காட்ட முயல்கின்றனர்.

  ஆலையங்கள், சிலைகள், மாலைகள், அணிகலன்கள், ஆராத னைப் பொருள்கள் என அனைத்தும் பொருள்களே (Matters)

- 'நானே சகல சௌபாக்கியத்திற்கும் அதிபதி. என்னை நீ சரணடைந் தால் சகலத்தையும் உனக்கு நான் அளிப்பேன்' எனக் கடவுள் சொல்வதாகச் சொல்லியதன் மூலம் —

  மதச் சார்புடையவர்களுக்கு இரு 'கேரக்டர்கள்' உருவாகியது. பணமும் பதவியும் உடையவர்கள், இல்லாதவர்கள் தங்களுக்கும் பணியவேண்டும் என விருப்பம் கொள்வது ஒன்று. இல்லாதவர் கள், தாங்கள் இருப்பவர்களுக்குப் பணிய வேண்டும் என்ற விருப்பம் கொள்வது இரண்டாவது.

  இதனால்தான் இந்தியாவில் அடிமை மனப்பான்மை அதிகமா னது.

- கிருத்துவமும் இஸ்லாமும் மறுபிறப்புத் தத்துவத்தை ஏற்பதில்லை.

  மத தத்துவ இயல் ஆராய்ச்சியைக் கிருத்துவமதம் 16-ஆம் நூற்றாண்டோடு நிறுத்திவிட்டது. இதனால் இந்த நிமிடம்வரை

இந்த ஆராய்ச்சியை வலியுறுத்துவதை தலையாய கடமையாகக் கொண்டு இயங்குகிறது இந்து மதம். இதனால்தான் இன்னமும் வர்ணாசிரம முறை தொடர்கிறது இங்கே.

அரசியல் கட்சிகளும் (பி.ஜே.பி.) தங்கள் உயிர் மூச்சாக இதனைக் கொண்டிருப்பது இதனால்தான்.

○ உணவு, உடை உறைவிடம் இந்த மூன்றும் ஒருவனுக்கு இருந்தால் தான் அவன் தன் நான்காவது தேவையான மொழிக்கு வருவான். முதல் மூன்றிற்கே அல்லாடுபவனிடம் மொழி உணர்வை எவ்வள வுதான் ஊட்டினாலும் கொஞ்சகாலம்தான் அது நிலைக்கும். ஒவ் வொருவனுக்கும் அவன் உயிர்வாழ்வுதான் முக்கியம். அதற்கு அடுத்துதான் மற்ற உடமைகள், பாதுகாப்பு, மேம்பாடெல்லாம். உயிரோடு ஒப்பிடும் போது — மொழி உயிருக்குப் பின்வரும் உடமையே.

எனவே தமிழ் தமிழ் என முழங்குவதைச் சற்றே நிறுத்தி உயிர்வாழ்வுக்கு முதல் மூன்று முக்கியத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைத் தமிழன் அடைவதற்கு வழிகாட்டுங்கள். நான்காவது தேவையான மொழியுணர்வை அவனே பெறுவான். வளர்ப்பான், வாழ்விப்பான்.

● ● ●

'தமிழ் என் மூச்சு' —

'தமிழ் என் உயிர்' —

'தமிழைப் பழிப்பவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' —

'சாவிலும் தமிழ்பாடிச் சாக வேண்டும்' —
எந்தன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' —

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வோம்'— திராவிட இயக்கங்களிலிருந்து மேற்கண்ட முழக்கங்களை நாற்பதாண் டுகளாக முழக்கமிட்டுப் பழகிப் போன எனக்குக் கவிஞரின் மொழிக் கொள்கை முதலில் கசப்பாகத்தான் இருந்தது.

அறிஞர் அண்ணாவின் வாழ்நாளைச் செலவிட்டும்
புரட்சிக் கவிஞர் பாவேந்தரின் ஆற்றலைச் செலவிட்டும்
ஊட்டிய மொழிஉணர்வு சாதிக்க முடியாததை —
அண்டை மாநிலமான கர்நாடகத்தில் வட்டல் நாகராஜ் என்கிற
ஒரு சாதாரண மனிதன் சாதிக்கிறாரே அது எப்படி...?

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஹெக்டே முதல்வராக இருந்த காலத்தில், பெங்களூரிலிருந்து மங்களூர் செல்ல கர்நாடக அரசு பேருந்து ஒன்றில் பயணச்சீட்டு வாங்குகிறேன். எல்லாமே கன்னட மொழி. ஒன்றும் புரியவில்லை.

'How the other state people can understand this' பயணச்சீட்டு வழங்கிய குமாஸ்தாவிடம் கேட்கிறேன்.

'Mind that you are in Karnataka' குமாஸ்தாவின் பதில். கல்லாய் உரைந்து நிற்கிறேன். உணர்வு திரும்பியதும் என் அறியாமைக்கு வெட்கப்பட்டு, அந்தக் குமாஸ்த்தாவின் மொழியுணர்வுக்குத் தலை தாழ்த்தி கைதூக்கி கும்பிட்டுவிட்டு நகர்கிறேன்.

ஒரு குமாஸ்தாவிற்கு இருக்கும் இந்தத் தெளிவு —

நான் போற்றி வணங்கிய திராவிட இயக்கத் தலைவர்களுக்கு இருந்திருந்தால் —

இங்கே ஒரு எம்.ஜி. ராமச்சந்திரன் முதலமைச்சராகி இருக்க முடியாது. ''ரஜினிகாந்த் யாரை கைகாட்டுகிறாரோ அவர்தான் தமிழகத்தின் முதலமைச்சர்'' என்கிற வெட்கங்கெட்ட கட்சித் தலைவர்கள் இந்த மண்ணில் காளான்களாய்ப் பூத்திருக்க முடியாது.

எச்சில் இலைக்கு எத்தனைக் கூச்சல்கள்! பாய்ச்சல்கள்!

தங்கள் மனைவிமார்களுக்கு ஏற்படுத்திய ராஜமரியாதையில் ஆயிரத்தில் ஒரு பங்கையாவது — தமிழ்ச் சான்றோருக்குக் காட்டியிருந்தால்...

அரை நூற்றாண்டுக்கால தமிழ் முழக்கம் — ஒரு கழைக் கூத்தாடியின் தப்பட்டை ஒலியாய் மறைந்து போயிருக்காது!

நானே எழுத்தாளன்...

நானே கவிஞன்...

நானே தமிழ்...

என்கிற செருக்கால் தமிழ் உணர்வே இங்குப் பட்டுபோனதே — என்ற யதார்த்தங்கள் என் கண்களைத் திறந்தபோது — கவிஞரின் மொழியுணர்வு கொள்கை என் கருத்தில் வேர்பிடிக்க ஆரம்பித்தது.

இந்த மண்ணில் அழகான, பளபளப்பான ஒரு கட்டடம் எந்த மூலையில் கட்டப்பட்டிருந்தாலும் — அதன் கதவைத் தட்டுங்கள் — அங்கே ஒலிப்பது நம் தாய்த் தமிழாக இல்லாதிருப்பதைக் காணலாம்.

இந்த மண்ணில் —

கண்ணைப் பறிக்கும் பளபளப்போடு ஓடி கொண்டிருக்கும் எந்த ஒரு காரையும், வாகனத்தையும் வழிமறித்துப் பாருங்கள் — அதில் இருக்கும் மனிதனின் ஒலி தமிழாக இல்லாதிருப்பதைக் காணலாம்.

இந்த மண்ணில் —

ஆயிரக் கணக்கான தொழிலாளிகள் வேலை செய்யும் தொழிற்சாலையின் கதவருகே நின்று பாருங்கள். அதன் முதலாளி தமிழனாக இருக்கமாட்டான்.

இந்த மண்ணில் —

நட்சத்திர விடுதிகளும், உணவகங்களும், தேனீர் கடைகளும் உள்ள கல்லா பெட்டிகளில் உட்கார்ந்திருப்பவன் பேசுவது தமிழாக இல்லாதிருப்பதைக் காணலாம்.

இந்த மண்ணில் —

பெட்டிக் கடை நடத்துவதற்கான தொழில்திறம் கூடத் தமிழனுக்கு இல்லாமல் போயிருப்பதைக் காணலாம்.

இந்த மண்ணில்—

அரசு அலுவலகங்களின் துறைத்தலைவர்கள், அலுவலகத் தலைவர்கள், அதிகாரிகள் பேசுவதை உற்று கேளுங்கள் இது கேரளமா, ஆந்திரமா, கர்நாடகமா என்ற தலைசுற்றலே வந்துவிடும்.

பிறகு தமிழன் எங்கேதான் இருக்கிறான் —

மார்வாடிக்கு, ஆந்திராகாரனுக்கு, மலையாளிக்கு, கர்நாடககாரனுக்கு எடுபிடி ஊழியனாய் இருக்கிறான். பண்ணைக்கூலியாய் இருக்கிறான். இவன்களில் எவனேனும் நடிகனானால் — அவன்களது ரசிகமன்ற போஸ்ட்டர்கள் ஒட்டிக் கொண்டிருக்கிறான். தலைமுறைகள் தொலைந்து போன காலதாமதமாகவேனும் இந்த உண்மைகளை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

ஒப்புக் கொண்டு கவிஞர் சொல்லுவதுபோல் —

''தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ்வானா?
தமிழன் வாழ்ந்தால்தான் தமிழ் வாழுமா?'' என்ற கேள்வியை எழுப்புவோம்.

தமிழ்வாழ்க முழக்கத்தைச் சற்றே நிறுத்தி —
தமிழா பெட்டிக்கடைகளைக் கைபற்று;

தமிழா உணவு விடுதிகளைக் கைபற்று;
தமிழா தொழிற்சாலைகளைக் கைபற்று;
தமிழா கூவம் நதிக்கரை விட்டு மாட மாளிகைக்குவா,
'தமிழா தங்கசாலைகளை உனதாக்கு —
தமிழா கார்களில் பவனி வா—

என்ற முழக்கங்களைச் செய்வோம்!

அதில் —

தமிழன் தலை நிமிர்வான்
தமிழ் அவன் மூச்சாகும்
தமிழ் அவன் உயிராகும்.

பவளவிழாக் காணுமிந்தக்
காவிரிக் கரை குயிலோசையில் —
இந்தப் பள்ளி எழுச்சிப் பாடல்கள்
புதிது புதிதாய்த் தினமும் மலர
தமிழன் அதிலே தலைநிமிர
பல்லாண்டுகள் பாடி வாழ்த்துகிறேன்.

''நின் வாழ்நாள் வளர்க
தமிழுள நாளெலாம்
நீயுள நாளாக''

☆ ☆ ☆

படக்குறிப்புகள்

1. வாழப்பாடியார், திரு. தி.சு.கிள்ளிவளவன் **M.A.** (செய்தித் தொடர்பாளர், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்) இடையே கவிஞர்.

2. வாழப்பாடி திரு. கே. ராமமூர்த்தி B.Com. B.L. M.P. (தலைவர், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ்) அவர்களுடன் கவிஞர்.

3. தேனாம்பேட்டை திடலில் கவிஞரின் 'வெளிச்சம்' கவிதை நூலை பெருந் தலைவர் காமராஜர் வெளியிட முதல் பிரதியை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பெறுகிறார். பக்கத்தில் முன்னாள் கேரள ஆளுநர் ப.ராமச்சந்திரன், பின்னால் ப.நெடுமாறன், என்.எம்.மணிவர்மா உள்ளனர்.

4. நாகர்கோவில் நேசமணி சிலை திறப்பு விழாவில் கவிஞர் பேசுகிறார். பெருந்தலைவர் காமராஜர், சிவாஜி கணேசன், மகாதேவன் பிள்ளை, பொன்னப்ப நாடார் அமர்ந்துள்ளனர்.

5. இராஜாஜி மண்டபத்தில் 1972 - 'கலைமாமணி' விருது வழங்கிய நிகழ்ச்சியில் ஆளுநர் கே.கே.ஷா சிறந்த சாகித்ய கர்த்தாவுக்கான விருதாகத் தங்கப்பதக்கம் அளிக்கிறார்.

6. 1972-ல் 'கலைமாமணி' பாராட்டு விழாவில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

7. இடமிருந்து வலம்: 'கலைமாமணி' பாராட்டு விழாவில் பங்கேற்ற வ.உ.சிதம்பரனார் மகன் வ.உ.சி. சுப்பிரமணியம், கவிஞர், கவிஞரின் மகன் மதிவாணன், பாராட்டு விழாவை நடத்திய நண்பர் அரு.சங்கர் B.Sc. (தலைவர்: முருகதனுஷ்கோடி பெண்கள் மேல்நிலைப்பள்ளி)

8. பாராட்டு விழாவில் இசை அரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்துகிறார்.

9. திரு. சங்கர்தயாள் சர்மா அவர்கள் குடியரசுத் தலைவரான கையோடு கவிஞரின் சந்திப்பு. உடனிருப்பவர் முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் துணைச் சபாநாயகர் திரு. ஜி.லட்சுமணன் அவர்கள்.

10. வாழப்பாடியார் வழக்குரைஞர் திரு. குலசேகரன் உடனிருக்கின்றனர்.

11. கவிஞருடன் திரு. கே.குருமூர்த்தி, பொதுச் செயலாளர் (சுதந்திரப் போராட்ட வீரர்கள் வாரிசுகள் சங்கம், தமிழ்நாடு)

12. கவிஞருடன் கே.குருமூர்த்தி, தமிழ்நாடு I.N.A. சங்கத் தலைவர் திரு. முத்து உமைய வேலாயுதம், செயலாளர் திரு. மணி மற்றும்

I.N.A. சங்கப் பொறுப்பாளர் செங்குன்றத்திலுள்ள நேதாஜி சிலையின் கீழ் நிற்கின்றனர்.

13. நேதாஜி சிலைக்கு, கவிஞர் மாலை அணிவித்தல்.

14. கவிஞரின் அன்னை வரதம்மாள்.

15. கவிஞரின் தந்தை கோவிந்தசாமிப் பிள்ளை.

16. கவிஞரின் மூத்த அண்ணன் ஜி.ராமசாமி, இளமையில் (உடற்பயிற்சி ஆசிரியர், தேசியக் கல்லூரிப்பள்ளி திருச்சி)

17. அண்ணன் ஜி.ராமசாமியின் ஒரே மகன் (R.பிரேம்குமார், மேலாளர், திருவரங்கம், ரயில்நிலைம்)

18. எஞ்சியிருக்கும் ஒரே அண்ணன் ஜி.கல்யாணசுந்தரம் - நெய்வேலி

19. கவிஞருடன் துணைவியார் சாந்தி அம்மையார் (ஓய்வு பெற்ற ஆசிரியை)

20. இளமையில் கவிஞர்.

21. அண்ணன் ஜி.கல்யாணசுந்தரம், துணைவியார் சாரதாவுடன்

22. இளமையில் கவிஞர்.

23. நடுத்தர வயதில் கவிஞர்.

24. இசை நிகழ்ச்சி நடத்திய காலங்களில்

25. கல்லூரிப் படிப்பிற்குப் பின் கவிஞர்.

26. கவிஞர், துணைவியார் தங்கள் பேத்திக் குழந்தையுடன்.

27. கவிஞர் குடும்பம்: துணைவி சாந்தி, மகள் வான்மதி, மருமகன் திரு. B. ஜெயசீலன், மகன் மதிவாணன், மருமகள் ரஜந்தி, பேத்தி ஜெயமதி, பேரன் நிஷாத், பேத்தி கீதமாலிகா, குடும்ப நண்பர்கள் ஜே.ராதா கிருஷ்ணன், P. ராஜேந்திரன்.

28. கவிஞர் குடும்பம்: மனைவி, மகள், மருமகன், மகள், மருமகள், பேரக் குழந்தைகள்.

29. மகன் மதிவாணன் திருமணத்தில் திரு. எஸ்.ராதா கிருஷ்ணன் (LIC) திரு. ஏ.பி.சாமி, ஜெயப்பிரகாஷ் (சேலம் ஸ்டீல் பிளான்ட்) உடனிருக்கின்றனர்.

30. மணமகள் ரஜந்தியுடன், துணைவியார் சாந்தி, மகள் வான்மதி, மருமகன் ஜெயசீலன், பேத்தி ஜெயமதி, பேரன் சொரூப் நிஷாத்.

31. மகள் வான்மதி, ஜெயசீலன் திருமணத்தின் போது வலது கோடியில் நிற்பவர்: திருவரங்கம் வீரேஸ்வரத்தில் ஓர் ஓலைக் குடிலில் அநாதைப் பிணமாய் மடிந்து விட்ட விதவைத் தமக்கை தனபாக்கியத்தம்மாள்.

32. மகள் வான்மதி (சிண்டிகேட் வங்கி) மாப்பிள்ளை ஜெயசீலன் (கிளை மேலாளர், இந்தியன் வங்கி) மண விழாவில் இசை நிகழ்ச்சி நடத்திய ஏ.எம்.ராஜா, ஜிக்கியுடன்.

33. மகள் வான்மதி திருமணத்திற்குத் தலைமை ஏற்ற தோழர் எம்.கல்யாண சுந்தரம்

34. கவிஞரின் 'வெளிச்சம்' நூல் வெளியீட்டு விழாவில் நடிகர் திலகம் சிவாஜி பேசுகிறார். பெருந்தலைவர் காமராஜர், தேசிய சிந்தனையாளர் மன்றச் செயலாளர் - தீபம் நா.பார்த்தசாரதி, தேசிய சிந்தனையாளர் மன்றத் தலைவர் கவிஞர் திருச்சி தியாகராஜன், சின்ன அண்ணாமலை அமர்ந்துள்ளனர்.

35. ''கலைமாமணி'' பாராட்டு விழாவில்: இடமிருந்து வலம்: கவிஞர் திருச்சி தியாகராஜன், நடிகர் திலகம் சிவாஜி, எம்.ஏ.வி. பிக்சர்ஸ் அதிபர் எம்.ஏ.வேணு அவர்கள்.

36. 'கலைமாமணி' விருது பாராட்டு விழாவில் இசை அரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர், கவிஞர், கவிஞரின் ஒரே மகன் மதிவாணன்.

37. வேலூர் நண்பர்கள், தோழர்கள் இடமிருந்து வலம்: தியாகி எம்.கே.ராமசாமி, வழக்கறிஞர் சமரசம், திரு. சோலைநாதன், கவிஞர், மாலைமுரசு ஆசிரியர் திரு. பிச்சய்யா, வ.ஆ. கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கப் பொதுச் செயலாளர் ஆர்.கோதண்டம். மேல்வரிசையில்: தோழர் ஆறுமுகம், கோ.ஜீவானந்தம், தோழர் ஆர்.சங்கரன்.

38. தமிழகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டிய மாமனிதன் தோழர் அமீர் ஹைதர் அலிகான் அவர்களுடன் கவிஞரும் தோழர் T.M. மாணிக்கம் அவர்களும் (தில்லியில் எடுத்த படம்)

39. மகன் மதிவாணன் திருமணத்தில் திருக்குறளார் முனிசாமியுடன் கவிஞர்.

40. புதுதில்லி நாடாளுமன்றக் கட்டடத்தின் முன் தோழர் T.M. மாணிக்கம் அவர்களுடன் கவிஞர்.

41. பஞ்சாப் அமிர்தசரஸ் பொற்கோயில் பக்கத்தில் கவிஞரும் கந்தசாமி சிங்கும்.

42. காஷ்மீர் குல்மார்க் பகுதியில் கவிஞர் பக்கத்தில் ஆசிரியர் எஸ்.தமிழரசு M.A.B.T. (D.T.E.A. மேல்நிலைப் பள்ளி, புதுதில்லி)

43. பஞ்சாப், அரியானா தலைநகர் சண்டிகர் Rock Garden ல் கவிஞருடன் கந்தசாமி சிங் B.A.B.L.,

44. தில்லி செங்கோட்டை மதில் அருகே கவிஞருடன் தோழர் டி.எம்.மாணிக்கம் மற்றுமோர் சுதந்திரப் போராட்டத் தியாகி (வாணியம்பாடி)

45. கவிஞருடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் ஆர்.நல்லக்கண்ணு.

46. தில்லி குடியரசுத் தலைவர் மாளிகை முன் கவிஞருடன் தோழர் டி.எம்.மாணிக்கம்.

47. 'கலைமாமணி' விருது பாராட்டு விழாவில் இசை அரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர் இசை நிகழ்த்துகிறார்.

48 இமாசலப் பிரதேசத் தலைநகர் சிம்லாவில் வனவிலங்குக் காட்சிப் பூங்காவில் கவிஞர். பின்னால் தெரிவது 'யாக்' எருது.

49. கவிஞரின் நூல்கள் வெளியீட்டு விழாவில் (YMCA கட்டடம், பாரிமுனை) திரு. கே.குருமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தும் போது. இடமிருந்து வலம்: கவிஞர் ந.இறைவன், வழக்குரைஞர் கிள்ளிவளவன், கவிஞர், வாழப்பாடியார் M.P. டாக்டர் பொற்கோ, தலைவர் தமிழ்த்துறை. சென்னைப் பல்கலைக்கழகம்.

50. கவிஞரின் நூல்கள் வெளியீட்டு விழாவில் வாழப்பாடி கே.ராமமூர்த்தி B.Com., B.L., M.P. அவர்கள் பேசுகிறார். திரு. கே.குருமூர்த்தி ரசித்து நிற்க, கவிஞர் ந.இறைவன் கடலூர் கிள்ளிவளவன் (ஆசிரியர்: அரங்கேற்றம் மாத இதழ்) கவிஞர்.

51. சம்புவராயர் மாவட்டம் செங்கம் முன்னாள் நகராட்சித் தலைவர் இர.பரசுராமன், தோழர், V. சுப்பிரமணியம் இடையே கவிஞர்.

52. திரு. ஏ.எஸ்.ஏ.பரமசிவம் (A.S.A. பேக்கரி, வேலூர்) அவர்களுடன் கவிஞர்.

53. கவிஞரின் பேரன் பேத்திகள்.

54. தாஜ்மகால் முன்பு தோழர் வாழப்பாடி, ஆர்.சந்திரன் அவர்களுடன் கவிஞர்